# நல்லைக்குமரன் மலர்

## இதழ் 26




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 26

# 2018

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

## சைவசமய விவகாரக் குழு
## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் – 2018

| | | |
|---|---|---|
| போசகர் | : | கௌரவ இம்மானுவல் ஆனல்ட் |
| | | முதல்வர், யாழ்ப்பாண மாநகரசபை |
| தலைவர் | : | திரு இ.த.ஜெயசீலன் |
| | | மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| செயலாளர் | : | திரு பு. ஆறுமுகதாசன் |
| | | பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| பொருளாளர் | : | செல்வி பொ. புஸ்பலதா |
| | | கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | திரு அ.சீராளன் |
| | | செயலாளர், யா.மா.சபை |
| | | திரு க.ஜெயானந்தன் |
| | | நிர்வாக உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திரு சோ.கணேசநாதன் |
| | | மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | திரு கு. விஜயகுமார் |
| | | தொழில்நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திரு செ. பன்னீர்ச்செல்வம் |
| | | றோணியோ இயந்திர இயக்குநர், யா.மா.சபை |
| | | திரு க. கேதீஸ்வரன் |
| | | நீர்வேலைப்பகுதி, யா.மா.சபை |
| | | திரு ச.சற்குணமூர்த்தி |
| | | வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை |
| | | திருமதி சு.சதாசிவமூர்த்தி |
| | | பிரதம நூலகர், யா.மா.சபை |
| | | திரு சு.சிறீகாந்தன் |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர், யா.மா.சபை |
| | | திருமதி தி.சக்தி |
| | | அபிவிருத்தி உத்தியோகத்தர், யா.மா.சபை |
| கௌரவ பதிப்பாசிரியர் | : | திரு ந. விஜயசுந்தரம் |
| | | அதிபர், |
| | | யா/ கலட்டி மெ.மி.த.க பாடசாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

நல்லூர் இராசதானியில் வீற்றிருந்து நம்மையெல்லாம் ஆட்சி செய்யும் நல்லூர்க் கந்தவேற் பெருமானுக்கு இது 26ஆவது மலர். நல்லூர்க் கந்தவேளின் பெருங்கருணையால் நல்லைக்குமரன் மலர் கடந்த இருபத்தாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவருகின்றது.

நல்லூர்க் கந்த சுவாமியார் ஆலயம் ஈழத் தமிழ் மக்களின் அடையாளம். முருகனைத் தங்கள் தலைவனாகப் போற்றுகின்ற தமிழர் வாழ்வில் நல்லூர் முருகன் அதற்குரியவனாகப் போற்றப்படுகிறான்.

அடியவர்களின் வழிபாட்டு திறத்தால் தெய்வீகச் சூழல் பொருந்திய புண்ணியத்தலமாக விளங்கும் நல்லூர்ப் பதி எங்கள் வாழ்வின் அத்தனை நம்பிக்கைக்குமான ஒரே கருவூலமாகும்.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் மக்கள் வெள்ளம் கந்தனை நாடி ஓடி வருவது கற்பனைக்கும் எட்டாத நிதர்சனம்.

நல்லூர் முருகனிடம் தமிழ் மக்கள்தான் வருகிறார்கள் என்றால்: இல்லை இலங்கைக்குள் இருக்கக்கூடிய சகல இன மத மக்களும் அவனைத் தேடி வருகின்றனர்.

தவிர, இலங்கை என்ற எல்லை கடந்து வெளிநாட்டவர்களும் நல்லூர் முருகனைத் தரிசிப்பதில் காட்டுகின்ற ஆர்வத்தைக் காணும்போது அது கண்டு நாம் வியக்காமல் இருக்க முடியாது.

வெள்ளைக்காரர்களுக்கும் நல்லூர் முருகனுக்கும் என்ன தொடர்பு. வெளி நாட்டில் இருந்து உல்லாசப் பயணிகளாக வருகின்றவர்கள் நல்லூரைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்கள் மேலாடை களைந்து கந்தனின் திருக்கதவைக் கடந்து உள்வீதிக்கு வந்து முருகனை உற்றுப் பார்க்கின்றனர். கையெடுத்து கும்பிடுகின்றனர். முற்பிறப்பின் தொடர்புபோல அவர்களின் பார்வை குறியிடுகிறது.

ஆம், நல்லூர் ஆறுமுகன் இருக்கையில் நமக்கொருபோதும் அச்சமில்லை என்று தவத்திரு யோகர் சுவாமிகள் வாக்குத் தந்துள்ளார். தவத்திரு யோகர் சுவாமிகள் எங்கள் மண்ணில் வாழ்ந்த ஞானப் பெருவள்ளல்.

சோல்பரி பிரபுவின் மகன் சுவாமியின் திருவடியே தஞ்சமென்று தன்னை ஈகை செய்தார் என்றால், தவத்திரு யோகர்சுவாமிகள் தவப்பொலிவின் சிறப்பையும், ஞானத்தின் ஊற்றையும் நாம் விபரிக்க வேண்டியதில்லை.

இவ்வாறாக, நல்லூர்க் கந்தனும் நம் ஞான குருவாகிய தவத்திரு யோகர் சுவாமிகளும் பற்றி நம் இளைய தலைமுறையினருக்கு எடுத்தியம்புவது சைவ சமய அமைப்புகளினது தலையாய கடமையாகும்.

எங்களின் பெருமையை; எங்களின் மகத்துவத்தை அறியும்போதுதான் எங்கள் இனம், எங்கள் மொழி, எங்கள் சமயம் என்ற பற்றும் பாசமும் ஊற்றெடுக்கும். இந்த உண்மையை நம் இளைஞர்களிடம் ஏற்படுத்துவோமாக இருந்தால், நாம் இன்று கொள்ளும் கவலை இனி இராது என்று அறுதியிட்டுக் கூறமுடியும்.

ஆக, எங்கள் இளைஞர்களுக்கு ஆன்மிகத்தை தானமாக வழங்க நல்லூர்க் கந்தன் ஆலயம் அடி நாதமாக அமையட்டும் என்ற கருத்தை நல்லைக்குமரனின் இருபத்தாறாவது மலரின் கருப்பொருளாகக் தந்து, இதற்கு கந்தப் பெருமானின் திவ்விய கருணை கிடைக்க வேண்டியும் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டியும் நல்லூர்க் கந்தப் பெருமானின் பொன்னார் திருவடிகளில் இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**சைவசமய விவகாரக்குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| **சமர்ப்பணம்** | | |
| **ஆசிச்செய்திகள்** | | |
| **வாழ்த்துச் செய்திகள்** | | |
| **எல்லாம் அவனே எனக்கு** | த.ஜெயசீலன் | **01-02** |
| **"பாசுரங்கள் எழுந்து வேதசுரங்களாக தேசம் சிறக்க தேர் ஏறிவா சண்முகா..."** | கை.பேரின்பநாயகம் | **03-09** |
| **நல்லைக் குமரப் "பா"** | நவ.பாலகோபால் | **10-16** |
| **கந்தப் பெருந்தெய்வப் பெருமானே...** | கவிஞர் கு.வீரா | **17-18** |
| **நல்லூரின் நாதா நலமருள வாவா!** | கவிப்புலவர் வேலணையூர் சுரேஷ் | **19** |
| **உன்னிடத்தில் ஓடி வந்தேன்** | கவிஞர் வட அல்வை சித்ரா சின்னராஜன் | **20** |
| **உளமுருகி முருகனை வேண்டி நீபாடு** | கே.ஆர்.திருத்துவராஜா | **21** |
| **எமையாளும் வரம் வேண்டினேன்** | கலாபூஷணம் சிவ.சிவநேசன் | **22** |
| **நல்லருள் நல்கிடும் நல்லூரான் ...** | தே.சுகிர் நாகேந்திரா | **23** |
| **நல்லைப் பதி மீதிலே, இல்லையெனத் துயர் மாயுமே!** | து.மனோகரன் | **24-25** |
| **வழிகாட்டும் துணையாக வரவேண்டும்** | அம்சா பரமநாதன் | **26-27** |
| **நல்லைக் குமரா தந்திடு பதிலை...** | சு.நாகலோஜினி | **28** |
| **பரிபாட்டும் செவ்வேளும்** | வாழ்நாட் பேராசிரியர் அ. சண்முகதாஸ் | **31-35** |
| **சேயோன் மேய மைவரை உலகு** | பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் | **36-43** |
| **சிவனே முருகன்; முருகனே சிவன்** | சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம் | **44-46** |
| **சுப்ரம்மண்ய மஹோத்சவம்** | ச. பத்மநாபன் | **47-52** |
| **தமிழ் உணர்த்தும் பக்தி** | சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் | **53-64** |
| **கௌமார வழிபாட்டு மரபில் ஸ்ரீ மயூரகிரி (குன்றக்குடி) ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம் -பக்திநெறி நோக்கு** | கலாநிதி மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா | **65-68** |
| **நல்லூர்க் கந்தசுவாமியும் நற்சிந்தனையும்** | கலாநிதி சண்முகயோகினி ரவீந்திரன் | **69-73** |
| **தமிழ் வளர்ச்சிப் பாதையில் அடிகளாரும் ஆறுமுக நாவலர் பெருமானும்** | மகாதேவ ஜெயராமசர்மா | **74-78** |
| **முருகனைப் போற்றிப் பாடிய அருணகிரிநாதர்** | சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் | **79-83** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அருணகிரிநாத சுவாமிகள் அருளிய அமுதம் | சிவசுரபி இ.சரவணபவன் | 84-87 |
| பாடும் பணியே பணியாய் அருள்வாய்! | கீர்த்தனா ஆறுமுகதாசன் | 88-92 |
| யாழ்ப்பாணத்தில் முருகத்தலங்களின் தோற்றம் வரலாறு சமூகப்பின்னணி மற்றும் வளர்ச்சி | சண்முகலிங்கம் சஜீலன் | 93-99 |
| ஆகமஞ்சாராத வழிபாட்டு மரபில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வகிபங்கு | ஆ. சசிநாத் | 100-105 |
| திருமுருகாற்றுப்படையும் ஆறுபடை வீடும் | சைவப்புலவர் செ.பரமநாதன் | 106-109 |
| நல்லூர்க் கந்தப் பெருமானின் எழிற்கோலம் காண நாம் என்ன புண்ணியம் செய்தோமோ! | ஸ்ரீராம்குமார் நதிபரன் | 110-114 |
| தேரடியில் இருந்து பாரடா தேகமெலாம் புல்லரிக்கும் | கே.எஸ்.சிவஞானராஜா | 115-117 |
| மணிவாசகரின் வாசகமும் பயனும் | வ.கோவிந்தபிள்ளை | 118-122 |
| சைவசமய வரலாற்றில் சிவபுராணம் பெறும் முக்கியத்துவம் | க.கனேசதேவா | 123-130 |
| திருமந்திரத்தில் குரு சிஷ்யன் | வைத்தியலிங்கம் பாலகிருஸ்ணன் | 131-138 |
| இந்திய மெய்யியலில் அத்வைதம் | வி.ஆரணி | 139-143 |
| திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி | மாதவி உமாசுதசர்மா | 144-148 |
| வேழமுகத்து விநாயகன் | பொ.சிவப்பிரகாசம் | 149-157 |
| நல்லூர் கந்தன் - சிறு குறிப்பு | கந்தையா கனகசபை | 158-159 |
| சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார் | வை.இரகுநாதமுதலியார் | 160-166 |
| அகவைநூறில் தடம்பதித்த திருப்புகழ் திலகம் தியாகராஜ சுவாமிகளும் அவர்தம் ஆன்மீகவாழ்வும் | இன்பம் அருளையா | 167-173 |
| தெய்வீக மகளிர் வரிசையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி | கலாபூஷணம் மு.சிவலிங்கம் | 174-181 |
| முருக விரதமும் அனுட்டான நியமங்களும் | க.ஜெயானந்தன் | 182-183 |
| தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் | ந.சண்முகராசா | 184-186 |
| ஆலயங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும் | ந.சதாசிவஐயர் | 187-188 |
| 2018இல் யாழ் விருது பெறும் சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகள் | பு.ஆறுமுகதாசன் | 189-190 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2018

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- நல்லை ஆதீன முதல்வர்

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
- இராமகிருஷ்ண மிஷன்

  சுவாமி சர்வருபானந்த
- சின்மயாமிஷன் சுவாமி

  சுவாமி சிதாகாசானந்தா
- வீணாகான குருபீடதிபதி

  வித்யாஸாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்
- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்
- அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர்

  மா.தவயோகராஜா
- வடக்கு மாகாண முதலமைச்சர்

  க.வி.விக்னேஸ்வரன்
- யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்

  நா.வேதநாயகன்
- யாழ் மாநகர முதல்வர்

  இம்மானுவல் ஆனல்ட்
- யாழ் மாநகர ஆணையாளர்

  இ.த.ஜெயசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

## நல்லை ஆதீன முதல்வரின்
## அருளாசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினால் உலக அழகனாக இருக்கும் நல்லைக் குமரனுக்கு அழகு செய்யும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் வெளிவரும் நல்லைக்குமரன் மலர் இவ்வாண்டும் வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

பல கட்டுரைகளையும் சமயம் சார்ந்த செய்திகளையும் முருகனுடைய அழகிய திருவுருவங்களையும் கொண்டு வெளிவருவது தமிழினத்தினுடைய அடையாளத்தை மேலோங்க வைக்கின்றது. உலகம் வாழும் தமிழினம் இம்மலரை உவப்புடன் கற்று கருத்துக்களைப் புரிந்து வாழுகின்ற மலராக வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. புறத்தூய்மையையும் அகத்தூய்மையையும் வெளிப்படுத்தும் செயலாக நல்லைக்குமரன் மலர் மலர்வது மாநகராட்சி மன்றத்தினுடைய பணிகளை மேன்மையுற வைக்கின்றது. மலரை வெளியிடும் மன்றத்தினருக்கும் நூலாசிரியருக்கும் எமது வாழ்த்துக்கள் இறைவனின் ஆசி எல்லோருக்கும் கிடைப்பதாக.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு".**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின்

## ஆசிச்செய்தி

யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவானது நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் சைவத்தின் அருமை பெருமைகளை பறைசாற்றும் விதமான ஆக்கங்களை உள்ளடக்கிய நல்லைக் குமரன் மலரினை கடந்த 1993ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக வெளியிட்டு வருவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். அந்த வரிசையில் இவ்வருடம் 26 ஆவது மலரானது சிறப்பாக வெளிவருவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

“மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது. இது தான் மதத்தின் முழுப் பரிமாணம்” என்கின்றார் சுவாமி விவேகானந்தர். அத்துடன் “தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவையே வெற்றிக்கு இன்றியமையாத மூன்று. இவையனைத்திற்கும் மேலாக வேண்டுவது அன்பு” என்ற வகையில் மக்கள் அனைவரும் அன்புடன் வாழ ஆலயங்களும் மற்றும் இத்தகைய மன்றங்களுமே துணைபுரிய வேண்டும்.

அந்த வகையில் மேற்படி மன்றத்தின் நிகழ்விற்கு தங்கள் சேவையையும், ஒத்துழைப்பையும், உதவியையும் நல்கிய அனைவருக்கும் மற்றும் குறிப்பாக யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுத் தலைவர், செயலாளர் மற்றும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் இறைவன் அருளையும் ஆசிகளையும் வழங்கட்டும். அத்துடன் எனது அன்பையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின் றேன்.

**இராமகிருஷ்ணமிஷன்**
**கொழும்பு.**

என்றும் இறைபணியில்,
சுவாமி சர்வரூபானந்த
(சுவாமி சர்வரூபானந்த)
தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org


# சின்மயா மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

அகிலமெங்கும் வாழ்கின்ற தமிழ் மக்கள் தம் தமிழ் கடவுளாக முருகனைப் போற்றுதல் மரபு. அவ்வகையில் பழமையும் பெருமையும் கொண்டதாகவும் சித்த புருஷர்களின் ஞான ஆட்சி நிறைந்ததாகவும், அழகன் ஆட்சி செய்யும் இடமாகவும் நல்லூர்க் கந்தசாமி கோயில் விளங்குகின்றது.

இந்நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் இவ்வருடம் "நல்லைக்குமரன்" என்னும் சிறப்பு மலரின் 26வது இதழ் வெளியிடப்படவுள்ளது பாராட்டுக்குரியது.

இன்றைய இளம் சமூகம் தடம் மாறி திக்குத் தெரியாத பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இந்நிலையில் இளைய தலைமுறையினரிடையே சைவசமய அறிவையும், இறைபக்தியையும் ஆன்மிக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் முயற்சியில் சமய, கலை, கலாசாரம் பற்றிய சிறந்த ஆக்கங்களை வெளிக் கொணர்ந்து விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கவும், பின்பற்றவும் இத்தகைய வெளியீடுகள் அவசியம் துணை புரிவனவாக அமைதல் நன்று.

உயரிய எண்ணத்துடன் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்ற நல்லைக்குமரன் மலர் சிறப்பாக அமைய ஆசிவேண்டி எல்லாம் வல்ல நல்லூரான் திருவடிகளையும், பூஜ்ய குருதேவரின் பாதக் கமலங்களையும் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

**இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

இறைபணியில்
**சுவாமி சிதாகாசானந்தா**
**வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயாமிஷன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வீணாகான குருபீடம்
# VEENAGANA GURUPEEDAM

இந்து கலாசார வேத, ஆகம சாஸ்திர சடங்கு சம்பிரதாய ஆலோசனைக்கானதும்,
சமய சமூக நற்பணிகளுக்குமான குருமார் சந்நிதானம்


வண.சந்நிதாச்சாரியார்,
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,
அமைப்பாளர்,
குருமார் சந்நிதானம்,
சித்தன்கேணி,
யாழ்ப்பாணம்.

Mobile : 0777397926

Rev.Sannithachariyar
Sivasri.Saba.Vasudevakkurukkal
Organizer,
Veenakana Gurupeedam,
Gurumar Sannithanam,
Sithankerney, Jaffna.


# வீணாகான குருபீடாதிபதியின்

## ஆசிச்செய்தி

நல்லைக்குமரன் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். சைவத்தமிழ் கலாசார மரபுகளைக் பாதுகாப்பதற்கும் அதனை அடுத்த தலைமுறையினருக்கு கொடுப்பதற்கும் என வெளிவருகின்ற சிறப்புமிகு மலர் என்றால் அது நல்லைக்குமரன் எனலாம். நல்லைக்குமரன் மலரானது சைவத்தமிழ் மக்களின் வரலாற்று பொக்கிசமாகும். காலத்தின் தேவைகருதி இளையோரை ஆன்மீக நாட்டமுறச் செய்வதற்கும், அறநெறி சார்ந்த நற்பிரஜை களாக்குவதற்கும் நல்லைக்குமரன் மலரினை யாழ் மாநகர சபை வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கவிடயமாகும்.

யாழ். மாநகரசபை மிகவும் சிறப்பாகவும் சமய நிறுவனங்களுக்கு முன்னுதாரணமாகவும் நல்லைக்கந்தன் பெருந்திருவிழா வினை முதன்மைப் படுத்தி பல தரப்பட்ட அறச்செயல்களை ஆற்றி வருவது செயற்கரிய செயலாகும். நல்லைக்குமரன் மலரின் ஆக்கங்கள் அனுபவத்தின் வெளிப்பாடாகவும், அறவாழ்விற்கு வழிகாட்டியாகவும் வரலாற்று ஏடாகவும், எமக்கு வருடம் தோறும் தொடர்ந்து கிடைத்து வருகின்றது. சைவசமயத்தின் பெருமைகளை துலங்கச் செய்யும் விதத்தில் வெளிவரும் நல்லைக்குமரனின் ஆக்கப் பணிகளுக்கு தொண்டாற்றும் மலராசிரியர், மாநகர முதல்வர், ஆணையாளர் மற்றும் சைவ சமய விவகாரக் குழுவினர் அனைவருக்கும் எமது வீணாகான குருபீடத்தின் நல்லாசிகளைத் தெரிவித்துநிகழ்வுகள் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

**குரு முதல்வர்**
**வீணாகானகுருபீடம்**
**(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் திருக்கோவில், சண்டிலிப்பாய்)**

**சந்நிதாச்சாரியார்**
**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
T.P No : 021 - 3213151
திகதி: 02/06/2018
Fax:- 021 2241909
தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr. ARUTHIRUMURUGAN
E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆசிச் செய்தி

யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் வெளியிடும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். கடந்த இருபத்தியாறு ஆண்டு காலமாக ஆன்மீக வரலாற் றுச் செய்திகளை உள்ளடக்கிய ஆவணமாக வெளியிடப்பட்டு வரும் நல்லைக் குமரன் மலர் மிகவும் பெறுமதி வாய்ந்தது. மிகச் சிறந்த கட்டுரைகள் மற்றும் ஆன்மீகச் செய்திகள் இம்மலரில் தொடர்ந்து வருவது பலருக்குப் பயனளித்து வருகிறது. இந்துசமய விடயங்களை ஆராய்ச்சி செய்யும் ஆய்வாளர்களுக்கு நல்லைக்குமரன் மலர்கள் பெரிதும் துணை செய்வதை யாம் அறிவோம். சைவசமய விவகாரக்குழு வருடந்தோறும் சிறந்த சேவையாளருக்கான யாழ் விருதையும் வழங்கி வருவது பாராட்டுக்குரியது. இப்பணிகளை இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்து வைத்தவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். ஆண்டுதோறும் இப்பணியை தொடர்ந்து செய்பவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

எமது சைவசமயம் ஆதிச் சமயம் ஆகும். ஈழத்திருநாட்டின் புராதன சமயமாக சைவம் விளங்குகின்றது. சைவ சமயத்தின் மகத்துவத்தை ஒவ்வொரு நிறுவனங்களிலும் மாநகரசபை விவகாரக் குழு போல் பேண வேண்டியது காலத் தின் கட்டாய கடமையாகும். எங்கள் சமய விவகாரங்களில் நாம் அக்கறை செலுத்தத் தவறினால் எம் சமூகம் பல்வேறு ஆபத்துக்களை சந்திக்க நேரிடும் எனவே சைவசமய விவகாரக்குழுவின் செயற்திறன் மிக்க இப்பணியை இதய பூர்வமாக வாழ்த்துவ தோடு இப்பணிக்காக அயராது உழைத்துவரும் அனைவரையும் நன்றியோடு வாழ்த்துகின்றேன். ஆணையாளர் திரு. இ. த. ஜெயசீலன் அவர்கட்கும், பதிப்பாசிரியர் திரு. ந. விஜயசுந்தரம் அவர்கட்கும் சைவசமய விவகாரக் குழுவில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் மீண்டு எனது வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன். நல்லூர்க் கந்தனின் திருவருளாலும் துர்க்கையம்மனின் நல்லருளா லும் நல்லைக்குமரன் சூரிய சந்திரர் உள்ளவரை தொடர்ந்து வெளிவர வேண்டி அமைகின்றேன்.

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**தலைவர்**
**சிவபூமி அறக்கட்டளை**
**உபதலைவர்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்துமாமன்றம்

(இலங்கை இந்துமன்றஅமைப்புகளினதும் ஆலய நம்பிக்கைபொறுப்புகளினதும் ஒன்றியம்)

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Temple Trusts in Sri Lanka)


தலைவர்
**President:**
மாணிக்கம் தவயோகராஜா
*Manikkam Thavayogarajah*
*Phone: 2695120 (Res)*
*Mobile: 0777786686*
*mthavam@gmail.com*

பொதுச் செயலாளர்
**Hony. General Secretary:**
வேலுப்பிள்ளை கந்தசாமி
*Velupillai Kandasamy*
*Phone: 2586620 (Res)*
*Mobile: 071-5349150*
*vkandasami@gmail.com*

பொருளாளர்
**Hony. Treasurer:**
அ.கயிலாசபிள்ளை
*Abirami Kailasapillai*
*Phone: 2575566 (Res)*
*Fax : 2575472*
*hariomak@gmail.com*


## அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வளர்ந்து வரும் இளம் சந்ததியினரிடையே சமய அறிவினையும் ஆன்மீக உணர்வினையும் மேம்படுத்தும் நோக்குடன் இரு தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றிவரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லைக்கந்தனின் மகோற்சவ காலத்தில் ஆண்டுதோறும் வெளியிடப்படும் "நல்லைக்குமரன்" என்ற மலரினை இவ்வருடமும் வெளியிட்டு எமது சமுதாயத்தை ஆன்மீக ரீதியில் வழி நடாத்திச் செல்லும் தங்கள் ஒப்பற்ற பணியை பாராட்டாமல் விட முடியாது.

"இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாகத் திகழும்" "அகில இலங்கை இந்து மாமன்றம்", தனது குறிக்கோள்களில் ஒன்றான "இந்து தர்ம அறிவினையும், சாதனையையும் விருத்தி செய்வதுடன் சமயக் கல்வியையும், கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

அவ்வாறான எமது நோக்கங்களுக்கு மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழுவின் இவ்வாறான நடவடிக்கைகள் உந்து சக்தியாக விளங்கு மென்பதில் ஐயமில்லை.

யாழ் மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழுவின் நடவடிக்கைகள் எமது இளம் சந்ததியினரை சமய ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் விழிப்புணர்வடையச் செய்து அவர் தம் வாழ்வை மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டு நிறைவு செய்கின்றோம்.


**மா. தவயோகராஜா**
**தலைவர்**

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**இல 91/1 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர்மாவத்தை,**
**கொழும்பு 02.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

**Justice C.V.Wigneswaran**
**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்றுறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்
මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා
Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration

# வடக்கு மாகாண முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

இறைபக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்வதைத் தனது தலையாய குறிக்கோளாகக் கொண்டு 2 தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றி வருகின்றது. யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்தின் சைவசமய விவகாரக் குழு நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் சைவத்தின் அருமை பெருமைகளை பறைசாற்றும் விதமாக பல ஆக்கங்களையும் சைவசமய விழுமியங்களை எடுத்தியம்பக்கூடியதான பல கட்டுரைகளையும் உள்ளடக்கி அக்குழு மலரொன்றினை வருடாவருடம் வெளிக் கொண்டு வருவது நாம் அனைவரும் அறிந்ததே. அந்த வகையில் 26 ஆவது வருடாந்த மலராக வெளிவரவிருக்கும் நல்லைக்குமரன் - 2018 இதழுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

சைவமும் தமிழும் ஓங்கி வளர்ந்திருக்கும் நல்லூர்ப் பதியிலே கோவில் கொண்டிருக்கும் அலங்காரக் கந்தனாம் நல்லூர்க் கந்தனின் உற்சவ காலம் தொடங்கி விட்டால் வடமாகாணத்தில் வாழும் இந்துக்கள் மட்டுமன்றி இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் ஏன் வெளிநாடுகளிலும் கூட வாழுகின்ற இந்துக்கள் எம்பெருமானின் அழகிய விழாக்கோலத்தைக் கண்டு தரிசிப்பதற்காக இத் திருவிழாக்காலங்களில் விடுமுறைகளைப் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தருவார்கள். அவர்கள் நல்லூர் ஆலயத்தை தமது சொந்தக் கோவிலாகப் பாவனை செய்து போற்றியும் பாடியும் வணங்கி இறையருளைப் பெறுகின்ற உன்னதமான காலம் அவ் விழாக்காலங்கள் ஆவன. யாழ் மாநகரசபையும் தன் பங்கிற்கு நல்லூர் முருகன் மீது மாநகர சபைக்கு இருக்கும் பக்தியுடன் கூடிய தொடர்பினை வலியுறுத்தும் நோக்கில் நல்லைக்குமரன் மலர் - 2018ஐ வெளியிட்டுள்ளது. 26 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இத்தருணத்தில் இம் மலர் தொடர்ந்தும் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் வெளிவர வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**வடமாகாணம்**
**யாழ்ப்பாணம்**

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය / தொலைபேசி / Telephone 021-222 2235
ෆැක්ස් / பக்ஸ் / Fax 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. Message from GA
ඔබේ අංකය / உமது எண் / Your No.
දිනය / திகதி / Date

# யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் வெளியீடு செய்யப்படும் நல்லைக் குமரன் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இளைய தலைமுறையினரிடத்து சைவசமய உண்மைகளையும் அறத்தினையும் இறை அருள் வெளிப்பாட்டினையும், அதனை அடையும் வழிகளையும் மேலோங்கச் செய்யும் ஆன்மீக உணர்வினை ஊட்டி எல்லோரிடமும் இறை பக்தியை உணர்விக்கும் நோக்கோடு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றிவரும் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவசமயவிவகாரக் குழு, நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவகாலங்களில் நல்லைக்குமரன் மலரினை வெளியீடு செய்வது மிகவும் பொருத்தமானது.

1993ம் ஆண்டு தொடக்கம் வெளிவரும் நல்லைக்குமரன் மலர் இவ்வருடம் 26ஆவது மலராக அமைகின்றது. சைவம் போற்றும் சிறப்புக்களை எல்லாம் அள்ளித்தரும் வகையில் நல்லூரான் மகோற்சவகாலத்தில் வெளிவருவதும் இரட்டிப்பு சந்தோசத்தைத்தரும் நிகழ்வாகும்.

இங்ஙனம் சிறப்புற அமையும் நல்லைக் குமரன் மலர் பல்வேறு ஆன்மீக விடயங்களை அனைவரும் பயன் பெறும் வகையில் அமையும் எனும் நம்பிக்கை யோடு இவ் அரியமுயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபடும் மாநகர ஆணையாளர் மற்றும் சைவ சமய விவகாரக் குழுவினரையும் பாராட்டி 26ஆவது நல்லைக்குமரன் மலர் சிறக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். පේදුරුතුඩුව පාර, යාපනය. Point-Pedro Road, Jaffna.
அலுவலகம் කාර්යාලය Office 021 222 2275 | தொலைநகல் ෆැක්ස් Fax 021 222 2334 | இணையத்தளம் වෙබ් අඩවිය Internet www.jaffna.mc.gov.lk

# யாழ்ப்பாண மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கும் யாழ் மாநகராட்சி மன்றத்துக்கும் நீண்டகாலமாக நெருங்கிய தொடர்புண்டு. இத்தொடர்பானது என்றும் வலுப்பெற்று சிறப்பாகவும், செம்மையாகவும் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவம் என்றால் நல்லூர் மாத்திரமன்றி யாழ் குடாநாடே விழாக்கோலம் பெறுகின்றது. இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள சைவ சமயத்தினர் தவறாது நல்லூர் முருகனின் அருளைப் பெற தாமும் இவ்விழாவில் கலந்து கொள்ளத் தவறுவதில்லை. இது போல புலம்பெயர் நாடுகளில் இருக்கும் நம்மவர்கள் நல்லூரானின் தரிசனத்தை தவறவிடுவதில்லை. இது எல்லாம் நல்லூரானின் அருட்கடாட்சம் என்றே கூற வேண்டும். இவற்றை எல்லாம் நாம் அறியும் போது கொழும்புத்துறையில் வாழ்ந்து திருநிறை பெற்ற சிவயோக சுவாமிகளின் பின்வரும் பாடலை நினைவு கூர முடியும்.

"நல்லூரான் திருவடியை நாம் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்போமடி"

கந்தனின் கடாட்சத்தால் செயல்படுகின்றோம்.
அவனின் கருணை எமக்காகட்டும்.

கடந்த இருபத்தைந்து வருடங்களாக யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லைக்குமரன் மலர் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வருடம் இருபத்தி ஆறாவது (26) மலர் சிறப்பாக மலர இருப்பதை வரவேற்று எனது வாழ்த்தினை அறியத் தருகின்றேன்.

மேலும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் சீரிய பணி தொடரட்டும் என வாழ்த்தி எல்லாம் வல்ல கலியுகக் கந்தனின் பாத கமலத்தைப் பணிந்து எனது வாழ்த்தினை நிறைவு செய்கின்றேன்.

**மாநகராட்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்**

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

அமைதிச்சூழலில் அழகுற எழுந்தருளி அலங்காரக்கந்தன் என்னும் அழகு பெயர் கொண்ட நல்லைக்கந்தனின் மகோற்சவ காலத்தில் அடியவர்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகளையும் வழங்கிவரும் பணிக்கு மேலாக யாழ்ப் பாணம் மாநகரசபையின் சைவ சமய விவகாரக்குழுவானது நல்லைக்குமரன் மலரினை கடந்த 1993ம் ஆண்டு முதல் வெளியிட்டு வருகின்றது. அந்த வரிசையில் இவ்வருடமும் முருகப்பெருமானின் உற்சவகாலத்தில் 26ஆவது மலரினை வெளியிட்டிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் 1994ம் ஆண்டிலிருந்து இம்மலரிற்கான ஆக்கங்களை எழுதி வழங்கிவரும் எனக்கும் இம்முறை இம்மலரிற்கான வாழ்த்துச் செய்தி வழங்கும் பேறினை எம்பெருமான் வழங்கியதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

சைவ சமயத்தைச் சார்ந்த மக்கள் அனைவரும் தமது சமய விழுமியங்கள், பாரம்பரியங்கள், விரத அநுட்டானங்களின் மகிமைகள், விழாக்களின் பெருமைகளை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் இந்து சமய ஆர்வலர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்னும் பல அறிஞர்களின் கட்டுரைகளைத் தாங்கி வரும் நல்லைக்குமரன் மலர் சைவ சமய விவகாரக்குழுவின் அரும் பெரும் பணியாகும்.

அத்துடன் இம்முறை கல்வித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வழங்கும் பணி மிகவும் சிறப்பானதாகும்.

இவற்றுடன் நின்று விடாது சமய மற்றும் சமூகப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றுபவர்களுக்கு "யாழ்" விருது வழங்கிக் கௌரவிக்கும் பாரம்பரியம் தொடர்வதும் ஆரோக்கியமானதொரு செயலாகும்.

இவ்வாண்டு வெளியிடப்படும் 26ஆவது நல்லைக்குமரன் மலர் சிறக்க வாழ்த்துவதுடன் சைவசமய விவகாரக்குழுவின் பணிகள் மேலும் விரிவடைய நல்லூர்க் கந்தனைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்

# 2018

## கவிதைகள்


- எல்லாம் அவனே எனக்கு
- "பாசுரங்கள் எழுந்து வேதசுரங்களாக
  தேசம் சிறக்க தேர் ஏறிவா சண்முகா..."
- நல்லைக் குமரப் "பா"
- கந்தப் பெருந்தெய்வப் பெருமானே...
- நல்லூரின் நாதா நலமருள வாவா!
- உன்னிடத்தில் ஓடி வந்தேன்
- உளமுருகி முருகனை வேண்டி நீபாடு
- எமையாளும் வரம் வேண்டினேன்
- நல்லருள் நல்கிடும் நல்லூரான் ...
- நல்லைப் பதி மீதிலே, இல்லையெனத் துயர் மாயுமே!
- வழிகாட்டும் துணையாக வரவேண்டும்
- நல்லைக் குமரா தந்திடு பதிலை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவனே எனக்கு

த.ஜெயசீலன்

"ஈழத் தமிழரின் ஈடில் அடையாளம்
யாழின் தமிழ்சைவ யௌவனமும் - யாதென்றால்
நல்லூர் பெருவிழாவாம்" - நாடுரைக்கும்! அவ்விழாவின்
எல்லைக் குவமைவேறு ஏது?

இருபத்து ஐந்து எழில்நாட்கள் ஆண்டில்
வரம்பெற்ற நாட்கள் வணங்கி - அருள்நிதியம்
கொள்வோம் குறைகளைவோம் கொஞ்சவரும் நல்லூரான்
தள்ளான் தருவான் தனம்.

ஞானத் திருவுருவாய் நல்லூர்ப் பதியுறையும்
வேலவனின் வாசலிலே வீழ்ந்தெழுந்து - ஈனம்
துடைப்போம் துடக்கறுப்போம் தூய மனத்தை
அடைவோம் பெறுவோம் அறிவு.

அலங்காரக் கந்தன் அழகொழுகும் வேலன்
கலங்கித் தெளியாக் கவலை - நிலைகுலைக்கும்
நாட்டுயிர்ப்பை மீட்பான்! நமதுவீட்டை யும்பார்ப்பான்!
வாட்டும் துயர்கள் வடித்து.

நல்லூரின் வேலன் நமதயலோன் நல்நண்பன்
வல்லோன் வரலாற்றை வாழவைப்போன் - எல்லைகள்
இல்லான்: எழிலுருவில் இங்கு நடமிடுவோன்.
எல்லாம் அவனே எனக்கு.

கூடிவரும் துன்பம் குலவவரும் தீமைகள்
தானென் றகங்காரத் தன்முனைப்புப் - பேதமைகள்
என்னை மிரட்டும் எனைப்பழிக்கும் என்மனமோ
அன்னவனை நம்பிவெல்லும் ஆம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தடம்மாற்ற எத்தனிக்கும் மும்மலங்கள்
என்கின்ற சூரர்கள் என்றுமெனைப் - பின்தொடர்வர்!
வேலெடுத்து வீசுவேலா வீழ்ந்தவர்கள் போகையில் யான்
பாவிசைப்பேன் சேர்ந்துநீ பாடு.

என்னுடைய வெற்றிதோல்வி என்னுடைய நன்மைதீமை
என்னுடைய இன்பதுன்பம் எல்லாமும் - உன்செயலே
என்றறிவேன் எங்கெங்கோ போனேன் எனைச்சரியாய்
உன்திசைசேர்க் கும்உன் ஒளி

நான்கேட்ட தெல்லாமும் நல்காய், "அருள்"என்று
நான்கேட்கா நன்மைபல நல்கிடுவாய் - ஆண்டியக்கும்
எல்லாம் உனதருளே என்றிருப்பேன் மோதவரும்
பொல்லாப்பு எல்லாம் பொசுக்கு

உன்னருகில் உன்னடியில் உன்பணிகள் செய்வதற்கு
என்னைத் தெரிந்து இயக்குகிறாய் - உன்கருணை
ஒன்றால் ஒளிர்கின்ற ஒன்றுமிலா என்னைஅணை!
உன்புகழால் என்னை உயர்த்து

கோடி செலவழித்துக் கொட்டவில்லை! நேர்த்தியென்று
ஆடி உருளவில்லை அன்பொன்றைத் - தேடித்
தருமென்னை வாழ்த்தித் தலைநிமிர வைத்தாய்
வரந்தருவாய் நித்தம் மதித்து.

நீயன்றி யாரும் நிழல்துணைகள் இல்லையென்று
வாழும் மனம்திடமாய் மாறுதற்கு - ஊக்கமருள்
என்பிழைகள் போக்கு எனது குறைசாய்த்து
என்னை உணர்த்து எனக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாசுரங்கள் எழுந்து வேதசுரங்களாக தேசம் சிறக்க தேர் ஏறிவா சண்முகா..."

"மண்டைதீவு மகிழ்நன்"
கை.பேரின்பநாயகம்

ஒய்யாரமான மயிலேறி எனக்குருக்
காட்ட குகநேசா ஒல்லையில்
வாரா யோ என் பிறவி துயர்தீராயோ
வன்மத்தோடு வாள்சூலம் தோமரம்
ஆராயாதே தாங்கிவந்தானுக்கு இரங்கிய
பார்சுற்றிய பரம் பொருளே என்
கர்மவினைதீர கடைக்கண் பார்த்து அந்த
பாவ வினைதீர்க்க நல்லூரா இரங்கிவா!

உனை நாடிவரும் பக்தருக்கு நீ
குறையாத பொருளும் செல்வமும்
எனையாழும் முருகா ஆரவாரமின்றி
வழங்குகிறாய் ஏழை என் நோய்க்கு
மறையவன் மகனே மருந்தாகி வா!
வேறொன்று வேண்டேன் விநாயகன் தம்பி!
வித்தாரமான மயிலேறி வந்தென் வினைக்கு
ஆனதோர் வழிகாட்டவா முருகையா

ஆணவ மான சூரனை அடக்கிய சண்முகா
கண்ணுக்கினியனாய் காட்சிக் கெளியனாய்
எங்கணும் நிறைந்த இறைமகனே
முந்திநான் செய்தகர்ம வினை யறியேன்
தங்கவருமின் னொருபிறவியும் வேண்டேன்
பட்டது போதும் ஐயனே பார்கண்டவா
பாதக்கமலம் கண்டுய்ய பாவி எனக்கொரு
ஆதார சுருதியாக வந்து வழிகட்டுவேலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் எவரும் எங்கும் காணாத
சோதிவடிவே முருகா கதிரமலைக்கிறைவா!
கதிர்காமப் பெருமாளே குறைநீக்கிஎனை
ஆழவா ஐயனே ஆழ்கடலிலும் பாழ்வெளியும்
அலைகிறேன் அநாதையாய்; "நம்பிக்கையே
நான்" என்றாய் பரம்பொருளே நானுனை
ஆதாரமாக கொள்ள வழிஒன்று காண்பி
வாத, பித்த, சூல நோய் இருந்து காத்தருள்வாய்

கொடியேற்றம் காணவா குமரா
கோமகனே கண்ணழகு துடிக்கும்
காணவே கைகூம்பும் விழியழகி
மான்மகளோடு மன்னவனே நீ எழு
பள்ளி, விடுபடை எனும் வேல்விழி
மங்கை இந்திரன்மகள், பிடிநடையாள்
அங்கைதொட அருக்காணி காட்டாதே! - முருகா
ஆண்டு தோறுமேறும் கொடிகாணவா, நாளியாகுது

ஆண்டுதோறும் எழுந்தாடும் கொடியது
வேண்டும் பொழுதெலாம் வினைதீர்க்கும்
யாண்டும் செங்குந்தர் காவிவரும் கொடி
பண்டுதொட்டு பாங்குடன் சேவிப்போம்
மேனிநுடங்காதே மேதகு குமரையா
பார்பதியாள் பாலகா கொடி நுடங்கும்
காட்சிபார் ஒல்லை எழு கோதையரோடு
கோமானே வெல்வதற்கரிய வேலெடுத்து வா!

நாளிதோறும் நானுனை பணிவேன்
கேளிது உண்மை அருக்கன் எழுந்தனன்
நாள்கோள் பார்த்துன் கோட்டத்தில்
எள் விழா நெருக்கத்தில் கூடினர் அடியவர்
வள்ளலே பள்ளி எழுந்துவா அவர் உள்ள
உள்ள, இனிக்கு முன்னுருவம் காணவே!
வாலிலை மங்கையரோடு சேர்ந்துவந்தே
பாலிக்கும் மறைக்கொடித் திரைகாண்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரா நல்லூரில் பாதுகாப்பு
இல்லையென நினைக்க வேண்டா,
அமராபதியை ஆட்சிகொண்டவா
அஞ்சிநீ இருத்தல் கூடா
நெஞ்சில் நீ ஒரு “டயாபோறஸ்” என -
எண்ணாதே ஈழதமிழன் போன
இடமெல்லாம் போகாதே நீ இருக்க
பயமே தென்று நல்லூரை ஆள்தலே போதும்!

அரசருக்கரசனானவன் முருகன்
சூரியனை பிடித்திழுத்து வந்த
சூரபன்மன் மகனை அடக்க ஒளிதந்து
உலகு காத்த உமை பாலா - உன்னை
விடதெய்வமுண்டோ உய்யவழிகாட்டு
அடல் என அரக்கர் படை வந்த காலை
அஞ்சேல் என அருள் பாலித்து காத்தவா இன்னும்
நல்லூரே தஞ்சமென வந்தோரை, கா!

வெற்பது வெடி பட்டழிந்திட ஓர்
வெற்றிக்கணை தொடுத்தவா வேலது
உற்பாதம் தாங்காது மாய மலை
பொடிபட்ட பெற்றி என்கோ
தம்பிதாரகன் அழிந்திட நம்பி இருந்த
சூரருக்கு திருப்பெரு வடிவதரிசனம்
தந்தனை கணந்தோறுமுனை இச்சித்து
வழிபடுமெனை தடுத்தாள வா முருகா!

நல்லூரான் நால்வேத நாயகன்
சொல்லும் வேல்தாங்கி வீதிவலம் வர
தொல்லுலகில் வல் வினை போம்
துயர்போம் துன்பம் போம்
வன்சொலாரொடு இணங்காத நல்
வரம்தந்தே கந்தக் கடவுளே
காவடியோடு பால்வடியும் குளவியும்
திருவடி கண்டுய்ய குழந்தைவடிவே காண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாயத்தை கோபித்து வந்தவா!
மெய்யே நீ பொதிகை தாண்டி வந்து
பொய்கைபல கொண்ட மைந்த நல்லூரே!
இல்லமாக கொண்டமைந்த தேனே!
ஒப்பாரும் மிக்காரு மில்லாத தியாகிகள்
ஈழமறவர் உன்திருவீதியில் தீயிலும்
கொடிய நோன்பிருந்தனரே தவமாக
தன்னுயிர் ஈய்ந்த தமிழர் மானம், திலீபன்!

ஆறாத பாவ வினை அகல அருள்வாய்
ஐய! பாராதீனபடுத்த முடியா பாவத்தை
ஆராயாதே தேரோடும் வீதியில் பாரப்
படுத்துகிறேன் அழகையா நின்திருவடி
தொட்டு தேரடிகண்டு பாடுவேன் கோவே!
குஞ்சரி மணாளா கான குறத்தி காதலா
கண்மணி அனையானே என்காதலை அறியாயோ!
திண்ணமாகவந்தருள்தா நான் சாகுமுன்னாய்

காலமோ கரையுது நேரமோ போகுது
காலக் கணிப்பும் நேர கணக்கரும்
கால நேரம் பாராதே யென் னாவி
கவர்ந்திட உமா தேவி மைந்தனே
ஒருகாலும் அனுமதித்திடாதே அப்பனே
உமா என்றால் வேண்டா மெனவே அர்த்தப்படும்
தப்பேதும் நான் தெரிந்து செய்தேனில்லை
அப்பனே சண்முகா ஒப்பரியதேவியரோடு மயிலேறு

பழகிய வீதிதானே என்று முருகா
இளகிய மஞ்ஞை தனில் இருவர்
அழகிய கன்னியரை வீதி உலாவிற்கு
வேலோடு அனுப்பிவிட்டு தனித்து
வீட்டுக்குள் முடங்கும் மந்திர மறியேன்
அழகிய வண்ணா உனைகாணாதே
ஏங்குகின்ற மனம் பார்; கண்டாலும்
ஏங்குமய்யா இந்த மனம் எழுந்துவா, மருந்தாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாத மலரெடுத்து மாலவா
தேடாத இடமெலாம் தேடினேன்
கோடானு கோடி தேவர்க்கும் இறையே!
கேடொன்று மாகா தென்றோ கோட்டத்தில்
குஞ்சித பாதன் மகனே நீ இருக்காய்
அஞ்சேல் என்று அகவும் மயிலும்
யாமிருக்க பயமென்ன வென்ற வேலும்
இருக்க அஞ்சவருவ தொன்றில்லை

உம்பரும் வந்தனர் நல்லூர் நன்றே
உலகுய்ய வரமும் கேட்டனர் நயந்தே
வம்பார்ந்த மேனகையும் ஊர் வசியும்
திலோத்தமாவும், கம்பார்ந்த பாமாவும் - சத்தியமாய்
தார் அணியும் கன்னியரும், மூவரும்
பார்த்து கிறங்கவே ஆடினர் நடனம்
செங்கழு நீர் தேவியர் கங்கை நதி தீரத்து
கார்த்திகேயனை நல்லூரில் கண்டு தரிசித்தே!

முன்னை நினைவுகளின் தரிசனமோ
முக்கணனார் புத்திரனின் காதலோ
பின்னை யவர் பிரிந்த துயரா மோ - அம்ம
கார்த்திகை பெண்களும் சோர்ந்து
நழுவும் பொருள் அறியாதே நீராடினர்
கங்கை நதிக்கரை யோரம் செங்
காந்தள் மெல் விரல்கள் சேர்ந்தனரே
கந்தனை கட்டியணைந்த பார்வதியாள் பாவனையில்

பட்டேன் நான் ஒரு கோடி; மாதவா
பாடுபட்டேன் முக்கோடி, வேறு
ஒட்டேன் நானினி உன்னை விட
மாட்டேன் கேள்குக நேசா
மன்னுலக மாந்தர் மன மறியும் மந்திரமறியாதே
நம்பி ஏமாந்தேன் நாலும் தோற்றேன்
திருக்காளத்தி உறையும் முப்புரத்து சிவன்
கண்மணியே கட்டளைக்கு காத்திருப்பேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூருக் கெனை நீ அழை நாவலனே
சொல்லழகா சுந்தரனே தோழியரோடு காண
எல்லையிலாத பேரழகி தேவ சேனா
மல்லுக்கு நின்ற மா தரசி வள்ளியம்மை
இல்லையெனாத நாதனே கேட்டதை தா
எனை நானே ஆள மந்திரம் சொல்லு
நல்லூர் அழகா நால் வேதம் தந்தவா
ஒல்லை வந்தென் பிறவித்தொல்லை தணி!

கொஞ்சு தமிழ்பா வெடுத்து கோதையர்கள்
நெஞ்சு விடுதூது சொல்லி கூத்தாட
கொடி குடை ஆலவட்டத்தோடு குமரன்
வீதி உலா வரும் திருக்காட்சி காண
குமரரும் குமரிகளும் குமர கோட்டம் நெருங்கினர்
நிலமதிர மயில் காவடி ஆடினரே!
தேர்காவடி, பால்காவடி தூக்குகாவடி தூக்கினர்
ஆர்த்தெழுந்தே தமிழன் துயர் தீரவரம்கேட்டே

ஆர்த்தெழும் அரகரநாமம் அஞ்சேலெனும்
வேல்! தீர்த்த யாத்திரை சென்ற மகன்
வார்த்தெடுத்த வடிவழகன் முருகன் சாமி
தகதகக்கும் தங்க மயிலோன் சண்முகன்
நீர் போர்த்ததொரு ஆடையுடன் புனையா
கோலத்தோடு அப்பனையும் அம்மையையும்
வெறுத் தொதுக்கி சாமிமலை போகாம்
நல்லோர் உளமுருக நல்லூர் வாதேசிகனே!

கண்ணெதிரில் இல்லாத வேலவா - உனை
காணாமல் போகுதையா என்னாவி
கண்ணெதிரில் தினம்தினம் காணும் குமரா - உனை
கண்டதும் தவிக்குதையா என் ஆவி
ஊர்வலமாய் வந்தாலும் விட்டாலும் - சண்முகா
உன்நினைவே என்னாவிதழுவுதையா
விண்ணரசேதவிக்கும் மனதை நேசி - இல்லையா
மண்நிற காவியுடுத்து போவேன் காசி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்று படையில் வந்தமுருகா
ஒராறுமுகம் கொண்ட சண்முகா மந்திரமே
கோடி கோடியாக வந்த அவுணரை
குனித்த முருகா நல்லூர் மந்திர்
வந்தவா திணைப்புனும் தேடி அலைந்தேன்
காடு மலை திரிந்த செவ்வேள் நீ
அடிமை எனக்கருளல் வேண்டில் அருகே வா
அழகானநந்தவனம் மயில் காணவா

விடிகாலை பொழுதெழுந்து குளிர்
அதிகாலை சுரத்தில் நீராடி முடித்து
வீதி நடந்து வேலவன் கோவில் நண்ணி
உயர் கோபுரதரிசனம் கண்டு
சேவல் கொடிகளின் அசைந் தாடலில்
கோழிகளின் கூவல் குரல் கேட்டு
விரிசுடர் அழுந்தகாலை தேவர் கோமான்
பொன் வண்ண தேரில் ஆரோகணித்தனன்

மானிடம் அருள்சிறந்துவிளங்க, கந்தன்
தானிடம் கொண்ட நல்லூர் வீதி எங்கணும்
மானிடர் மங்கையர் தேவர் அரம்பையர் என
ஆரவாரித்தெழும் கூட்டம் அரகரசிவசிவ
என்றாங்கு ஓத மடைதிறந்த கடலென அடியவர்
வெள்ளம் பெருகி நல்லூர் வீதி நிறைக்க
முப்புரி நூல்தரித்து ஒப்பரிய வேல்தாங்கி, தேவ
சேனாபதி சித்திரதேர் ஏறினன் தேசம் சிறக்கவே!

கண்டா மணி முழங்க குண்டலங்கள் அனுங்க
பாசுரங்கள் எழுந்தே வேத சுரங்களாக
கனக மணிதேர் சரங்கள் இலங்க துலங்கும்
தூண்டாமணி விளக்குகள் விளக்கமாகும், ஐய!
வண்டாடும் பூச்சொரியும் குஞ்சிஅழகுதிர
வண்டார் குளவியர் இருவர் காதல்சுரக்க
கண்ணழகா அடியவர் அரகரவென கூத்தாட
உம்பர் உலகென தேசம் சிறக்க தேர் ஏறு சரவணா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரப் "பா"

கலாபூஷணம், சந்தகக்கவிஞர்
நவ.பாலகோபால்

1. கலியுக வரதன் கரைகாணாக்
கருணை பொழியும் காருண்யன்
மெலிவை நீக்கி மேதினியில்
மேவும் இன்பம் நல்கிடவே
வலிவாய் நல்லூர்ப் பதியினிலே
வனப்பாய்க் கொடியு மேறிடவே
பொலிவாய் வந்தெம் குறைபோக்கும்
புகழ்வேல் நல்லைக் குமரப்பா!

2. அண்ட சராசரம் யாவையுமே
ஆய்ந்தே காக்கும் நோக்குடையான்
பண்டும் இன்றும் என்றுமவன்
பாழும் வினைகள் ஓட்டிடுவான்
எண்ணி யவனை மனமுருகி
ஏற்றிற் றன்னைக் காட்டிடுவான்
வண்ண மயிலில் வேலுடனே
வருவான் நல்லைக் குமரப்பா!

3. ஆர்த்த பிறவிப் பிணிதீர்க்கும்
அழகன் முருகன் திருநாமம்
ஆர்தான் சொல்லி அழைத்தாலும்
அருகில் வந்தே அமர்ந்திடுவான்
வேர்போல் நின்றே நிமிர்த்திடுவான்
வேண்டும் படியே அமர்த்திடுவான்
சீராய் எம்மைச் செப்பனிடத்
திகழ்வான் நல்லைக் குமரப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எண்ணெட் டாகும் கலைகளிலும்
எழுதுங் கவிதை யூற்றினிலும்
பண்பட் டவனே உறைந்திடுவான்
பலவாய்க் கருத்தில் நிறைந்திடுவான்
புண்பட் டெவரும் நெஞ்சினிலே
பூசித் தவனை நேசித்தால்
கண்பட் டுடனே முன்வந்து
காக்கும் நல்லைக் குமரப்பா!

5. மண்ணில் காற்றில் வான்வெளியில்
மலரும் ஒளியில் ஒலிகளிலும்
கண்ணில் கண்ட, காணாத
கண்டம் அண்டம் யாவிலுமே
எண்ணும் எண்ண வியலாத
எல்லா மேயவன் தானாகி
திண்ணமாகத் திகழ்ந் தெங்கும்
தெரிவான் நல்லைக் குமரப்பா!

6. ஐயன் நெற்றிக் கண்ணினிலே
அழகாய்த் தோன்றி வந்தவனே
தையலர் கார்த்திகைப் பெண்களிடம்
தவழ்ந்தே கதைகள் தந்தவனே
வையம் காத்து வளம்சேர்க்கும்
வற்றாக் கருணை கொண்டவனே
உய்யும் வழிகள் உருவாக்கி
ஓர்ந்தாள் நல்லைக் குமரப்பா!

7. அவ்வைப் பாட்டி அகந்தையினை
அடக்கி யாண்டு பலவாறாய்ச்
செவ்வை யாகக் கேள்விபல
தெளிந்தே கேட்டுத் தீந்தமிழில்
எவ்வா றெல்லாம் பாடவைத்தாய்
என்றும் இனிக்குந் தத்துவங்கள்
செவ்வா னுருவாய்த் திகழ்பவனே
தெரிந்தாள் நல்லைக் குமரப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பிரணவ மந்திர வுட்பொருளைப்
பிரித்தே விளக்கம் பகராத
பிரமா வைச்சிறை யிட்டனையே
பெருவர லாறு தொட்டனையே
உரமாய் "ஓம்"பொருள் தந்தைக்கு
உபதே சம்செய் திட்டனையே
கரங்கொண் டடியார் துயர்களையும்
களைவாய் நல்லைக் குமரப்பா!

9. சூரன் கொடுமை தாங்காது
சொல்லித் துடித்த தேவர்களின்
பாரத் துயரைப் போக்கிடவே
பற்றும் வேலாற் கூறிட்டு
சூரத் தனத்தை யொழித்தங்கு
சுடரும் சேவல் மயிலாக்கி
ஆரஞ் சூடி யமர்ந்தவனே
ஐயன் நல்லைக் குமரப்பா!

10. ஐயன் உன்னைக் கரம்பற்ற
அரிய தவத்தைப் புரிந்திட்ட
தையல் வள்ளிக் குறத்தியுடன்
சரச லீலை தான்காட்டி
மையல் கொண்டே மணஞ்செய்து
மன்றினி லேற்றி வைத்தவனே
நையு மடியார் நலங்காக்கும்
நாதா நல்லைக் குமரப்பா!

11. அருண கிரியார் நாவினிலே
அழகாய் வேல்கொண் டேயெழுதி
உருகி மயக்குந் திருப்புகழை
உயர்வாய்ச் சந்தம் விந்தையுடன்
பெருகிப் பாயச் செய்துகவிப்
பேற்றை யெங்கும் விதைத்தவனே
விரிவாய் மேலுந் தமிழோங்க
விழைவாய் நல்லைக் குமரப்பா!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஊமைக் குமர குருபரரும்
உளத்தினி னுன்னைத் துதிசெய்யத்
தாமே வந்துன் கருணையினால்
தமிழாற் கவிதைத் தரமோங்கத்
தூமா மணியே துணைபோனாய்
சொரியுஞ் சொல்வேற் கணையானாய்
பூமா நிலமும் பொலிவுபெறப்
புரிவாய் நல்லைக் குமரப்பா!

13. வேதம் நாதம் போதமதில்
விரவிப் பரவி மருவியுருப்
பூதம் ஐந்தும் தானாகிப்
பொலிவான் புரியாப் புதிராக
பாதம் போற்றிப் பலகாலும்
பணியும் பத்தற் கெளியோனாய்
மாதா் இருவா் புடைசூழ
வருவான் நல்லைக் குமரப்பா!

14. கல்வி செல்வம் வீரமெனக்
கருதும் மூன்று மவனாவான்
வல்லமை யறிவு திறமையெலாம்
வழங்கும் தெய்வம் வடிவேலன்
நல்லோா் செல்லும் பாதையெலாம்
நானுங் கூட வெனநிற்பான்
எல்லை யில்லாக் காருண்யன்
எழிலாா் நல்லைக் குமரப்பா!

15. ஐயன் அயில்வேல் அறுமுகனே
அல்லல் சூழ்ச்சி யழுக்காறு
பொய்கள் புரளிப் போதைகளும்
போக்கிரிச் செயல்கள் யாவையுமே
மெய்யாய்க் கண்டும் மௌனமதை
மேவி நிற்றல் முறையாமோ
வையம் உய்ய வழிசெய்ய
வாராய் நல்லைக் குமரப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வலியோர் எளியோர் தலைமைவாட்டும்
வஞ்சச் செயல்கள் காண்கிலையோ
நலிவோர் நலிந்தே தூங்குவதோ
நாசச் செயல்கள் ஓங்குவதோ
பலியாய் வீழ்வது முறையாமோ
பார்த்தே நிற்பது இறையாமோ
கலியுகத் தெய்வம் நீயலையோ
காப்பாய் நல்லைக் குமரப்பா!

17. ஏற்றங் கண்டே யெம்மகமும்
எல்லாச் செல்வ எழிலுடனே
போற்றும் பெருமை யனைத்திலுமே
புகழ்பெற் றோங்கி நிறைந்ததுவே
சாற்றும் சாபக் கேடிதுவோ
சகலது மிங்கே மறைந்ததுவே
ஆற்றி மீண்டு முயர்வுபெற
அருள்வாய் நல்லைக் குமரப்பா!

18. எம்மக வளங்கள் பயிர்பச்சை
எல்லா மில்லா தொழிந்தின்று
அம்மண மாக நிற்பதுதான்
ஐயா வெங்கள் ஊழ்வினையோ
பம்மாத் துலகிற் சூழ்வினையை
பார்த்தே நிற்பது விதியாமோ
எம்மவர் நிலைநிர்க் கதியாமோ
எழுவாய் நல்லைக் குமரப்பா!

19. பஞ்சம் பசிக எில்லாது
பசுமை நிறைந்த நிலமெங்கும்
வஞ்சம் வந்து சூழ்ந்திடவோ
வற்றாச் செல்வ மாழ்ந்திடவோ
நெஞ்சம் கருகி நீறாகும்
நிலையைக் கண்டும் மௌனமதை
கொஞ்சம் விலக்கி வந்தருள்வாய்
குறைதீர் நல்லைக் குமரப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. பாவம் பழிகள் பற்றாதோ
பட்ட துயர்கள் வற்றாதோ
கூவுங் கொடுமைக ளொடியாதோ
குவலய மின்னும் விடியாதோ
மேவும் நீதி பூக்காதோ
மெலவுன் விழிகள் நோக்காதோ
ஆவல் கொண்டெம் வினைநீக்க
அருள்வாய் நல்லைக் குமரப்பா!

21. சூதும் வாதும் சோதனைகள்
சுற்றிப் பற்றும் வேதனைகள்
நீதி யின்றிப் பரந்தெங்கும்
நிழலாய் நிற்றல் நியாயமதோ
காதில் வீழும் செய்திகளும்
கலியுக கால மென்கிறதோ
பாதி மதிசிவன் பாலகனே
பகர்வாய் நல்லைக் குமரப்பா!

22. அழகா முருகா வுன்னடியார்
அல்லற் பட்டு அவதியுறல்
அழகா மோசொல் அவனியிலே
ஆர்த்த வினையோ, அருள்ஞானப்
பழமே களமே வந்தாய்ந்து
பாவம் பழிகள் தாம்போக்கித்
தளமாய் வந்து வளமாக்கித்
தருவாய் நல்லைக் குமரப்பா!

23. அன்பர்க் கன்பன் அறுமுகவன்
அவனைப் பற்றிப் பின்செல்லத்
துன்பந் தொலையும் துயர்கலையும்
தொடரூழ் வினைகள் துவண்டுலையும்
இன்பம் பெருகும் இருள்கருகும்
இடுக்கண் இடுக்கண் பட்டேகும்
முன்னின் றென்று மெமையாளும்
முருகன் நல்லைக் குமரப்பா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஆதி யந்த மற்றவனே
அடியார்க் கென்று முற்றவனே
நீதி நெறிகள் நிலையற்று
நியாயம் நேர்மை குலைவுற்ற
போதில் அவனின் சுயரூபம்
பொறுத்தே யிருந்து காலமதில்
தேதி குறித்தே தீர்ப்பளிக்கும்
செயலோன் நல்லைக் குமரப்பா!

25. நலமின னென்பார் நண்ணாதார்
நண்ணின ரென்றும் நலம்பெறுவார்
சலமிலன் நீயே சரவணனே
சர்வமு மாகிச் சாரதியாய்
நிலமிசை நின்றே நீள்புவியை
நித்தமுஞ் சுழலச் செயுமுந்தன்
பலமது என்றுங் கைகொடுக்கும்
பணிந்தோம் நல்லைக் குமரப்பா!

26. நாதா வுன்னை நயந்தேற்றி
நற்கவி வாணர் நவின்றதெலாம்
காதாற் கேட்டுக் களிப்புற்றுக்
கவிதை பாட உவப்புற்றேன்
ஊதாக் குழலும் ஓசைதரும்
உந்தன் நாமம் ஓதிடிலோ
வேதா வார்த்தைச் சரந்தந்தாய்
விழைந்தேன் நல்லைக் குமரப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப் பெருந்தெய்வப் பெருமானே...

கவிஞர் கு.வீரா

உள்ளம் உருகி உனைப் பணிந்தோம்
நல்லைக்குமரா நலம்புரிவாய். - எல்லை
கடந்த கந்தப் பொருளே வேண்டும்
தொடர்ந்து உந்த னருளே.

நல்லைப் பதியானே நல்லைப் பதியானே
நல்லருள் புரிவாய் முருகோனே
சொல்லு தமிழாலே உள்ளம் குளிர்வோனே
சோதி எனவாகும் திறலோனே
வல்ல குருதேவே வலிமை உடையானே
வள்ளி மணவாள எழிலோனே
வெல்லும் மயிலோனே வீரப் படையோனே
வெற்றி வடிவேலின் பெருமானே.

கந்தனெனும் நாமம் கொண்ட சிவபாலா
சந்ததமிழ்ச் சாறில் களிப்போனே
செந்திப்பதி தன்னில் சூரப்பகை வென்ற
சீரலைகள் பாயும் கடலோனே
முந்து சிவனாரின் நெற்றிவிழி தோன்றி
முருகன் எனவான மறையோனே
எந்தத் துயரமுடன் ஏகும் அடியவரை
இன்பக்கடலாழ்த்தும் பெருமானே.

காலப் பெருவெளியில் ஞான தத்துவத்தை
வேலின் வழி சொன்ன விடிவோனே
ஞாலம் முழுவதுக்கும் மூலப்பொருளாகி
ஆளும்திறன் படைத்த அருளோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் எனவாகி பழநி மலைமீதில்
பார்புகழ நின்று உயர்ந்தோனே
கோல மயிலேறி சேவல் கொடியேந்தி
கூட துணைநிற்கும் பெருமானே.

முத்து நகைமின்ன முற்றும் ஒளியாகி
முன்னே எழுந்தருளும் வடிவோனே
சக்தியெனும் தெய்வ யானைவள்ளியுடன்
சச்சிதா னந்தம்தரு அமுதோனே
சொத்து எனவாகும் ஈழ நல்லூரில்
சொக்கும் அழகோடு அமர்ந்தோனே
பக்தி உணர்வோடு பரவும் அடியார்க்கு
முக்தி தருகின்ற பெருமானே.

தேவர் துயர்தீர்த்து சேனைப் பதியாகி
திவ்விய அருள்சுரக்கும் பெரியோனே
பாவ வினைபோக்கி ஞான அமுதூட்டி
பக்குவ நிலைசேர்க்கும் நெறியோனே
கூவ விடிகாலை தோன்றும் நிலையாக
சேவல் கொடி ஏந்தும் நெடியோனே
யாவரெனவாகும் போதும் வழிபட்டால்
யாவும் அருள்கின்ற பெருமானே.

வெள்ளை மணல்சூழ்ந்த வீதிதனை கொண்ட
நல்லைப் பதியானே பெருமானே
உள்ளம் தனிலுன்னை எண்ணி துதிசெய்ய
உடனே அருள்செய்யும் பெருமானே
பிள்ளை வரம்வேண்டி கண்கள் பனிப்போர்க்கு
தன்னைத் தருகின்ற பெருமானே
வெள்ளம் எனபக்தர் நிறையும் நல்லூரின்
கந்தப் பெருந்தெய்வப் பெருமானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரின் நாதா நலமருள வாவா!

கவிப்புலவர் வேலணையூர் சுரேஷ்

ஆறுமுகம் பார்த்துப் பார்த்து
அருளினில் பூத்துப் பூத்து
தேறும்முகம் பலவாம்; எந்தன்
தெய்வமுன் புதுமை கண்டு
கூறும்முகம் பார்த்தேன்; எங்கள்
குறைகளைத் தீர்க்கத் தேரில்
ஏறும் முகம் காணக் கடலாய்
எழும்பாதா பக்தர் கூட்டம்

நல்லன தாராய்; நல்லை
நாதனே வாராய்; எங்கள்
உள்ளமுன் அன்பில் ஊறி
உறைந்ததே பாராய்! எந்தக்
கல்லையும் கசிய வைக்கும்
கருணையிற் கடலே; உந்தன்
வல்லமை கேட்டுத் தானே
கந்தனே விரதம் காத்தோம்.

ஆறுதலைத் தாதா என்று
அடியவர் தினமும் சென்று
கூறுதலைக் கேட்டே கந்தன்
குளிர்ந்தனன் உள்ளம்; இந்தா
மாறுதலைத் தாறேன் என்றே
மங்கல சமேத ராகி
ஆறுதலை முருகன் தேரில்
ஆடிவாறான்; காண வாரீர்

அடிவான் பன்னீர் சிந்த
அந்தணர் தீபம் காட்ட
கொடிமலர் கம்பளம் விரிக்க
கோபுரக் குயில்கள் வாழ்த்த
அடியவர் வடம்தொட் டிழுக்க
ஆரோகரா எங்கும் ஒலிக்க
பிடித்தவெம் பிணிகள் அகல
பிரணவன் தேரில் வந்தான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னிடத்தில் ஓடி வந்தேன்

கவிஞர் வடஅல்வை சித்ரா சின்னராஜன்

**பல்லவி**

நல்லை நகர் மீதுறைந்து
அருளாட்சி புரிகின்ற
தில்லை நடராஜனின்
திருக் குமரா! முருகா!
தொல்லை தரும் பாவிகளைத்
துடைத்தே அழிக்கின்ற
எல்லைக் காவலனே எம்மைக்
காப்பாய் அருட்குமரா!
(நல்லை நகர்...)

**சரணங்கள்**

எம்மண்ணை நாமிழந்து
ஏதிலிகள் ஆகிவிட்டோம்!
எம் கண்கண்ட தெய்வங்கள்
அம்மா அப்பாவை
நாம் இழந்தோம்!
இம்மாநிலத்தில் வாழ இடமின்றி
உன்னிடத்தில் ஓடி வந்தோம்!
(நல்லை நகர்...)

அந்நியரைத் துரத்தி விட்டு
சங்கிலியை ஆளவைத்த முருகா!
எந்நிதியும் தரவில்லை
எங்கள் எழில் குமரா!
தென்னிலங்கை மன்னவரைத்
தோற்கடித்த வேலையா!
இன்னமும் வீடிழந்து நாம்
இருப்பதைப் பாருமையா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமுருகி முருகனை வேண்டி நீபாடு

"கலைமாமணி"
கே.ஆர்.திருத்துவராஜா

**பல்லவி**

நீலமயில் அமர்ந்து நீன்ற வேலேந்தும்
நல்லையில் நிழல்கொண்ட கந்தன் பதிநாடு

**அநுபல்லவி**

வேலவனின் நாமம் வேளை தவறாது
வாயார உளமுருகி வேண்டி நீபாடு
- நீலமயில் அமர்ந்து

**சரணங்கள்**

குமரன் கொடியேற்றம் குழந்தை மனமறியும்
குவிந்த மலர்யாவும் நறுமணமும் வீசும்
அமர்ந்து பதியாளும் அழகன் திருவடிகள்
எம்மிதய சுமையகல உணர்வலைகள் பேசும்
- நீலமயில் அமர்ந்து

நெற்றியிலே நீறணிந்து நிலாவாய் பொட்டுமிட்டு
கற்கனிகள் தட்டோடு தேடிவரும் அடியார்
இற்றரையில் ஒளிரும் ஆறுமுகன் வேலென்றும்
அற்புதமே அருளும் ஆறுதலும் மடிநிறையும்
- நீலமயில் அமர்ந்து

தேன்பாயும் கீதம் தென்றல் சுமந்துவரும்
தோளோடு காவடிகள் தெருநீளம் ஆடிவரும்
வான்திறந்த வெள்ளம் போலான கோடிமனம்
வண்ணமுற வாழவழி வைப்பாயே முருகா!
- நீலமயில் அமர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமையாளும் வரம் வேண்டினேன்

கலாபூஷணம் சிவ.சிவநேசன்
அரியாலை

**பல்லவி**

அலங்காரம் தினம்காணும் அருளாளனே
அபிசேகக் குளிராடும் குமரேசனே
உல காளும் அழகெல்லாம் நீயாளனே
உன்னடியார்க்கு நீயென்றும் நிழலாளவே

அலங்காரம்...

**சரணம்**

மிகை கொண்டு காமுகம் வெளியாடுதே
முகை மொட்டும் மலர்வுகளும் பாழாகுதே
வகையேது செகமிதில் வாழ்ந்தாகவே
நிகழாதோ நின்னருள் நல்லாட்சியே

அலங்காரம்...

பகைமேகக் கருமிருள் இகம் மேவவே
குகை வாழ்வோ நமக்காகும் தீர்வாகுமோ
வெகுவாகும் பாவங்கள் கலைந்தேகவே
வேலேந்தி வருவாயென் மயில் வாகனா

அலங்காரம்...

தமிழாண்ட மண்மீதில் பதியாள்பவா
தமிழ் வாழும் நிலம் ஆளும் நாளே தையா
இமையாரின் துயர் தீர்க்க களம் சென்றவா
எமையிங்கு நீயாளும் வரம் வேண்டினேன்

அலங்காரம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லருள் நல்கிடும் நல்லூரான் ...

தேமதுரன்
தே.சுகிர் நாகேந்திரா

நல்லையம் பதியினில் நிலையாக நித்தமும்
எல்லையிலா அருளாட்சி இனிதோங்கு - தில்லையம்
பலத்தான் திருநுதல் புதல்வோனே! தொழுமடியார்
கலங்காது காப்பாய் கனிந்து.

கனிந்தே காத்தருள் கார்மயில் வாகனனை
பனித்த சடையோன் பாலகுமரனை - இனித்தமுடன்
நல்லருள் நல்கிடும் நல்லூர் நாயகனை
அல்லல் விலகிட அணை.

அணைத்தே அருளீயும் அறுமுகனை அனுதினமும்
துணையென நாடித் துதிப்போம் - இணையிலா
வேலவது கரமேந்தி வெந்துயரை வேரறுத்து
சீலமுடன் அருள்வாய் சீர்.

சீரிலங்கு நல்லூர் சிங்கார வேலவனை
பாரிலங்கு பக்தரெலாம் பரவிடவே - தேரிலங்கி
தெய்வானை வள்ளியுடன் திருவருள் ஈந்தருள
எய்துவோம் எண்ணியன இனிது.

இனியோனே! அகத்தே இனிதுறை இறையோனே!
கனிகவர மயிலேறிக் கிளர்ந்த - தனித்துவனே!
திருத்தலம் வந்துன் திருவடிகள் சேவிக்கும்
திருவருள் தாராய் தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைப் பதி மீதிலே, இல்லையெனத் துயர் மாயுமே!

து.மனோகரன்
யாழ் தமிழ்ச்சங்கம்

நல்லைப் பதி மீதிலே, இல்லையெனத் துயர் மாயுமே!
அத மேவிப் புவிமீதில் ஏதும் இல்லையே!!!
பஞ்ச பூதங்கள் யாவுமே, நீயாகி நின் றால்!
மனிதத்துப் பதா் வந்து எது செய்கலாகும்!!

வருவான் வேலன் என்றே, எதிா் நீச்சல் போடு!
தருவான் நேரம் காலம் கண் டேயவன்!!
அவனுக்குக் குறையொன்றும் இல்லை, அவனிக்கும் குறையொன்றும் இல்லை!
கறைபட்ட மனிதத்து நிழல்பட்ட குறையொன்று தவிர!!

அவனை வந்தெது வெல்லக் கூடும், காலனையே வென்றசிவன் மகனை!
கயிறெல்லாம் கனகாலம் – இல்லை எனவந்து காலடியில் வீழும் – திண்ணம்!!
நல்லைக் குமரன் பெயா் தனைச் சொல் லியே!
நயம்சேரக் கவி யொன்று நான் செய்யவா !!!

சரியை கிரியை யோகம் ஞான நெறி கூறியே!
சமயத்து வழி நின்று கவி செய்யவா!!
படகோடும் கடல் மீதில், துடுப் பென்று சமயத்தைப்!
பற்றித் தான் கரைசேர வழி சொல்லவா!!

திசைகாட்டி வரு வானே, சிவ சக்தி பாலன்!
அவனோட எழில் கூற மொழி தேடவா!!
வடி வேலவா என்று, வரும் வே லவா!
உனைப் பாடவா உந்தன் எழில் கூறவா!!

துயா் போக்க நீவருவாய், கண் முன் னமே!
அதனா லுன் திருப்புகழை நான் பாடவா!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேலன் சந்நதி முன், மயி லும் வந்தா!
மயிலாடும் விதம் கண்டு பொருள் கூறவா!!

வேலாடும் சந்நதி முன், மயி லோன் வந்தா!
ஏனென்று மயிலை நான் கேட்டுச் சொல்லவா!!
வேலுண்டு வினை யில்லை, மயிலுண்டு பய மில்லை!
என்றாடும் நல்லை மண் பெயர் சொல்லவா!!

சிவசக்தி உமை பாலன், உனையாள வந்தால் தான்!
ஜெயமன்றி வே றில்லை நெஜ மல்லவா!!
புவி யாவும் உந்தன், கடைக் கண் களே!
அவை காணப் பதின் - ரெண்டு கண்வேணும் சொல்லவா!!

பக்கத்தில் தெய் வானை, வள்ளி யங்கே நிற்க!
வெட்கம் கொண்டே நின்றாய் எனச் சொல்லவா!!
இல்லை வெட்கம் ரெண்டு, சக்திக்கு நடு வாக!
நின்றாய் பரம் பொருளின் - தத் துவம் சொல்லவா!!

இச்சா சக்தி கிரியா, சக்திக்கு நடு வாக!
ஞானாசக்தி என நீ நின்றாய் சொல்லவா!!
என்சக்திக் கேற்றாற் போல், சொன் னேனே முருகா!
பழுதில்லை ஒரு பக்தி எனநான் சொல்லவா!!

எதுகற்றும் ஏ தென்ன, உண ராரே என்றால்!
உள்ளாநீ நின்றால் தான் பெறுமானம் சொல்லவா!!
ஏகக் கற்றோ ரெல்லாம், உன்பேர் சொன் னாலும்தான்!
உணராத போல் நின்றார் ஏன் சொல்லவா!!

எல்லோர்க்கும் ஒரு காலம், தரு வாய் நீயே!
எதனிற்கும் ஒரு காலம் தருவாய் எனவே!!
பகை வெல்ல வும்கூட, பரிணாமம் உண் டென்று!
நீதான் சொல்லித் தந்தாய் எனக் கூறவா!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டும் துணையாக வரவேண்டும்

அம்சா பரமநாதன்

நல்லதமிழ் பாடிவரும் ஞானமகள் அவ்வைக்கு
நாவலெனும் பழமுதிர்த்து
ஞாலத்தார் காணாத நயமான பொருள் சொல்லி
ஞானத்தை நீ கொடுத்தாய்
நக்கீரன் என்கின்ற சொற்கோவின் நெஞ்சத்தில்
நடுவாக நீயிருந்து
நலிவுற்றுக் கெஞ்சாமல் நமனுக்கும் அஞ்சாமல்
நலம் கோடி காணவைத்தாய்

தொல்லையுறும் தேவரவர் துன்பங்கள் தீர்க்கவெனத்
தொடர்ந்துன்னை வேண்டி நிற்கச்
சூழ்ந்தபகை அத்தனையும் மாய்ந்துபடு மாறுசெயத்
துள்ளிவரும் வேல் எடுத்தாய்
துடித்து விழும் அருணகிரி படைத்தவுயிர் காக்கவரும்
துணையாக நீயிருந்து
தோயவரும் திருப் பாயவரும் அருளோடு
தோன்றிவரு மாறு செய்தாய்

வல்லமைகொள் குருபரனின் வாய்பேச முடியாத
வாதையினை தீர்த்து வைத்து
வாழ்த்துமவர் நெஞ்சிலும் வாக்கிலும் செந்தமிழின்
வடிவத்தை எழுதி வைத்தாய்
மலர்தேடித் தாவுகிற வண்டெல்லாம் நின்பாத
மலர்நோக்கித் தாவு கின்ற
வளமான தென்பழனி மலைமீதிற் பண்டார
வடிவேந்தும் தண்ட பாணியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லுதமிழ் பாட்டாலுன் விரிவான புகழ் பாடி
வியந்திங்கு போற்றுகின்றோம்
விடியாத பொழுதாகி முடியாத கதையாகி
விழிசோரும் எங்கள் முன்னே
வேலோடும் மயிலோடும் விரிசேவற் கொடியோடும்
விருப்போடு வந்திருந்து
விழி கொண்ட பயனாகி வழிகண்ட துணையாகி
வினைதீர்க்க நல்லூரில் வரவேண்டுமே!

# மனங்களில் உறைவாய்!

**பல்லவி**

நல்லூரில் நீ இருக்க நமக்குப் பயம் எதற்கு?
நாடிவரும் துன்பமெல்லாம் ஓடிவிடும் எமைவிடுத்து!
(நல்)

**அநுபல்லவி**

வல்லோராய் நாம் வாழ வழிகாட்டும் சிவ பாலா!
வளமார் செந்தமிழால் நாம் வாழ்த்தும் வடிவேலா
(நல்)

**சரணம்**

'அலங்காரக் கந்தன்' என்று அகிலம் உனைப் போற்றும்!
ஆறுபடை வீடமர்ந்த அழகனென் றுனை ஏற்றும்!
'நலங் காக்கும் நாயகன்' நமக்கென்றும் நீயன்றோ?
நற்றமிழ்க் கடவுளென்று நாம் வணங்கும் தெய்வமன்றோ?
(நல்)

மாறுபடு சூரனை, வதஞ் செய்த வடிவேலா!
மனங்கவர் 'நல்லை'யிலே குடிகொண்ட குருநாதா!
ஏறு மயில் ஏறி வந்து எமக்கருளை நீ தருவாய்!
எல்லோர் மனங்களிலும் என்றென்றும் நீ உறைவாய்!
(நல்)

**கலாபூஷணம்**
**கீழ்கரவை கி.குலசேகரன்**
புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரா தந்திடு பதிலை...

சு.நாகலோஜினி
சுகாதாரப் பாதுகாவலர்,
யாழ். மாநகரசபை.

நல்லைக்குமரா தந்திடு பதிலை
நயவஞ்சகம் புரிவோரை அழித்திட வந்திடு
பள்ளிப்பருவமது படுகின்ற பாட்டிற்கு
பாலகா குமரா தந்திடு பதிலை

நல்லைக் குமரா நானிலம் தன்னில்
தொல்லைகள் அகன்றிட வேலுடன் வந்திடு
மயில் மீதேறி மகிழ்வுடன் வந்திடும்
பாலகா குமரா பதில்தர வந்திடு

கள்ளம் இல்லா கற்பனை உலகில்
துள்ளித் திரியும் பச்சிளம் பாலகர்கள்
படுகின்ற பாட்டினை பாலகா குமரா
பார்த்துமே பதிலை தந்திடு பாலகா

மதுவில் மயங்கி ஆடிய கூட்டங்கள்
போதையில் குளித்து கூடிய கூட்டங்கள்
துள்ளித் திரிந்த பள்ளிச் சிறுமிகளை
கொன்ற நிலைதனை பார்த்திடு குமரா

நன்மைகள் பெருகிட் நல்லூரா வந்திடு
நயவஞ்சகம் அழிந்திட வேலுடன் வந்திடு
துன்பங்கள் அகன்றிட மயிலேறி வந்திடு
துணையாக வந்திடு தந்திடு பதிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2018

## கட்டுரைகள்

- பரிபாட்டும் செவ்வேளும்
- சேயோன் மேய மைவரை உலகு
- சிவனே முருகன்; முருகனே சிவன்
- சுப்ரம்மண்ய மஹோத்சவம்
- தமிழ் உணர்த்தும் பக்தி
- கௌமார வழிபாட்டு மரபில் ஸ்ரீ மயூரகிரி (குன்றக்குடி) ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம் - பக்திநெறி நோக்கு
- நல்லூர்க் கந்தசுவாமியும் நற்சிந்தனையும்
- தமிழ் வளர்ச்சிப் பாதையில் அடிகளாரும் ஆறுமுக நாவலர் பெருமானும்
- முருகனைப் போற்றிப் பாடிய அருணகிரிநாதர்
- அருணகிரிநாத சுவாமிகள் அருளிய அமுதம்
- பாடும் பணியே பணியாய் அருள்வாய்!
- யாழ்ப்பாணத்தில் முருகத்தலங்களின் தோற்றம் வரலாறு சமூகப்பின்னணி மற்றும் வளர்ச்சி
- ஆகமஞ்சாராத வழிபாட்டு மரபில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வகிபங்கு
- திருமுருகாற்றுப்படையும் ஆறுபடை வீடும்
- நல்லூர்க் கந்தப் பெருமானின் எழிற்கோலம் காண நாம் என்ன புண்ணியம் செய்தோமோ!
- தேரடியில் இருந்து பாரடா தேகமெலாம் புல்லரிக்கும்
- மணிவாசகரின் வாசகமும் பயனும்
- சைவசமய வரலாற்றில் சிவபுராணம் பெறும் முக்கியத்துவம்
- திருமந்திரத்தில் குரு சிஷ்யன்
- இந்திய மெய்யியலில் அத்வைதம்
- திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி
- வேழமுகத்து விநாயகன்
- நல்லூர் கந்தன் - சிறு குறிப்பு
- சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார்
- அகவைநூறில் தடம்பதித்த திருப்புகழ் திலகம் தியாகராஜ சுவாமிகளும் அவர்தம் ஆன்மீகவாழ்வும்
- தெய்வீக மகளிர் வரிசையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
- முருக விரதமும் அனுட்டான நியமங்களும்
- தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள்
- ஆலயங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்
- 2018இல் யாழ் விருது பெறும் சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாட்டும் செவ்வேளும்

**தகைசார் வாழ்நாட் பேராசிரியர்**
**அ. சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சங்க இலக்கியத் தொகுப்பு நூலினுள் ஒன்றான பரிபாடல் தமிழர் வழிபாடு பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. "பரி பாட்டமுதமும்" எனச் சான்றோராற் புகழப் பட்ட பரிபாடல் தொகைநூல் எட்டுடன் ஐந்தாவதாக நின்று விளங்கியதை,

**"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ**
**றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்**
**றித்திறந்த எட்டுத்தொகை"**

என்னும் வெண்பாவால் அறியக்கிடக்கின் றது. பரிபாடலில் எட்டுப் பாடல்கள் செவ்வேள் பற்றிக் கூறுகின்றன. செவ்வேள் பற்றிய எட்டுப்பாடல்களையும் முறையே கடுவன் இளவெயினனார், நல்லந்துவனார், குன்றம் பூதனார், கேசவனார், நல்லழிசியார், நப் பண்ணனார், நல்லச்சுதனார் ஆகியோர் பாடியுள்ளனர். இவர்களுள் குன்றம்பூத னார் இரண்டுபாடல்களைப் பாடியுள்ளார். பாடல்களின் தொகை மிகக் குறைவாக இருந்தபோதும் கூறும்பொருள் விரிந்த தாகவுள்ளது. தனித்தனியாக அப்பாடல்கள் கூறும் விடயங்களை நோக்க வேண்டியுள் ளது.

தமிழர் மத்தியிலிருந்த வழிபாட்டு நடை முறைகளின் இன்னொரு வளர்ச்சி முறையை இப்பாடல்களிற் காணலாம். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு போன்ற தொகை நூல்களிலே கூறப்பட்ட முருகவழிபாட்டின் வளர்ச்சி நிலையை செவ்வேள்பற்றிய பாடல்கள் கூறுகின்றன. மலையுறை தெய்வமாகவும், பெண்களுக்கு நோய்தருபவனாகவும், வள்ளியோடு இணைந்தவனாகவும் முரு கன் கருதப்பட்டான். அவனுக்கென வழி பாட்டிடம் முருகன் கோட்டம் என அழைக் கப்பட்டது.

**"முருகயர்ந் துவர்ந்த முதுவாய் வேல**
**சினவ லோம்புமதி வினவுவ துடையேன்**
**பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு**
**சிறுமறி கொன்றிவள் நறுநுதல் நீவி**
**வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய**
**விண்தோய் மாமலைச் சிலம்பன்**
**ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே."**

என்னும் குறுந்தொகைப்பாடல் முருக வழிபாட்டு நடைமுறையைக் கூறுகின்றது. வழிமுறையாக முருகனை வழிபடுபவர் கள் பல்வேறுபட்ட நிறத்தையுடைய சில சோற்றுப் பலியுடனே இளைய ஆட்டினை யும் கொன்று அதன் குருதியையும் பலி யாக்கினர். இந்நடைமுறை பல பாடல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் முருகனின் அழகு காதலனின் அழகிற்கு உவமிக்கப் பட்டுள்ளது. முருகனையும் சாதாரண மனி தனையும் அணியும் மாலைகளால் வேறு படுத்திக் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"முருகு புணர்ந்து இயன்றவள்ளி"**

என்னும் தொடர் முருகனின் மனைவியாக வள்ளி அமைந்ததைக் குறித்து நிற்கின்றது. எனவே தமிழ் மக்களிடையே முருக வழி பாட்டில் ஏற்பட்ட புதிய மாற்றங்களை எடுத்துக் கூறப் பரிபாடல் பாடல்கள் எழுந்திருக் கலாம்.

இக்கருத்தை உறுதி செய்வதற்குச் செவ்வேள் பற்றிய பாடல்களே பெரிதும் உதவுகின்றன. பரிபாடல் 5ஆம் பாடல் செவ்வேள் பற்றிய பாடல்களின் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. "செவ்வேள்" என்ற பெயரும் அங்கு குறிப்பிடப்படுகிறது. "காஅய்கடவுள் சேஎய் செவ்வேள்" ஆக முருகன் அறிமுகஞ் செய்யப்படுகின்றான். ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களும் அவன் உருவில் இணைக்கப்படுகின்றன.

"நான்முகனாகிய பாகன் செலுத்தாநிற்ப வேதமாகிய குதிரைகள் பூட்டப்பட்ட நிலமாகிய தேரில் ஏறிச் சென்று அரவு நாணாகவும் மலை வில்லாகவுங் கொண்டு திரிபுரங்களை ஒரு நெருப்புக் கணையாலே அழியும்படி எய்தவனும், தேவர்களுடைய வேள்வியுணவினை உண்டவனும் ஆகிய இறைவன் இறைவியைக் கூடி இன்புறும் பொழுது உண்டான கருவை இந்திரன் தன்பால் வேண்டிக் கொண்டமையாலே அவ்விறைவனே பலவாகச் சோதித்தருளினார். அக்கருவை முனிவர்கள் எழுவரும் பெற்று வேள்வித் தீயிலிட்டனர். பின்னர் அதனைக் கார்த்திகை மகளிர் அறுவரும் உண்டு சரவணப் பொய்கையின் கண் தாமரைப்பூவாகிய பாயலில் நின்னை ஈன்றனர்"

என முருகன் உருவாகிய கதையும் பரிபாடலில் கூறப்படுகின்றது. கோழியும், மயிலும் முருகனுடன் சேர்கின்றன. பன்னிரண்டு கரங்களுக்கும், முறையே மறியும், மயிலும், சேவலும், வில்லும், மரனும், வாளும், ஈட்டியும், கோடரியும், மழுவும், கனலியும், மாலையும், மணியும் கூறப்பட்டுள்ளன. சூரபன்மனை மாமரமானபோது வேரோடு வெட்டி நாவலந்தீவினுள் வடபகுதியிலுள்ள கிரௌஞ்சம் என்னும் மலையை உடைத்து அதன் ஊடே வழியுண்டாக்கியமை செவ்வேளின் பேராற்றலை விளக்கும் நிகழ்ச்சிகளாகக் கூறப்பட்டுள்ளன.

செவ்வேள் திருவடியை அடைய முடியாதவர்களாக உயிர்களை வருத்தும் தீய நெஞ்சினை உடையோரும், அறத்தின்கட் சேராத புகழில்லாரும், கூடாவொழுக்கமுடைய பொய்த்த வேடமுடையோரும், மறுபிறப்பு, துறக்கம், நரகம், வீடு முதலியன இல்லை என்னும் அறிவில்லாதோரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். அறவோரும் மாதவரால் வணங்கப்படும் மாண்புடையாரும் செவ்வேள் தாள்நீழலை எய்தும் பேறு பெற்றவராகக் கருதப்பட்டனர். வழிபாட்டின் பயன் எது என்பதும் வெகு நுணுக்கமாகக் கூறப்படுகின்றது.

**"பொருளும் பொன்னும் போகமுமல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனு மூன்றும்**
**உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே"**

சாதாரண வாழ்வு நிலைக்கான வசதிகளை வேண்டிய வழிபாடாக அன்றி சமூக நிலைப்பாட்டிற்கான தன்மைகளை வேண்டுகின்ற வழிபாடாகச் செவ்வேள் வழிபாடு மாற்றமடைந்ததை இவ்வடிகள் விளக்குகின்றன. "முருகா உன்னிடம் நாம் வேண்டுபவை பொருள், பொன், அல்லது போகம் என்பன அல்ல; உன்னுடைய அருளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், அறனும் ஆகிய மூன்றுமே" என்பதே மேற்காணும் பாடலடிகளின் பொருளாகும்.

திருப்பரங்குன்றம் செவ்வேள் உறையும் சிறப்பிடமாகக் கூறப்படுகின்றது. சாதாரண குன்றம் என்றமையாது புராணச் செய்திக ளோடு சிறப்பிக்கப்படுகின்றது. திருமாலும், சிவபெருமானும், பிரமனும், ஆதித்தர் பன் னிருவரும், அசுவனி மருத்துவர் இரு வரும், வசுக்கள் எண்மரும், ஏனைத் தேவர் களும், அசுரர்களும், முனிவர்களும் செவ் வேளைக் காண்பதற்காக மண்ணுலகிலே அமைந்த குன்றமென விளக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு நிலையிலே ஏற்பட்டிருந்த மாற்றத்தை,

**"நனிமலர்ப் பெருவழிச்**
**சீறடியவர் சாறுகொள வெழுந்து**
**வேறுபடு சாந்தமும் வீறுபடு புகையும்**
**ஆறுசெல் வளியில் அவியா விளக்கமும்**
**நாறுகமழ் வீயும் கூறுமிசை முழவமும்**
**மணியுங் கயிறு மயிலுங் குடாரியும்**
**பிணிமுக முளப்பப் பிறவு மேந்தி**
**அருவரைச் சோராத் தொடுநர்"**

என்னும் அடிகள் நன்கு விளக்குகின்றன. மிக்க மலரினையுடையதாய்த் திருப்பரங் குன்றத்திற்கும் மதுரைக்கும் இடையே யுள்ள பெரிய வழியின் கண்ணே சிறந்த இறையன்புடையார் அக்குன்றத்தின்கண் உறையும் முருகவேளுக்கு விழாச் செய்ய எழுந்து, நிறத்தானும் மணத்தானும் ஒன்றிற்கொன்று மாறுபடுகின்ற பல்வேறு சாந்தங்களும், பெருமையுடைய புகைப் பொருள்களும் இயங்குகின்ற காற்றாலே அவியாத விளக்கிற்கு வேண்டுவனவும், மணம் கமழாநின்ற மலர்களும், இசையை எடுத்துக் காட்டும் முழவும், மணியும், கயிறும், மயிலும், கோடரியும், பிணிமுகம் என்னும் யானை ஊர்தியும் ஆகிய இவற் றையும் இன்னோரன்ன முருகவேளுக் குகந்த பிற பொருள்களையும் ஏந்திக் கொண்டு சென்று செவ்வேளை வணங்கும் மக்கள் தமது நடைமுறை வாழ்வுக்கான வற்றையே வேண்டுகின்றனர். தாம் விரும் பும் காதலரையே கணவராகப் பெறவும், குழந்தைப் பேற்றைப் பெறவும், கணவர் பெரும் பொருள் பெறவும், போரிடச் சென் றவர் போரில் வெற்றி பெறவும் வழிபாட் டைச் செய்கின்றனர்.

திருப்பரங்குன்றத்தின் சிறப்பை ஆறு பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இயற்கை யான வாழ்க்கையின் நடைமுறைகளும், வழிபாட்டு முறைகளும் விபரிக்கப்பட்டுள் ளன. அகவாழ்வின் இருநிலைகளாகிய கற்பு நிலையும் களவு நிலையும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. வள்ளி, தேவசேனை பற்றிய குறிப்புகளால் இதனை நன்குணர முடிகின்றது. மக்கள் வாழ்க்கை நிலையைச் செம்மைப்படுத்தவே வழிபாட்டு நடை முறைகள் தோன்றின. மக்கள் அகவாழ் வில் இடம் பெற்றிருந்த "ஊடல்" பற்றிய வர்ணனை இதனால் அதிகமாக இணைக் கப்பட்டுள்ளது. ஊடல் தீர்க்கின்ற இடமாகத் திருப்பரங்குன்றம் பேசப்படுகின்றது.

"ஒரு கானவன் ஒள்ளிய நிறத்தினையு டைய மணிபோன்ற புள்ளியினை யுடையதாய் ஆடாநின்றதொரு மயிலை நோக்கி அதன் அழகையும் களிப்பினையும் தன் உள்ளத்தால் குறிக்கொண்டு கருதி நின்றானாக அங்ஙனம் நின்றவனை அவன் காதலியாகிய அழகிய நெற்றியினை யுடைய கொடிச்சியும் கண்டாள். அங்ஙனம் கண்டவள் அவனை நோக்கி, "ஏடா நீ இப் பொழுது உன் உள்ளத்தே நினைப்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாம் அறிந்து கொண்டோம். அஃதியா தெனின் நீ இம்மயில் இவளினும் எழிலிற் சிறந்தது என்று நினைக்குமாற்றால் எமக்குச் சொல்" என்று ஊடினாள். அங்ஙனம் ஊடியவளை, அக்கானவன் அதனை மாற்றிக் "காதலுடையோயே! தன்னால் களவு கொள்ள அரிதாகிய நினது சாயலைத் தனது களிப்பு மகிழ்ச்சியாலே களவு கொள்ள எண்ணி அஃதியலாமையாற் பெரிதும் வருந்தும் இம்மயிலினைக் கண்டு நினது சாயலின் அருமையை நினைத்து நின்றேனாக. நீ அஃதறியாது எம்மை இகழ்ந்தோமாகக் கருதுகின்றனை" என்று கூறி அவ்வூடலை அப்பொழுதே உணர்ப்பித்தல் கண்டோர் நன்றென்று ஆராய்தற்குக் காரணமான தேரினையுடைய முருகவேளினது இத்திருப்பரங்குன்றத்தின் இயல்பு இத்தகையதுஆகும்"

வழிபாட்டுத் தலமான திருப்பரங்குன்றம் அகவாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கூறப்படுவதற்கு முக்கிய காரணம் பழைய வழிபாட்டு நடைமுறைகளே எனலாம். அகப்பாடல்களிலே தலைவியின் நோய்தீரக் குன்றிலுறை தெய்வத்திற்கு மடைபோடப் பட்டதாகக் குறிப்புண்டு. இவ்வழக்கத்தால் குன்று மக்கள் மனதிலே முக்கிய தெய்வம் உறை இடமாக இருந்ததையும் உணரலாம். இதுவே பரிபாடலிலும் வலியுறுத்தப்படுகின்றது. செவ்வேளின் ஆற்றல் சிறப்புகளைக் காட்டிலும் திருப்பரங்குன்றத்து வழிபாட்டு முறைகளுக்கும், அது சம்பந்தமான நம்பிக்கைகளுக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாளாந்த வாழ்வுத் தேவைகளுக்காக வழிபாடுகள் செய்யப்பட்டதைச் செவ்வேள் பற்றிய எல்லாப் பாடல்களுமே ஆழமாக உணர்த்தியுள்ளன. வேத வழிபாட்டு நடைமுறைகள் பரவிய போதும் இயற்கைநெறி நிலையிலே மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் ஆழமாக இருந்ததையும் இந்நிலை நன்குணர்த்துகின்றது. மணமான மகளிரும், கன்னியரும் திருப்பரங்குன்றம் சென்று விசேட வழிபாடுகளைச் செய்தனர். அவ்வழிபாட்டின்போது யானை உண்டெஞ்சிய கவளத்தையுண்டனர். அதனால் காதலர் அன்பையும், கண்ணிறைந்த கணவரையும் அடையலாமென நம்பினர்.

புராணக்கதைகள் மனிதனது சிந்தனைப் போக்கிலே வளர்ச்சி ஏற்பட்டதைக் காட்டுகின்றன. தேவர், அசுரர், மனிதர் என்ற பாகுபாடு மக்களிடையே நிலவிய குண நிற வேறுபாடுகளை பாகுபாடு செய்து சிந்திக்க உதவியது. மனிதனது வாழ்க்கை நிலைக்கும் மேலான கடவுள் நிலையை அடைய வழிபாடு கருவியாக உதவும் என்ற நம்பிக்கை மக்கள் மனதிலே உருவாகத் தொடங்கியது. புராணக்கதைகள் இந் நம்பிக்கையை மேலும் பலப்படுத்தின. இதனால் செவ்வேள் திருமால் என்ற கடவுளர் மக்கள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்றனர். தெய்வங்களிலே மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். தெய்வங்களின் பெருமையையும் ஆற்றலையும் பாடல்களிலே பாடினான். தான் மட்டுமன்றித் தனக்குப் பின் வருபவர்களும் அதை நம்ப வேண்டுமென எண்ணினான். திருமாலிருஞ் சோலையும் திருப்பரங் குன்றமும் சிறந்த வழிபாட்டுத் தலங்களாக இன்றும் புகழ்பெற இதுவே காரணமாகும். "கடவுளரைப் பாடல்" என் னும் புதிய மரபும் உருவாகியது. பிற்காலத் திலே பல புலவர்கள் கடவுளரைப் பாடவும் இது வழி காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வேள் பற்றிய பரிபாடல் கூறும் விப ரங்களைப் பின்னோரும் கையாண்டுள் ளனர்.

"குறமகள் அவளெம குலமகள் அவளொடும்
அறுமுக வொருவநின் அடியிணை தொழுதேம்
துறைமிசை னினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே"

எனச் சிலப்பதிகாரத்தில் செவ்வேள் பெருமை கூறப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றத்தோடு மேலும் ஐந்து மலைப்பிரதேசங்களைச் செவ்வேள் விரும்பி உறையும் இடமாக திருமுருகாற்றுப்படை நெடும்பாட்டு வடிவில் நின்று கூறுகின்றது. இயற்கை நிலையிலே, குன்றின் உருவிலே முருகனைக் கண்டவர் தமிழர். பரிபாடல் முருகனைச் செவ்வேளாக்கி உருவுந் தந்தது. திருமுருகாற்றுப்படை செவ்வேள் உறை குன்றங்களைச் சிறப்பித்தது. கச்சியப்பர் யாவற்றையும் தொகுத்துக் கந்த புராணமாக விரித்துரைத்தார்.




**நல்லைக்குமரன் வெள்ளிவிழா மலர் (2017)**
**வெளியீட்டின் போது ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேயோன் மேய மைவரை உலகு

பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

## அறிமுகம்

தமிழர் பண்பாட்டில் முருகவழிபாடு மிகவும் தொன்மையானது. பழந்தமிழிலக் கியங்களில் உள்ள பதிவுகள் இதற்குச் சான்று பகிர்கின்றன. தமிழ் மொழியில் தோன்றிய தொன்மையான இலக்கண நூலில் முருகன் பற்றிய பதிவில் முருக வழிபாடு பற்றிய குறிப்பு இடம் பெற்றுள் ளது. தொல்காப்பியத்தை யாத்த தொல் காப்பியர் முருகன் உறைவிடத்தைச் சிறப் பாக ஓரடியிலே குறிப்பிட்டுச் சென்றுள் ளார். தமிழருடைய அகவாழ்வியலைத் தொல்காப்பியர் இலக் கணமாக வகுத்து நோக்கியுள்ளார். நூற்பா வடிவிலே அதனைத் தொகுத்துத் தந்துள் ளார். "தொல் காப்பியம்" என்னும் தம்முடைய இலக்கண நூலில் "அகத்திணையியல்" எனச் சிறப்பாக ஒரு பகுதியை அமைத்துள்ளார். அப்பகுதி யிலே அவர் வகுத்துக் காட்டிய தமிழர் அக வாழ்வியலில் தமிழர் வாழ்ந்த நிலப் பகுதியை விளக்கிக் கூறியுள்ளார். வாழ்விய லில் இன்றியமையாத வாழ்விடத்தை அவர் பகுத்து நூற்பாவாகக் கட்டமைத்துள்ளார். அது வருமாறு அமைந்துள்ளது.

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

(தொல் : பொருள் : அகத்திணை : 5)

இந்நூற்பாவிலே "சேயோன் மேய காடுறை யுலகமும்" என்னும் அடி முருகன் பற்றிய செய்தியைப் பதிவு செய்துள்ளது. நிலவுலகை நான்காக வகுத்துக் காட்டும் தொல்காப்பியர் "சேயோன்" என முருக னைக் குறிப்பிட்டுள்ளார். இந்நூற்பா முருக வழிபாடு நடைபெற்ற நிலப்பகுதியை வரையறை செய்வதாக அமைந்துள்ளது. தொன்மையான இலக்கியங்களான சங்க இலக்கியங்களிலே முருகவழிபாடு பற்றிய பதிவுகள் இத்தகையதொரு வரையறையைச் செய்வதற்கு வழிகாட்டியாக அமைந்தன எனக் கொள்ள முடியும். பிற்காலத்தே தோன்றிய தமிழிலக்கியங்களிலும் முருகன் உறையும் இடமாக மலை நிலமே வரையறை செய்யப்பட்டு உள்ளது. இக் கட்டுரை முருகன் உறையும் இடமாக மலை நிலம் விளங்குவதற்குரிய மரபு நிலையான விளக்கத்தை எடுத்துக் கூறவுள்ளது.

## தொன்மை இலக்கியப் பதிவுகள் :

முருகவழிபாடு பற்றிய தொன்மை இலக்கியப் பதிவுகள் பற்றி முன்னரும் பலர் எழுதியுள்ளனர். இக் கட்டுரை முருகன் விரும்பியுறையும் இடமாக மலை நிலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறை செய்யப்பட்டதை எடுத்துக் காட்டி அதனூடாக ஒரு மரபான வழிபாட்டி டமாக மலை நிலம் அமைவதை எடுத்து ரைக்கவுள்ளது. கட்டுரையின் இடப்பரப்பு முழுமையான எடுத்துக் காட்டுக்களையும் இணைப்பதற்கு இடம் தராமையால் இன்றியமையாத சில எடுத்துக்காட்டுகளே விளக்கத்திற்குரிய தரவுகளாக அமையும்.

ஐங்குறுநூறு என்னும் தொகுப்பு நூலிலே ஐவகை நிலத்திற்குமுரிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மலை நிலமான குறிஞ்சி பற்றிய 100 பாடல்கள் கபிலர் பாடியவை தொகுக்கப்பட்டுள்ளன. ஆரிய அரசனான பிரகத்தன் என்பவனுக் குத் தமிழ் மொழியின் சிறப்பை விளக்கவே கபிலர் இப்பாடல்களை இயற்றினார் என வும் கூறப்படுகிறது. இப்பாடல்களில் குறிப் பாகப் 10 பாடல்கள் "குன்றக்குறவன் பத்து" என்ற பெயரிலே தொகுக்கப்பட்டுள்ளன. குன்றிலே வாழும் குறவர் வாழ்வியல் அப் பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் இரண்டு பாடல்கள் முருக வழி பாட்டு நடைமுறையைப் பற்றிக் குறிப்பிடு கின்றன. குறவரிடையே நிலவிய வழிபாட் டின் பயன்பற்றிக் கீழ்வரும் பாடல் குறிப்பி டுகிறது.

**"குன்றக் குறவன் கடவுள் பேணி**
**இரந்தனன் பெற்ற எல்வளைக் குறமகள்**
**ஆயரி நெடுங்கண் கலிழச்**
**சேயதாற் றெய்ய நீ பிரியும் நாடே".**

**(ஐங்குறு : 257)**

இப்பாடல் ஆண்மகன் ஒருவனுக்குப் பெண் கூறும் செய்தியாகப் புனையப்பட் டுள்ளது. தன்னுடைய தோழியோடு நெருங் கிய தொடர்பு கொண்டு பழகிய அவளு டைய காதலனுக்கு இப் பெண் ஓர் அறிவு றுத்தல் செய்கிறாள்.

"குன்றக்குறவனான என தோழியின் தந்தை தன் வழிபடு கடவுளாகிய முரு கனை நீண்ட காலம் இரந்து வழிபட்டு அவ னருளாலே மகளைப் பெற்றவன். ஒளி விளங்கும் வளையணிந்த இளமகளான இவளின் அழகிய செவ்வரி படந்த கருவிழி களை உடைய நெடுங்கண்கள் கலங்கி நீர் சொரிய நீ அவளைப் பிரிந்து செல்லும் நாடானது மிகவும் தொலைவிலுள்ளது".

இப்பாடல் முருக வழிபாட்டின் பயன் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. மலை நிலத்தில் வாழ்வோர் குழந்தைப் பேற்றுக்காக முரு கனை வழிபடும் மரபு இருந்தமை பாடலிலே சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழிபாட்டு மரபு தொடர்வதைப் பிறிதொரு பாடல் தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

**"குன்றக் குறவன் காதன் மடமகள்**
**மன்ற வேங்கை மலர்சில கொண்டு**
**மலையுறை கடவுட் குலமுதல் வழுத்தித்**
**தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்**
**மலர்ந்த காந்தள் நாறிக்**
**கலிழ்ந்த கண்ணளெம் அணங்கி யோளே".**

**(ஐங்குறு : 259)**

இங்கு மலை நிலத்திலே வாழும் குறவன் முருகனை வழிபட்டுப் பெற்ற அன்புமகள் வழிபாட்டைத் தொடர்ந்து செய்யும் முறைமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பொது இடத்தே வளர்ந்து நிற்கும் வேங்கை மரத்தின் மலர் களைத் தூவித் தேனைப் பலியாகச் செய்து அவள் வழிபடுகிறாள். கண்ணீர் மல்க மலை யிலே உறைகின்ற கடவுளும் தங்கள் குலத் தின் குலமுதலுமான முருகவேளை அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடும் காட்சி மரபின் தொடர்ச்சியாக உள்ளது. முருகனின் உறைவிடம் மலை யென்பதை இப்பாடல் தெளிவாகப் பதிவு செய்துள்ளது.

இன்னும் மலை நிலத்தில் வாழ்பவரு டைய நோய் தீர்க்கும் கடவுளாக மலை யிலே உறையும் முருகன் விளங்கியதைக் குறுந்தொகைப் பாடலொன்று விளக்க மாகக் காட்சிப்படுத்தியுள்ளதை வருமாறு காணலாம்.

**"முருகயர்ந் துவந்த முதுவாய் வேல**
**சினவ லோம்புமதி வினவுவ துடையேன்**
**பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு**
**சிறுமறி கொன்றிவண் நறுநுதல் நீவி**
**வணங்கினை கொடுத்தி யாயின் அணங்கிய**
**விண் தோய் மாமலைச் சிலம்பன்**
**ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே".**
(குறுந் : 362)

இப்பாடலில் முருகவழிபாடு வேலனால் மேற்கொள்ளப்பட்டமை பதிவு செய்யப்பட் டுள்ளது. நோய் தீர்க்கச் செய்யும் வழி பாட்டு நடைமுறை வருமாறு விளக்கப்பட் டுள்ளது.

முருகனை நாளும் வழிபாடு செய்து மகிழ்ந்த அறிவு நிரம்பிய வேலனே! நான் உன்னிடம் ஒன்றைக் கேட்க விரும்புகி றேன். அதற்காக நீ என்மீது சினம் கொள் ளாதே! பல்வேறு வண்ணமுடைய சிறு சோற்றை உடைய பலியுடன் இளைய ஆட் டைக் கொன்று அதன் குருதி தோய்ந்த மண்ணை இளம் பெண்ணின் நெற்றியிலே பூசித் தெய்வத்திற்கு நீ கொடுக்கின்ற இப் பலியை வானமளவு உயர்ந்த மலையிலே உறையும் தெய்வம் அதன் மாலையணிந்த மார்பினால் இப்பலியை ஏற்றுக் கொள் ளுமோ? கூறுவாயாக.

மலையிலே உறையும் முருகன் நோய் தீர்ப்பான் என்ற நம்பிக்கை அக்கால மக் களிடையே நிலவியதை இப்பாடல் நன்கு விளக்குகிறது. தலைமுறை தலைமுறை யாக இவ்வழிபாடு நடைபெற்று வருவதை "முதுவாய்வேல" என்ற தொடர் நன்கு விளக்கி நிற்கிறது.

முருகனுடைய ஆறுபடை வீடுகள் பற்றி விரிவாகத் திருமுருகாற்றுப்படை சிறப் பான தகவல்களைத் தருகின்றது. பரிபாடல் என்னும் தொகுப்பு நூலிலே செவ்வேள் பற்றிய பாடல்களில் முருகன் உறையும் திருப்பரங்குன்றம் தொடர்பான செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருமுருகாற்றுப் படை என்னும் நூலில் முருகன் விரும்பி யுறையும் மலைகள் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. திருப்பரங்குன்றம், அலைவாய் (திருச்செந்தூர்), ஆவி நன்குடி (பழனி), ஏரகம் (சுவாமிமலை), குன்று தோறாடல், சோலைமலை (பழமுதிர் சோலை) என்னும் ஆறுமுகன் உறையும் இடங்கள் இந்நூலிலே பாடப்பட்டுள்ளன. இவற்றுள் திருச்சீரலைவாய் மட்டுமே கடற் கரையில் அமைந்துள்ளது. ஏனைய ஐந்தும் மலை நிலத்தில் அமைந்துள்ளன. 317 அடிகள் கொண்டு நேரிசை ஆசிரியப் பாவால் திருமுருகாற்றுப்படை இயற்றப் பட்டுள்ளது. முருகனை அறிமுகப்படுத்தி அவன் எழுந்தருளியுள்ள இடங்களையும் வழிபாட்டு நடைமுறைகளையும் விளக்கிக் கூறி மக்களை முருக வழிபாட்டில் இணைப் பதே இந்நூலின் இலக்காக இருந்துள்ளது. மேலும் தொன்மை இலக்கியங்களில் முருகன் உறையும் மலைநிலம் வேறுபட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புக்களைக் கொண்டுள்ளது.

**மலைநில வேறுபாடுகள் :**

தொல்காப்பியர் முருகன் பெயரைச் சேயோன் எனக் குறிப்பிட்டு உள்ளார். சேயோன் என்பதன் பொருள் சிவந்த நிறமுடையவன் என்பதாகும். அவனுடைய உறைவிடத்தை மைவரை உலகம் எனக் குறிப்பிட்டுள்ளார். முகில்கள் தங்கும் உயர்ந்த கரிய மலையே சேயோன் உறைவிடம் எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். குறுந்தொகைப் பாடல் பதிவு செய்துள்ள "விண்தோய் மாமலைச் சிலம்பன்" என்னும் தொடரும் வானளவு உயர்ந்த மலையைக் குறிப்பிடுவதாக அமைந்திருந்தாலும் அம்மலையின் பிறிதொரு தனித்துவத்தையும் உள்ளடக்கியுள்ளது. தொல்காப்பியர் குறிப்பிடும் "வரை" என்ற சொல் தொடர்மலையாக நீண்டிருக்கும் மலை எனப் பொருள் தருவதாகும். குறுந்தொகைப் பாடல் குறிப்பிடும் "சிலம்பன்" என்ற சொல் எதிரொலி செய்யும் உயர்ந்த மலை என்ற பொருளைத் தருவதாகும்.

நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையில் ஐந்து மலைநிலங்கள் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன. முதலில் திருப்பரங்குன்றம் வருமாறு அமைந்துள்ளது.

**"மாடமலி மறுகில் கூடற்குடவயின்**
**இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த**
**முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்**
**கட் கமழ் நெய்தல் ஊதி எற்படக்**
**கண் போல் மலர்ந்த காமரு சுனைமலர்**
**அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்**
**குன்றமர்ந் துறைதலும் உரியன்".**

**(திருமுருகு : 71 –77)**

இங்கு மாடங்கள் மிக்க ஏனைய தெருக்களையுமுடைய மதுரையின் மேற்குப் பக்கத்தே கரிய சேறு படர்ந்த பரந்த வயலிலே மொட்டவிழ்ந்து மலர்ந்த முள்ளையுடைய தண்டிலே நிற்கும் தாமரைப் பூவிலே இராப் பொழுதிலே தூங்கி விடியற் காலையிலே தேன் நாறுகின்ற நெய்தற் பூவை ஊதி கதிரவன் தோன்றும் போது கண்ணைப் போல விரிந்திருக்கும் சுனைப் பூக்களை மருவும் அழகிய சிறகுகளையுடைய வண்டுக் கூட்டம் ஆரவாரம் செய்கின்ற திருப்பரங்குன்றிலே விரும்பி உறையும் முருகன் என நக்கீரர் விளக்கியுள்ளார். முருகன் உறையும் மலைநிலத்து வளம் நீர்வளம் என்பன பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எனவே முருகன் உறையும் திருப்பரங்குன்றம் மிக உயரமானதல்ல என்பது இங்கு உணரப்படுகிறது. குன்று என்பது மலையை விட மிகவும் சிறியதாகும். குன்றைக் கீழே நின்று முழுமையாகப் பார்க்க முடியும். மலையை அவ்வாறு முழுமையாகப் பார்க்க முடியாது.

அடுத்து நக்கீரர் முருகன் உறையும் "திருவாவினன்குடி" என்னும் மலை நிலம் பற்றிய பதிவை வருமாறு செய்துள்ளார்.

**"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்**
**ஆவினன்குடி அசைதலும் உரியன்".**

**(திருமுருகு : 175 – 176)**

குற்றமற்ற அறக்கற்பினையுடைய தெய்வானையாருடன் சிலநாள் திருவாவினன் குடி என்னும் ஊரிலே இருத்தலும் உரியன் என இவ்வடிகளுக்குப் பொருள் கூறப்பட்டுள்ளது. இம்மலைநிலம் தற்போது "பழனி" என வழங்கப்படுகிறது. நக்கீரர் காலத்தில் "திருவாவினன்குடி" என்று வழங்கப்பட்டு இருக்க வேண்டும். அழகிய நல்ல வாவியை உடைய ஊர் என விளங்க முடிகிறது. மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் நீர் தங்கி நிலையாக நிற்கும் பகுதியை வாவி என அழைக்கும் மரபு அக்காலத்தில் இருந்துள்ளது.

அடுத்துத் திருமுருகாற்றுப்படை "திரு வேரகம்" என்னும் மலைநிலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

**"உச்சிக் கூம்பிய கையினர் தற்புகழ்ந்து**
**ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி**
**நாவியல் மருங்கின் நவிலப் பாடி**
**விரையுறு நறுமலர் ஏத்திப் பெரிதுவந்து**
**ஏரகத் துறைதலும் உரியன்".**

**(திருமுருகு : 185 – 189)**

இங்கு "முருகன் அந்தணர் தாங்கள் வழிபடுதற்குரிய காலம் அறிந்து பூணூலை யும் புலராத ஆடையையும்அணிந்துகொண்டு தலைமேலே குவித்த கையினராய் முருக னைப் புகழ்ந்து ஆறெழுத்தை உள்ளடக்கிய கேட்பதற்கு அரிய மந்திரத்தை நா புடை பெயருமளவும் ஓதி மணமிக்க மலர்களைச் சிதறி வாழ்த்துக் கூறும்போது பெரிதும் உவந்து திருவேரகம் என்னுமிடத்திலே இருக்கிறான்" என நக்கீரர் குறிப்பிட்டுள் ளார். மலை நிலமான இப்பகுதி தற்போது "சுவாமி மலை" என அழைக்கப்படுகிறது. அருணகிரிநாதர் சோழநாட்டிலுள்ள சுவாமிமலை என்னும் தலமே ஏரகம் எனக் குறிப்பிட்டுள்ளார். பின்வரும் திருப்புகழ் அடிகள் இதற்குச் சான்றாக விளங்குகின் றன.

**"காவிரியாற்றுக் குளேவரு வளமைச் சோழ**
**நன்னாட்டுக்கு**
**ளேரக நகரிற் சீர்பெற மோட்சத்தையே தரு**
**பெருமாளே"**
**"யாவு மலைகொண்டுகைத்த காவிரி புறம்பு**
**சுற்றும்**
**ஏரகம் அமர்ந்த பச்சைமயில் வீரா".**

எனவே நக்கீரர் குறிப்பிட்ட "ஏரகம்" என்ற பெயர் பிற்காலத்திலும் தொடர்ந்து வழங் கப்பட்டதை அறிய முடிகிறது.

முருகன் எல்லா மலைகளிலும் உறைப வன் என்பதைத் திருமுருகாற்றுப்படை "குன்று தோறாடல்" எனக் குறிப்பிட்டுள் ளது. மலை நிலத்திலே வாழ்கின்ற குறவர் கள் முருகனை வழிபடும் முறைமை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் குரவை யாடி வழிபாடு செய்கின்றனர்.

**"கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்**
**நீடமை விளைந்த தேக்கள் தேறல்**
**குன்றச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து**
**தொண்டகச் சிறுபறைக் குரவை அயர".**

**(திருமுருகு : 194 – 197)**

கொடிய வில்லினால் மிருகங்களைக் கொலை செய்யும் தொழிலைச் செய்கின்ற மலையில் வாழும் குறவர்கள் மூங்கிற் குழாயிலே தேனைப் பெய்து, முற்றச் செய்த கள்ளை மலைநிலத்துச் சிறிய ஊரிலே உள்ள தம் சுற்றத்தாரோடு உண்டு மகிழ்ந்து, தொண்டகப் பறையை முழக்கி, அதன் தாளத்திற்கேற்ப ஆடுவதே குரவையாகும்.

இவ்வாறு முருகன் முன்னிலையில் குரவையாடுகின்ற வழக்கத்தை "மலைபடு கடாஅம்" என்னும் தொன்மை இலக்கிய மும் வருமாறு விளக்கியுள்ளது.

"அருஞ்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவேல் அண்ணற்கு விருந்திறை சான்மென
நறவு நாட் செய்த குறவர் தம் பெண்டிரொடு
மான்றோல் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை".

(மலைபடு : 318 – 322)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய காட்டை யழித்த கானவர்கள் உவகையோடு கூரிய வேல் தாங்கி நிற்கும் முருகப் பெருமானுக்கு மடை செய்யவென கள் படைக்கும் நாளிலே தமது பெண்டி ரொடு மான் தோலால் வரிந்து கட்டப்பட்ட சிறிய பறை முழங்கும் பேரொலி வான் வரையும் எழுந்து செல்ல ஆடுகின்ற குரவை என விளக்கப்பட்டுள்ளது.

நக்கீரர் முருகனுடைய தோற்றப்பாட் டையும் தமது பாடலிலே பதிவு செய்துள் ளார்.

**"செய்யன் சிவந்த ஆடையன் செவ்வ ரைச்**
**செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்**
**கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்**
**குழலன் கோட்டன் குறுபல் லியத்தன்**
**தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்**
**கொடியன் நெடியன் தொடியணி தோளன்**
**நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு**
**குறும் பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்**
**மருங்கில் கட்டிய நிலனேர்பு துகிலினன்**
**முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி**
**மென்றோள் பல்பிணை தழீஇத் தலைத் தந்து**
**குன்று தொறாடலும் நின்றதன் பண்பே.**

**(திருமுருகு : 206 – 217)**

சிவந்த திருமேனியை உடையவன் சிவந்த ஆடையை உடையவன்; அசோகினு டைய குளிர்ந்த தளிர் அணிந்த செவியை உடையவன்; கச்சு அணிந்தவன். காலிலே கழல் கட்டியவன்; வெட்சி மாலை சூடியவன். குழலை ஊதிக் கொம்பைக் குறித்துச் சிறிய இசைக்கருவிகளை ஒலித்துக் கேட்பவன். கிடாயையும் மயிலையும் உடையவன். கோழிக் கொடியை உயர்த்தியவன். நெடிய வன். தொடி அணிந்த தோளுடையவன். யாழ்நரம்பு போன்ற இனிய குரலுடைய மகளிர் கூட்டத்தோடு இருப்பவன். வயிற் றின் மேல் உடுப்பாகக் கொண்ட நறிய குளிர்ந்த மென்மையான இடையிலே கட்டிய ஆடை நிலத்தளவும் தூங்கப் பெற்ற வன். முழவை ஒத்த பெரிய கைகளாலே பொருந்த ஏந்திய மெல்லிய தோளையு டைய மான் பிணை போன்ற பல மகளி ரைத் தழுவிக் கொண்டு அவர்க்கு இடமளி த்து மலைகள் தோறும் சென்று விளையாடு கின்றவன்.

இத்தகைய முருகன் தோற்றத்தை இன்று காண்போருக்கு இது ஓர் அரிய செய்தி யாகும். மலை நிலக் கடவுளான முருகனின் தோற்றத்தை விழாக் காலங்களிலே காண் போர் முருகனுடைய திருக்கோலத்தின் மூலத்தை நன்குணர இப்பதிவு உறுதுணை யாகவுள்ளது.

நக்கீரர் குறிப்பிடும் பழமுதிர்சோலை பிறிதொரு மலைவளநிலமாகும். இம் மலை பல அருவிகளைக் கொண்டது. மலை நில விலங்குகள் நிறைந்தது. அக்காட்சியை நக்கீரர் வருமாறு காட்டுகிறார்.

**"இரும்பிடி குளிர்ப்பவீசிப் பெருங்களிற்று**
**முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று**
**நன்பொன் மணிநிறங் கிளரப் பொன் கொழியா**
**வாழை முதல் துயமித் தாழை**
**இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்**
**கறிக் கொடிக் கருத்துணர் சாயப் பொறிப்புற**
**மட மஞ்சை பலவுடன் வெரீஇக்**
**கோழி வயப்பெடை இரியக் கேழலொடு**
**இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன**
**குரூஉ மயிர் யாக்கைக குடாவடி உளியம்**
**பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு**
**ஆம ாநல்வேறு சிலைப்பச் சேண் நின்று**
**இழுமென இழிதரும் அருவிப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமுதிர் சோலை மலைகிழவோனே".

(திருமுருகு : 304 – 317)

பெரிய யானையினுடைய முத்தை உடையவாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கிக் குதித்து நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி செய்து பொடியான பொன்னைத் தெள்ளி வாழை யினது பெரிய முதல் ஒடிய தெங்கினது இள நீரையுடைய சீரிய குலை உதிர அவ்விரண் டினையும் மோதி மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாய பிலியையுடைய புறத்தினையும் மடப்பத்தையுடைய நடை யினையும் உடைய மயில்கள் பலவற் றோடே அஞ்சிக் கோழியின் வலியுடைய பேடைகள் கெட்டோட ஆண் பன்றியுடனே உள்ளே வெளிற்றினையுடைய கரிய பனையினது புல்லிய செறும்பை ஒத்த கரிய நிறத்தையுடையதாகிய மயிரினையு டைய உடம்பினையும் வளைந்த அடியினை யுமுடைய கரடி பெரிய கல்வெடித்த முழைஞ்சிலே சேரக் கரிய கொம்பினையு டைய மாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்கா நிற்ப மலையின் உச்சியினின்றும் இழும் என்னும் முழைசை படக்குதிக்கும் அருவியையுடைய மலைக்கு உரிமையை உடையோனாகிய முருகப் பெருமான் என நக்கீரர் விளக்கமாகப் பதிவு செய்துள்ளார்.

தொல்காப்பியர் முருகனை மலை நிலத்துக்குரிய ஒரு கடவுளாக இலக்கணம் செய்தமைக்கு மேற்காட்டிய முருகனுடைய உறைவிடங்கள் பற்றிய பதிவுகள் உறுது ணையாக இருந்துள்ளன. தொன்மை இலக் கியப் பதிவுகள் தரும் குறிப்புக்களை உள் வாங்கியே "சேயோன்" வழிபாட்டைச் சிறப் பான மலைநிலத்தவர் வழிபாடாகத் தொல் காப்பியர் வரையறை செய்துள்ளார். முரு கன் பற்றிய செய்திகள் வழிபாட்டு மரபை மக்கள் தொடர்ந்து பேணிய நிலையையும் காட்டுகின்றன.

**வாழ்வியலில் வழிபாடு**

தமிழர் வாழ்வியலில் வழிபாடு பெற்றிருந்த சிறப்பு நிலையை இன்று நாம் நோக்கும் போது தொல்காப்பியரது இலக் கண வரையறை ஒரு தனித்துவமானதென் பதை நன்கு உணரமுடிகிறது. வாழிடங் களுக்கு ஏற்ற வழிபாட்டு நடைமுறைகள் தமிழரால் பேணப்பட்டு வந்துள்ளன. மலை நிலத்து வாழ்ந்த மக்கள் சேயோனை வழி பட்டனர். தமது நிலத்து விளை பொருட் களை மடையிட்டனர். இசைக்கருவிகளை முழக்கி குரவையாடி முருகனை வழிபாடு செய்தனர்.

மலை, முருகன் உறைந்து அருள் செய்யும் இடமாகச் சிறப்புப் பெற்றிருந்தது. மழைவளம் தரும் கடவுளாகவும் முருகன் திகழ்ந்தான். நோய் தீரவும் சேயோன் வழிபாடு நடைபெற்றது. பிள்ளைப்பேறு அடைவதற்கும் முருகனையே வழிபட்ட னர். இந்த நம்பிக்கை தமிழரிடையே இன்று வரையும் நிலைத்துள்ளது. புராணங்க ளிலே பேசப்பட்ட வழிபாட்டு நடைமுறை களும் பிற்காலத்திலே இணைந்து கொண் டன. கந்தபுராணம் முருகன் திருவருள் பற்றி அறிவிக்கின்றது. திருமுருகாற்றுப் படை, பரிபாடல் போன்ற நூல்களிலும் புரா ணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. நக்கீரர் முருகன் அருளைப் பெற மக்களை ஆற்றுப்படுத்தியுள்ளார்.

இன்று முருகனுக்கு எல்லா இடங்களி லும் கோவில் அமைக்கப்பட்டாலும் முரு கன் மலையிலே விரும்பியுறைவான் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தே நிலை பெற்றுள்ளது. உயரமான மலையில் ஆற்றல் வாய்ந்த அருள் இருக்கும் என்ற நம்பிக்கை வையகத்தில் பல இன மக்களிடையே இன்றும் நிலவுகிறது. குறிப்பாக யப்பானிய மக்களிடம் மலைக் கடவுள் (Yama no Kami) பற்றிய நம்பிக்கை தமிழரைப் போல ஆழ வேரூன்றியுள்ளது. இவை பற்றிய ஒப்பீட்டுக் கட்டுரைகள் இக் கட்டுரையாளரால் வெளியிடப்பட்டுள்ளன. யப்பானிய பண்டைய இலக்கியங்களிலும் மலைக்கடவுள் பற்றிய குறிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. "மன்யோசு" என்னும் பண்டைய யப்பானிய இலக்கியத் தொகுப்பிலே உள்ள பாடல் ஒன்றை இங்கு எடுத்துக் காட்டாகத் தருவது பயனுடைத்து. யப்பானியப் பாடல் ஆங்கில வரிவடிவத்திலே தரப்பட்டுள்ளது. அதன் மொழி பெயர்ப்பு தமிழிலே அமைந்துள்ளமையால் ஒப்பீட்டு நிலையை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.

UME NO HANA உமெயின் மலர்
SIDARI YANAKI NI உதிர் யநகியுடன்
VORI MAJIBE பறித்துச் சேர்த்து
HANA NI MADURABA மலர் மடையிடினே
KIMI NI AFAMU KAMO உன்னையே
சேர்ந்திடுமோ.

(மன்யோசு பாடல் : 1904)

தன்னைப் பிரிந்து சென்ற காதலன் நீண்ட நாட்களாகத் திரும்பி வராமையால் அவனுடைய காதலி கடவுளுக்கு மலர் மடையிட்டு வழிபாடு செய்ய எண்ணுவ தாக இப்பாடல் அமைந்துள்ளது. இயற்கையின் கொடைகளால் மலர்களையும் இளந் தளிர்களையும் கலந்து வழிபாடு செய்யும் மரபு யப்பானியப் பெண்களிடையே இருந் தமையை இப் பாடல் தெளிவாகப் பதிவு செய்துள்ளது. தமிழர், யப்பானியரிடையே இன்னல் தீர இறைவழிபாடு மேற்கொள் ளப்பட்டதையும் இத்தகைய பாடல்கள் நன்கு உணர்த்துகின்றன.

மனிதன் தன்னுடைய துயர்களைத் தீர்க்க இன்னல்களைப் போக்க இறைவழி பாட்டை உருவாக்கினான் எனத் தற்கால ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் பண்டைக் கால மக்கள் இயற்கையோடு ஒன்றுபட்டு வாழ்ந்தமையால் அதனைப் பணிந்து வாழும் பயிற்சியையும் மேற்கொண்டிருந்தனர். முருகவழிபாடு, மலை என்னும் இயற்கைத் தோற்றப்பாட்டுடன் மக்களிடம் எவ்வாறு ஒன்றியிருந்தது என்பதையே இது தெளி வாக உணர்த்துகிறது. தொல்காப்பியர் குறிப்பிடும் "மைவரையுலகம்" முருகனாகத் தோற்றம் தருகிறது. கோயில் என்ற கட்டட அமைப்புத் தோன்றுவதற்கு முன்னர் மலையே கோயிலாக வழிபாட்டிடமாக அமைந்திருந்தது. அதன் பின்னர் குடவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. மலேசியா நாட்டிலேயுள்ள "பத்து மலை முருகன் கோவில்" இதனை நன்கு உணர்த்துகிறது. நக்கீரர் குறிப்பிட்ட "குன்று தோறாடல்" முருகனின் தனித்துவமான ஓர் அருட் சிறப்பாக விளங்குகிறது.

எனவே தொல்காப்பியருடைய நிலங் களுக்குரிய வழிபாட்டின் வரையறையில், மலைநிலம் பற்றிய வரையறை முருக வழி பாட்டின் அடித்தளமாக அமைந்திருப்பது. இன்றைய தலைமுறையினர் நன்கு உணர வேண்டிய ஒரு கருத்து நிலையாகும். மலைக்காற்றால் உடல் நலம் சீர் பெறும் என்ற நம்பிக்கை இன்றும் எம்மிடையே உள்ளது. இத்தகைய இயற்கை வழிபாடு பற்றிய தெளிவை ஏற்படுத்த விரிவான பல ஆக்கங்கள் இன்னும் தேவை. இக்கட்டுரை அதில் ஒரு சிறு துளியேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனே முருகன்; முருகனே சிவன்

சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம் M.A
(ஓய்வுநிலை அஞ்சலதிபர்)

சிவனுக்கும் முருகனுக்கும் பேத மில்லை என்பதனைக் கந்தபுராணம் உறுதிப்படுத்துகிறது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய தீப் பொறிகள் ஆறும், சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக தாமரை மலரின் மேல் விளையாடிக் கொண்டிருந்த போது சிவ பிரான் உமாதேவியாரோடு சரவணப் பொய் கையை அடைந்தார். உமை அம்மையை நோக்கி, அங்கு தாமரை மலர்களின் மீது வீற்றிருக்கும் முருகப் பெருமானாகிய குழந்தைகளைச் சுட்டிக்காட்டி,

(ஆதலின்) நமது சக்தி அறுமுகன்
அவனும் யாமும்
பேதகம் அன்றால்" நம் போல் பிரிவிலன்
யாண்டும் நின்றான்;
ஏதமில் குழலி போல்வான்; யாவையும்
உணர்ந்தான்; சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு
அருள வல்லான்"

(கந்தபுராணம்)

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சிவமந்திரம் சிவத்தோடு முருகன் பேத மின்றி இணைந்திருக்கிறான் என்றும், சிவனே முருகனாகவும், முருகனே சிவனாக வும் இருக்கிறார் என்றும் கூறுகிறது. கந்த புராணத்திலும் இத்தத்துவம் விளக்கப்படு கிறது.

"மறைகளின் முடிவால் வாக்கால்
மனத்தினால் அளக் கொணாமல்
நிறைவுடன் யாண்டு மாகி
நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி
அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின்
வீற்றிருந்து அருளினானே"

திருவவதாரப்படலம்

என்றும் "ஈசனே தன் ஆடலால் மதலை ஆயினன்" என்றும் இப்புராணம் கூறுகிறது. தணிகைப் புராணத்தில் கச்சியப்ப முனிவர் "தனக்குத் தானே மகனாகிய தத்துவன்" என்று பாடுகிறார்.

தம்முடைய ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என்ற ஐந்து முகங்களும், அதோ முகம் என்ற கீழ் நோக்கிய முகமும் கொண்டு சிவபெரு மானே ஆறுமுகங்களுடன் முருகனாக வந்தார் என்பர். ஈசானம் என்பது எல்லாவற் றையும் ஆளுந்தன்மையுடையது; தத் புருடம் என்பது தேவசரீரம், மானுட சரீரம் ஆகியவற்றில் அதிட்டித்து நிற்பது; அகோரம் என்பது சாந்தமாக இருப்பது; வாமதேவம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய வற்றை ஆன்மாக்களுக்கு அருள வல்லது; சத்யோஜாதம் என்பது உயிர்களுக்கு சீவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிகளைத் தோற்றுவித்து உள் தோன்றி அருளவல்லது.

"ஐந்து முகத்தோடதோ முகமுந் தந்து
திருமுகங்கள் ஆறாகி" என்று கூறுகிறது

கந்தர் கலிவெண்பா. சிவபெருமானின் ஐந்து முகங்களும் அம்மையின் ஒரு முகமும் சேர்ந்து ஆறு முகங்களாயின என்றும் கூறுவர். முருகனுக்குச் சிவபெருமானின் முற்றறிவு, எங்கும் நிறைந்து நிற்றல், இயல்பாகவே பாசங்களின்றும் நீங்குதல், பேரருள், உடமை என்னும் ஆறு குணங்களும் ஆறு திருமுகங்களாக அமைந்தன என்கிறது கந்தபுராணம்.

"ஏவர்தம் பாலுமின்றி எல்லை நீர்
அமலற்குள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய்
வந்ததென்னப்
பூவியல் சரவணத்தன் பொய்கையில் வைகும்
ஐயன்
ஆவிகள் அருளு மாற்றால் அறுமுகம்
கொண்டானன்றே".
(திருவவதாரப்படலம்)

இவையே அல்லாமல் கணபதியை ஓங்கார வடிவில் வழிபடும் காணபத்தியம், குமர னைப் பேரின்ப வடிவினனாக வழிபடும் கௌமாரம், சூரியனைப் பேரொளி வடிவின னாக வழிபடும் சௌரம், விஷ்ணுவை எங்கும் நிறைந்தவனாக வழிபடும் வைணவம், சக்தியைத் தாயாக வழிபடும் சாக்தம், சிவனைத் தந்தையாக வழிபடும் சைவம் என்ற இந்த ஆறு வைதீகச் சமயத்தின் கூட்டே முருகப் பெருமானின் ஆறு திருமுகங்களாக வும், (திருமுகங்களாகவும்) அமைந்தன என்பதை

"ஆறு சமயக் கடவுள் வேறு வேறின்றி யான்
ஒருவனே அங்கங் கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே!"

என்று போரூர்ப் பிள்ளைத்தமிழ் சிறுபறை கொட்டுகிறது.

ஆதிசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி, பரா சக்தி, ஞானசக்தி, குடில சக்தி ஆகிய ஆறு சக்திகளும் ஆறு முகங்களாக வந்தன என் றும் கூறுவர். ஆறு முகங்களும் ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் ஆகியவற்றைத் தரும்.

பரம்பொருள், கருணை வெள்ளம் பொழி யும் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு உலகமெல்லாம் உய்யும் வண்ணம் முருகக் கடவுளாகத் திருவவதாரம் செய்தருளியது.

"அருவமும் உருவம் ஆகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி
ஆகக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள்
பன்னிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன்
வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய"

என்று (திருவவதாரப் படலம்) கந்தபுராணம் கூறும். சிவத்திற்குரிய "பஞ்சாக்கரத்தோடு" ஏகாட்சர பிரம்மமாகிய ஓர் எழுத்துப் பிரணவ மாம் "ஓம்" சேர்ந்து "சடாக்கர" மாகிறது. அருணகிரிநாதர்.

"ஓரெழுத்தில் ஆறெழுத்தை
ஓதுவித்த பெருமாளே!" என்று பாடுகிறார்.

சிவபெருமானைப் போலவே குமரக் கடவு ளும் ஐந்து தொழில் இயற்றுபவர்; கோழிக் கொடியானது படைத்தல் தொழிலையும், மயில் வாகனமானது காத்தல் தொழிலை யும், சக்தி வேலானது அழித்தல் தொழிலை யும் செய்ய, இச்சா சக்தி வடிவமாகிய வள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்மையார் மறைத்தல் தொழிலைச் செய்வ தாகவும், கிரியா சக்தி வடிவமாகிய தெய்வ யானை அம்மையார் அருளல் தொழிலைச் செய்வதாகவும் தத்துவங்கள் பகர்கின்றன.

முருக வழிபாடு மிகத் தொன்மையானது. இருக்கு வேதம் சிவனை ஒருமுறை பிரணவ ஒலியாய் அழைக்கிறது!. முருக னையோ,

"சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ர மண்யோம்" என மும்முறை "ஓம், ஓம், ஓம்" எனப் பிரவணத்தை இணைத்துக் கூவி அழைக்கிறது. "அ" கார, "உ" கார, "ம்" காரம் என்ற ஓங்காரஸ்வரூபமே ஸ்ரீ சுப்ரமணியக் கடவுள் என்றும், அவன் கலியுக வரதனென் றும் வேதங்கள் முழங்குகின்றன.

சிவம் என்பது சத்து; சக்தி என்பது சித்து; முருகன் என்பது ஆனந்தத்தைக் குறிக்கும். இதுவே சச்சிதானந்தம். உண்மை என்பது சிவபெருமான்; அறிவு என்பது சக்தி; இன்பம் என்பது முருகன்; மூன்றும் சேரவே, மோட்ச மாகிய சச்சிதானந்தமாகும். இதனால் சிவ பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக் குப் பற்பல பேறுகளை அருளும் வகையில் கொண்டருளும் திருவுருவங்களில் முருகன் திருவுருவும் ஒன்றாகும் என்பது பெறப்படு கிறது. மரமும் அதில் இருக்கும் வயிரமும் போல் சிவனும் முருகனும் ஒன்றானவர்; வேறல்லர். சிவனே முருகன்; முருகனே சிவன்.

மேற்கூறிய புராணச் சான்றுகள் சிவனும் முருகனும் ஒன்றெனத் தெளிவுறப் புலப் படுத்துகின்றன. ஆகவே நாமும் இருவரும் ஒருவரே எனச் சித்தந் தெளிந்து வழிபடுவோ மாக!

**உசாத்துணைகள்:**

குமாரதந்திரம்
கந்தபுராணம்
முருகன் - கிருபானந்த வாரியார்
கந்தரலங்காரம் - மு.திருவிளங்கம் உரை
இந்து சமயக் களஞ்சியம்
கந்தர் கலிவெண்பா - கி.வா.ஜெகந்நாதன்
திருமுருகாற்றுப்படை - நக்கீரதேவர்
முருகன் பெருமை - புலவர் ஏறு நா.ரா.முருக வேள்
திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்.

## சூரிய பகவான் பிரதிஷ்டை

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் **22.07.2012** ஞாயிறு காலை 7.00 மணியளவில் **சூரியபகவான்** எழுந்தருளி விக்கிரகம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்ரம்மண்ய மஹோத்சவம்

**ச. பத்மநாபன்**
B.A (Hons) P.G.Dip.in Edu, M.Phil
தலைவர், சம்ஸ்கிருதத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

சிவாகமக்கிரியை மரபுகளில் முக்கியத்துவமுடையவை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்பனவாகும். திருக்கோவில் அமைப்பு விதிகளுக்கமைய அமையவேண்டிய விதிமுறைகளை சிவாகமங்களின் கர்ஷணவிதி கூறுகின்றது. கர்ஷண விதிமுறைகளுக்கு அமையப் பெற்ற திருக்கோவில்களிலும், திருவுருவங்களிலும் தெய்வ சான்னித்தியம் நிலைபெறுவதற்கு ஆற்றப்படும் கிரியையே பிரதிஷ்டை ஆகும். பிரதிஷ்டை என்பது கிரியைகளின் தொகுதி என்பது ஆகும். இங்கு தெய்வ சான்னித்தியம் நிலைபெறுதல் என்பதே முக்கியத்துவமுடையதாகும். அவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட திருக்கோவில் பூஜைகள் ஆரம்பமாகும். அப்பூஜைகள் நித்ய பூஜைகள், ஆகந்துக நித்யபூஜைகள், நைமித்யபூஜைகள், காமியபூஜைகள் என விரிவு பெறும்தன்மையதாகும். அம்மரபில் சிவாகம விதிமுறைப்படி அமையப் பெற்ற சுப்ரமண்யத் திருக்கோவில்களில் மஹோத்சவம் எவ்வாறு செய்யத்தக்கது எனும் விதிமுறைகளை சிவாகமங்களும் சிறப்பாக குமாரதந்திரம் எவ்வாறு விதித்துக் கூறுகின்றது என்பதனை நோக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

### சிவாகமங்கள்

சிறப்பாக சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். அவையாவன : காமிகம், யோகஸம், சிந்தியம், காரணம், அஜதம், தீப்தம், ஆக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம், ஜிவிஜயம், நிஸ்வாசம், ஸ்வாயம்புவம், ஆக்னேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், ப்ரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்பனவாகும்.[1] இச் சிவாகமங்களின் முதற்பத்தும் சிவகணங்களுக்கு உபதேசிக்கப் பெற்றமையால் சிவபேதம் என்றும், ஏனைய பதினெட்டும் ருத்ரகணங்களுக்கு உபதேசிக்கப் பெற்றமையால் ருத்ரபேதம் என்றும் அழைக்கப்படுகின்றன.[2] இம் மூலசிவாகமங்களுக்கு உபாகமங்களும் உண்டு. அவை இருநூற்றேழு ஆகும்.[3] இவ்வுபாகம வரிசையில் லலிதாகமத்தின் உபாகமத்துள் ஒன்றே குமாரதந்திரம் என்பது குறிப்பிடத்தக்கது.[4]

### பத்ததி மரபு

மூல சிவாகமங்கள் விதிநூல்களாக அமைய அவை கூறும் கிரியை மரபுகளை விரித்துக் கூறுவன பத்ததி நூல்களாகும். இவற்றினடிப்படையில் சிவாகமமரபுகளை அனுசரித்து கிரியை மரபுகளைக் கூறும் பத்ததிகள் பதினெட்டாகும். பத்ததிகளை உருவாக்கிய ஆசிரியர்களின் பெயர்கொண்டே அப்பத்ததிகளை அழைக்கும் மரபு காணப்படுகின்றது. அதன்படி, உக்ரஜோதி, சத்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதி, ராமகண்டர், வித்யாகண்டர், நாராயண கண்டர், விபூதிகண்டர், ஸ்ரீகண்டர், நீல கண்டர், சோமசம்பு, ஈசானசம்பு, ஹ்ருதய சிவன், பிரம்மசம்பு, வைராக்கியசிவன், ஞானசம்பு, திரிலோசன சிவன், வருண சிவன், ஈசுவரசிவன், அகோரசிவன் ஆகி யோர் இயற்றிய பத்ததிகள் அவரவர் பெயர் கொண்டு அழைக்கப்படும்.[5] பத்ததிகள் சுலோக வடிவிலும், காரிகை மரபிலும், பிரயோக மரபிலும் இடம் பெறுகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. அகோரசிவன் பத்ததி அகோரசிவாச்சார்யார் பத்ததி எனப் பெரும் சிறப்புடன் சிவாச்சார்யமரபிலும் கிரியை மரபிலும் பின்பற்றப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**கிரியை மரபில் மஹோத்சவம்**

திருக்கோவில்களில் நிகழும் கிரியைகள் நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும்.[6] நித்தியம் நடைபெறும் கிரியை நித்தியக்கிரியை என்றும், காரணம் எனப்படும் நிமித்தம் கொண்டு நிகழ்த்தப் படும் கிரியை நைமித்தியக்கிரியை என்றும், காம்யம் எனப்படும் பெறுபேற்றினை அவாவி நிகழ்த்தப்படும் கிரியை காம்யக்கிரியை எனப்படும். இக்கிரியை மரபு மூன்றினுள் நைமித்தியக் கிரியை மரபில் இடம் பெறுவதே மஹோத்சவம் ஆகும்.

**மஹோத்சவ விதிகள்**

மூல சிவாகமங்கள் மஹோத்சவ விதி முறைகளை விளக்கிநிற்கின்றன. அவற் றின் படி, காமிகாகமம்[7], காரணாகமம்[8], சந்திரஞானம்,[10] தீப்தம்,[11,12] மகுடம்[13], யோகஜம்,[14] ரௌரவம்[15] வீரம்[16] சஹஸ்ரம்[17] சுப்ரபேதம்[18] சூமம்[19] ஸ்வாயம்புவம்[20], அஜிதம்[21] ஆகியன விரிவுபடக் கூறுகின்றன. குமாரதந்திரம்[22] சுப்ரம்மண்யாலத்தில் ஸ்கந்தோற்சவ விதி பற்றிக் கூறுகின்றது.

**உற்சவப் பெயர் விளக்கம்**

உத் எனும் உபசர்கத்துடன் இணைந்த "ஸவ" எனும் சொல் - படைப்பு, சிருஷ்டி, தோற்றம் எனும் பொருளை உணர்த்துவதி லிருந்து மூலவராக விளங்கும் இறைவன் உற்ச மூர்த்தியாக உயிர்களுக்கு அருளும் நோக்குடையதாக விளங்குவதே உற்சவம் எனும் பொருளைத்தருகின்றது.[23] மேலும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் பஞ்சகிருத்தியங்களையும் உணர்த்தியதால் உற்சவம் எனும் பெயர் பெறுகின்றது.[24] இதனடிப்படையில் "படைத் தல் முதலான பஞ்சகிருத்தியங்களையும் ஆன்மாக்களுக்கு அருளும் நோக்கில் மேற் கொள்ளும் சிறப்பினால் அது உற்சவம் எனப் பெயர் பெறுகின்றது எனப் பொருள் கொள்ள லாம். "ஸவ:" என்பன யாகம் அல்லது வழிபாடு எனும் பொருளையும் உணர்த்துவ தாகும்.[25] இதனடிப்படையில் சிவாகம விதிப் படி கர்ஷணம், பிரதிஷ்டை நிகழ்ந்து நித்ய பூஜைகள் நடைபெறும் திருக்கோவிலில் நைமித்திகமாக நடைபெறும் ஒரு வழிபாடே "உற்சவம்" எனும் பொருளைத் தெளிவுபடத் தருகின்றது.

**உற்சவபஞ்சகிருத்தியம்**

உற்சவம் என்பது மஹோத்சவம் என் றும், பிரம்மோற்சவம் என்றும் பொருள் படும்.[26] உற்சவக்கிரியைகளில் அங்குரப் பணம், வாஸ்துசாந்தி, திருக்கல்யாணம், யாகபூஜை, பேரீதாடனம் ஆகியன சிருஷ் டியை உணர்த்துவனவாகும். சுமயஸ்த தேவதாவாஹனம், வீதிவலம் வருதல், ஸ்நபனம், த்ஜாரோஹணம், வாஹனங் களில் வீதிவலம் வருதல், சந்தியாவாஹனம் என்பன ஸ்திதி (காத்தலை)யை உணர்வன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகும். பலியிடுதல், தீர்த்த அங்குரம், ரக்ஷாபந்தனம், கணயாகம், அஸ்திரயாகம் ஆகியன சம்ஸ்ஹாரத்தை உணர்த்துவன வாகும். ம்ருகயாத்திரை, திருவூடல் மறைத் தலை உணர்த்துவனவாகும். சக்தி யாத் திரை, திருவிளையாடல்கள், சண்டேஸ்வர உற்சவம், ஆசார்ய உற்சவம் என்பன அனுக்ரஹத்தை உணர்த்துவனவாகும் என உத்தரகாரணாகமம் (24.99-104) தெளிவுபடுத்திக் கூறுகின்றது.[27]

### உற்சவ நாட்கள்

உற்சவங்கள் எத்தகைய கிரியை ஒழுங்குகளுடன் எத்தனை நாட்கள் வரை செய்யத்தக்கன என்பதனை சிவாகமங்கள் விரிவுபடக் கூறுகின்றன. அவற்றினடிப்படை யில் ஒருநாள் உற்சவம் முதல் இருபத்தேழு நாள் உற்சவம் வரை விரிவுபடக்கூறுவது மனங்கொள்ளத்தக்கன. இதனடிப்படையில் சாவனம், சாந்திரம், நக்ஷத்திரம், சௌரம் என நான்கு பிரதான தன்மையில் மஹோத் சவ நாட்கள் நிர்ணயம் செய்யப்படுவதனை சிவாகமங்கள் விதித்துக்கூறுகின்றன.[28]

### சுப்ரம்மண்ய ஆலய அமைப்பு

சுப்ரம்மண்யரை மூலவராகக் கொண்ட திருக்கோவில் எவ்விதம் அமையவேண்டும் என்பது பற்றியும், பரிவார தேவதைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதனை யும் சிறப்பாக குமார தந்திரம் 33, 34 ஆவது படலங்களான பிராகாரலக்ஷண விதிபடலம்[29] விதிகள் எவ்வாறு அமையவேண்டும் எனும் விரிவைக்கூற பரிவார விதிபடலம்[30] பரிவார தேவதைகள் விரிந்து செல்லும் வகைக ளைத் தெளிவுபடுத்துகின்றன.

சுப்ரம்மண்யரது மூர்த்திபேதங்கள் பற்றிய விரிவுகளை குமாரதந்திரம் 24 ஆவது படலமாகிய பிரதிமாவக்ஷண விதி படலம் கூறுகின்றது.[31] அதேவேளை உற்சவ மூர்த்திகளை பிரதிஷ்டை செய்யும் விதியை அசலஸ்தாபன விதிபடலம்[32] நிலையான சிவ வடிவமான மூர்த்திகளை பிரதிஷ்டை செய் யும் விதியை சலபேர பிரதிஷ்டாவிதி படலம்[33] தெளிவுபடுத்துவது குறிப்பிடத்தக்கது.

### சுப்ரம்மண்யாலய நித்யபூஜை

சுப்ரம்மண்யாலயத்தின் நித்யபூஜை எவ்விதம் நிகழத்தக்கது என குமாரதந்திரம் 52ஆவது படலமான நித்யபூஜா விதிப்பட லம்[34] விரிவுபடக் கூறுகின்றது. இதற்கு ஏற்ப நைவேத்திய விதி[35], நித்யோத்சவ விதி[36], தைலாப்யங்க விதி[37], பஞ்சகவ்ய விதி[38] பஞ்சாம்ருத விதி[39], ஸ்நபனவிதி[40], ஸ்கந்தக லாந்யாச விதி[42], மாத்ருகாந்யாச விதி (47), சுப்ரம்மண்யகவசவிதி (48), சாயரக்ஷ விதி (51) என்பன போன்ற நித்யபூஜைக்கு அவ சியமான விதிமுறைகளைக்கூறி நிற்கும் அதேவேளை பொருட்களின் லக்ஷணங் களை கரணலக்ஷணவிதி படலம் (35), விரிவுபடக் கூறிநிற்பது குறிப்பிடத்தக்கது.

### சுப்ரம்மண்ய மஹோத்சவம்

சிவாகமங்கள் திருக்கோவில்களில் நிகழ்த்தப்பட வேண்டிய மஹோத்சவம் பற்றிக் கூறுகின்றன. இவை பொதுவாக சிவாலயங்களுக்குரியவையாகவே கொள் ளத்தக்கன. அந்நிலையில் சுப்ரம்மண்ய ஆலயத்திற்குரிய மஹோத்சவ விதியினை குமாரதந்திரம் ஸ்கந்தோத்சவ விதிபடலம் விரிவுபடக் கூறுகின்றது. அதனை எவ்வாறு பாகுபடுத்தி நோக்கலாம் என நோக்கு வோம்.

குமாரதந்திரத்தின் ஸ்கந்தோத்சவ விதி படலம் குமாரதந்திரத்தின் 388 சுலோகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இடம் பெறுகின்றன. அதன் பொருள் விபரம் எவ்வாறு அமைகின்றது என்பதனை இங்கு விரிவாக நோக்குவோம்.


| விடயம் | சுலோக எண் |
|---|---|
| பலன் | 1 - 3 |
| உற்சவப் பொருள் | 4 |
| உற்சவ வகை - 3 | 5 |
| 1. மாச உற்சவம் | 6 |
| 2. மஹோத்சவம் | 6, 7 |
| 3. பக்தோத்சவம் | 8 |
| 4. உற்சவ நாட்கள் | 9 - 11 |
| 5. எல்லா மாதங்களிலும் கார்த்திகை நக்ஷத்திரம் உத்தமம் | 11 |
| உத்சவம் செய்யத்தக்க நாட்கள் | 12 - 19 |
| மாதமொன்றில் இரு நக்ஷத்திரங்கள் வருதல் | 20-22 |
| மரபு முறையின் முக்கியத்துவம் | 23 |
| பதினாறு (சோடச) வகைக் கிரியைகளும் முறைகளும் | 24 - 34 |
| சிவோத்சவ விதியில் உற்சவம் | 35 |
| அங்கு சார்ப்பண முக்கியத்துவம் | 36 |
| அங்குரபேதம் | 37-39 |
| கொடித்துணியும், படமும் | 40 - 55 |
| கொடிமரஸ்தானம் | 56 |
| கொடி மரத்திற்குரிய மரங்கள் | 57 - 61 |
| கொடிமரஉயரமும் அளவும் | 62 - 68 |
| கொடியேற்றப்பலன் | 69, 70 |
| கொடிமர உயரம் மற்றும் அளவுகள் ஸ்தாபன முறை | 71-75 |
| த்வஜமண்டப அலங்காரம் | 74 |
| த்வஜபட பிரதிஷ்டைக் கிரியை | 75 - 102 |
| பேரீதாடனம் | 102 - 121 |
| த்வஜபட வீதி பிரதக்ஷ்ணம் | 122 - 124 |
| த்வஜாரோஹணம் | 125 |
| நைவேத்ய அளவுமுறை | 126 - 128 |
| பலிபோடும் முறை | 129, 130 |
| திக்குகளில் தாளம், ராகம் | 131 - 134 |
| திக்குகளில் நிருத்தம் | 135 - 137 |
| கொடியேற்றமுறை | 138 |
| கொடிமரப் பூஜையும், பலியும் | 139 - 151 |
| பலியுருண்டையை உண்ணும் பலன் | 152-156 |
| யாகபூஜை ஸ்தானம், அளவு, பூஜைமுறை, ஹோமம் | 157-206 |
| பலிபோடுதல் | 207-213 |
| ரக்ஷாபந்தன முறையும் உபசாரமும் | 214-222 |
| வீதிப்ரதக்ஷிணம் | 223-247 |
| யாகபூஜைக்கான கால அளவு | 248, 249 |
| நிவேதனமும் பலியும் | 250-253 |
| யாகதர்சனபூஜை | 254-256 |
| நாட்களுக்கான நைவேத்யம் | 257-265 |
| பலியிடல் | 266-273 |
| நாட்களுக்கான சந்தனம் (9 நாட்கள்) | 274-277 |
| புஷ்பங்கள் (9 நாட்கள்) | 278, 279 |
| தூபம் (9 நாட்கள்) | 279, 280 |
| தீபம், நைவேத்யதம் (9நாட்கள்) | 281, 282 |
| ஆபரணம் (9 நாட்கள்) | 283, 284 |
| வாகனங்கள் (9 நாட்கள்) | 285-288 |
| வசந்தோத்சவம் (9 நாட்கள்) | 289, 290 |
| தேர்த்திருவிழா | 291-299 |
| ம்ருகயாத்திரை (வேட்டைத் திருவிழா) | 300-305 |
| கிருஷ்ண கந்தஉற்சவம் | 306-320 |
| ஆசார்ய உற்சவம் | 321-323 |
| உற்சவ உபசாரம் | 324-331 |
| தீர்த்த உற்சவம் | 332-341 |
| சூர்ணோத்சவம் | 342-352 |
| தீர்த்தோற்சவம் | 353-364 |
| யாகபூஜையும், யாககும்ப அபிஷேகமும் | 365-367 |
| துவஜாவரோஹணம் | 368-377 |
| ஆசார்ய உற்சவம், தக்ஷிணை | 378-381 |
| உற்சவகால சிறப்புதானங்கள் | 382-386 |
| உற்சவபலன் | 387, 388 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான மஹோத்ச விதியில் கூறப் படுவது குறிப்பிடத்தக்கது.

சுப்ரம்மண்யருக்குரிய வாகனமாக மயூரம் அல்லது யானை (கஜம்) அமைய வேண்டிய சிறப்பை கஜஸ்தான விதிபடலம் (47) மூலம், சுப்ரம்மண்யருக்குரிய சண் டேஸ்வரர் சுமித்ர சண்டேஸ்வரர் பற்றி சுமித்ரஸ்தாபன விதிபடலம் (48) கூறுவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. எனினும் சுப்ரம் மண்ய த்வஜபடலத்தில் மயூரம் இடம்பெறு வதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## நிறைவுரை

சிவாகம மரபில் மஹோத்சவம் தனித்துவ முடையன. சிவாகம விதிமுறைப்படி அமை யப்பெற்றதும், பிரதிஷ்டை செய்யப் பெற்ற தும், நித்யபூஜைகள் நடைபெற்று வருகின் றதுமான ஆலயங்களில் எவ்வாறு மஹோத் சவம் இடம் பெறவேண்டும் என மஹோத் சவவிதிகள் கூறுவதற்கு நிகராக குமார தந்திரம் எனும் லலிதாகமத்தின் உபாகமம் ஸ்கந்த உற்சவவிதி பற்றித் தெளிவுபடக் கூறி யுள்ளது. இத்தகைய உற்சவத்தில் ஏற்படத் தக்க தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு குமாரதந்திரம் மஹோற்சவ பிராயச்சித்த விதி (49) யில் கூறியிருப்பதும் சுட்டிக்காட்டத் தக்கது.

சிவாகமமரபில் சுப்ரம்மண்ய மஹோத்ச வத்தின் விதிமுறைகளையறிந்து அம்மரபு களின் வழி வழிபட்டு இஹபரசுகங்களைப் பெற்றுய்வோமாக.

## அடிக்குறிப்புக்கள் :

1. பூர்வகாரணாகமம் 1. 7 - 10.
2. பூர்வகாரணாகமம் 1. 12
3. மகுடாகமம் (பூர்வம்) 1. 41 - 87
4. மகுடாகமம் (பூர்வ பாகம்) 1. 76, 77
5. சைவத்திருக்கோவிற்கிரியைநெறி, ப. 8
6. மேலது, ப. 168
7. காமிகாகமம், II. 6.
8. காரணாகமம், I. 141
9. காரணாகமம், II. 24.
10. சந்திரஞானம், 24
11. தீப்தம், 83
12. தீப்தம், 97
13. மகுடம், 13
14. யோகஜம், அத. 171 - 243
15. ரௌரவம், Vol. II. 18
16. வீரம், 51
17. சஹஸ்ரம், 6
18. சுப்ரபேதம், I. 14
19. சூக்ஷ்மம், 13
20. ஸ்வாயம்புவம், 37
21. அஜிதம், I, 27
22. குமாரதந்திரம், 13
23. சிவாலயங்களும் ஆலயக் கிரியைகளும், ப. 92
24. மேலது, ப. 92
25. சம்ஸ்கிருத - தமிழ் அகராதி, ப. 475
26. சிவாலயங்களும் ஆலயக் கிரியைகளும், ப. 92
27. உத்தரகாரணாகமம், 24. 99 - 104
28. காரணாகமம், (பூர்வம்), 141
29. குமாரதந்திரம், 33.
30. குமாரதந்திரம், 34.
31. குமாரதந்திரம், 24.
32. குமாரதந்திரம், 26.
33. குமாரதந்திரம், 27.
34. குமாரதந்திரம், 5.
35. குமாரதந்திரம், 6.
36. குமாரதந்திரம், 8.
37. குமாரதந்திரம், 38.
38. குமாரதந்திரம், 20.
39. குமாரதந்திரம், 21.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. குமாரதந்திரம், 12.
41. குமாரதந்திரம், 46.
42. குமாரதந்திரம், 47.
43. குமாரதந்திரம், 48.
44. குமாரதந்திரம், 44.
45. குமாரதந்திரம், 35.
46. குமாரதந்திரம், 13.
47. குமாரதந்திரம், 43.
48. குமாரதந்திரம், 42.
49. குமாரதந்திரம், 14.


**உசாத்துணை நூல்கள் :**

**மூலநூல்கள்**

1. அஜிதாகமம்
Vol. I, & II, III. Ed. N.R. Bhatt, Institut Francais D'Indologie, Pondichery 1964, 1967, 1991.
2. காமிகாகமம்
(1978) (பூர்வபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி.) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
3. காமிகாகமம்
(1988) (உத்தரபாகம்) ஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் (பத) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம். சென்னை.
4. காமிகாகமம்
(1975) (க்ரியா பாதம், பூர்வபாகம்) முதற்பகுதி, தமிழ் சந்திரிகையுடன் அர்ச்சகர் சங்கம், சென்னை.
5. காரணாகமம்
(1921) (பூர்வ பாகம்) 1ஆம் பாகம், மயிலை, அழகப்ப முதலியார் (பதி), சிவஞான போத யந்திரசாலை, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை. கலி.
6. காரணாகமம்
(1927) (உத்தர பாகம்) 2ஆம் பாகம், மயிலை, அழகப்ப முதலியார் (பதி), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை. கலி. 5029(கி.பி 1928)
7. ரௌரவாகமம்
Vol. I, II, III. N.R. Bhatt, Institute Francais D'lndologie. Pondichery 1961, 1972, 1988.
8. சுப்ரபேதாகமம்
(1907) மயிலை, அழகப்ப முதலியார் (பதி), சிவஞானபோத யந்திரசாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, கலி 5009 (கி.பி 1908)
9. மகுடாகமம் (1997) (பூர்வபாகம்) சி. சுவாமிநாத சிவாச்சாரியார் (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
10. ஸ்ரீமத் கிரணாகம மஹா தந்திரம் (1932) சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம். தேவ கோட்டை.

**ஏனைய நூல்கள்**

1. Siva Temple and Temple rituals (1988) The Kuppuswami Sasri Research Institute, Madras.
2. கைலாசநாதக் குருக்கள்.கா. (1961) சைவத்திருக் கோயிற் கிரியைநெறி, இந்து கலாபிவிருத்திச் சங்கம், கொழும்பு.
3. சபாரத்தினம் எஸ்.பி (2002) சைவ ஆகமங்கள் - ஓர் அறிமுகம் திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிட்டெட், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்த்தும் பக்தி

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

## 01. தமிழ் மொழியின் சிறப்பு

உலகிலே இன்றும் பலகோடிக்கணக் கான மக்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகின்ற மொழியாக நமது தாய் மொழி யாகிய தமிழ் காணப்படுகிறது. தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ் மொழி கால வெள்ளத்தால் அழியாது இன்றும் வாழும் மொழியாக இளமை மிக்க மொழியாகத் திகழ்கிறது. களங்கமில்லாத பக்தியினால் நால்வர் பெருமக்களும் பன்னிரு ஆழ்வார்களும் அருளிய பாடல் களும் தமிழ் மொழியின் இளமைக்கு காரண மாக அமைந்துள்ளது என்பதைச் சுப்பிர மணிய யோகியார்

**"களங்கமிலாப் பக்தியினால் பன்னிருவர் நால்வர்
கற்கண்டு சொற்கோவை கவிமாலை புனைந்து"**
எனத் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆங்கிலமொழியை வியாபார மொழி யென்றும், லத்தீன் மொழியை சட்ட மொழி யென்றும், பிரஞ்சு மொழியைக் காதல் மொழியென்றும், சமஸ்கிருதத்தை தத்துவ மொழியென்றும் கூறிய மொழியியல் ஆராய்ச்சியாளர்கள், தமிழ் மொழியைப் பக்திமொழி என்று கூறியுள்ளார்கள்.

மொழியைத் தெய்வத்தோடு தொடர்பு படுத்திக் கூறும் தனிச்சிறப்பு தமிழ்மொழிக்கே உரியது. அதனால்தான் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானும் "ஞான மளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" எனத் தமிழ் மொழியைத் தெய்வ நிலைக்கு உயர்த்தி யுள்ளார். தன்னைத் தமிழிலேயே பாடுவ தற்காகவே தனக்கு இந்தப் பிறவியை இறைவன் தந்துள்ளார் என்பதை

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"**
எனத் தவயோகி திருமூலநாயனார் தான் அருளிய திருமந்திரத்தில் குறிப்பிட்டுள் ளார். தமிழர் தெய்வமாகிய முருகப் பெரு மான் தன்னைப் போற்றித் துதித்துப் பாடு வதற்காகத் தனக்குத் தமிழைத் தந்தான் என்பதை

**"அரிய தமிழ் தானளித்த மயில்வீரா"**
என அருணகிரிநாதர் தான் அருளிய சந்தத் தமிழாகிய திருப்புகழில் குறிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாயால் தமிழ் வேதமாகிய திருமுறைகளைக் கேட்க இறைவன் விரும்பினார் என்பதை

**"அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல்
நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார்
தூமறை பாடும் வாயார்"**
எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

**"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"**
என்று இருபதாம் நூற்றாண்டின் இணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்ற கவிஞனாகிய மகாகவி பாரதியாரும் குறிப்பிட்டுள்ளார்.

**02. பக்தி நெறி**

ஆன்மா இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்கு இந்து சமயத் திருநூல்கள் பல் வேறு வழிகளைக் கூறியுள்ளன. கலியுகத் தில் இறையருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கமே சிறந்த வழி என நாரதமகரிஷி தான் அருளிய பக்திச் சூத்திரத்தில் குறிப் பிட்டுள்ளார். நாரதர் பக்தியினை ஆழ்ந்த இறைபற்று என்று கூறுகின்றார். அன்பே கடவுள் என்ற உண்மைக்கு ஏற்ப வாழ்க்கை நடாத்துதலே பக்தியோகம் என்பது யாக்ஞ வல்லிய மகரிஷியின் கருத்தாகும்.

பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஒருமை ஏற்பட்டதாக உணர் கின்ற உணர்வேயாகும். உண்மைச் சமயத் தின் உயிர்நாடியாகத் திகழ்வது பக்தியே ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி எனப்படும். ஆன்மாவிற் கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே உண்மை யான பக்தி ஆகும்.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஒன்றுபட்டு இறையருளில் லயித்தலே பக்தி வைராக்கியம் ஆகும். இறைவனை மெய்ப் பொருள் என மனத்தால் நினைந்தும், வாக் கால் பாராட்டியும், உடம்பால் வணங்கியும் அன்பு செய்தலே பக்தி எனப்படும். உலக வாழ்க்கையைப் பொய்யென உணர்ந்து முக்கரணங்களாலும் வெறுத்து விடல் வைராக்கியமாகும்.

**"பக்தியின் துவக்க நிலையை சரியை, கிரியை, யோகமென்றும் முடிந்த நிலை ஞானமென்றும் கொள்ளப்படும். முழுமையான பக்தியையே சைவம் ஞானமெனச் சொல்கிறதென்பதைச் சேக்கிழார் பெருமான்**

**"ஞானம் ஈசல் பாலன்பே"**[01]

எனக் கூறுவதன் மூலம் தெளிவுபடுத்தி யுள்ளார்.

பக்தியிலே நடிப்பு இருக்கக் கூடாது. இறைவனிடத்தில் இடையறா அன்பு, இறவாத இன்ப அன்பு கொண்டு வழிபடு தலே உண்மையான பக்தி ஆகும். நடிப்பு பக்தியினால் உலகை ஏமாற்றலாம்; ஆனால் இறைவனை ஏமாற்ற முடியாது. மனம் உருகி வழிபடுவது தான் பக்தி. அருளாளர்கள் தமது உள்ளத்தில் ஏற்பட்ட உருக்கம் போதாது என்று தவிப்பார்கள்

**"கல்லேனும் ஐய ஒருகாலத்தில் உருகும் என்**
**கல்நெஞ்சம் உருகவில்லையே".**

என்று தவிக்கிறார் தாயுமானவர்.

**"எதையுமே நினைக்காது சதா ஈசுவரனிடத்தில் போய்ச் சேருவது ஒன்றையே நினைத்து தன்னை அறியாமல் ஓடுகிற சித்த விருத்தி இருக்கிறதே அதற்குத்தான் பக்தி என்று பெயர்"**[02]

பக்தியோகத்தில் பூரண சரணாகதியாகிய பிரபக்தி மார்க்கம் தங்குதடையின்றி இறை வனுடைய திருவருளைப் பெறுவதற்குரிய மிகச் சிறந்த மார்க்கம் என பகவத்கீதை கூறுகிறது.

"பக்தி அல்லது இறையன்பு என்பது இறை வனிடம் அன்பு செலுத்துவதன் மூலம் தான் என்ற பொருள் சிறிது சிறிதாகக் கரைந்து அவன் என்ற பொருளில் அடங்கிவிடுவ தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவின் துணையை நாட முடியாதவர் களும் ஏனைய மக்களும் மேற்கொள்ள முயன்றது பக்தி வழியே ஆகும். அறிவி னால் அறிய முடியாததைப் பிரார்த்தனை மூலம் காண முயல்வதே பக்தி நெறி எனப் படும். பிரார்த்தனையே பக்தி வழியின் நுழைவாயிலாக அமைந்துள்ளது.

**"பக்தி வழியில் ஈடுபடுவோர் இறைவனை எங்கோ வாக்கு மனோலயங் கடந்த பொருளாக, கற்பனை கடந்த சோதியாகக் கருதுவதும் இல்லை; அவ்வாறு உணர்வதும் இல்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் இறைப் பொருள் அவர்கள் உள்ளே உறையும் ஒன்றாய், அவர்களிடம் எந்த நேரத்திலும் தொடர்பு கொண்டதாக; எவ்விடத்தி லும் காண்டற்குரியதாய் – அனுபவத்திற்கு உரியதாய் இருக்கின்றதை அறிகிறோம்"**[04].

எதிர்பார்ப்பு இல்லாத அன்பே பக்தி என்றும் பக்தியால் மேன்மை வரும், சிறுமை போகும், எளிமை இனிமை என்பன இயல் பாய் வரும். ஆறுகள் எல்லாம் கடலை நோக்கி ஓடுவது போல, ஆருயிர்கள் அனைத்தும் இறைவனை நோக்கித் திரும்பு வதற்கு பக்தி மார்க்கம் துணை செய்யும். தன்னை மறந்து தற்பேதம் இல்லாமல் ஒரு செயலைச் செய்தால் அது உள்நின்று தூண்டும் இறையருளால் செய்யப்பெற்ற தாகும்.

**"போலியாகப் பூசையில் ஈடுபட்டு ஆடம்பரமாகப் பூசை புரிவோரும், தமக்குப் பக்தி உள்ளது என நினைப்போரும், பிறரை நினைக்குமாறு செய்வோரும், மேலை நாட்டில் மருந்துகள் மூலம் ஒருமைப்பாட்டை அடைய முயலும் ஹிப்பிகளும் ஒரே இயல்புடையவர்களே"**[05]

"பக்தி என்பது ஆன்மாவுக்கும, பரமாத் மாவுக்கும் இடையே உள்ள உறவைக் குறிப்பதாகும். உயிர்கள் இறைவனிடம் கொண்ட அன்பை விளக்கும் உணர்வாகவே இது குறிப்பிடப்பெறும். இதற்குத் தனியே ஒரு மொழி என்பது இல்லை. பக்தி உணர்வே ஒரு மொழி என்பார் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள்" (Bhakthi has no Language, Bhakthi itself is a language)[06].

## 03) I. தெய்வத் தமிழாகிய திருமுறைகளில் பக்தி

திருமுறைப் பாடல்களைத் தந்த அருளா ளர்கள் பக்தியால் இறைவனைப் பலகாலம் பரவிப் பாடித் தல யாத்திரை செய்தவர்கள். இறைவனைத் தமிழால் வழிபட்டவர்கள். இவர்களுடைய பாடல்களை இறைவன் தானே மனமுவந்து செவிசாய்த்துக் கேட் டான். சுந்தரர், சேக்கிழார் போன்ற திரு முறை ஆசிரியர்களுக்கு இறைவனே அடி யெடுத்துக் கொடுத்து அவர்களைப் பாட வைத்தார்.

தெய்வத்தமிழாகிய திருமுறைப் பாடல் களைப் பரமசிவன் காது குளிரக் கேட்டு மகிழ்ந்தார் என்பதையும், தெய்வ வாசக மாகிய திருவாசகத்தை தில்லை நடரா ஜனே தன் கரம் வருந்த எழுதி அருளினார் என்பதையும் பின்வரும் தனிப்பாடல் சிறப்பித்துக் கூறுகிறது.

**"திருமுறையே சைவநெறிக் கருவூலம்**
**தென்தமிழன் தேன்பாகாகும்**
**திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்**
**செவிமடுத்த செந்தமிழ் வேதம்**
**திருமுறையே நடராஜன் கைவருந்த**
**எழுதியருள் தெய்வ நூலாம்**
**திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்**
**மலர்ந்தருளும் சிறப்பாற்றாமல்".**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறைப் பாடல்கள் இறைவன் திருச் செவியில் நேரிடையாகச் செல்லும் உயர்வு படைத்தன. இவற்றுக்கு எந்த ஊடகமும் தேவையில்லை.

"பாடுவார் பசி தீர்ப்பார்
பரவுவார் பிணி தீர்ப்பார்" எனச் சம்பந்தரும்
"ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே" என அப்பர் பெருமானும்,
"பாடவல்லார் பரலோகத்
திருப்பது பண்டமன்றே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்
"சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை" என்று மணிவாசகரும்
"அழுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாய்ப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதங்குறுகி நின்றாரே"
என்று திருவிசைப்பா பாடலும்.

"பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே"
என்று சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டுப் பாடலும்
"சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்"
எனத் தவயோகி திரு மூல நாயனாரும்
"காரைக் காற்பேய் தன்
பாடல் பத்தும் பாடி ஆடப்பாவம் நாசமே"
எனத் திருமுறை ஆசிரியர்களில் ஒரே யொரு பெண்மணியாக இருக்கின்ற காரைக்கால் அம்மையாரும்
"ஒன்றிய மெய்யுணர்வோடும் உள்ளுருகிப்
பாடுவார்
பண்றியுடன் புட்காணா பரமனையே பாடுவார்"
எனச் சேக்கிழார் அருளிய பெரிய புராணமும் குறிப்பிடுகிறது. உள்ளம் உருகிப் பாடி வழிபடுவதனால் கிடைக்கும் பயன்களை மேற்கூறிய திருமுறைப் பாடல் வரிகள் தெளிவாக உணர்த்துகின்றன.

"திருமுறைகாட்டும் பக்தியும் வழிபாடும் வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் ஊட்டுவன. சாதனை புரிய வேண்டும் என எண்ண வைப்பன. அமைதியும் அன்பும் மனதில் ஊற்றெடுக்கச் செய்வன. பக்தி செய்தால் வினைகளைக் களையலாம். அந்தப் பக்தி வழிபாட்டில் இறைவனை நினைந்துருகிப் பாடுதலே மிகவுயர்வானது என்றெல்லாம் வலியுறுத்தி நம்பிக்கையூட்டினர் திருமுறைச் சான்றோர்"[07].

## 03) II. ஞானசம்பந்தர் பாடல்களில் பக்தி

அச்சம் கொண்டு அல்லல்பட்டுத் துன்பங்களைத் துயரங்களைத் தொடர் கதையாகச் சந்தித்து வாழும் மக்களுக்கு ஆறுதல் கூறி அபயம் அளிக்கும் பாடல்களாக ஞான சம்பந்தர் அருளிய கோளறு பதிகப் பாடல்கள் காணப்படுகின்றன. "நாளும் கோளும் நம்பனடியார்க்கு நலிவு செய்யாது" என்ற உறுதிப்பாட்டினை அவருடைய பாடல்களிலே காணலாம். பக்தியோடு பரமனைப் பணிந்து கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்பவர்கள் இராஜ கம்பீர வாழ்க்கையைப் பெறுவார்கள் என்பதை
"தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆன சொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"
எனக் கோளறு பதிகத்தின் இறுதிப் பாடலில் குறிப்பிடுகின்றார்.

சம்பந்தருடைய காலத்தில் தமிழகத்தில் சாக்கிய சமணக் கொள்கைகள் வளர்ந்திருந்த காரணத்தால் ஊழ் நம்பிக்கை மிகுதியாயிற்று. வினைகளைப் போக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது அனுபவித்தே ஆக வேண்டும் என்ற எண்ணங்கள் வேரூன்றத் தலைப் பட்டன. இறைவனை வழிபட்டால் வினை களை நீக்க முடியும் அல்லது குறைக்க முடியும் என்ற கருத்துக்களை முதன் முதலில் ஞானசம்பந்தரே வலியுறுத்திக் கூறினார். இறைவன் மீதுள்ள நம்பிக்கையே இதற்கு அடிப்படையாகும். சிவமூல மந்திரமாகிய நமச்சிவாய மந்திரத்தை நாவினால் உச் சரித்தால் வினைகள் அனைத்தும் பொசுங் கும் என்கிறார்.

**"நம்புவாரவர் நாவினவிற்றினால்**
**வம்பு நாண்மவர் வார்மது வொப்பது**
**செம்பொனார் திலகம் முலகுக் கெலாம்**
**நம்ப நாமம் நமச்சிவாயவே".**

இறைவனுடைய திருவருளுக்குப் பாத்திரமானவர்கள் யாருக்கும் எதற்கும் அஞ்சுவதில்லை. இறையருள் பக்க பலமாக இருப்பதால் அருளாளர்களிடம் இந்தத் துணிவுநிலை தானாகவே ஏற்பட்டு விடும்.

**"ஈனர்கட்கு எளியேனல்லேன் திரு**
**ஆலவாயரன் நிற்கவே"**

என ஞானசம்பந்தர் சமணர்கள் தரும் துன்பங்களுத் தான் அஞ்சப் போவதில்லை யென மங்கையர்க்கரசியாரைப் பார்த்துக் கூறுகின்றார்.

"பிற உணர்ச்சிகள் செல்ல முடியாத இடத்திற்கெல்லாம் செல்லவல்லது பக்தி. அறிவும், அதிகாரமும், செல்வமும் சாதிக்க முடியாதவற்றைச் சாதிக்கக் கூடிய வல்லமை பக்தி நெறிக்குண்டு.[08]

### 03) III. திருநாவுக்கரசர் பாடல்களில் பக்தி

உண்மையான பக்தனை இறைவன் என்றும் கைவிடமாட்டான் என்ற தளராத நம்பிக்கை அப்பர் பெருமானிடம் இருந் தது. நம்முடைய நினைப்பும் செயலும் தூய் மையாக இருந்தால், இறைவனின் திருவ ருள் துணை நமக்குக் கிடைக்கும் என்பதை அப்பர் பெருமானின் வாக்கும் வாழ்வும் உணர்த்தி நிற்கின்றன.

திரிகரணங்களும் இறைவன்பால் ஒன்றி நிற்றலே உண்மையான பக்தி நிலை ஆகும். உடலில் உள்ள கருவிகரணங்கள் எல்லாம் தூய்மையாகி விட்டால் இறைவ னையே சார்ந்திருக்கும் நிலையைப் பெற்று விட்டால் இறைவனை அகத்திலே காண லாம் என்பதை அப்பர் பெருமானின் திரு வங்கமாலைப் பாடல்கள் விளக்கி நிற்கின் றன. தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, உடல், கால் ஆகிய சகல உறுப்புக் களும் இறைவனை நோக்கித் திரும்பினால் தேவர்களாலும் காண முடியாத தேவாதி தேவனாகிய இறைவனை நமது அகத்திலே கண்டு கொள்ளலாம் என்பதை பின்வரும் திருநாவுக்கரசரின் பாடல் விளக்குகிறது.

**"தேடிக்கண்டு கொண்டேன் – திரு**
**மாலொடு நான்முகனும்**
**தேடித் தேடொணாத் தேவனையென்னுள்ளே**
**தேடிக் கண்டு கொண்டேன்".**

அன்பும் அருளும் முழுமை பெற இணைந்த இன்பப் பேறே சிவகதி ஆகும். இன்பத்தில் இசைவு கொள்ளாமல், துன்பத்தில் அயர்வு கொள்ளாமல் நிற்பதாகிய உயர்வு நிலையை அப்பர் பெருமான் பெற்றிருந்தார். இந் நிலையினைக் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்" எனப் பெரியபுராணம் வரை யறை செய்யும். சுந்தரர் திருத்தொண்டர் தொகையில் அப்பரடிகளை அறிமுகப்படுத் தும் போது "திருநின்ற செம்மையே செம் மையாய் நின்ற திருநாவுக்கரசர்" என்று ஆராதிக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் பாடல்களில் இன்ப அன்பின் முழு நிறை அனுபவம் நிறைந்து ஒளி வீசுகிறது. திருநாவுக்கரசரின் திருவருட் கவிதைகளிலே தோய்வோர் உலகத் தளையினின்று ஓய்வார். ஆன்மீக வாழ்வின் அடிப்படையாகிய குறிக்கோளை அறிவார். அத்தகைய உயிர்ப்பு அருள் விழிப்பு அப்பரின் அருள் வாக்கில் மலர்கின்றது. "தொண்டுக் கிழவர் என வையகம் அப்பர் பெருமானைப் போற்றுகிறது.

### 03) IV. சுந்தரர் பாடல்களின் பக்தி

பக்தியின் முதல் நிலை படமாடும் கோயிலாகிய இறைவனை வழிபடுதல் என்றால் பக்தியின நிறை நிலை நடமாடும் கோயிலாகிய சிவனடியார்களை வழிபடுதல் ஆகும். சிவனடியார்களையே தனது வாழ்வின் முதலாகக் கொண்டு தொண்டர்க்குத் தொண்டனாகித் திருத்தொண்டர் தொகையை அளித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தன்னை அடியார்க்கு அடியார் என்று அழைத்து இறும்பூ தெய்துகின்றார்.

கண்பார்வையை இழந்த நிலையில் சுந்தரர் பாடிய பாடல்கள் அவருடைய பக்தி வைராக்கியத்தை வெளிப்படுத்திக் காட்டும் பாடல்களாக அமைந்துள்ளன. மனிதனின் உடம்பில் உள்ள உறுப்புக்களில் மிக முக்கியமானது கண். கண்ணில் பார்வை ஒளி இல்லை என்றால் நான் நல்ல கருத்துக்களைக் கூறினாலும் பெண்கள் என்னை "போகுருடா" என எள்ளி நகையாடுவார்கள். முக்கண்களை உடையவனும், வேதங்களை ஓதுபவனுமாகிய உமக்கு இப்படியாக ஒரு பக்தனை பரிதவிக்க விடுதல் தகுமோ? என்று அன்பின் மிகுதியினால் எழுந்த உரிமைப் பாட்டுடன் இறைவனிடம் வேண்டுகின்றார்.

**"மகத்திற் புக்கதோர் சனியெனக் காணாய்**
**மைந்தனே மணியே மணவாளா**
**அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்**
**அழையேற் போகுருடாவெனத் தரியேன்**
**முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்**
**முக்கணா முறையோ மறையோ நீ**
**உகைக்கும் தண்கடல் ஓதம் வந்துலவும்**
**ஒற்றியூரெனும் ஊருறைவானே".**

சுந்தரரின் அவலம், அழுகை என்பன நெஞ்சை உருக்கும் தன்மையில் வெளிப்படும் பதிகங்களில் திருவாரூர்ப் பதிகம் முதன்மை பெறுகின்றது. இறைவன் அருள் புரியத் தாமதிக்கும் நிலையில் அடியாருள்ளத்தில் ஏற்படக் கூடிய விரக்தி நிலையின் வெளிப்பாட்டினைப் பின்வரும் பாடலில் காணலாம்.

**"மீளா அடிமை உமக்கேயாளாய் பிறரை**
**வேண்டாதே**
**மூளாத் தீபோல் உள்ளே கனன்று முகத்தால்**
**மிக வாடி**
**ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல்**
**சொன்னக்கால்**
**வாளாங்கிருப்பின் திருவாரூரில் வாழ்ந்து**
**போதிரே".**

இப்பாடலில் தம் மீளா அடிமைத் திறத்தை வெளிப்படுத்துவதோடு நெஞ்சக் கொதிப்பையும் பதிவு செய்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல்கள் கருத்துக் கருவூலம், கற்பனைக் களஞ்சியம், கற்றார்க்கு அமுதம், சைவ நெறி, இறைநெறி எடுத்தியம்பும் இன்னமுது, புராணச் செய்திகளையும் நாயன்மார் வரலாற்றுக் குறிப்புக்களையும் அள்ளித் தரும் வரலாற்றோவியம், ஒன்பான் சுவைகளும் மிளிரும் கற்பகச் சோலை; தமிமுணர்வையும் தமிழிசை ஆர்வத்தையும் தூண்டும் அமுதம்"[09]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03) V. மணிவாசகரின் பாடல்களில் பக்தி

உலக இலக்கியங்களில் உள்ள தெய்வக் கவிதைகளில் தனியிடம் பெறுவது திரு வாசகம். திருவாசகத்தை தெய்வ வாசகம் என்றே கடவுள்மா முனிவர் திருவாதவூ ரடிகள் புராணத்திற் குறிப்பிடுகின்றார். வாதவூரடிகள் அருளிய திருவாசகத் தேன் தொல்லை தரும் பிறவித் தளையை நீக்கும் அல்லல் அறுக்கும் ஆனந்தமாக்கும் ஓதுவார் கருங்கல் மனமும் கரைக்கும் கண்கள் தொடு மணற் கேணியில் சுரந்து நீர் பாயும் மெய் சிலிர்ப்படையும், காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்நெறிப்படுத்தும்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் "அழுதடி அடைந்த அன்பர்" என மணிவாசகரைச் சுட்டுகிறார். கருவி கரணங்களை எல்லாம் ஈஸ்வர அர்ப்பண மாக்கி உள்ளம் உருகி வரும் அழுகைதான் இறைவனை நோக்கிவரும் ஆனந்தக் கண்ணீர் ஆகிறது. இவ்வாறு உள்ளம் உருகி அழுது வழிபட்டால் இறையருளைப் பெறலாம் என்பதைப் பின்வரும் திருச் சதகப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**"யானே பொய் என் நெஞ்சும் பொய்**
**என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால்**
**உனைப் பெறலாமே**

**தேனே அமுதே கரும்பின்**
**தெளிவே தித்திக்கும்**
**மானே அருளாய் அடியேன்**
**உனை வந்து உறுமாறே" – திருச்சதகம்**

தேவார முதலிகள் மூவரும் இறையருளை நாடி நின்றார்கள். ஆனால் மாணிக்க வாசகர் அந்த அருளைப் பெற்றுத் திளைத் தவர். அந்த அனுபவங்களைச் சொற்களில் வடித்ததன் மூலம் தமிழுக்கு பக்தி மொழி என்ற பெருமையை ஈட்டித் தந்தார்.

"தினமும் திருவாசகம் ஓதுவோர், தினந் தோறும் திருவாசகத்தை நினைந்து நினைந்து ஞான மழையில் நனைந்து நனைந்து உணர்வில் கலந்து அழுவர். இறைவனை நினைந்து அழுவதற்குரிய ஞானப்பாடல் கள் திருவாசகம் அழுகின்ற கண்களில் தான் கடவுள் தன்மை பூரணமாகப் பரிண மிக்கின்றது."[10]

அன்பாய் அருளுமாய் அனைத்துமாய் விளங்குகின்ற இறைவனின் பெருமையை எம் பெருமானின் சிறப்பை உணர்த்துகின்ற உருக்கமான நூல்களில் மணிவாசகப் பெருமானின் திருவாசகம் ஈடு இணையற்ற நூலாகும். மாணிக்கவாசகர் நிகரற்ற பக்தி யுள்ளம் படைத்த ஒரு அன்புத் துறவி.

**"மனம் கரைந்து மலம் கெடுக்கும் வாசகம்"** எனத் திருவாசகத்தின் சிறப்பினை மனோன்மணிய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் போற்றுகிறார்.

"மணிவாசகரின் பாடல்கள் அனைத்திலும் பக்தி வீசுகிறது. பக்தி நெறி ஒன்றே வீடு பேற்றைத் தரும் என்ற உண்மையை அவரது பாடல்கள் புலப்படுத்துகின்றன"[11].

பிரபக்தி நிலையில் நின்று இறைவனை வணங்கும் அடியவன் பக்தியின் பெருக் கால் தங்கள் உயிரையே பொருட்படுத்து வதில்லை. தற்பேதம் படைத்திருப்பவர்கள் தங்களைப் பேணுவதில் கருத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியையும் செலுத்துவார்கள். பர போதத்தில் திளைத்திருப்பவர்களைப் பரம் பொருளே பேணிவருகிறது.

**"வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்**
**அதுவும் உன்தன் விருப்பு அன்றே"**

குழைத்த பத்து

நிலம் உழ உழப் பக்குவம் பெறுகின்றது. அந்த நிலம் தன் மடிக்குள் மறைந்திருந்த உயிர் ஊட்டத்தை விதைக்கு ஊட்டி விளைச்சலை வீரியம் ஆக்குகின்றது. ஆலையில் பிழியப்பட்ட கரும்பே கற்கண் டாய் இனிமை தருகின்றது. உருகிய உலோகமே உருவங்களாய் மாறிப் பயன் தருகின்றன. பயன் தரு பொருட்களாய் மாற மூலப் பொருட்கள் பக்குவப் படல் வேண்டும். உருக வேண்டும், இளக வேண் டும். இளக்கத்திற்குப் பின்பு தோன்றுகின்ற இறுக்கமே இறுதியானது, உறுதியானது. உள்ளம் உருகினால் அகத்திலே சிவம் பிரகாசிக்கும். சீவனுக்குள்ளே சிவ மணம் பூக்கும்.

திருவாசகத்தை உணர்ந்து அனுபவித் துப் பாடினால் உடல் நோய், உள நோய், என்பவை நீங்குவதோடு, உயிர்நோயாகிய பிறவிநோயும் நீங்கும்.

திருவாசகம் பாடல்கள் மட்டும் அல்ல! திருவருளனுபவம்! இறைவனின் திருவரு ளுக்கு மொழியால் வடிவம் தந்தார் மாணிக்கவாசகர். இந்தப் பண் சுமந்த பாடல்களைப் பரிசாகப் பெற்றவன் இறை வன். மாணிக்கவாசகருடைய அன்பினில் சிவம் விளைந்தது. அன்பும் சிவமும் கலந்த மாணிக்கவாசகரால் விளைந்த திருவாச கம், நம்மவர்களின் இதயத்தில் இருளகற்றி இன்பம் விளைவிக்கின்றது.

## 03) VI. திருவிசைப்பா திருப்பல்லாண்டுப் பாடல்களில் பக்தி

பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாவ தாகத் தொகுக்கப்பட்டவை திருவிசைப்பா வும் திருப்பல்லாண்டும் ஆகும்.

**"இசைப்பா என்பதற்கு இசையமைத்துப் பாடப் பட்டவை என்று பொருள் கொள்வது வழமை. எனினும் இசை என்பதைப் புகழ் எனக் கொண்டு இறைவன் புகழ்பாடுபவை "இசைப்பா" எனக் கருத இடமுண்டு"[12].**

திருவிசைப்பாவில் அதிக எண்ணிக்கை யான பதிகங்கள் பாடியவர் கருவூர்த் தேவர். இவர் சிவயோக நெறியில் நின்றவர். பல சித்திகள் கைவரப் பெற்றவர். கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில் சிவனிடத்துக் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்த பாடலைக் காணலாம்.

என்னுடல் சிவபெருமானுடைய திருநீற் றைப் பூசிக் கொள்ள விரும்பும். என் செவிகள் சிவஞானத்தை தெரிவிக்கும் நூல்களையே கேட்கும். என் வாய் அவர் பெயரையே சொல்லும். என் கண்கள் அவன் கோயில் விமானததைப் பார்த்து பெருமூச்சு விடும். என் மனமோ செறிவான பூங்கிளைகளி லிருந்து கிளிகள் கொஞ்சி மாஞ்சோலை களில் ஆரவாரம் செய்கின்ற "திருக்கீழ்க் கோட்டியூர் வள்ளலே என்று (உன்னை) நினைக்கும்.

**"தெள்ளுநீறவன் நீறு என்னுடல் விரும்பும்**
**செவியவன் அறிவு நூல் கேட்கும்**
**மெள்ளவே அவன் பேர் விளம்புவாய், கண்கள்**
**விமானமே நோக்கி வெவ்வுயிர்க்கும்**
**கிள்ளை பூம்பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே**
**கெழுவுகம் பலை செய்கீழ்க் கோட்டூர்**
**வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்**
**மைந்தனே! என்றுமென் மனனே".**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து தத்துவ உலகில், பக்தி மோட்ச சாதன மாக விளங்குகிறது. அழகியல் நோக்கில் பாவமாக உணர்ச்சி நிலையாகக் கொள் ளப்படுகிறது. இறைவனது பாதங்களை அடைந்து யாரும் பெறாத அறிவு பெற்ற யான் பேறுபெற்றவன். "அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" என்று மணிவாசகர் அச்சோப் பதிகத்தில் குறிப்பிடுவது போல" ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்" எனச் சேந்தனாரும் திருப்பல்லாண்டில் கூறுகின்றார்.

### 03) VII. திருமந்திரத்தில் பக்தி

அனுபவ ஞானத் திருநூலாக அமைந் துள்ள திருமந்திரம் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்துள்ள பெருநூலா கும். யோகம், வைத்தியம், வாழ்வியல், தத்துவம், அறிவியல் ஆகிய அனைத்தை யும் விளக்கும் அறிவுக் களஞ்சியமாகவும் திருமந்திரம் திகழ்கிறது. சமயச் சடங்குகள் பக்திக்கும் ஆன்ம விடுதலைக்கும் வழி காட்ட வேண்டும் என்பதைத் திருமந்திரம் வலியுறுத்துகிறது. கிரியைகள், சடங்குகள் பக்திஎன்ற பெருவழியின் வாயிலாக ஆன்மாவை முத்திக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே திருமூலரின் சிந்தனை யாகும்.

திருவருள் துணையால் சிவபெரு மானின் திருவடி மலரைத் தலையிற் சூடு வேன். அத்திருவடியுணர்வை என் நெஞ்சத் தில் மறவாது வைப்பேன். உயிர்க்குயிரான பெருந்தலைவனே என்று பாடுவேன். பல நறுமலர்களைக் கைகளால் தூவி அர்ச்சித் துப் பணிந்து நிற்பேன். மகிழ்ச்சி மேலிட் டால் ஆடுவேன். ஆடிச் சிவவுலகத்து வாழும் அமரர் பிரான் என்று அவனைச் சிந்திப் பேன் எனத் தனது பக்தியனுபவத்தை பின் வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார்.

**"சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று**
**பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்து நின்று**
**ஆடுவன் ஆடி அமரர் பிரான் என்று**
**நாடுவன் நானின்றறிவது தானே.**

**–திருமந்திரம் – 50**

உண்மைச் சிவனடியார்கள் பக்தி வைராக்கியம் உடையவர்களாக இருப்பார் கள். எத்தகைய இடர் எதிர்ப்படினும் நாத னாகிய இறைவனை விட்டுப் பிரிய மாட் டார்கள். வானம் விழும் போல பேரிடி வந் தாலென்ன? காட்டுத் தீ நாட்டை அழித்தா லென்ன? நான் ஒருமுகப்பட்டு என்னுள்ளே இறைவனை நாடுவேன் எனத் தனது நெஞ்சுக்கு தானே அறிவுறுத்துகின்றார்.

**"வானின்றிழக்கிலென் மாகடல் பொங்கிலென்**
**காணின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்**
**தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலேன்**
**நானொன்றி நாதனை நாடுவன் நானன்றே.**

**– திருமந்திரம் – 2806**

தமிழனுக்கென்று சொந்தமாகச் சமயமோ மெய்யியலோ இல்லை. இவன் எல்லாவற்றையும் மற்றவர்களிடம் கடன் வாங்கித்தான் காலத்தைத் தள்ளுகிறான் என்று கருதுகிறவர்களின் கருத்துக்கு ஆப்பு வைக்கும் நூலாகத் திருமந்திரம் திகழ்கி றது. தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவ சித்தாந்தம் என்ற தமிழ்ச் சைவ மெய்யியற் கொள் கைக்கு மையம் வழங்கி வரம்பு கற்பித்த முதல் நூலாகத் திருமந்திரம் காணப்படுகி றது. அரசமரமாகிய போதி மரத்தின் கீழி ருந்து புத்தர் மட்டும் ஞானம் பெறவில்லை. திருமூலராகிய சித்தரும் திருவாவடுதுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் போதி மரத்தின் கீழிருந்து தான் ஞானத்தைப் பெற்றார்.

"ஞானிகள் வாயில் இருந்து வரும் வார்த்தைகளில் தெளிவு இருக்கும். சொற் சிக்கனம் காணப்படும். தேவையற்ற வார்த்தை அலங்காரங்கள் எதுவும் இருக் காது. வார்த்தைகள் அனைத்தும் மந்திர சொருபமாகவே காணப்படும். இதனால் தான் திருமுறை வரிசையிலே திருமூலரின் பாடல்கள் "மந்திரம்" என அழைக்கப்படு கின்றது"[13].

### 03) VIII. பதினோராம் திருமுறையில் பக்தி

பதினோராம் திருமுறை ஒரு தொகுப்பு நூலாகும். இத் தொகுப்பில் பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. பல்லவ அரசனாகிய ஐயடிகள் காடவர் கோன் இருபத்து நான்கு வெண்பாக்க ளைக் கொண்ட ஷேத்திரத் திருவெண்பாப் பாடல்களை இருபத்திரண்டு சிவத்தலங் கள் மீது பாடியுள்ளார். முதுமையும் நோயும் வந்து உடம்பை நலிவு செய்யும் முன்பே இளமை நலத்தோடு இருக்கும் போதே இறைவழிபாடு செய்தல் வேண்டும் என்று நெஞ்சுக்கு கட்டளையிடுவது போன்று பாட லொன்றைப் பாடியுள்ளார்.

**குந்தி நடந்து குனிந்தொரு கைகோலூன்றி**
**நொந்திருமி ஓங்கி நுரைத்தேறி – வந்துந்தி**
**ஐயாறு வாயாற பாயாமுன் நெஞ்சமே**
**ஐயாறு வாயால் அழை.**

"இறைவன் மனத்தினாலே இத்தன்மை யன் என நினைத்தற்கும், வாக்கால் இன்ன தென்று உரைத்தற்கும் இயலாதவாறு அதீத மாக நிற்பவன். காயத்தாலும் நாம் பற்றற்கு அமையாத பொருளாவான். திரிகரணங் களுக்கு அப்பாற்பட்ட இறைவனை அடியார் கள் பக்தி மூலம் அறிந்து அடைந்தனர் என் பதே உண்மை"[14].

பக்தர்கள் எவ்வுருவத்தை மனக்கண் ணில் பதிந்து வழிபடுகின்றனரோ அவ்வுரு வத்தில் இறைவன் காட்சி அளித்து அருள் புரிவான் எனச் சேரமான் பெருமாள் நாய னார் அருளிய திருக்கைலாய ஞான உலா கூறுகின்றது.

**"எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்**
**அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்**
**எவ்வுருவும் தானேயாய் நின்றளிப்பான்".**

ஈசன் காட்சிக்கு எளியன், கருத்துக்கு அரியன், அடியாரிடத்து அன்பு பூண்டவன் என்ற செய்திகளைப் பல்வேறு பாடல்கள் மூலம் காரைக்காலம்மையார் வெளிப் படுத்தியுள்ளார். காலனாகிய யமனையும் வெல்லலாம். நரகத்தில் புகாமல் தப்பலாம். நல்வினை தீவினை ஆகிய இரு வினை களையும் நீக்கி இருவினை ஒப்பு நிலை யைப் பெற்று விடலாம் என்பதைத்தான் அருளிய அற்புதத் திருவந்தாதிப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"காலனையும் வென்றோம் கடுநரகம் கை கழன்றோம்.**
**மேலை இருவினையும் வேரறுத்தோம்"**

### 03) IX. பெரிய புராணத்தில் பக்தி

சேக்கிழார் பெருமான் அருளிய திருத் தொண்டர் புராணம் செந்தமிழ்க் காப்பியங் களில் தலை சிறந்த நூலாகும். பெரியபுரா ணம் ஒரு வரலாற்று நூல். வாழ்வாங்கு வாழ்ந்த சான்றோர்களின் சரித நூல். பக் திச்சுவை, நலம் பாலிக்கும் பெரு நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப அன்பினை இடையறாது விளைவிக் கும் இன்தமிழ் மறை நூல் எனப் பலவகை யாகப் பாராட்டப்படுகின்ற நூல் ஆகும். ஏனைய காவியங்களில் காணப்படாத பக்திச் சுவையைப் பெரிய புராணத்திலே காண லாம். சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

**"பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய**
**கவிவலவ"**

எனச் சேக்கிழார் பெருமானைப் போற்றித் துதிக்கின்றார்.

அறுபத்து மூன்று தனி அடியார்களையும், ஒன்பது தொகை அடியார்களையும் பற்றிப் பக்திச் சுவையுடன் பாடல்களை அருளிய சேக்கிழார் பெருமான் சிவனடியார்களைப் "புனிதர் பேரவை" எனப் பெரிய புராணத் தில் குறிப்பிடுகின்றார். சிவனடியார்களின் வாழ்வியல் நெறி உலகை வாழ வைத்து மேன்மை கொள் சைவநீதியை உலகமெல் லாம் பரவச் செய்யும் என உறுதியாகக் கூறுகின்றார்.

**"மதிவளர் சடை முடி மன்னுளாரை முன்**
**துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்**
**பொதி நலன் தரு புனிதர் பேரவை**
**விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.**
**- பெரியபுராணம் -**

காவிய நடையின் பெருமிதமும் செந் தமிழின் சிறப்பும், பத்திரசமும் ஒருங்கே வெளிப்பட்டு நிற்கும் உன்னத படைப்பாக பெரிய புராணம் மிளிர்கிறது. இறை அன் பில் ஊறித் திளைத்த மெய்யடியார்களின் வரலாற்றைக் கூறுவதனால் இது அன்பு நூல் எனவும் சுட்டப்படுகிறது. தன்னை மறந்து தற்போதமில்லாமல் ஒரு செய லைச் செய்தால் அது உள்நின்று தூண்டும் இறையருளால் செய்யப் பெற்றதாகவும் இந்நிலையே பக்தனின் உண்மை நிலை என்றும் பெரிய புராணம் சித்தரிக்கின்றது.

"கலப்பற்ற பக்தியும், ஒழுக்கமும் ஆன்மீக நெறியின் அடிப்படை" என்று தேவாரம் கூறுகிறது. அடியவனின் பக்தியை விட இறைவனுக்கு வேறொன்றும் உகந்ததன்று. குரல் இனிமையோ இசை அறிவோ இல்லா விட்டாலும் அடியவரின் பக்தியே இறை வனுக்கு மகிழ்ச்சி அளிக்கும். இறைவனை வணங்கும் பொழுது உயிர்கரைகிறது, ஊன் உருகுகிறது, அன்பே அதற்கு அடிப் படையாக அமைந்திருக்கிறது.[15]

பெரிய புராண அடியார்களில் பக்தியின் உயர்வு நிலையில் நின்றவர்களிற் கண்ணப் பர் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின் றார். குடுமித் தேவரைக் கண்ட மாத்திரத் திற் கண்ணப்பர் அன்புருவமாக மாறினார் என்பதை

**"பொங்கிய ஒளியின் நீழல் பொருவில்**
**அன்புருவம் ஆனார்"**

எனப் பெரிய புராணம் கூறுகிறது. கண்ணப் பனுடைய வடிவம் அன்பின் வடிவம். அவனு டைய அறிவு இறைவனை அறியும் அறிவு. அவனுடைய செயல்கள் அனைத்தும் இறை வனுக்கு இனிய செயல்கள் எனக் கண்ணப் பரின் தன்மையைப் பின்வரும் பெரிய புராணப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல்**
**அன்பென்றும்**
**அவனுடைய அறிவெல்லாம் நமையறியும்**
**அறிவென்றும்**
**அவனுடைய செயலெல்லாம் நமக்கினியவாம்**
**என்றும்**
**அவனுடைய நிலை இவ்வாறு அறிநீஎன்று**
**அருள் செய்தார்"**
**- பெரிய புராணம் -**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04) நிறைவுரை**

"இறைவனின் திருவடியை அடைய எளிய சாதனமாக அமைவது அன்பால் செய்யப்படும் பூசையே. இப் பூசையே நம் மனம் செயல் உள்ளம் முதலியவற்றை ஒரு முகப்படுத்தி பற்றற்றான் தாளினைப் பற்றும்படி செய்து இறைவனின் திருவருளை நமக்குக் கிட்டும்படி செய்கிறது என்பது தெளிவு".[16]

பக்தன் அல்லது தொண்டன் என்ப வன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் ஆவான். பிறருடைய இன்பங்கண்டு மகிழ்வதும் அவர்கள் துன்பங்கண்ட பொழுது அதனைத் துடைக்க முயல்வதும் தான் பக்தனின் வாழ்க்கையில் காணப்பெறும் தனிப் பண்பாகும்.

"பக்தி ஒன்றுதான் அனைத்து வேறுபாடுகளையும் கடந்து அனைவருக்கும் விடுதலையின் வாசலைத் திறந்து விடுகிறது. ஆன்மீக ஞானத்தை எளிமையாக்கி வேறுபாடில்லாமல் அனைவருக்கும் வழங்கும் இனிமையான புது வழியைக் காட்டுவது அதுவேயாகும்."[17]

**அடிக்குறிப்பு :**


01) இரத்தினம் செட்டியார். பழ, "திருவாசகத்தில் பக்திச்சுவை" திருவாதவூரரும் சைவத் திருநெறியும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2014, பக் 119, 120

02) ஆசாரிய ஸ்வாமிகள், சென்னை உபந்நியாசங்கள் பாகம்-03, கலைமகள் காரியாலயம், சென்னை - 4

03) திருமுருக திருபானந்த வாரியார் சுவாமிகள், பெரிய புராணம். ப. 31

04) ஞானசம்பந்தம், அ. ச, தத்துவமும் பக்தியும். ப. 40

05) ஞானசம்பந்தம் அ. ச, தத்துவமும் பக்தியும், ப.38

06) பதிப்புரை, தமிழ் உணர்த்தும் பக்தி, ஆய்வுமாலை, ப.

07) முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், "நினைந்துருகிப் பாடுவதே சிறந்த பக்தி" தமிழ் உணர்த்தும் பக்தி ஆய்வு மாலை. ப.16

08) கலைவாணி இராமநாதன். சம்பந்தர் தேவாரம் காட்டும் பண்பாட்டுக் கோலங்கள் இந்துநெறி, யாழ் பல்கலைக்கழகம். 2008

09) சாரதா நம்பி ஆரூரன், ஆரூரன் அருந்தமிழ் ப. 73

10) குன்றக்குடி அடிகளார், திருவாசகத் தேன். பக். -04

11) இரத்தினம் செட்டியார், பழ, திருவாசகச் சுவை, பக்-76

12) பத்மநாதன்,சோ. "பத்தியிலக்கிய மரபில் திருவிசைப்பா," திருமுறையும் சைவத் திருநெறியும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். ப -01

13) சிவமகாலிங்கம் - தவமுனிவனின் தமிழ் மந்திரம். ப.232

14) கிருஷ்ணவேணி. ர. என், சேரமான் பெருமாள் நாயனாரின் பக்தி நலம், பன்முக நோக்கில் பதினோராம் திருமுறை

15) சித்தலிங்கம். டி.பி, "சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்" பக் - 35

16) தனலட்சுமி. பெ, "பெரிய புராணத்தில் வன்பக்தி", பெரிய புராண ஆய்வுக் களஞ்சியம். ப.180

17) ஞானசம்பந்தம், அ.ச, பெரியபுராணம் ஓர் ஆய்வு ப. 460.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌமார வழிபாட்டு மரபில் ஸ்ரீ மயூரகிரி (குன்றக்குடி) ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம் - பக்திநெறி நோக்கு

**கலாநிதி மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**
சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை,
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இந்துப் பண்பாட்டு அம்சங்களில் கௌமார வழிபாட்டு மரபு மிகவும் முக்கியமானதாகும். ஷண் மதங்களிளொன்றான கௌமார வழிபாடு முருகனை முழுமுதற்கடவுளாகக் கொண்டதாகும். கலியுகதர்மத்தில் இரு கடவுளர்கள் மிகப் பிரசித்தமாகவும் முக்கிய மான வழிபாட்டுக்குரியவர்களாகவும் சாஸ் திரங்கள் கூறுகின்றன. அவை சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சாக்தமும், முருகனை முழுமுதற்கடவுளாகக் கொண்ட கௌமாரமும் ஆகும். எனினும் கலியுக காலத்தில் வரங்களைத் தரும் தெய்வமாக முருகக் கடவுளே சிறப்பிக்கப்படுகின்றார். "கலியுகவரதா யநம:" எனும் நாமம் முருகக் கடவுளை காலத்திற்குரிய வழிபாட்டுத் தெய் வமாக சிறப்பிக்கின்றது. கௌமார தந்திரம் எனும் ஆகம நூல் விதி கௌமாரம் சார்ந்த அனைத்து விடயங்களையும் சுலோகங்க ளாக வரையறுத்துக் கூறுகின்றது. பக்தியை யும் வழிபாட்டையும் முன்னிலைப்படுத்தி, நம்பிக்கையெனும் அடித்தளமாக முருகன் மீது பாடப்பட்ட பாடல்களும் இலக்கியங்களும் நோக்கத்தகுந்தனவாகும். அந்த வகையில் பக்திநெறியை அடிப்படையாகக் கொண்டு சண்முகப்பெருமான் மீது அளவற்ற அன்பி னாலும் பக்தியினாலும் பல நூல்கள் எழுச்சி பெற்றன. அந்த வரிசையில் "ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்" என்னும் செய்யுள் இலக்கியமும் பக்திநெறியில் நோக்கத்தக்கதாகும்.

## நூல் பற்றிய அறிமுகம்

"ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்" எனும் நூலா னது 1976ம் ஆண்டு தமிழகத்து பள்ளத்தூ ரைச் சேர்ந்த G.A.ராமச்சந்திரசாஸ்திரிகளி னால் குன்றக்குடியிலமைந்த சண்முகப் பெருமான் மீது பாடப்பட்ட பக்தி இலக்கிய மாகும். "சுப்ரபாதம்" என்பது இறைவன் தூங்கி எழுகின்றபோது அவனைப்பற்றி பாடும் புகழ்ஸ்துதிகளாகும். "சு" என்பது நன் றாக என்றும், "ப்ர" என்பது பிரகாசமானது என்றும், "பாத்" என்பது நல்ல வசனங்க ளைக் கூறுவது என்பது நேரடியான கருத் தாகும். எனவே பொதுவாக இறைவன் மீது கொண்ட பக்தியாலும் நம்பிக்கையாலும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட இறைவனைக் குறித்து அதிகாலை வேளையில் பாடப்படும் பாடல்களே சுப்ரபாதம் ஆகும். வடமொழி ஸ்தோத்திர இலக்கிய வரிசையில் சுப்ரபாதம் ஈண்டு கவனிக்கப்பாலது. கால ஓட்டத்தில் ஒவ்வொரு ஆலயங்களையும் மையப்படுத்தி அவ்வப்போது ஆசிரியர்களின் அனுபவத் தால் பாடப்படும் பாடல்களே பக்தி இலக்கி யங்களாகும். அவ்வரிசையில் குன்றக்குடி யில் அமைந்திருக்கும் சண்முகப்பெருமானை குறித்து ஆசிரியர் G.A.ராமச்சந்திர சாஸ்திரி களினால் ஐம்பத்திநான்கு சுலோகங்களாக பாடப்பட்ட தொகுதிகளே ஸ்ரீ ஷண்முக சுப்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதமாகும். இவற்றுடன் ஆசிரியர் பின்வரும் குறிப்பிட்ட நூல்களையும் இயற்றியுள்ளார்.

1. ஸ்ரீ ஷண்முக பராதஸ்பரணம்
2. ஸ்ரீ ஷண்முக பாதுகாஸ்தவம்
3. ஸ்ரீ ஷண்முக வம்சவ்ருத்திஸ்தவம்
4. ஸ்ரீ ஷண்முக மங்களம்
5. ஸ்ரீ ஷண்முக மந்தரம்

ஆகிய ஆறு நூல்களை இணைத்து தேவ நாகரியிலும், தமிழிலும் பதிப்பித்து வெளிக் கொண்டு வந்திருக்கின்றார். இவ்விடத்தில் ஆசிரியரின் "ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்" எனும் நூலே பக்திநெறியில் நோக்கப்படு கின்றது.

**ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்**

ஆசிரியர் குன்றக்குடித்தலத்தின் மீது கொண்ட நம்பிக்கையையும், ஷண்முகப் பெருமான் மீது கொண்ட அன்பையும் பக்தி யையும் மனதிற் பதித்துக் கொண்டு ஐம்பத்தி நான்கு பாடல்களில் ஆறு விடயங்களை ஒன்பது பாடல்தொகுதிகளில் வரிசைக் கிரம மாக முன்வைத்திருப்பது பக்திநெறி நோக்கு க்கு வரவேற்கத்தக்க விடயமாகும். மேற்படி ஆசிரியர் இவ்வாலயத்தின் மீது வைத்த நம்பிக்கையும் அங்கு காணப்பட்ட உற்சவம், கிரியைகள், தத்துவம், அருள், ஷண்முகப் பெருமானின் வழிபாடு ஆகிய செயற்பாடுக ளைக் கருத்தில் கொண்டு தனது பாடல்களி னூடாக வெளிக்கொண்டு வருகின்றார்.

1. குன்றக்குடி தலச்சிறப்பு
2. ஷண்முகப் பெருமானின் தோற்றம்
3. ஷண்முகப் பெருமானின் அழகு
4. ஷண்முகப் பெருமானின் பராக்கிரமம் (வீரதீரச்செயல்)
5. ஷண்முகப் பெருமான் மீது கொண்ட பக்தி
6. ஷண்முகப் பெருமானின் வழிபாட்டு பலாபலன்கள்

எனும் ஆறு விடயங்களை வலியுறுத்து கின்றார்

முதல் ஒன்பது பாடல்களில் ஸ்தலச்சிறப் பின் ஊடாக மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் விடயங்களை விரிவுபடக் கூறுகின்றார். குன்றக்குடி ஆலய அமைப்பு, அங்கு எழுந் தருளியிருக்கும் ஷண்முகப் பெருமானின் புராணக் கதைகள், தீர்த்தமான ஷண்முகத் தீர்த்தம் பற்றிய விடயங்களையும், ஆலய அமைப்பு, சூழல், சண்முகப் பெருமான் ஆல யத்திற்கான வருகை ஆகிய விடயங்களை யும் ஸ்தலபுராணங்களையும் அடிப்படை யாகக் கொண்டு முதல் 9 பாடல்களிலும் விபரிக்கின்றார்.

விஷ்ணோ: விதே: ச வரவாஹன பக்ஷிணோ
ஜாதாபராதகுபிதேன குஹேந சப்தே
ஐசல ஸ்வரூப நிஜவாஹ மயூர ச்ருங்கே
ராராஜமான குலதைவதமஸ்து பூத்யை

அடுத்து வருகின்ற ஒன்பது பாடல்களிலும் ஷண்முகனின் தோற்றம், சிவனுடைய கண் ணிலிருந்து தோற்றம் பெற்றவன், ஸ்ரீருத்ர னின் அம்சம் பெற்றவனாயும், உலகத்திலே நன்மையை எற்படுத்துவதற்காக முருகன் பிறந்தான் எனும் கருத்தையும், அவன் அன்பு, பக்தி, வழிபாட்டால் உருகப்பெறுகி றான் என்பதனை ஆசிரியர் எடுத்துக் காட்டு கின்றார். உதாரணமாக பன்னிரெண்டாவது பாடல் முழுதும் ஷண்முகனின் தோற்றம் பற்றிய கருத்தை கோடிட்டு தொடர்ந்து பதி னெட்டாவது பாடல்கள் வரையும் ஷண்முக னின் தோற்றம் பற்றிய கருத்துக்களைக் கூறும் புராணக்கதைகளையும் அவதார மஹிமைகளையும் போற்றிக் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்வம் ப்ரார்த்தித: கில ஸூரை: திதிஜாத் ப்ரபீதை:
ஸேனாதிபத்ய வஹநாய நவாவதார:
ஹத்வா ச தாரகமுகான் விஜயேன சக்த்யா
ஜேஜீயஸேத்ர தவ ஷண்முக ஸூப்ரபாதம்

அடுத்த விடயமாக சண்முகப்பெருமானுடைய வீரமும் அழகும் ஒன்றாகப் பேசப்படுகின்றன. அவனது ஆடை அணிகலன்களும், குமாரத் தோற்றமும், அவனது குணாம்சங்களும், அசுரர்களை அழித்து தேவர்களை ரட்சித்த சம்பவமும், அவனே எல்லாத் தெய்வங்களையும் விட அழகுள்ளவன் என முருகன் அழகன், தமிழ்க்கடவுள், காவற் தெய்வம், கலியுகவரதன், ரட்சிப்பவன், ஷாட் குண்யன் என்னும் விடயங்களை ஆசிரியர் மேலெழுந்தவாரியாக கூறுகின்றார். அழகுக்குரிய முருகன் அர்ச்சிக்கப்பட வேண்டியவன் என்பதனையும், கோடி அர்ச்சனங்கள் செய்யவேண்டும் என்பதனையும், நித்தியார்ச்சனம், ஷண்முகார்ச்சனம், ஸஹஸ்ர சங்கு அபிசேகம், மகா அபிசேகம் போன்றவைகளால் வழிபட வேண்டியவன் என்பதனையும் ஆசிரியர் வலியுறுத்திக் கூறுகின்றார்.

ஸௌந்தர்ய ஸார ஸமுதஞ்சித திவ்ய மூர்த்தே
ஸர்வானவத்ய ஸூகுமார சரீர யஷ்டே
ஸர்வஸ்வ மேவ ஹி பவான் குலதைவதம் மே
சுப்ரஹ்மண்ய தேவ தவ ஷண்முக ஸூப்ரபாதம்

அடுத்த வருகின்ற ஒன்பது பாடல்களில் ஆசிரியர் ஷண்முகப்பெருமானின் பராக்கிரமங்களை வரிசைப்படுத்துகின்றார். எண்பத்தெட்டு பராக்கிமங்களையும் முருகன் அவதாரம் எடுத்துக்காட்டியது என்பதனையும், பஞ்சபூதங்களின் சக்தியாக முருகன் விளங்குகின்றான் என்பதனையும் மகானுபாவன், மகாவிபூஷகன், சர்வக்ஞன், பகுபாக்கியன், யோகன், மாகதன் எனும் சொற்றொடர்களைக் கையாண்டு கந்தபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு முருகப் பெருமானின் பராக்கிரமங்களை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

த்வம் ஸர்வபூத ஹ்ருதய: ஸ்ம்ருதி மாத்ரதுஷ்ட:
நாம்ன: ஸக்ருத் ஸ்மரணதோபி மஹானுபாவ:
பூயிஷ்ட மேவ க்ருபயா பஹூபாக்ய யோகம்
துூதாஸி ஷண்முக விபோ தவ ஸூப்ரபாதம்

கௌமார வழிபாட்டு அம்சங்களில் பக்தியே கருப்பொருளாகப் பேசப்படுகின்றது. நம்பிக்கை, வழிபாடு, பக்தி ஊடாக மந்தரம், தந்தரம், கிரியா பாவனை என்பவை இப் பாடல்கள் மூலம் எடுத்துக்காட்டி மாறாத பக்தியை ஆசிரியர் குன்றக்குடி ஷண்முகப் பெருமான் மீது கொண்டிருப்பதை காண முடிகின்றது. நீயே கடவுள், நீயே தாய், நீயே தந்தை, நீயே சகோதரன், நீயே உலகம், நீயே யாவும், உன்னைத் தவிர வேறு யாரையும் வழிபடமாட்டேன் எனும் கருத்துப் பட ஆசிரியர் மாறாத பக்திநெறியை எடுத்துக் காட்டுவதோடு, நித்தியமும் வழிபாட்டுக்குரிய தெய்வமாக ஸ்ரீ மயூரகிரி க்ஷண்முகனே மனதிலிருக்கின்றான் என்பதனையும் அனுபவவாயிலாக எடுத்துக்காட்டி அது மட்டுமல்லாமல் ஷண்முகப்பெருமானின் கட்டளைப்படி அகஸ்தியர், விஸ்வாமித்திரர், இந்திரன், சந்திரன், மகரிஷிகள்கூட இந்தக் குன்றக்குடியை வலம்வந்து ஷண்முகப் பெருமானின் சந்நிதியில் மூலமந்ரம் ஜெபம் செய்து சித்தி பெற்றனர் என்ற வரலாற்றுக் கதையையும் முன்வைக்கின்றார். "த்வம்" (நீ) எனும் சொல்லை ஆசிரியர் அதிகம் கையாண்டிருப்பது பிரிவறாத அன்பை எடுத்துக்காடடி நீயும், நானும் ஒன்றே எனும் அத்வைத நிலையை சுட்டிக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக: த்வமேவ மஹிதோத்தரவ க்த்ர பூஜ்ய
வேதஸ்வரூப சிகிவாஹன நித்ய ரம்ய:
தேவீ த்வயேன ஸுமயூர கதேன சாபி
ஸ்ம்சோபி பார்ச்வ யுகள: தவ ஸுப்ரபாதம்

இறுதியாக ஆசிரியர் ஷண்முகப்பெருமானை வழிபடுவதால் கிடைக்கப்பெறும் பலாபலன்களை வரிசைப்படுத்துகின்றார். மக்களுடைய நம்பிக்கையையும் முருக வழிபாட்டையும் மேம்படுத்துவதோடு, கந்தபுராண கலாசாரத்தினூடாக பண்பாட்டு விழுமியங்களை சுப்ரபாதத்தில் இணைத்துள்ளார். “உன்னைச் சரணடைந்தால் உலகில் கிடைக்கப்பெறாதது ஒன்றுமில்லை” எனும் கருத்துப்பட முருகன், ஷண்முகன், ஸ்கந்தன், கார்த்திகேயன், சுவாமிநாதன் போன்ற நிகரற்ற தெய்வங்கள் இவ்வுலகிலில்லை என வலியுறுத்துகின்றார். உன்னையே சரணடைந்தால் கிடைக்கப் பெறாதது ஏதுமுண்டோ எனும் வினா எழுப்பி பக்தியை உச்சநிலைப்படுத்துகின்றார். வம்சவிருத்தி, லோகவிருத்தி, அரசவெற்றி, மக்கள் பாதுகாப்பு, உயர்பதவி, தனதான்யவிருத்தி, சுகதுக்கநிவாரணம், அபமிர்த்துபயம் நீங்கப் பெறல் என்பன கிடைக்கப்பெற்று கந்தப்பெருமானின் கடம்பத்தாள் மோட்சம் கிடைக்கப் பெறும் என்பதனையும் உறுதியாகக் கூறுகின்றார்.

தைவாருணாசல சிகாமணி தேசிககேன
தர்மாதிகாரி பதவீம் வஹதா அதிமாத்ரம்
ஸம்பூஜ்யமான சரண: ஸகலேஷ்டதாதா
புாக்யப்ரத: ச தவ ஷண்முக ஸுப்ரபாதம்

## முடிவுரை

கௌமார வழிபாட்டு மரபில் பக்தி நெறியை எடுத்துக்காட்டுவதற்கு G.A.ராமசந்திர சாஸ்திரிகள் எழுதிய “ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்” எனும் நூல் குறிப்பிடத்தக்கதாகும். ஸ்ரீ ஆதிசங்கரர் முப்பத்திமூன்று பாடல்களில் திருச்செந்தூர் செந்தில்நாதனை மனதில் இருத்தி வடித்து சுப்ரம்மண்ய புஜங்க தோத்திரத்தை இயற்றிய அதே பாணியில் மேற்படி ஆசிரியர் குன்றக் குடியிலுள்ள சண்முகப்பெருமானை மனதிற் கொண்டு பக்தி ததும்ப “ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்” எனும் நூலை அமைத்திருப்பது கௌமார வழிபாட்டு மரபுக்கும் முருகப்பெருமானை தோத்தரித்து வழிபடவும் பக்திநெறியை வளர்க்கவும் இந்நூல் உந்துசக்தியாக விளங்குகின்றது.

## துணைநூல்கள்

1. G.A.ராமச்சந்திர சாஸ்திரிகள்
   ஸ்ரீ ஷண்முக சுப்ரபாதம்
   ஸ்ரீ வாணிவிலாசயந்திரசாலை
   ஸ்ரீரங்கம்
   1976
2. சிதம்பரமுதலியார்
   சுப்ரமண்ய பராக்கிரமம்
   வித்யாரத்னாகரஅச்சுக்கூடம்
   சென்னை
   1910
3. ஆறுமுகநாவலர்
   கந்தபுராணம்
   வித்யானுபாலனயந்திரசாலை
   சென்னை
   1935
4. செந்தில் துறவி
   கௌமாரம்(முருகன் வழிபாடு)
   சாஸ்தா பதிப்பகம்
   சென்னை
   1940



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தசுவாமியும் நற்சிந்தனையும்

**கலாநிதி சண்முகயோகினி ரவீந்திரன்**
முதுநிலை விரிவுரையாளர்,
ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கைத்தீவில், யாழ்ப்பாணத்தில், நல்லூர் என்னும் புகழ்மிக்க பதியில் உறைபவர் நல்லூர்க் கந்தசுவாமியாவர். மூலவராக முருகனின் வேலும் உற்சவ மூர்த்தியாக முத்துகுமாரசுவாமியும், தேரேறி வரம் தர ஆறுமுகசுவாமியுமாக நல்லூர்க்கந்தன் பக்தர்களுக்கு தரிசனம் தருகின்றார். தொன்று தொட்டு இன, மத, மொழி, வயது வேறுபாடின்றி பலரும் வழிபட்டு வரும் தலம் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலாகும். இருபத்தைந்து நாள் திருவிழா உற்சவத்தின் உச்சக் கட்டமாக லட்சோபலட்சம் பக்தர்கள், இப் பூலோகத்தின் பல பாகங்களிலும் இருந்து பக்திப் பரவசமாக அறுமுகவன் தேரில் ஆரோகணித்து, அவரோகணித்து ஆடி வரும் அழகான காட்சியை மெய்சிலிர்க்க, கண் குளிர, மனம் நிறைய சிரமேற் கை துதித்து வழிபடுவர்.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்னும் பதிவாழ் முருகனை சிறப்பித்தவர்கள் பல மகான்கள், துறவிகள், சித்தர்கள், யோகிகள், பக்தர்கள் ஆவர். அவர்களுள் செல்லப்பரும், சிவயோக சுவாமிகளும் நல்லூரான் முன்றலில், சந்நிதியில், தேரடியில், நல்லூரான் சூழலில் நிகழ்த்திய கடும் விரதங்கள், தவம், தியானம், சத்சங்கம், பக்திப்பரவசமொழிகள், வார்த்தைகள், உபதேசங்கள் மட்டுமன்றி ஆன்ம இறை ஐக்கிய நிலைகள், தருணங்கள் எல்லாம் இன்றும் எம்முருகப்பெருமான் திருத்தலத்தினுள்ளும் புறமும், மேலும் கீழும், அட்டதிக்குகளிலும் நிறைந்தே உள்ளன.

ஒவ்வொரு கோயிலும் மூர்த்தி, தல, விருட்ச, தீர்த்த மகிமைகளுடயவை. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலும் அத்தகையதே. இருப்பினும் எமது குழந்தைவேல் சுவாமிகளும் குருபரம்பரையினருமாகிய பல சித்தர்களுள் கடையிற்சுவாமிகள், செல்லப்பசுவாமிகள், சிவயோகசுவாமிகள் என்னும் அரிய சித்தர்கள், சீவன் முக்தர்கள் இருந்தும், நடந்தும் உணர்விழந்தும் உல்லாசமாக கந்தனிடம் உடலால், மனதால், ஆவியால் பூரண சரணாகதியடைந்து சித்தம் கந்தனிடம் லயிக்க பிறருக்குப் பித்தனைப் போல் காட்சியளித்த திருத்தலம் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். அச்சித்தர்கள் பரம்பரையில் சிவயோகசுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் என்னும் குருவால் ஆட்கொள்ளப்பட்டு சீடராகிய புனித தலம் நல்லூராகும்.

நல்லைக்கந்தன் பதியின் உள்ளும், புறமும் கோயில் வீதியும், தேரடியும் செல்லப்பரும், யோகரும் பல ஞான விளையாடல்களினை புரிந்த இடமாகும். சிவயோக சுவாமிகள் நாளாந்தம் இவ்வனுபவங்களை பக்தியுடன் பாடிய, எழுதிய பாடல்கள் நற்சிந்தனை பாடல்களாக இன்று எமக்கு அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொக்கிஷமாக கிடைத்துள்ளது. இஞ்ஞான நூலில் பல்வேறு சிறப்பம்சங்கள், தத்துவங் கள் செறிந்துள்ளன. இக்கட்டுரையின் வரை யறையையும், இம்மலரின் நோக்கத்தையும் கருத்திற்கொண்டு நல்லூர்க்கந்தன் கோயில், நல்லூரான், கோயில் சூழல் போன்ற பல் வேறு விடயங்கள் சிறிய உப தலையங்கங் களின் கீழ் சிவயோக சுவாமிகளின் நற்சிந்த னைப் பாடல் வரிகளின் ஊடாக இங்கே வழங்கப்படுகின்றன.

**நல்லூரின் வளம்**

திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் திருத்தலங்களின் மூர்த்தி ,தலம், தீர்த்தம், விருட்சம் பற்றிய மகிமைகளை எழிலுறப் பாடியுள்ளார். அங்ஙனமே சிவயோகரும், நல்லூரின் எழிலை மிகத்துல்லியமாக சித்தரித்துள்ளார். அவை பின்வருமாறு.

"செந்நெலும் கன்னலுஞ் செறியும் நல்லூரில்"
"பூம்பொழில் சூழ் வளஞ்சேர் நல்லூர்"
"பொன்னும் பொருளும் சந்தனமும்
பன்னீரும் செங்கமல மணமும்
தேனும் பாலும் நறுநெய்யும்
கதலி பலா வாழையும் தென்னையும் பனையும்
சூழ்ந்த ஊர்"

என சிவயோகசுவாமிகள் நல்லூரின் வளத்தை செழிப்பை அழகுற வர்ணிப்பார்.

நல்லூரானிடம் எப்படிச் செல்வது

"செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன்
வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம் நீ கொண்டு செல்லு" என்றும்
"பழம் பாக்கு வெற்றிலை பச்சரிசி தேங்காய்
இளநீர் தேனேந்தி"

எனவும் சிவயோகசுவாமிகள் நல்லூரானி டம் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண் டிய பொருட்களை வரிசைப்படுத்துவார்.

**நல்லூரானை எப்படி தொழுவது**

"காலை எழுந்து கை கால் முகம் கழுவி
கடி மலர் எடுத்து மாலை தொடுத்து கடவுளைப்
பூசனை செய்"
'நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்"
என்றும்
"ஈசனே நல்லூர் வாசனே, கதிரேசனே,
முருகேசனே
நேசமாய் உன் திருவாச மலரடி
நித்தம் மனச் சுத்தத்தோடு பக்தி செய்து பாடிப்
பணிந்தோம்"

என்று விபரமாக உடல், உள, ஆத்ம சுத்தி யுடன் அலங்காரக் கந்தனை ஆராதிக்கும் முறைகளைச் சுவாமி எடுத்தியிம்புகின்றார்.

**நல்லைப் பதிக்கு அரசே**

நல்லைப்பதிக்கு அரசனாய் துலங்கும் முருகனிடம்

"கல் போல் உள்ள மனம் கரைய வருள் தா
நல்லவழி காட்டி நாயேனே ஆண்டிடா
எல்லை இல்லா இன்பத்தே எனை இருத்தி
வைத்திடடா'

என சுவாமி கேட்பார்.

இந்த உடலானது அழிய முன்னர் உன்னை நான் காண வேண்டும் என இரங்கி கேட்பார்.

"நல்லையம்பதிக்கரசே என்றும் மறவா வரம்
எனக்கு வேண்டுமடா"

என்று நல்லூரானிடம் வரம் கேட்பார். நல் லூரான் வெகுகருணை வரதன். பக்தர்கள் விரதம் இருந்து பக்தியாய் கேட்கும் வரங் களை அள்ளிக்கொடுப்பான். "வறுமைப் பிணிக்கு மருந்தொண்டிருக்குது நல்லூரில்" என்பார். இடர்களை தீர்த்து பிணியகற்றி நல்லவாழ்வை கொடுக்கும் வள்ளல் நல்லூ ரான் என்பர் சிவயோகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்தர்களின் சித்தத்தான் நல்லூரான்**

இலங்கையில் வாழ்ந்த சித்தர்களுள் பலபேர் நல்லூரரை நாடினர். அங்கே தங்கி நிட்டை புரிந்தனர். திருவும், செல்வமும் மலிந்த நல்லூர் ஞானமும், பக்தியும், தியான மும் செழிக்கும் நல்லூராயிற்று. குழந்தை வேல் சுவாமிகள், கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் என்போர் கந்தன் முன்றலில் இருந்தும் கிடந்தும் ஆடியும், பாடியும், பக்தி பரவசத் தால் தம்மை மறந்தும், தியான சமாதி நிலை களில் லயித்துமிருந்த இடம் நல்லூர் ஆகும்.

**தேரடிச் செல்லப்பன்**

நல்லூர் தேரடி சிறப்பெய்தியது செல்லப்பர் அதனை வாசஸ் தலமாக்கியதும், சிவ யோகரை சீடனாக ஆட்கொண்டமையுமே ஆகும். இதனால் யோக சுவாமிகள் தேரடி யில் சென்று தரிசித்தால் எத்தனையோ வரங் கள் கிடைக்கும் என்கின்றார்.

"பாரறியா பயித்தியக்காரன்
தேரடிப் படியில் தினமும் இருப்பான்" என தன் குருவின் தத்துவம் ஒருவருக்கும் தெரியாது என்று சிவயோகர் விளம்புவார்.

**ஆசான் அருந்தவம் செய்த இடம்**

நல்லூரான் பதி அதிசயம் மிக்க தல மாகும். ஏனெனில்

"அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்"

என செல்லப்பர் தவமியற்றிய இடமாதலால் நல்லூர் அதிசயம் நிறைய பெற்ற தலமாயி ற்று என்கிறார் சுவாமி.

**நல்லூர் பற்றிய யோகரின் நேரடி வர்ணனை**

நல்லூர் கந்தன் கோவிலையும். சூழலை யும் பக்தர்களின் செயற்பாட்டையும், சூழ லையும், பூசைகளையும் கிளிக்கண்ணி மூலம் பின்வருமாறு சுவாமி பாடுகின்றார்.

வீண்பாவம் விட்டுடடி– கிளியே
விளங்கு நல்லூர் தெரியுதடி
சிந்தையிலே – வடிவேலைப் போற்றியடி
சேண்பொலியுந்திருவடியை
சிந்தையிலேபோற்றிடடி

என்று முருகன்பால் மனத்தைச் செலுத்தி, கோயிலை அண்மித்ததும்

"சங்கோசை கேட்குதடி
தாளமேளமுழங்குதடி
எங்கெங்கும்வெளிச்சமடி"

என நல்லூர் வீதியின் ஒளிமயமான காட்சியை சித்தரித்து சணபகமரத்தடிக்கு எம்மை இட்டுச் செல்கிறார்.

அங்கே "சாதுக்களின் கூட்டமடி" என்று விளம்புகிறார்.

"மண்போட்டால் மண்விழாதே
மனிதரெல்லாம்கூடி கொண்டார்"

எனும் வரிகளில் சுவாமியினுடைய காலத்தி லேயே பெருந்திரளான பக்தர்கள் பெருமள வில் கூடியிருக்கும் காட்சியை எடுத்துரைக் கின்றார்.

"ஆறிநடந்துவாடி – கிளியே
அதிசயங்கள் மெத்தவடி"

என்று கூறி அதிசயங்களை பின்வருமாறு கூறுகின்றார்.

"தேர்முட்டிபடி மேலே – கிளியே
செல்லப்பன் என்னும் சீமான்
ஆர்வமுடன் இருக்கிறாண்டி – கிளியே
அங்கு போவோம் வந்திடடி

என்று எம்மையெல்லாம் செல்லப்பா சுவாமி களின் பிரசன்னத்தை காணவைக்கின்றார்.

அங்கே செல்லப்பரை

"கிட்ட நெருங்கையிலே
கிடுகிடு என்று நடுங்குதடி
முட்டாளைப் போலே அவன்
முகமும் விளங்குதடி" என்கிறார் சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு படப்பிடிப்பு போன்று நல்லூர் சூழல் செல்லப்பரின் தேரடி என்றெல்லாம் எம்மை இட்டுச் சென்று உள்வீதிக்கு அழைக்கின்றார்.

"உள்வீதிக்கு போவமடி
வண்டி வண்டியாயிளநீர்
வந்து குவியுதடி
வகை வகையாய் பச்சரிசி
கற்பூரப் பெட்டிகளும்
கட்டுகட்டாய் கரும்புகளும்
பொற்பூவும் சந்தனமும்
பொலியுதடி வீதியெல்லாம்

என்று நல்லூரானுக்கு மக்கள் அளிக்கும் பொருட்களின் தொகையையும் வகையையும் அற்புதமாக படம் பிடித்துக் காட்டுவது போல் பாடுகின்றார்.

"மண்டலங்கள் நடுங்குதடி
மணியோசை கேட்குதடி"

நல்லூரான் மணியோசை வெகுதொலைவில் வசிப்பவர்களை துயிலெழுந்து துதிக்க வைப்பது.

"விந்தை சேர் மந்திரத்தையும் கதவுகளை மூடி அபிடேகம் ஆகுதலையும் எல்லோரும் ஏகமனதாகி நிற்கையிலே வேகமுடன் வேதியர்கள் கதவுகளை திறந்து அஞ்சடுக்கு தீபமுதல் அடுக்கடுக்காய் தீபமெல்லாம் அந்தணர்கள் காட்டுவதையும், சண்முகனை துதித்துக்கொள் என்று கூறுவதையும் நாம் பார்க்கின்றோம். இறுதியாக கோயிலை விட்டு வெளியேறுவோம் இருட்டுவதற்கு முன் எனவே

'அர்த்தசாம பூசைக்கு நிற்பமென்றால் மெத்த
நேரமாகுமடி"

என்று வீடு திரும்புவோம் என கூறி நல்லூர் கோயிலில் இருந்து எம்மை எமது வீடுகளிட்கு இட்டுச் செல்வது போல மிகவும் நிதர்சனமாக பக்தி ரசத்துடன் ஒரு மனதாக பாடும் யோகர் "ஆன்மா ஒரு போதும் அழியாதது" என்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றார்.

## நல்லூரானும் குருமணியும்

சிவயோக சுவாமிகள் குழந்தையாயிருந்து இளைஞராகி குரு கடாட்சம் பெற்று சுவாமிகளாகிய பல அதிசய சம்பவங்கள் யாவும் நல்லூரான் முன்றலில் நிகழ்ந்தவையே. செல்லப்பரின் சோதனைகளை வென்று சாதனைகள் பல புரிந்த பின் ஒரு நாள் நல்லூரில் செல்லப்பர் யோகரிடம்

"ஆரடா நீ"
"தேரடா உள்"

என்றார். அப்பொறி பற்றி எரிவதற்குள்

"எப்பவோ முடிந்த காரியம்", "ஒரு பொல்லாப்புமில்லை" "முழுதும் உண்மை" "சும்மா இரு" என ஞான உபதேசங்கள் செல்லப்பரால் வழங்கப்பட்ட இடமும் நல்லூரான் முன்னிலையிலேயே. இது ஒரு சாமானிய நிகழ்வல்ல. நல்லூரானுக்கு சிறப்பையும், புகழையும் அதிகரித்ததுடன் திருவருளின் இருப்பிடம் திகழொளிபவன் வதியும் நல்லூரே என்பது திடமாயிற்று.

சிவயோகரின் நற்சிந்தனைப் பாடல்கள் எல்லாம் அவரது குருவையும் அவரது திருவருளையும் நல்லூரானின் திவ்விய லீலைகளாக குறிப்பிடுகின்றார்.

"எல்லையில்லாக் கருணையுடைய
எம்பிரான் நல்லை நகரான்
இல்லையுன்டென்று இயம்பவொண்ணாதவன்
நல்லூரில் வந்தான்"

என்னும் பாடல் வரிகள் முருகனே தன் குருவாக வந்தவன் என வியந்து பின்வருமாறு கூறுகின்றார்.

"எல்லாவுலகமுமான பரம்பொருள்
நல்லூரில் வந்தான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் அடிகளினூடாக முருகனாகிய பரம்பொருள் நல்லூரில் எழுந்தருளியிருப்பது போல் செல்லப்பன் என்னும் பெயர் கொண்ட தன் குருவையும் பரம்பொருளே குருவாக வந்து தம்மையாண்டவன் என்று ஞான நிலையில் விளம்புகின்றார்.

நல்லூரையும் நல்லூரானையும் ஞான, மோன நிலையில், உள்ளும், புறமும், அண் மையிலும், சேய்மையிலும், அண்டத்திலும், வெட்டவெளியிலும், அருவாயும், உருவா யும், அருவுருவாயும் தரிசித்தார் சிவயோக சுவாமிகள்.

'வண்டுகள் பூவை கிண்டித் தேனை உண்டு
ஒன்றுமறியாது கிடப்பது போல்'

நல்லூரான் என்னும் பூவை பக்தர்கள் ஆகிய நாம் அணுகி அதில் இருந்து ஆனந்த மாகிய தேனாமிர்தமாகிய அக்கந்தனும் யாமும் ஒன்றற நிற்கும் பேரானந்தத்தில் திழைப்போமாக.

## வந்தருள் செய்வாய் நல்லை வடிவேலவனே!

**பல்லவி**

கந்தனே கடம்பனே கார்மயில் வாகனனே! முருகனே!!
உந்தன் கழல் பணிந்தோம் வந்தெம் வினை தீருமையா!
- கந்தனே கடம்பனே

**அநுபல்லவி**

சிந்தனையிலினித்திடும் நல்லூர் சிங்கார வேலவனே! குகனே!!
வந்தனை செய்தோம் வரமருள வேண்டும் சிவனார் திருமகனே!
- கந்தனே கடம்பனே

**சரணம்**

பந்த வினை நீக்கியே எங்களது பாவங்கள் போக்கியே - ஓடி
வந்தருள் செய்வாய் நல்லை வடிவேலவனே! வள்ளி மணாளனே!!
எந்தனது வாழ்வில் ஏற்றங்கள் செய்து வாழ்வளித்தவனே!
சந்ததமும் உன் நாமம் சாற்றியே பதம் பணிந்தோம் வா! வா!!
- கந்தனே கடம்பனே

தொல்லை வினை தீர்க்கும் தூயவனே தெய்வயானை லோலனே!
நல்லைப் பதியுறையும் நாயகனே நமக்கருள்புரிய வேண்டும்
முல்லைச் சிரிப்புடைய வள்ளியை வேட்டவனே வடிவேலனே!
கல்லைக் கனியாக்கும் கவின்மிகு காட்சிதர வா வா! முருகா!!
- கந்தனே கடம்பனே

**செந்தமிழ்ச்சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்ச்சிப் பாதையில் அடிகளாரும் ஆறுமுக நாவலர் பெருமானும்

**மகாதேவ ஜெயராமசர்மா**
தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், அவுஸ்ரேலியா

வைரமும் முத்தும் வாய்த்துவிட்டால் வாழ்வில் பெருமகிழ்ச்சி அல்லவா ! வடக்கில் வைரமாய் நாவலர் பெருமானும் கிழக்கில் முத்தென சுவாமி விபுலானந்த அடிகளாரும் தமிழுலகில் ஒளிவிட்டுப் பிரகாசித்தார்கள். ஈழத்தில் இவர்கள் பிறந்தாலும் இன்பத் தமிழை இன்னுயிராய் எண்ணி தமது வாழ்வினையே அர்ப்பணித்தார்கள் என்பதால்தான் அன்று தொடக்கம் இன்றுவரை ஏற்றிப் போற்றப்படுகிறார்கள் எனலாம். தமிழ் வளர்ச்சிப் பாதையில் இருவர் வாழ்ந்த காலங்களும்வேறுபட்ட காலமாக இருந்த பொழுதும் - இருவரது சிந்தனைகளும் செயற்பாடுகளும் தமிழாகவே அமைந்திருந்தது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். இருவருமே இல்லறத்தைத் துறந்தாலும் நல்லநம் தமிழ்மொழியைத் துறக்கவில்லை என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். அல்லும் பகலும் தமிழ் பற்றிச் சிந்தித்தார்கள். தம் காலத்தில் தமிழுக்கு என்ன செய்தால் தகும் என்று சிந்தித்தார்கள். மற்றயவர் சிந்திப்பதைவிட வித்தியாசமாகச் சிந்தித்தார்கள். சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அவற்றுக்குச் செயல்வடிவமும் கொடுத்து நின்றார்கள். இப்பேரறிஞர்களை ஒப்பு நோக்கி இவர்களது ஆற்றல்கள் தமிழ் வளர்சிப் பாதையில் பயணித்த விதத்தினை ஆராய்வதே இங்கு முக்கிய நோக்காக அமைகிறது எனலாம்.

**பிறப்பும் சூழலும்**

இருவரது பிறப்பும் கோவிலை அண்டியே அமைகிறது. நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிற் சூழலில் நாவலர் பெருமான் பிறக்கிறார். கிழக்கிலங்கையில் காரை தீவில் கண்ணகை அம்மன் கோவிலின் அயலில் விபுலானந்த அடிகளார் பிறக்கிறார். இருபெரும் தமிழ் அறிஞர்களுமே இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கும் ஆலயங்கள் அருகிலேயே அந்தச் சூழலிலே பிறந்தார்கள் என்பது நோக்கத்தக்கதாகும். கருவிலே திருவினை இவர்கள் இருவரும் பெறுவதற்கு இவர்களது குடும்பங்கள் ஆலயச்சூழலில் வசித்தமையும் ஒரு முக்கிய காரணியாக இருந்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகிறதல்லவா? இருவருமே தமிழினை மூச்சாக்கி செயற்பட்ட வேளை இருவருக்கும் அடிநாதமாக ஆன்மீகம் அமைந்திருந்தது என்பது உற்று நோக்கத்தக்கதாகும். இவர்களின் தமிழ் பற்றிய நோக்கில் சமயமும் கலந்தே வந்திருக்கிறது என்பதையும் கண்டு கொள்ளலாம். இறை சிந்தனை இவர்களிடம் நிறைந்து காணப்பட்ட காரணத்தால் இவர்களின் பணிகள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. எல்லோருக்கும் பயனினையும் ஈய்ந்து நின்றது எனலாம். இவர்களின் பெற்றோர்கள் கடவுள் பக்தி நிறைந்தவர்களாய், ஆசாரசீலராய், சமூக மதிப்பு மிக்கவராய், கல்வி கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பெரு நாட்டமும், ஆற்றலும் மிக்கவர்களாய் விளங்கியமையும் இவர்களின் ஊக்கத்துக்கும், ஆக்கத்துக்கும் உரமாய் அமைந்தது என்றுகூட எடுத்துக் கொள்ளலாம். ஒருவரை உருவாக்குவதில் சூழலின் பங்கும் முக்கியத்துவம் பெறுகிறது. மொழி பற்றியும், சமயம் பற்றியும், சமூகம் பற்றியும், ஆராய்ச்சி பற்றியும், சிந்திக்கும் திறனை இவர்கள் இருவரது குடும்பச் சூழல் ஏற்படுத்திக் கொடுத்தே இருக்கிறது. நல்ல குடும்பம், நல்ல சூழல், நல்ல முறையில் அடிகளாரையும் நாவலர் பெருமானையும் உருவாக்கி எமக்கு முத்தாயும் வைரமாயும் கொடுத்திருக்கிறது.

1822 இல் நாவலர் பெருமான் பிறக்கின்றார். அவர் பிறந்து எழுபது ஆண்டுகளின் பின்னர்தான் அதாவது 1892 இல் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறக்கின்றார். நாவலர் பெருமான் 57 வருடத்துடனும் அடிகளார் 55 வருடத்துடனும் இவ்வுலகை விட்டுச் சென்று விடுகின்றனர். இருவருமே அரை நூற்றாண்டு காலம் அன்னைத் தமிழை அரவணைத்து ஆராய்ச்சி செய்து தமிழ் வளர்ச்சிப் பாதையில் பயணித்திருக்கிறார்கள்.

**கல்விப் பாதை**

தாய் மொழியில்தான் ஒரு பிள்ளை தனது கல்வியைத் தொடங்க வேண்டும். அப்பொழுதுதான் அதன் ஆற்றல்கள் விருத்தி அடையும் என்று கல்வி உளவியல் அறிஞர்கள் அறிவுறுத்துகிறார்கள். அதன் வழியில் அடிகளாரும் நாவலர் பெருமானும் ஆரம்பத்தில் தாய்மொழிக் கல்வியினைப் பெற்றுக் கொள்ளுகின்றனர். நாவலர் பெருமானின் தமிழ் ஆர்வத்துக்கு அவரது குடும்பமே காரணமாகிறது. அவரின் தந்தையார் நல்ல தமிழ்ப் புலமை மிக்கவராய் இருந்திருக்கிறார். ஐந்து வயதில் வித்தியாரம்பம் செய்யப்பட்டு நல்லூர் சுப்பிரமணிய ஆசிரியரிடமும், சரவணமுத்துப் புலவரிடமும், சேனாதிராய முதலியாரிடமும் நாவலர் பெருமானின் ஆரம்பக்கல்வி தாய்மொழியில் மிகவும் சிறப்பாக ஊன்றப்படுகிறது. இவையாவுமே திண்ணைப் பள்ளி முறையிலேயே அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அடிகளாரும் தமிழையே ஆரம்பக் கல்வி ஆக்குகிறார். வித்தியாரம்பம் செய்யப்பட்டு கிராமப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு தமிழிலே கல்வியைக் கற்கின்றார். நாவலர் கால திண்ணைப் பள்ளிக்கூடம் அடிகளார் காலத்தில் கிராமப் பாடசாலை ஆகிறது. குஞ்சித்தம்பி ஆசிரியர் அடிகளாருக்கு எழுத்தறிவித்த இறைவனாகின்றார். அடிகளாரின் தந்தையார் தமிழ் ஆர்வமும் கற்றலில் நாட்டமும் உடையவராய் இருந்தமையால் தமது பிள்ளைக்கு வீட்டிலும் தமிழ் இலக்கண, இலக்கியங்களை ஆசிரியர்களைக் கொண்டு சொல்லிக் கொடுக்கின்றார். வடக்கின் வைரமும் கிழக்கின் முத்தும் இளமையில் தமிழில் கற்று நீதி நூல்களையும், இலக்கிய, இலக்கணங்களையும் பிஞ்சு மனத்தில் இருத்திக் கொள்ளுகிறார்கள். பிஞ்சுமனத்தில் ஊன்றப்பட்ட தமிழ் வித்து பின்னர் தமிழ் வளர்ச்சிப் பாதைக்கே பெரு நிழலாய் ஆறுதலாய் அமையப் போகிறது என்பதை அடிகளாரும் நினைத்திருக்க மாட்டார். ஆறுமுக நாவலர் பெருமானும் நினைத்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் கூட இருந்தவரோ, படிப்பித்த ஆசிரியரோ, படித்த நண்பர்களோ கூட நினைத்திருக்கவே மாட்டார்கள். ஆனால் இறைவன் மட்டும் நினைத்த படியால்தான் இப்பெருமக்கள் தமிழ் வளர்ச்சிப் பாதையில் தடம் பதித்திருக்கிறார்கள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார் பத்துவயதில் ஆங்கிலப் பாட சாலைக்குச் செல்கிறார். நாவலர் பெருமான் பனிரெண்டு வயதிலே ஆங்கிலம் படிக்கச் செல்லுகிறார். இருவரும் கிறிஸ்தவ சூழலில் தான் கல்வி பயிலுகிறார்கள். படிப்பில் இருவருமே ஆர்வம் மிக்கவர்களாகவே விளங்குகிறார்கள். சுவாமி அவர்களின் கல்வி கல்முனையில் ஆரம்பித்து மட்டக் களப்பு கிறீஸ்தவ பாடசாலைவரை தொடர்கிறது. நாவலர் பெருமான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்கிறார். நாவலர் பெருமானுக்கு பீற்றர் பேர்சிவல் பாதிரியார் வழிகாட்டியாக விளங்கியது போல அடிகளாருக்கு போணல் சுவாமிகள் உறுதுணையாய் அமைகின்றார்.

நாவலர் பெருமான் தமிழில் பாண்டித்தியம் பெற்றதோடு ஆங்கிலம், வடமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார். அடிகளாரும் நாவலர் பெருமான் போன்று ஆங்கிலம், வடமொழிப் புலமை பெற்றிருந்தார். அதற்கு மேலாகவும் சிங்களம், அரபு, கிரேக்கம், லத்தீன், ஆகிய மொழிகளிலும் ஆற்றல் மிக்கவராய் இருந்தமை நாவலர் பெருமானைவிட இவரை வேறு படுத்திக் காட்டக் கூடியாதாக இருக்கிறது எனலாம். அத்துடன் விஞ்ஞான, கணித அறிவிலும் அடிகளார் நாவலர் பெருமானைவிட முந்தி இருக்கிறார் என்பது நோக்கத் தக்கதாகும்.

அடிகளார் கொழும்பு ஆசிரிய கலாசாலைப் பயிற்சி, அரச பொறியியற் கல்லூரி விஞ்ஞான டிப்ளோமா பட்டம், மதுரைத் தமிழ்ச்சங்க பண்டிதர் பட்டம், இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான இளங்கலைப் பட்டம் ஆகிய கல்விப் பட்டங்களைத் தன தாக்கிக் கொள்ளுகிறார். நாவலர் பெருமான் இவ் வழிகளில் செல்லாது வரன்முறைத் தமிழ்க் கல்வியோடும் , அக்கால ஆங்கிலக் கல்வியோடும், வடமொழிக் கல்வியோடும் நின்றுவிடுகிறார். இருவருமே தாம் தாம் கற்ற பாடசாலைகளில் ஆசிரியராய் கடமை ஆற்றியிருக்கிறார்கள். இருவருமே தமது வழி காட்டிகளாய் அமைந்த கிறீஸ்தவ சுவாமி மாரின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்களாயும் இருந்திருக்கிறார்கள். இருவருமே மொழியியலில் மிகுந்த நாட்டமும், திறனுமுடையவராய் விளங்கி இருக்கிறார்கள் என்பது மிகவும் நோக்கத்தக்க விடயமாகும்.

நாவலர் பெருமான் வட இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுடன் தமிழால் தொடர்பு கொள்ளுகிறார்கள். அடிகளார் கிழக்கிலங்கையிலிருந்து வட இலங்கை வந்து அங்கு பாடசாலை ஆசிரியராய், அதிபராய் இருந்த பின்னர் தமிழ் நாட்டுடன் சங்கமம் ஆகிறார். அடிகளாரின் கல்விப் பயணத்தில், தமிழ்ப் பயணத்தில் வட இலங்கை நல்லதொரு தாக்கத்துக்கு வழிவகுத்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். அடிகளார் வடஇலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாசம் செய்த காலத்தில்தான் அவர் இலண்டன் பட்டப் படிப்பை நிறைவு செய்து விஞ்ஞானப் பட்டதாரியாகிறார். அதுமட்டுமல்ல ஆரிய திராவிடபாஷா சங்கத்துடனும் நெருக்கமாகிறார். பல சைவத் தமிழ் அறிஞர்களது நட்பினையும் பெற்றுக் கொள்ளுகின்றார். கிழக்கின் முத்து வடக்கின் வைரம் ஒளிவீசிய இடத்துக்கு வந்ததன் விளைவாக வைரத்தின் வீரியமும் முத்துடன் இணைந்து முத்தமிழின் வித்தகராய் முதல் தமிழ் பேராசிரியாய் அடிகளாரை உலகம் பார்த்து வியந்திடச் செய்தது என்றுகூட எடுத்துக்கொள்ள முடிகிறதல்லவா

**சமூக நிலைப்பாடும் தமிழ்ப் பணிகளும்**

நாவலர் பெருமானும் அடிகளாரும் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் அன்னியர்கள் எமது நாட்டினை ஆட்சிபுரிந்த காலமாகும். அன்னிய மதமும் அவர்களின் எண்ணங்களும் அரங்கேறிய காலமாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், தொடர்ந்து ஆங்கிலேயர் என்று அன்னியர் கள் இந்தியாவையும் இலங்கையையும் தம் வசம் வைத்திருந்த காலமாகும். இவர்களின் ஆட்சியில் சுதேசிய மதங்களும், சுதேசிய மொழிகளும், சுதேச பண்பாடுகளும் எள்ளி நகையாடப்படும் நிலை காணப்பட்டதெனலாம். அன்னிய மாயைதனில் அநேகர் சிக்குண்டு அவதிக்கு ஆளான காலமாகவும் இக்காலம் அமைந்திருந்தது என்பது முக்கியமாகும்.

சமூகத்தில் வாழ்கின்றவர்கள் இருப்பதை அனுசரித்து வாழ்கின்றவர்கள் ஒருவகை. எதையுமே பார்க்காது புறந்தள்ளி வைத்து விட்டு வாழுகின்றவர்கள் ஒருவகையினர். ஆனால் சமூகத்தில் வேண்டாதவற்றை எதிர்த்து தமக்குச் சரியெனப்பட்டதற்காக முன்னேவந்து எதிர்த்துச் செயற்படுவவர்கள் ஒரு வகையினர். இதில் மூன்றாவது நிலை யில்தான் நாவலர் பெருமானும் அடிகளாரும் வருகிறார்கள் எனலாம். தமது மொழி பற்றிய சிந்தனையை, மொழியின் வளர்ச்சி பற்றிய சிந்தனையை, எப்படியெல்லாம் தமிழ் மொழியினைக் கொண்டு சிறப்பாக்கலாம் என்ற சிந்தனையை அக்காலச் சூழலே தீர்மானிக்க வைத்திருக்கிறது என்பது இங்கு யாவரும் மனமிருத்த வேண்டிய முக்கிய விடயம் எனலாம்.

நாவலர் வாழ்ந்த யாழ்ப்பாணச் சூழலில் ஆங்கிலக்கல்வியும் கிறீஸ்தவ மதமும் ஆட்சியாளரின் அரவணைப்பில் இருந்த காலமாகும். ஒரளவுக்கு வசதி படைத்தவர் கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பாட சாலைகளில் சேர்த்து ஆங்கிலத்தைப் படிக்கச் செய்து அரசாங்க உத்தியோகங்களில் அமரச் செய்தால் அதுவே பேரானந்தம் என்று எண்ணி இருந்த காலமாகும். இதனால் தாங்கள் சார்ந்த சமயத்தையோ தங்கள் தாய் மொழியினையோ எண்ணிப் பாரா நிலையே அங்கு காணப்பட்டது. அதேவேளை பெரும்பாலான பாமர மக்கள் கிராமப் புறத்திலும், நாட்டுநிலை விளங்காத வராயும் கல்வி அறிவு குறைந்தவராயும் காணப்பட்டார்கள். இந்த நிலையினை ஆளவந்த அன்னியர் தமக்குச் சாதகமாக்கி - இலவச சலுகைகளை அவர்களுக்குக் காட்டி அவர்களைச் சுயமாகச் சிந்திக்கவிடாமல் செய்யும் முயற்சியில் அல்லும் பகலும் அமைப்பாக முனைப்புடன் செயற்பட்டார் கள். இதனைப் பார்த்த நாவலர் பெருமான் - எங்களின் பாரம்பரியத்தைக் காப்பாற்ற - அந்தக் காலத்துக்கு எந்த வழி உகந்ததோ அதனை மனத்திருத்தி தனது தமிழ் வளர்ச் சிப் பாதையினை வகுத்துக் கொண்டார்.

நாவலர் பெருமானின் வழியானது சைவ சமயம் வழிசார்ந்து தமிழ் வளர்ப்பதாக அமைவதை அவரின் ஒவ்வொரு நடவடிக் கையிலும் கண்டு கொள்ளமுடிகிறது என்று அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சைவ சமயத்தின் குரவராக நாவலர் பெருமான் போற்றப்படுகிறார். தமிழும் சைவமு நாவலர் பெருமானின் இருகண்கள் என்று அறிஞர் கள் விதந்து போற்றுவார்கள். “நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்- சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே” என்னும் வாக்கு நாவலரின் பணிக்கு நல்ல ஒரு சான்றாகி நிற்கிறதல்லவா! கந்தபுராணம், பெரியபுரா ணம், திருவிளையாடற்புராணம், இவற்றையே அவர் கையில் எடுக்கிறார். இவற்றுக்கு வசனமாய் தமிழில் உரை எழுதுகிறார். சைவ வினாவிடையை தமிழிலே எழுதுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். சைவப் பாடசாலைகள் நிறுவ முயலுகி றார். கோவில்களில் புராண விரிவுரைகள் ஆற்றுகிறார். புராணங்களுக்குப் பயன் சொல்லும் முறையினைப் பரவிடச் செய்கி றார். புராணத்துக்குப் பயன் சொல்லும் பொழு தெல்லாம் தமிழ் இலக்கியங்கள் இலக்கணங் கள் யாவும் அவற்றின் ஊடாக யாவரிடமும் போய்ச் சேரச் செய்து நின்றார்.

1849 ஆம் ஆண்டு ஆறுமுகம் என்னும் பெயர் கொண்டவர் தமிழ்நாடு செல்லுகிறார். திருவாவடுதுறை ஆதீனத்தில் உரை ஆற்று கிறார். அவரின் நாவன்மை யாவராலும் போற்றப்படுகிறது. ஆறுமுகமாய் இருந்தவர் அன்று தொடக்கம் "ஆறுமுக நாவலர்" ஆகி தமிழுலகு ஏற்றி நிற்கும் பெருமைக்கு உரிய வராகி விடுகிறார். சைவத் தமிழ் நூல்களை அச்சிடுவதற்கு அச்சு இயந்திரம் வாங்கும் நோக்கத்துடன் தமிழ் நாடு சென்றவர்" நாவலர்" பட்டத்துடன் இலங்கை வருகிறார். தான் தேர்ந்தெடுத்த சைவத் தமிழ் நூல் களையும், தமிழ் இலக்கிய, இலக்கண நூல் களையும் அச்சிட்டு வெளியிட நாவலர் எடுத்த முயற்சி அவரின் தமிழ் வளர்ச்சிப் பாதையில் மிகவும் முக்கிய அம்சமென்றே கருதலாம். சிதம்பரத்தில் அச்சுக்கூடம் நிறுவி பல நூல் களை வெளிக்கொணர்ந்தார், அத்தோடு நில்லாமல் யாழ்ப்பாணம் வண்ணார் பண் ணையிலும் அச்சுக்கூடத்தை ஆரம்பித்து தமிழ் சைவநூல்களையும், மாணவர்கள் படிப்பதற்கான பாலபாடப் புத்தகத்தையும், பெரியபுராண, கந்தபுராண, திருவிளை யாடற் புராண வசன நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். தமிழ் ஏடுகள் பலவற்றைப் பரிசோதித்து எழுத்துப் பிழைகள் இல்லாமல் பழந்தமிழ் நூல்களை நாவலர்பெருமான் அச்சுவாகனமேற்றி அனைவரும் பயன்பெறு வதற்கு பெருமுயற்சிகள் செய்திருக்கிறார்.

அகத்தியர் அருளிய தேவாரத்திரட்டு நூல் தொடக்கம் விநாயககவசம் நூல் வரை நாவலரின் கையூடாக எழுதியும் அச்சாகியும் வந்தன எனும் வகையில் அறுபது நூல்க ளைக் காணமுடிகிறது. நன்னூல் விருத்தி உரை, காண்டிகை உரை, இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, இலக்க ணம் படிப்பார்க்கு என்றுமே கைகொடுக்கும் நாவலர் பெருமானின் நற்கொடை எனலாம். சாதாரண மக்களும் விளங்கும் வகையில் தமிழ் உரைநடையினை கையாண்டு வெற்றிகண்டவர் நாவலர் பெருமான் எனலாம். இதனால்தான் "வசனநடை கைவந்த வல் லாளர்" என்று இன்றும் போற்றப்படுகின்றார்.

பன்மொழி அறிவாளியான நாவலர்பெரு மான் தமிழ் வளர்ச்சிப் பாதையில் தனக் கென ஒரு வழியினை வகுத்துக் கொண் டார். ஏட்டிலிருந்த பழந்தமிழ் இலக்கிய, இலக்கண, சமயம் சார்ந்த நூல்களைக் கண்டெடுத்து அவற்றை யாவரும் படித்துப் பயன் அடையும் வண்ணம் காலம் கால மாய் இருக்கும்படி அச்சுவாகனம் ஏற்றி புத்தகநிலைக்குக் கொண்டுவந்தார். படிப்ப வர்கள் ஐயம் இன்றி படிப்பதற்கு அரிய தெளி வான விளக்க உரைகளையும் அந்தப் புத்த கங்களில் இடம் பெறச் செய்தார். எழுத்துப் பிழை என்னும் அரக்கனைத் தேடித் தேடி இல்லாமலேயே தனது பதிப்புகளை வெளிக் கொணர்ந்தார். பாடசாலைகளை நிறுவி நல்லதோர் பாடத்திட்டத்தை தயாரித்து யாவ ரும் கல்வி அறிவு பெறவேண்டும் என்று தன் வாழ்நாள் முழுவதும் ஓயாது உழைத்து நின்றார். எழுத்தாலும், பேச்சாலும், தமிழ் வளர என்னவெல்லாம் தனது ஆற்றலுக்குச் செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் நாவ லர் பெருமான் செய்திருக்கிறார் என்பது உறுதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனைப் போற்றிப் பாடிய அருணகிரிநாதர்

**சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**
திட்டமிடல் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

15ஆம் நூற்றாண்டில் திருவண்ணா மலையில் தோற்றம் பெற்றார் அருணகிரி நாதர். பெற்றோர் தவப்பயனால் இவருக்கு முன்னர் ஆதிஅம்மை எனும் அக்காவும் அதற்கு பின்னர் இறை வழிபாட்டினால் பெற்றோர் ஆண்குழந்தை வேண்டுமென தவமிருந்து அருணகிரிநாதர் தோற்றம் பெற்றார். பெற்றோர் இளவயதில் காலமாகி விட அக்காவுடன் வாழ்ந்து வந்தார். இள வயதில் இறை வழிபாட்டில் நாட்டம் கொண்டு ஆலய வழிபாடு, பக்திப்பாடல்க ளைப் பாடி வருவது வழமையாக இருந்தது. இளமையில் வறுமை என்பது கொடுமை யாக இருந்தது. இதனால் வாழ்க்கையில் வெறுப்புற்றவராகத் திரிந்தார். இதனால் தவறான வழிகளில் சென்று பல விதமான நோய்களிற்கும் ஆளானார். இருந்த பொருட் களும் இல்லாமல் போய்விட்டது. நோயின் துன்பம் ஒருபுறம், தனது அக்காவை மனம் நோக வைத்தது மறுபுறமாகவும் மனதைத் துன்பமடையச் செய்தது. இவ்வாறான நிலையில் தான் ஏன் வாழ வேண்டுமென நினைத்தார். தனது நோயினால் தன்னை எல்லோரும் வெறுக்கிறார்களே என்று தன்னை வெறுத்தார்.

திருவண்ணாமலையில் அருணை வடகோபுரத்தில் ஏறி நின்று குதித்தார். குதிக் கும்போது முதியவர் வடிவில் நின்ற முருகன் அருணகிரிநாதரைக் கைகளில் ஏந்திக் காப்பாற்றினார். முருகனருளால் அவருக் கிருந்த நோயும் நீங்கப் பெற்றார். முருகனின் அருளை வியந்து முருகனை வணங்கி னார். முருகன், பக்திப்பாடல்களைப் பாடுவா யாக எனக்கூறி "முத்தைத் தரு" என அடியை எடுத்துக் கொடுத்தார். பல துன்பங்களையும் தாங்க முடியாமல் கோபுரத்தில் ஏறிக் குதித்து உயிரை விட நினைத்த தன்னைக் காப் பாற்றி தனக்கு உபதேசம் செய்த முருகனைப் போற்றிப் பாடுவதற்கு அருணகிரிநாதர் தொடங்கினார். திருவண்ணாமலையில் "முத்தைத்தரு பத்தித் திருநகை" என முரு கன் அடியெடுத்துக் கொடுத்ததையே முதலடி யாகக் கொண்டு திருப்புகழைப் பாடினார். அவர் வணங்கிய ஆலயம் வேதபுரீஸ்வரர் ஆலயமாகும்.

தென்னிந்தியாவில் பல ஆலயங்கள் மீது 16000 பாடல்கள் வரையில் பாடியுள்ளதாக வும் தற்போது 2000 பாடல்களிற்குக் குறை வாகவே கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகி றது.

## அருணகிரிநாதர் பாடிய முதலாவது திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபரன் எனவோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக்கணை தொடு
ஒற்றைக்கிரிமத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாக

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே

திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, வேல் விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திரு எழுக்கூற்றிருக்கை என்பன இவர் பாடிய பாடல்களாகும். இவற்றுள் தேவாரம், திரு வாசகம், திருமந்திரத்திற்குச் சமமானவை யாகத் திருப்புகழ், திருவகுப்பு, கந்தரலங் காரம், கந்தரனுபூதி, ஆகிய பாடல்கள் காணப்படுகின்றன.

திருப்புகழ் சந்தச் சிறப்புப் பெற்ற கவிதைகளாக விளங்குகின்றன. சிறந்த ஓசைநயமுடையவை; சிறந்த வர்ணனை களுடையவை. ஒவ்வொரு பாடல்களிலும் உலகியல், தனது நிலை, ஏக்கம், எதிர் பார்ப்பு, தான் பெற்ற வரங்கள் பற்றியும், பின்னர் இறைவன் புகழ், கருணை, அருள், ஆற்றல், பெருமை பற்றியும் பாடியுள்ளார். முருகனுக்குரிய பக்திப் பாடல்களாகவும் சிறந்த தமிழ் இலக்கிய நூலாகவும் திருப்பு கழ் விளங்குகிறது. முருகன் புகழை உயர்த் திப் பாடி உலகிற்குக் காட்டிய பரமகுருநாதர் அருணகிரிநாதர் வேதத்திலுள்ள தத்துவக் கருத்துக்களும், ஆகமங்களிலுள்ள அரும் பெருங் கருத்துக்களும், புராணங்களிலுள்ள அறநெறிகளும், இசைத்துறை தாளக் கதி களும் திருப்புகழ் பாடல்களில் நிறைந்து காணப்படுகின்றன.

முருகனைப் போற்றி திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் பாடல்களில் முருகனு டன் சிவபெருமான், உமாதேவியார், பிள் ளையார், திருமால் ஆகிய தெய்வங்களை யும் இணைத்துப்பாடியுள்ளார். அவரது பாடல்களில் அறுவகைச் சமயக் கருத்துக் கள் வருவதைக் காண முடிகிறது.

சங்கமருவிய காலத்திலிருந்து முருக வழிபாட்டு முறை, முருகனைப்பற்றிய பாடல் கள், இலக்கியங்களின் ஊடாக வெளிப் படுத்தப்படுகின்றன. பல்லவர், சோழர் காலங்களில் தேவார திருவாசகங்களினூ டாகவும், விஜயநகர நாயக்கர் காலத்தினூ டாகவும், அருணகிரிநாதரின் பாடல்களினூ டாகவும், முருக வழிபாடு சமயக்கருத்துக் கள், வழிபாட்டு முறைகள் என்பன எடுத்துக் கூறப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் காலத்தில் அவர்களது காலத்திற்கு முந்திய தேவார திருவாசகங்கள் திருமுறைகளாகத் தொடுக்கப்பட்ட பின்னர் தோற்றம் பெற்ற விஜயநகர நாயக்கர் காலத்துப் பாடல்கள், பிற்காலத் தோத்திரப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன கவிதை மரபில் பாடும் முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு பதிக அமைப்பு மாறி சந்தக் கவிதைகளாகத் திருப்புகழ் பாடப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.

தமிழ் இலக்கியங்கள் விஜயநகர நாயக்கர் காலத்தில் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டுள்ளன. அதாவது தமிழும் வடமொழியும் கலந்து வருவதை மணிப்பிரவாள நடை என்பர். அதற்கமையத் திருப்புகழ் பாடல்களிலும் தமிழ் மொழியுடன் வடமொழிச் சொற்களும் கலந்து வருவதைக் காணலாம். இது பக்திச்சுவை, சந்தச்சுவை, ஓசைச்சுவை என்பவற்றை மேம்படுத்தியுள்ளது.

இவர் வாழ்ந்த காலத்தில் அரசனாக இருந்த பிரபு தேவராய மன்னனுக்குக் கண் பார்வை இல்லாமல் போன சந்தர்ப்பத்தில் தேவலோகத்திற்குச் சென்று கற்பக மலரைக் கொண்டு வந்தால் கண்பார்வை நீங்குமெனக் கூறி அருணகிரிநாதர் கிளி வடிவில் சென்றதாகவும், பின்னர் திரும்பி வந்து அரசனிற்குக் கண்பார்வை கிடைத்ததாகவும் கூறப்படுகிறது. தனது உடலை வைத்துவிட்டுச் சித்தரான அருணகிரிநாதர் மீண்டும் வந்தபோது தனது உடல் இல்லாமல் போய்விட்டதால் கிளி வடிவில் இருந்ததாகவும், கிளி வடிவில் இருந்து கந்தர் அனுபூதிப் பாடல்களைப் பாடியதாகவும் கூறப்படுகிறது. கிளி வடிவிலிருந்தே அருணகிரிநாதர் இறைவனடி சேர்ந்தார் என்பதால் கிளிக் கோபுரத்தில் திருவண்ணாமலையில் தீபத்திருவிழா நடைபெறுகிறது.

கார்த்திகைத் தீபத் திருநாளில் திருவண்ணாமலையில் கிளிக் கோபுரத்துக்கு எதிரே இறைவன் காட்சிதருவதாகக் கூறப்படுகிறது. இது கோபுரத்தின் நான்காம் பிரகாரத்தில் உள்ளது. இந்தக் கோபுரத்தின் தென்முனையில் உள்ள கோபுரக் கலசங்களில் கிளி உருவம் காணப்படுகிறது. அருணகிரிநாதர் கிளி உருவில் முருகனிடம் சேர்ந்ததைக் குறிப்பதாக இக் கிளிக் கோபுரம் அமைந்துள்ளது. நல்லூர் முருகனாலயத்திலும் தெற்குக் கோபுர வாசலின் எதிரே அருணகிரிநாதர் வழிபாடு நடைபெறுகிறது.

இறைவனது சிறப்புக்களைப் பாடிய அருணகிரிநாதர் அறம், நீதி, மருத்துவம், உலகியல் கருத்துக்களையும் பாடியுள்ளார். பாடல்களில் முதல் பகுதி உலகியலைப் பற்றியும், பிற்பகுதி முருகனது சிறப்புக்களைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

இந்தியாவில் ஆறுபடை வீடுகளையும் நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பாடியுள்ளார். அருணகிரிநாதரும் திருப்புகழ் பாடியபோது ஆறுபடை வீடுகளிலுமுள்ள முருகனைப் போற்றிப் பாடியுள்ளார். அவ்வாறு பாடிய அருணகிரிநாதர் இலங்கையிலும் கதிர்காமம், நல்லூர், திருகோணமலை ஆகிய தலங்கள் மீதும் திருப்புகழ் பாடியுள்ளார்.

நல்லூர் முருகன் மீது பாடிய திருப்புகழ் பாடலொன்று,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணத்து நல்லூர் கொழிப்பு**

தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன
தாத்தா தான தத்தன தனதன தனதான

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலுங் கட்கமு மதன்விடு
போர்க்கார் நீடுங் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றார் நாளுங் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
புட்டா மாயங் கற்றமை விழியின ரமுதூறல்

வாய்த்தர் பேதஞ் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை யிடர்பட
வாட்டாய் வீசுங் கர்ப்புர மருகமத மகிலாரம்

மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்
வேப்பூ ணாகங் கெட்டன னுனதுமெய்
வாக்கான் ஞானம் பெற்றினி வழிபட வருள்வாயே

ஆத்ராண் மாறங் கச்சிக விகையுமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
யாட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி திரிலோகம்

ஆக்கா யாவும் பற்றிய பரிபுரை
நோக்கா டேதுஞ் செற்றவ டிருவிளை
யாட்டா லீசன் பக்கம துறைபவன் பெறுசேயே

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாய்பா ராயுஞ் சொற்றமி ழுருடரு முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வாழும் பொற்ப்ரபை நெடுமதில்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய
பெருமாளே. (33)

**கதிர்காமம் முருகன் மீதி பாடிய திருப்புகழ்**

திருமகளுலாவு மிருபுயமுராரி
திருமருகநாமப் பெருமாள்காண்,
செகதலமும் வானுமிகுதிபெறுபாடல்
தெரிதருளுமாரப் பெருமாள்காண்
மருவுமடியார்கள் மனதில்வினையாடு
மரகதமயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசியணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறுபடஅசுரர் மாள
அமர்பொருதவீரப் பெருமாள்காண்
அரவுபிறைவாரி விரவுசடைவேணி
அமலர்குருநாதப் பெருமாள்காண்
இருவினையிலாத தருவினைவிடாத
இமையவர்குலேசப் பெருமாள்காண்
இலகுசிலைவேடர் கொடியினதிபார
இருதனவிநோதப் பெருமாளே.

தனனதானதத்ததனதான
தனனதானதத்ததனதான

எதிரிலாதபத்தி தனைமேவி
இனியதாணினைப்பை யிருபோதும்
இதயவாரிதிக்கு ளுறவாகி
எனதுளேசிறக்க அருள்வாயெ
கதிரகாமவெற்பி லுறைவோனே
கனகமேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

தனனதானதத்ததனதான
தனனதானதத்ததனதான

கடகடகருவிகடபவகிரதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகதநககுலிபுணரிதகுணகுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத் தனஞ்சம் புயனேட
வடசிகரகிரிதவிடுபடநடமிடு
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழிதமரெனவழிபடுகிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியிருடியபிநவகுமரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவசமுடனததிதிரிதருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொருமரகதமயின்மிசைவடிவுள
வேழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழிபகரினுமதமொழிபகரினும்
ஏழைக் கிரங்கும் பெருமாளே.

தனனதானதத்ததனதான
தனனதானதத்ததனதான

சமரமுகவேலொத்தவிழிபுரளவாரிவட்ட
தனமசையவீதிக்குண் மயில்போலுலாசியே
சரியைகிரியையோகத்தின் வழிவருகிர் பாசுத்தர்
தமையுணரராகத்தின் வசமாகமேவியே
உனதடியுனாருக்குமனுமரணமாயைக்கு
முரியவர்மகாதத்தையெனுமாயமாதரார்
ஒளிரமளிபீடத்திலமடுபடுவேனுக்கு
முனதருகிர் பாசித்தமருள்கூர வேனுமே

காலத்துக்கேற்றவகையில் இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறு தோற்றம் பெறும் இலக்கியங்கள் அக்காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்றன. 14ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழும் அக்காலத்தில் பக்திநிலையை, சமயநிலையை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. பக்திப் பாடல்களாகவும், பஜனைப் பாடல்களாகவும் பாடக்கூடியதாக அமைந்துள்ளன. சித்தராக விளங்கிய அருணகிரிநாதர் மிகச் சிறந்த புலவராகவும் விளங்கியிருக்கிறார். அவர் பாடியபாடல்கள் இன்றுவரை எல்லோராலும் மனமுருகிப் பக்தியுடன் பாடப்படுகின்றன. ஆலயங்களில் இசை நிகழ்வுகளில் திருப்புகழ் பாடப்படுகிறது. திருப்புகழைப் பாடப்பாட மனமகிழ்ச்சியும் இறை பக்தியும் ஏற்படும். நாமும் திருப் புகழைப் பாடி இறைவனை வணங்குவோம். இறைவன் அருள் பெறுவோம்.

**உசாத்துணை நூல்கள்:-**


1. அருணகிரிநாதர் உமாபதிப்பகம் 2008
2. திருப்புகழ் விரிவுரை – கிருபானந்த வாரியார் 1985
3. கந்தரலங்காரம், கந்தரநுபூதி, ஈழத்துத் திருப்புகழ், யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம்– 1977.


## நவதள இராஜகோபுரம்

நல்லூர் ஷண்முகப் பெருமானின் நவதள இராஜகோபுரம் இரண்டாவது தடவையாக வர்ணம் பூசப்பட்டு திருக்குடமுழுக்கு 2017ம் ஆண்டு ஆடி மாதம் நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாத சுவாமிகள் அருளிய அமுதம்

**கலாபூஷணம்**
**சிவசுரபி இ.சரவணபவன்**
அராலியூர்

நினைக்க முத்தி அருளும் திருவருணை யில் (திருவண்ணாமலை) அருணகிரிநாத சுவாமிகள் முருகப் பெருமானிடம் "சும்மா இரு சொல்லற" என்ற மௌன மந்திரோப தேசம் பெற்று நிறுவிகற்ப சமாதியில் வீற்றி ருக்க, முருகன் மயில்மிசை தோன்றி, "உலகம் உய்யத் திருப்புகழ் பாடுதி" என்றருள்புரிய, அருணகிரியார் மறைகளாலும் சாற்றுதற் கரிய தேவரீரது புகழை "ஏடெழுதா முழு ஏழையாகிய" சிறியேன் எங்ஙனம் பாடுவேன் எனலும், "நாக்கை நீட்டு" என்று வேலின் நுனியால் "ஓம்" எனும் மந்திரத்தை எழுதி னார். செந்தமிழ்ப் பரமாசாரியனாம், செவ் வேட்பரமன், தனது "ஞானமூறு செங்கனி வாய்" மலர்ந்து கனத்த செந்தமிழால்" "முத் தைத் தரு" என்று அடியெடுத்துக் கொடுக்க, கடல் மடைதிறந்த வெள்ளம் போல் திருப் புகழைப் பாடினார். முருகவேள் "வயலூரு க்கு வா" என்றருள் புரிய அருணகிரியார் வயலூர் சென்று முருகன் அருளியபடி பொய்யாக் கணபதி சந்நிதியில் நின்று, "கைத்தல நிறைகனி" என்ற திருப்புகழைப் பாடியபின், முருகன் கனவிலும், நனவிலும் அடிக்கடி தரிசனந் தந்தருள் புரிந்ததும், தெய்வீகம் பொருந்திய திருத்தலமான படி யாலும் வயலூரையும் திருப்புகழில் இடையி டையே பாடினார். எல்லாத் தலங்களிலுள்ள முருகனையும், கதிர்காமக் கந்தனையும் பாடியுள்ளார். ஆகவே எத்தனையோ சிறப்புகள் மிக்க திருப்புகழை இடையுறாத அன்புடன் ஓதினால், இறைவன் நம் வயப் படுவான், திருப்புகழை ஓத ஆசைப்பட்டாலே போதும். எத்துணைப் பாவங்கள் புரிந்தாரே னும் பாவ நாசகனாகிய குமரக் கடவுள் தரி சனையுண்டாகு மேல், பாவங்கள் முழுதும் நீங்கித் தூயவராவார்.

"ஞானம் பெறலாம், நலம் பெறலாம், எந் நாளும் வானம் அரசாள் வரம் பெறலாம், மோன வீடு ஏறலாம், யானைக் கிளையான் திருப்புகழைக் கூறினார்க்காமே இக் கூற்று".

திருப்புகழைப் பாடினால் ஆறுமுகம் தோன்றும், அழகிய வேல் தோன்றும், அவன் ஏறு மயில் தோன்றும், எழில் தோன் றும், பக்தியோடு படிப்போர் எல்லார்க்கும் இவையாவும் நிச்சயம் கிடைக்கும்.

திருப்புகழின் சந்தத்திற்கு இணையான ஒன்று எந்த மொழி இலக்கியத்திலுமில்லை. சங்கத் தமிழின் தலைமைப் புலவனாம் குமரவேளைச் சந்தத் தமிழ் பாடி "திருப்புகழ்" ஆக்கியவர். நம் பிறவிப்பந்தம் களையவல்ல சந்தத் தமிழ்நூல் "திருப்புகழ்". பேரின்பப் பெரு வெள்ளம் அது. படிப்போரை உணர்ச்சி வெள்ளத்தில் திக்குமுக்காடச் செய்யும் தெய் வீகத் தேனே அருணகிரியின் இலக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ ஆயிரங் கோடி அலங் காரங்களுண்டு கந்தனுக்கு. ஆனால் கந்த ரலங்காரமே அலங்காரம். சொற்சுவையும், பொருட்சுவையும் இட்டளைந்த தேன் பாகாய் இருக்கும் வண்ணம் கட்டளைக் கலித்துறை யாக கவி விருந்து வைத்தார் அருணகிரி நாதர்.

"அடலருணைத்திருக் கோபுரத்தே அந்த வாயிலுக்கு வடவருகிற் சென்று கண்டு கொண்டேன்" எனக் கந்தப்பரமனை அடை யாளம் கண்டு ஆனந்தம் அடைவதாக அலங்காரம் ஆரம்பமாகிறது. ஆனைமுக னைச் சொல்லாமல் ஆரம்பிக்கலாமா? விநா யகனைக் காண வருகிறவர்கள் "தடபட" எனச் சத்தம் வருமாறு நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்கிறார்கள். அந்தக் குட்டை ஏற்றுக் கொள்வதோடு, அவர்கள் படைக்கும் இனிப் பான மோதகங்களையும் ஒருகை பார்க்கும் ஆனைமுகத்தான் தம்பி, சின்ன யானை யைக் கண்டு கொண்டேன் என்கிறார்.

குமரக் கடவுளின் குழந்தை வடிவம் பற் றிப் பாடும்போது, திருமாலின் கையிலுள்ள வலம்புரிச் சங்கின் ஓசை வானுலகச் சோலை யிலும், பொய்கைக் கரையிலும்தான் கேட்டது. ஆனால் முருகன் ஓடி, ஓடி ஆடும்பொழுது திருவரையிலுள்ள மணிகளின் கிண்கிணி ஓசையைப் பதினாலுலகங்களும் கேட்டன என்கிறார். கிருஷ்ணாவதாரத்தில் மண்ணில் தவழ்கிறான் அல்லவா திருமால்! எனவே "மண் கமழ் உந்தித்திருமால்" எனப்பாடி மகிழ்கிறார். கந்தரலங்காரத்தில் பிரமனை யும், யமனையும் வம்புக்கிழுக்கிறார். முரு கனின் முழு அழகையும் காண இரு கண்கள் எப்படிப் போதும்? எனக்கு "நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே" எனக் குறிப்பிடுகிறார். யமனுக்கு எச்சரிக்கை விடுக்கிறார். செந்தில் வேலனுக்குத் தொண்டு புரிவதால், தம்மிடம் ஞானச் சுடர் வாள் இருக் கிறது. "யமனே! கொஞ்சம் அருகே வந்து பார்" எனக் கூவுகிறார். தண்டாயுதமும், திரி சூலமும் கையை விட்டு நழுவி அருணகிரி நாதரின் கையில் உள்ள வாளுக்கு அஞ்சி யமன் ஓடுகிறானாம். "தேரணியிட்டுப் புர மெரித்தான் மகன் செங்கையில் வேல்" எனும் பாடலில் சூரனோடு போர் செய்த மாபெரும் போர்க்களக் காட்சியைக் கண் எதிரே நிறுத்தி விடுகிறார். "மொய்தார் அணி குழல் வள்ளியை வேட்டவன்" என்று கந் தனின் காதலை வெளிப்படுத்துகிறார். கந்தர லங்காரப் பாடல்களை மேலோட்டமாகப் படிக் கக் கூடாது. ஒரு முறைக்கிருமுறை படித்துப் பொருளுணர்ந்து சிந்தித்து அனுபவித்தல் வேண்டும். அப்பொழுது தான் கரும்பை யும், தேனையும் விட கந்தனின் திருநாமம் இனிப்பதைச் சுவைக்கலாம்.

உயிர்களுக்குப் பற்றுக் கோடாக விளங் கும் கந்தனோடு ஒன்றுபடுவது தான் கந்த ரனுபூதி. கூடுவிட்டு கூடுபாய்ந்து கிளிரூபத்தி லிருந்து அருணகிரிநாதரால் "கந்தரனுபூதி" பாடப்பட்டது. கந்தர் அனுபூதி தனித்த பெரு மையுடையது. கந்தப் பெருமானிடம் கலந் துறவாடுவதற்கு ஒரு பாலமாக, துணையாக வுள்ளது. சொற்பதங்களில் ஓர் அற்புதம். சிறிய பாடல்கள் ஒவ்வொன்றும் அனுபூதி யில் விளைந்த அருள் முத்து. ஆன்மீகப் பாரி ஜாதம். கந்தனின் அருள் முகத்தை மாந்திக் களித்த அருணகிரி, நாம் நீந்திக் களிக்கத் தந்த நீர் நிலை, அஷ்டமா சித்திகளை அருள வல்லது. "கந்தர் அனுபூதி பெற்றுக் கந்தர் அனுபூதி சொன்ன எந்தை அருணகிரி" என்கிறார் தாயுமானவர். கந்தர் அனுபூதி பெற்றுப் பாடியது மட்டுமன்று கந்தர் அனுபூதி எல்லாரும் பெறப் பாடியதாகும். மந்திரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் அனுபூதி "யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால்" வந்தது. இந்தப் பாடலை ஓத, ஓராயிரம் கலை உடனே வசமாகும்.

அந்திமக் காலத்திலே அழைத்துக் கொண்டு செல்ல காலன் வருவதற்கு முன்னாலேயே, பச்சை மயிலின் மீது வேலன் வர வேண்டும். "கார்மா மிசை காலன் வரிற் கலபத்து" காலனின் கைகளிலகப்படாது, வேலனின் திருவடிகளில் தஞ்சம் புக வேண்டும். எம லோகம் செல்லாது "ஸ்கந்த லோகம்" செல்ல வேண்டும். அல்லும் பகலும் நினைந்து, நினைந்து உருகி, உருகி "கந்தரனுபூதியை" யார் உபாசனை புரிகிறார்களோ அவர்களுக்கு ஸ்கந்தலோகப் பதவி கிடைக்கும். செந்தமிழ் மந்திர அனுபூதியில் நிறைவான பாடல், "உருவாய் அருவாய்". இந்தப் பாடலை ஓத இன்பநிலை தானே வந்தெய்தும், இறை வரும்! அருள்தரும்! நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந்துருக. தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர் செஞ்சொற் புனை மாலையே அருணகிரி சூட்டிய அனுபூதிமாலை. பரஞானத்தின் உச்சம் கந்தரனுபூதி.

இப்படி நமக்கெல்லாம் மந்திரம் சொன்ன அருணகிரிக்கு அறுமுகப் பரமன் ஒரு மந்திரம் சொன்னான் உபதேசமாக. "சும்மா இரு சொல்லற". செயலற்று, பேச்சற்று, இருத்தல். கையும் வாயும் அடங்க மனம் தானே அடங்கும். மனமற்ற நிலை சும்மா இருக்கும் நிலை. நான், தான் என்ற வேறுபாடு நீங்கி, மோன நிலை பெற்றால் சான்று ஆரும் அற்ற தனிவெளியில் முருகனோடு ஒன்றி இன்புறலாம். "சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்கின்றார் தாயுமானவர். ஆகவே மௌனமென்பதும், "சும்மா இரு" என்பதும் சுட்டிறந்த முதல்வனையுணரும் ஞானநிட்டை என்பது தெளிவு.

"ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமான்" என்று கொண்டாடப்படும் குமரக் கடவுளைப் பாடிப் பரவிய அருளாளர்களில் அருணகிரிநாதரை அறியாதவர் இலர். திருத்தல மகிமைக்காகத் திருப்புகழும், வடிவ வருணனையின் சொல் அலங்காரமாகக் கந்தர் அலங்காரமும், உபதேசமாலையாகக் கந்தர் அனுபூதியும் பாடிய அருணகிரிநாதரை முருகன் அடியார்கள் முப்போதும் போற்றி வணங்குவர்.

"ஆடும் பரிவேல் அணிசேவலெனப்
பாடும் பணியே பணியாயருள்வாய்"

என்கிறார்.

"பாளைக் குழல் வள்ளிபதம் பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே" வள்ளி நாச்சியாரைத் தேடி அருள் செய்தான் முருகன் என்பதைப் பாடுகிறார்.

"நாளென் செயும் வினைதான் என் செயும் எனை நாடிவந்த கோள் என் செயும் கொடுங் கூற்று என் செயும்"

எனக்கு முன்னால் உன்னுடைய இரு பாதங்களும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும் தோளும் கடம்பும் தோன்றினால் நாள், கோள், கிரகம், கொடிய காலன் என்ன செய்ய முடியும் என்கிறார்.

"சேல்பட்டழிந்தது செந்தூர் வயற் பொழில், தேங்கடம்பின் மால் பட்டழிந்தது பூங்கொடியார் மனம், மாமயிலோன்" அவன் கால் பட்டு தன் தலையிலே பிரமன் எழுதிய தலையெழுத்து அழிந்து விட்டது. முருகன் திருவடிச் சிறப்பைப் பாடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேந்தனைக் கந்தனைச், செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர் வேல் வேந்தனை செந்தமிழ் நூல் விரித்தோனை"

என்று தமிழைப் பரப்பிய தமிழ்த் தெய் வத்தை அலங்காரம் செய்கிறது கந்தரலங் காரம்.

"கொன்றைச் சடையர்க்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழாற் பகர்வோனே"

என்று பிரணவ மந்திரத்தை தமிழில் சொன்னதை அகமகிழ்ந்து பாடுகிறார்.

"பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

"கரு மேனி தாங்காமல் திருமேனி தாங்கி வந்த வள்ளலை"ப் போற்றித் திருப்புகழ் அமிர்தத்தினைப் பருகி "விதியையும் வென் றிடுவோம்". மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயையினின்றும், யான், எனது என்ற அகந்தையினின்றும் நம் மனதைக் கட்டுப்படுத்தி, செயலையும், பேச்சையும் குறைத்து, கந்தப் பெருமானைச் சிந்தையி லிருத்தப் பழகிக் கொண்டால் கந்தப் பெரு மானே நமக்குக் குருவாக இருப்பான். அக் குருபரனின் திருவருளும் நமக்குக் கிட்டும்.

அருணகிரிநாதர் அருவியெனப் பொழிந்த ஆறுமுகன் திருப்புகழை, சந்தம் முந்தும் செந்தமிழில் கந்தனைப் போற்றிய பேரின்பச் சுவையை, அருளமுதத்தினை, ஓதி உணர் ந்து, மகிழ்ந்து, துதித்து உமைபாலன் திருவ ருள் பெறுவோமாக.



## நல்லூர் ஷண்முகர் வாசல் இராஜகோபுரம்

- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான யந்திரம் 31.08.2010 (கார்த்திகைத் திருவிழா) அன்று காலை வேளை பிரதிஷ்டை செய்யப்பட்டது
- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான நவ கலசம் 25.07.2011 (கார்த்திகை தினம்) அன்று மாலை வேளை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.
- அதிகம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள ஸ்ரீ ஷண்முக இராஜ கோபுரம் ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஸ்வர்ண வாசல் தரிசனம் நவகலஷாபிஷேகம் 21.08.2011 ஞாயிறு (கார்த்திகை உற்சவ தினம்) காலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடும் பணியே பணியாய் அருள்வாய்!

கீர்த்தனா ஆறுமுகதாசன்
நுண்கலைப்பீடம்.
யாழ். பல்கலைக்கழகம்,

கிராமமும் கிராமியமும் சார்ந்த இடங்களில் பாடப்படும் இசைவடிவம் கிராமிய இசை அமைப்பாக உள்ளது. இவ்வாறாக ஓர் இசை அமைப்பு முறையில் ஒன்றாக தெம் மாங்குப் பாடல்கள் அமைகின்றன. அவை பொதுவாக பாடல் அமைப்பாகும். இவ்வா றான பாடல்கள் நெறிப்படுத்தப்படாத இசை வடிவமான பாடல் அமைப்பாகும். இவ்வா றான பாடல்கள் வாய்மொழி அமைப்புக் கொண்டவையாகக் காணப்படினும் அதிக மாற்றங்கள் உட்புகாமல் பேணப்பட்டு வருகின்றன. அடுத்து சிந்துப்பாவகைகளில் ஒன்றான வடிவமான காவடிச்சிந்து. உதார ணமாக "வள்ளிக்கணவன் பெயரை வழிப் போக்கன் சொன்னாலும்" என்னும் யோகர் சுவாமி பாடலும் "சென்னிக்குறநகர் வாசன் தமிழ் தோறும் அண்ணாமலை தாசன்" என்னும் பாடலையும் கூறலாம். முருகன் நாட்டியமாடுவதில் சிறந்தவர். இதனை அருணகிரிநாதர் "கனகசபை மேவும் எனது குருநாதன்" என்பன போன்ற பாடல்களில் சிதம்பரத்தில் நடனமாடுபவர் முருகப்பெரு மான் என வர்ணித்துள்ளார்.

முருகக் கடவுள் மீது எழுந்த பல வடிவங் களில் அருணகிரிநாதர் கந்தரனுபூதி, கந்தர் அலங்காரம், வேல்விருத்தம், மயில்விருத் தம், திருச்செந்தில் ஆண்டவர் திருவகுப்பு, திருப்புகழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் என்பனவற்றைப் பாடியுள்ளார். பூதி என்பது முக்தியையும், அனுபூதி என்பது அனுதினமும் இறைவனுடன் இணைந்தி ருத்தல் என்பதைக் கூறும். இதில் முதலாவது பாடலில்

"ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானைச் சகோதரனே" என்பதில்

இறைவனைப் பாடும் பணியே பணிகள் அனைத்திலும் உன்னதமான பணியாக அருணகிரிநாதர் கருதுகிறார். மேலும் திருப்புகழ்ப் பாடலான

"நாத விந்து கலாதி நமோ நம
வேத மந்திர ஸ்வரூபா நமோ நம
ஞான பண்டித ஸ்வாமி நமோ நம வெகு கோடி
நர்ம சம்பு குமாரா நமோ நம" என்னும்

பாடலில் கலைகள் எல்லாவற்றிற்கும் தீரனாய் விளங்குபவர் பழநிமலை முருகன் என்று கூறுவதோடு, ஓங்காரப் பொருளாக அமையும் விநாயகரின் அருளமுதத்தைப் பெறுவதற்குத் தடையாக உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அழித்து அனைத்திற்கும் ஆதாரமாகிய பிரணவத் தினை வெளிப்படுத்த முருகப்பெருமான் உதவுகின்றார்.

பிரம்மாவிடம் சென்று பிரணவத்தின் பொருள் என்ன என்று முருகன் கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மாவே அறியாத ரகசியம் அது. பிரண வம் என்பது அ+உ+ம் என்ற எழுத்துக் களின் சேர்க்கையே ஓம் ஆகின்றது. பிரம் மாவை விட வயது இளமையான விநாய கரே என்பதைச் சொல்வதற்கு அவரது மமதை தடுத்ததினால் அறியாமையின் வடிவமாகிய மமதையை நீக்கும் பொருட்டு ஓங்கிக் கொட்டினார்.

அமீபாவில் இருந்து பலவித பரிணாம வளர்ச்சி அடைந்து ஐந்து அறிவு உள்ள குரங்காக மாற்றம் கண்டு ஆறாவது அறிவு நிலைக்கு கிருஸ்ணரின் பரிணாம வளர்ச்சி யில் மனித வடிவம் காணப்படுகின்றது. மனித நிலையிலிருந்து யோகநிலை அடைந்தால் (7ஆவது அறிவு) தான் இறைவனுடன் தொடர்புடைய நிலை அறியலாம்.




மனித உடலில் மூன்று பிரதானமான நரம்புகள் உள்ளன.

1. மைய நரம்புத் தொகுதி
2. சுற்றயல் நரம்புத் தொகுதி
3. பரிவு நரம்பு — பரபரிவு நரம்பு

இவை அனைத்தும் எமது முள்ளந் தண்டில் உள்ளன. இவற்றை ஔவையார், போகர், அருணகிரிநாதர் போன்ற ஞானிகள் சுழு முனைநாடி, இடகலை, பிங்கலை என தமிழில் பெயர் குறித்துள்ளார்கள். எமது உடலில் குண்டலினி ஆனது எமக்குள் உள்ள எமது அன்னை. அன்னையின் வடி வமாக குண்டலினியும் (நாண்றெழு பாம்பு) தந்தை ஆகிய சிவமாக எம்முள் எமது ஆத் மாவும் விளங்குகின்றது. இடது கலையில் பைரவர் காளியின் சக்திகள் உள்ளன. இதனை விழிப்படையச் செய்யும் சக்தியாக விநாயகர் உள்ளார். பிங்கலை நாடியில் பிரம்மா சரஸ் வதியின் சக்திகள் உள்ளன. இதனை விழிப் படையச் செய்யும் கடவுளாக கார்த்திகேயர் உள்ளார். சுழுமுனை நாடியில் லக்ஷ்மி நாராயணன் சக்திகள் உள்ளன. இதனை விநாயகக் கடவுள் விளிப்படையச் செய்யும் சக்தியாக உள்ளார். இடகலை நாடி நினை வாற்றலுக்குப் பொறுப்பானது. பின்கலை நாடி ரயோகுணம் கொண்டது செயலாற்றலு க்கு பொறுப்பானது. சுழுமுனை நாடி நிகழ் காலத்துக்கு உரிய சாத்வீக குணம் கொண்டது.

பிறக்கும்போது இறைவனுடன் இணைந் திருந்த நாம் காலப்போக்கில் அகந்தை, மமதை, நிபந்தனைப்படுத்தல் போன்றன எமது சூக்ஷ்ம மண்டலத்தில் விருத்தி அடைந்ததின் காரணமாக இறைவனின் கட்டுப்பாட்டில் இருந்த நாம் மிகவும் மட்டுப் படுத்தப்பட்ட மூளையின் கட்டுப்பாட்டுக்குள் எம்மைத் தொலைத்து விடுகின்றோம். இந்த நிலையில் நாம் எந்தவித கல்விகளைக் கற்றுத் தேர்ந்தாலும் அவை அனைத்தும் ஏட்டுச் சரக்காய் போலவே அமைந்து விடு கின்றன. இதன் காரணமாக எம்முள் உண் மையான ஆத்ம அனுபவத்தினை உணரல் என்பது முற்று முழுதாக இழக்கப்பட்டு விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. இதிலிருந்து நீங்கி மீண்டும் உண் மையான ஆத்ம அனுபவத்தினைப் பெறுவ தற்கு நாமே நமக்கு குருவாதல் வேண்டும். இந்த நிலை எய்துவதற்கு எமது முக்கோண எலும்பினுள் (குயிலலகு எலும்பு) உறங்கிக் கொண்டிருக்கும் நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்தப்படுதல் வேண்டும். இது எல்லா வேளைகளிலும் சாத்தியமாதல் என்பது நிகழ்த்தப்பட வேண்டுமாயின் இசையை ஒரே கருவியாகப் பயன்படுத்தல் என்பதே ஒரே வழிாகும்.

இதனை அறிந்த காரணத்தினால் தான் ஞானிகளால் மட்டுமே இசைக்கப்பட வேண்டும். இதனை இந்த தந்திரத்தை அறியாதவர்கள் இசைத்தலோ, இசைப்பதை சாமான்யர்கள் கேட்கலுற்றலோ இந்த குண்டலினியானது அதன் மார்க்கமான சுழுமுனை நாடியிலி ருந்து நீங்கி தவறுதலாக இடகலை அல்லது பின்கலை பாதைகளில் செலுத்தப்பட்டு விடும். இதன் காரணத்தினால் உரு ஏறுதல், கலையாடுதல், கண்கட்டி வித்தை (Black Magic), குறளிவித்தை போன்ற வேளை களில் எமது மூளை அதன் சுயத்தை இழந்து துராத் மாக்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு விடும் கொடிய நோயாக மாறி விடுகின்றது. சமஸ்கிருதம் என்பது குண்டலினி எழுகை யில் செயற்பாடற்றவர்கள் (பிறப்பினால் பிரா மணரானவர்கள்) சொல்ல கேட்டால் மேற்படி விபரீதங்களுக்கு அடிப்படையான காரண மாகி விடுகின்றது. சமஸ்கிருதத்தின் உயிர் எழுத்துக்கள் பதினாறு. இவை எமது ஐந்தாவது சக்கரமாகிய விஷுத்தியில் உரு வாகும் பதினாறு நரம்புகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே இறை இணைப்பற்றவர்கள் இதனை கேட்டல் அல்லது நியாசம் செய்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் பொழுது இவர்களுக்கு காது மூக்கு தொண்டைகளில் பிரச்சினை ஏற்படுகின்றது. இதனால் ஏற்படுத்தப்பட்ட காது, மூக்கு, தொண்டை பிரச்சினைகளுக்கு மருத்துவ ரீதியில் பரிபூரணமான சிகிச்சைகள் இற்றை வரை கண்டறியப்படவில்லை. இதனா லேயே முருகக் கடவுள் மீதும் சமஸ்கிருத மொழியில் பாடல் வடிவங்களான சுப்ரம் மண்ஜ புஜங்க ஸ்தோத்ரம், சுப்ரமண்ய சோடஷநாமஸ் தோத்திரங்கள், ஷடாஸ்சர மாளிகா அட்ஸ்திரதோத்திரங்கள், சுப்ரமண் யத்ரிஸதி, சுப்ரமண்ய க்ருதயஸ்தோத்திரம், கராவலம்பாஸ்ரகம், ஸ்கந்தலஹரி, மார்க் கண்டேயர் செய்த சுப்ரமண்ய சகஸ்ரநாமம் போன்ற குமார தந்திர ரகசியங்கள் மிகவும் ரகசியமாகப் பேணப்பட்டன. ஆனால் தற் காலத்தில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சி யின் காரணமாகவும் பிறப்பினால் அந்தணர் குலத்தில் உதித்தவர்கள் தமது இறை இணைப்பினை முற்றுமுழுதாக இழந்து விட்டதன் காரணமாகவும் இவை சாமான் யர்கள் கையிலும், மந்திரவாதிகள் கையிலும் சிக்கி இயற்கைக்கு மாறான பல காலநிலைச் சீற்றங்கள், சிறார்களின் மனநிலையில் வெறித்தன்மையும் உருவாக ஏதுவாகி விட்டது. இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் உரிய ஞானம் இல்லாதவிடத்து இவற்றை முயற்சிப் பது என்பது விபரீதத்தை ஏற்படுத்தும். இருப் பினும் தமிழில் பாடப்பட்ட பாடல்கள் வெறு மனமே பக்தி ரசத்துடன் (இடகலை செயற் பாடுகளுடன்) மட்டும் தொடர்புடையதால் அது ஒருவிதமான ஆழ்மனதில் சில விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

சக்கரங்களை தூய்மை செய்வதற்கு ராகங்களுண்டு. அவை முறையே

மூலாதாரம் - சியாம்கல்யாண் (ஹம்சநாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்வாதிஸ்டானம் | - | யமன் (கல்யாணி) |
| நாபி | - | ஆபோகி |
| அனாகதம் | - | தர்பாரி, துர்க்கா |
| விஷூத்தி | - | ஆஹிர்பைரவி |
| அக்ஞா | - | சந்திரகௌஸ் |
| சகஸ்ராரம் | - | பைரவி |

ஸப்த ஸ்வரங்களும் ஒவ்வொரு ராகத்துடன் தொடர்புடையவை. தேவராயர் எழுதிய கவசங்கள் ஆறு உண்டு. பழநி கவசத்தில் தேவராயர்.

சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதி கர்ம வீர பத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமஸ் சக்கரம்
அருள் பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்

ஏக ரூபமாய் என்முன்னே நின்று என்று பாடி சித்தி அடையும் போது அவருக்கு ஏகா தசருத்ர அம்சமாக சண்முகநாதன் காட்சி கொடுத்ததாகக் கூறுகிறார். கந்தசஷ்டி கவசம் இசை வடிவில் பாடலுக்காக உருவாக்கப்பட வில்லை. இதை பிரயோகிப்பதற்காக துர்க்கைச் சித்தரால் கந்தசஷ்டி கவசத்தில் இடப் பட்ட பிரயோக போதியில் இது இசையுடன் பாடப்படுவதற்கு ஏற்றதல்ல என்று கூறியுள் ளார். மேலும் ஏழு சக்கரங்களும் கர்நாடக சங்கீதத்துடன் தொடர்புடைய சப்தஸ்வரங் களுடன் நேரடித் தொடர்புடையன. வலது மூலாதாரத்தை கார்த்திகேயக் கடவுள் ஆதார மாக இருப்பதினால் கந்தசஷ்டி கவசம் இசை வடிவமாகக் கூடாது என்பதனை தேவராயர் கூறியுள்ளார்.

மேலும் அருணகிரிநாதர் இயற்றிய கந்தர் அலங்காரம் என்னும் நூலினை நோக்கு வோமாயின்

"ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறுப்பும் அறார் திணைப்
போதலவும்
ஓங்காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவம்
கண்டு
தூங்கார் தொழுப்பு செய்யார் என் செய்யார்
யமதூதருக்கே"

(பா எ 55)

கோபம் அடங்கமாட்டார்; பொறிகளை அடக்கி ஒடுக்கமாட்டார்; பரமானந்தக் கடலில் தேங்கி நில்லார்; திணையாவும் போதாவது ஓங்காரமாகிய பிரணவத்துள் இருக்கும் ஒளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார்; தொண்டு செய்யார். வாழ்நாள் இறுதியில் யமதூதர் வந்தால் என் செய்வார் கள்? ஆதலின் முருகனுருவம் கண்டு தொண்டு செய்து காலதூதரை வென்று வாழவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும்

"கிழியும் படி அடற் குண்டெறிந்தோன் கவிகேட்டு
உருகி
இழியும் கவி கற்றிடாதிருப்பீர் எரிவாய் நரக
குழியும் துயரும் விடாய் பட கூற்றுவன் ஊர்க்குச்
செல்லும்
வழியும் துயரும் பகரீர் மறந்தவற்கே

(பா. எ.56)

கிரௌஞ்சமலை கிழியும்படி மேலே எறிந் தனுகிய முருகப் பெருமானைப் பற்றிய பாட லைக் கேட்டு உருகி இழிவான பாடல்க ளைக் கற்றிடாமல் வாழுங்கள். சில கருவி களைக் கற்று உய்மின். அங்ஙனம் கற்று உய்யும்நெறியறியாதார் நரகத்தை அடை வர். இவற்றை மறந்தவர்க்கு வற்புறுத்திக் கூறுங்கள் எனக் கூறியுள்ளார்.

ஞானம் என்பது அறிவினைப் பயன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்ற ஆற்றல். ஓங்காரம் என்பது ஒலி யாகவும் ஒளிப்பிழம்பாகவும் நிற்கும் தன் மையானது. அந்த ஒளிப்பிழம்புக்குள்ளே உள்ளொளியாய் விளங்குகின்றார் முருகன். ஓங்காரத்துள்ளொளிக்கும் முருகன் உருவம் கண்டு என்பது அருணகிரிநாதர் வாக்கு. ஓங்கார சப்தமாகவும் ஒளியாகவும் இருப்ப வன் சண்முகநாதன் என்பதை

"ஓதிய ஐந்து ஓங்காரத்து உள்ளொளிக்கும்
உள்ளொளியாய்
ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய்
நின்றோனே"
(கந்தர் கலிவெண்பா)

எனக் கூறுகின்றார். வள்ளி பரிணய மணி பிரவாள சதகம் என்பது கூத்துவகை சேர்ந்த இசை அமைப்பாகக் காணப்படுகின்றது. இதில் முருகனை தெய்வானையும் வள்ளியும் வையும் விதமாகவும், தெய்வானை சமஸ் கிருத மொழியிலும் வள்ளி தமிழ் மொழியி லும் பாடல்பாட முருகக் கடவுள் தமிழும் சமஸ் கிருதமும் தனக்கு இரு கண்கள் எனக் கூறும் விதமாக இப்பாடல் தொகுக்கப்பட்டுள்ளது.

சமகால பண்டிதரான பாபநாசம்சிவனும் முருகன் மீது அருமையான தமிழ்க் கீர்த் தனைகளைப் பாடியுள்ளார். உதாரணமாக வராளி ராகக் கீர்த்தனை வாவாவா கந்தா வாவா என்றும், கலியுகவரதன் கண்கண்ட தெய்வமாய் (பிருந்தாவனி சாரங்கா) வட இந்திய மரபுப்படி முருகன் பிரம்மச்சரியாக வும் பிள்ளையார் சம்சாரியாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளார். ஹிந்தி, தூலு, மராட்டி போன்ற மொழிகளிலும் முருகக் கடவுள் பிரமச்சாரியா கவே சித்தரிக்கப்பட்டுள்ளார்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராக விளங்கும் முத்துஸ்வாமி தீட்ஷிதர் திருத் தணி வந்தபோது தவ வேடம் வடிவில் வந்த முருகப் பெருமான் முத்துஸ்வாமி என்று அழைத்து நா பாவுறுமாறு செய்தார். அன்றி லிருந்து பல திருத்தலங்களுக்குச் சென்று பாடல் பாடத் தொடங்கினார். முருகன் இவ ருக்கு மணிகர்நிகை என்னும் வீணையும் கொடுத்தார். சுப்ரமணியன் அருள் பெற்ற தால் தன்னுடைய பாடல்களில் குகனையே குருவாகக் கொண்டு "குருகுஹ" என்னும் முத்திரையை அமைத்துள்ளார். இவர் சோடஷ கணபதி க்ருதியை பதினாறு கண பதிகள் மேல் பாடியுள்ளார் சுமுகா, ஏகதந்தா, கபிலா, கஜகர்ணக, லம்போதர, விகடா, விக்னராயா, விநாயகா, விக்னேஸ்வர மூர்த்தி, மகா கணபதி என்னும் பதினாறு கணபதி மேல் கிருதிகளைப் பாடி பரிபூர்ண நிலையான ஏழாவது அறிவு (யோகநிலை) அடைந்ததால் கமலாம்பா நவாவர்ணக் க்ருதியைப் பாடி மூளையின் ஏழாவது அறிவு டன் விளிப்படையச் செய்யக்கூடிய பதினொரு கிருதிகளைப் பாடியுள்ளார். தேவியுடன் தன் சம்வந்தத்தை ஏற்படுத்திக் கொண்டார். மனித நிலையிலிருந்து யோகிநிலை அடைந் தார். இவர் யோகநிலை அடைவதற்கு தடை யான நவக்ரக தோஷம் நீங்கவும் மற்றவர் களும் பயன் பெறும் பொருட்டு நவக்ரக கிருதியைப் பாடியுள்ளார். இதில் அங்காரகன் (செவ்வாய்) சம்பந்தமான பாடல் முருகக் கடவுளுடன் தொடர்புடையது. இசை வேறு இறைவன் வேறு என்பது மடமை. இசையும் இறைவனும் ஒன்று என்பது முழுமை.

**உசாத்துணை நூல்கள் :**

குமாரதந்திரம்
போகரின் வைத்திய சம்ஷிதை
அருணகிரிநாதர் பாடல்கள்
திருமந்திரம்
முத்துஸ்வாமி தீட்ஷிதர் கிருதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் முருகத்தலங்களின் தோற்றம் வரலாறு சமூகப்பின்னணி மற்றும் வளர்ச்சி

**சண்முகலிங்கம் சஜீலன்**
பன்னாலை,
தெல்லிப்பழை.

ஆலயங்களும் அவற்றின் உருவாக்கமும் இறைவழிபாட்டுடன் தொடர்புபட்டது. பொதுவாக தமிழர் வாழ்வில் இறைவனும் இறைவழிபாடும் அவர்களின் வாழ்வியலோடு மிகவும் பின்னிப்பிணைந்தது. இவ்வுலகத்தின் கண் வாழ்வாங்கு வாழ இறை வழிபாடே மிகவும் சிறந்தது என்று எண்ணிய அவர்கள் இறைவனை நிலையாக வழிபடுவதற்கும் இறைசக்தியினை எங்கும் பிரவாகிக்கச் செய்வதற்கும் ஆலயங்கள் அவசியமென்று உணர்ந்தனர். ஆரம்பத்தில் மிகவும் எளிமையாக இறைவனை வழிபடுவதற்கு கந்தன் ஆலயங்களை அமைப்பதற்கு இயற்கையோடிணைந்த பிரதேசங்களைத் தேர்ந்தெடுத்தனர். எனவே ஆதிகாலத்தில் நீர் நிலைகளை அண்டிய பிரதேசங்களான ஆறுகள், குளங்கள், கடற்கரைகள் என்பவற்றுக்கு அருகாமையிலும் பாரிய விருட்சங்களுக்கு அடியிலும் கல், வேல், சூலம் போன்றவற்றை நட்டு இறைவழிபாட்டை ஆரம்பித்தனர். இவ்வாறாக ஆரம்பிக்கப்பட்ட இவ்விறைவழிபாடு பின்சிறு ஆலயமாக கொட்டகைகள் அமைத்து கிராமிய வழிபாட்டு அம்சங்களோடு பொங்கல் வைத்தல், மடை பரவுதல் போன்ற பூசைச்சிறப்புக்களோடு நடைபெற்றது.

இவ்வாறாக மிகவும் எளிமையான முறையில் கிராமிய வழிபாட்டம்சங்களோடு ஆரம்பிக்கப்பட்ட இறைவழிபாடு பிற்காலத்தில் சமூகமாற்றங்களினூடு தொழில்நுட்பம் பொருந்திய பாரிய கட்டிட அமைப்புடனும் கலை அம்சத்துடனும் கூடிய கோயில்களை அமைக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது. அரசாட்சியின் தோற்றத்துடன் குறிப்பாக பல்லவ, சோழ, பாண்டிய பேரரசு நிலவிய காலத்தில் கோயில்கள் இறைவழிபாடு என்பதையும் தாண்டி சமூகம், பொருளாதாரம், கல்வி கலாசாரம் போன்ற அரசின் அத்தனைதுறைகளையும் தீர்மானிக்கும், நிர்வகிக்கும் மையங்களாக மாறின. இதனால் இக்காலத்தில் மிகவும் தொழில்நுட்பம் பொருந்திய பாரிய கட்டிட அமைப்புகளோடும் கலை அம்சங்களோடும் கூடிய கோயில்களை அமைக்கும் முறை உருவாகியது.

இலங்கையில் சோழராட்சி நிலவிய காலத்தில் நாட்டின் வடக்கிலிருந்து தெற்கு வரை பல இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அதே போன்று யாழ்ப்பாணத்தில் சோழராட்சிக்காலத்திலும் அதன் பின் வந்த ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலத்திலும் சமூக, பொருளாதார, கலாசாரமையங்களாக ஆலயங்கள் திகழ்ந்ததால் பல ஆலயங்கள் உருவாக்கப்பட்டன. அவை பெரும்பாலும் சிவன், பிள்ளையார், அம்மன், முருகன் ஆலயங்களாக அமைந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கேயரின் படையெடுப்பினாலும் பின் வந்த ஒல்லாந்தர்களினாலும் யாழ்ப் பாணத்தில் பல கோயில்கள் அழிக்கப்பட்டு விட்டன. பல ஆலயங்கள் தரைமட்டமாக்கப் பட்டதால் அவை இருந்ததற்கான ஆதாரங் களோ தகவல்களோ இல்லாது போயுள்ளன. பின்னர் ஆங்கிலேய ஆட்சியில் ஆறுமுக நாவலர் மற்றும் சில சமூக பெரியார்களின் முயற்சியினால் வரலாற்றுடன் தொடர்புபட்ட சில ஆலயங்களே மீளக் கட்டியெழுப்பப் பட்டன. அவற்றுள் வண்ணை வைத்தீஸ் வரன் கோயில், நகுலேஸ்வரம், திருக் கேதீஸ்வரம், திருக்கோணேச்சரம், மாவிட்ட புரம் கந்தசாமி கோவில் என்பன குறிப்பிடத் தக்கன.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பல பெரிய ஆலயங்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் உருவாக்கியவையாகும். அதாவது இவ் ஆலயங்கள் 300ல் இருந்து 150 வருடங்கள் பழமை வாய்ந்தவையாகும்.

### தோற்றமும் வரலாறும்

ஈழத்தில் முருகவழிபாடு மிகவும் தொன் மையானது. இதற்கு இங்கு காணப்படும் பல புராதன முருகன் ஆலயங்கள் சான்றாகும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் முருகவழிபாடும் முருகவழிபாட்டின் தோற்றமும் கந்தபுராண கலாசாரத்துடனும் புராண இதிகாசக்கதை களுடனும் கர்ணபரம்பரைக் கதைகளுட னும் தொடர்புடையது. முருகன்சூரபன்மனு டன் போர் முடித்து திரும்பிய போது கதிர் காமத்திலும் பொலிகண்டி கந்தவனக்கடவை யிலும் தங்கிச் சென்றதாகக் கூறப்படுகின்றது. முருகனின் படைத்தளபதிகளில் ஒருவரான வீரபாகு தேவர் தற்போது செல்வச்சந்நிதி கோவில் அமைந்திருக்கும் வல்லியாற்றங் கரையில் பூவரசு மரநிழலில் வேல் பிரதி ஸ்டை செய்து முருகனை வழிபட்டதாக கூறப் படுகின்றது. போரின் இறுதியில் மாமரமாக நின்ற சூரனை வேலினால் இரு கூறாக்கி சேவலும் மயிலுமாக மாற்றிய இடம் மாவிட்ட புரம் என வழங்கப்படுவதாக ஒரு கதை யுண்டு. முருகனின் வேல் வந்து அணைந்த இடம் வேலணை எனவும் முருகனுடன் மயில்களும் அணி அணியாக வந்து தங்கிச் சென்ற இடம் மயிலணி என்றும் கூறுவர். இப்படியாக கந்தபுராணத்துடன் தொடர்புபட்டு யாழ்ப்பாணத்தில் பல இடங்கள் அமைந்தி ருப்பது குறிப்பிடத்தக்கது. இதுவே யாழ்ப் பாணத்தில் உள்ள முருகன் ஆலயங்களின் தோற்றத்திற்கும் வழிவகுத்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் அமைந்து ள்ள பல முருகன் ஆலயங்களின் வழிபாடு, கோவில் உருவாக்கம் என்பன பல்வேறு அரசுகளால் சமூக அமைப்புக்களால் தனி மனிதர்களால் (முருக பக்தர்கள் ) பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு காரணிகளால் தோற்றுவிக்கப்பட்டவையாகும்.

அவற்றினை தமிழரசர்களால் உருவாக் கப்பட்ட ஆலயங்கள் முருகபக்கதர்களாக விளங்கிய அடியார்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள் குலதெய்வமாக வணங்குவ தற்கு அடியார்களால் அமைக்கப்பட்ட ஆல யங்கள் வணிகர்கள் செல்வந்தர்களால் உரு வாக்கப்பட்ட ஆலயங்கள் சமூக முரண்பாடுக ளால் உருவாகிய ஆலயங்கள் வேறு தெய்வ வழிபாட்டுத்தலங்கள் முருகவழிபாட்டு தலங் களாக மாறியமை புராணபடன மடங்கள் ஆலயங்களாக மாற்றம் பெற்றமை சமாதி கோயில்கள் முருகன் கோயில்களாக உரு வாகியமை நிறுவனங்களில் வழிபாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஆல யங்கள் என வகைப்படுத்தலாம்.

### 01. தமிழரசர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள்

அரசாட்சிக்காலத்தில் பல அரசர்கள் ஆல யங்களை உருவாக்கியிருக்கின்றனர். ஆரியச்சக்கரவர்த்தியான புவனேகபாகு மன்னனால் நல்லூர்கந்தசுவாமி ஆலயம் உருவாக்கப்பட்டது. சோழவம்சத்தைச் சேர்ந்த இளவரசி மாருதப்புரவீகவல்லியால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் உருவாக்கப்பட்டது. இவ் ஆலயங்கள் ஆயிரம் வருடங்கள் பழமையானது எனினும் போர்த்துக்கேயர்களால் அழிக்கப்பட்ட இவ்வாலயங்கள் 18ம் நூற்றாண்டின் பிற்கூறில் மீள உருவாக்கப்பட்டவையாகும். இவை ஆரம்பத்திலேயே பிரமாண்ட ஆலயங்களாக கட்டப்பட்டவையாகும்.

### 02. முருக பக்தர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள்

இங்கு இறை சிந்தனையாளர்களான முருக அடியார்களின் கனவில் அல்லது நேரில் பாலகனாக, வயது முதிர்ந்த கோலத்தில் முருகன் தோன்றி அல்லது அசரீரி மூலமாக ஜோதி அக்கினிச்சுடர் மூலமாக குறிக்கப்பட்ட இடத்தைக் காட்டி அவ்விடத்தில் தன்னை வைத்து வழிபடும் படி கூற இறை சித்தத்தை உணர்ந்த அடியார் அவ்விடத்தில் வேல் அல்லது முருகப்பெருமானின் விக்கிரகத்தினை வைத்து சிறு ஆலயம் அமைத்து வழிபட்டார். அவ்வாலயங்கள் காலமாற்றத்தினூடு இன்று பெரிய ஆலயங்களாக உள்ளன இவற்றினை யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் காணலாம்.

உதாரணம்: செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
இணுவில் கந்தசுவாமி கோவில்
நெடுந்தீவு கரமத்தை கந்தசுவாமி கோவில்

அதே போன்று அடியார்கள் முருகன் மேல் கொண்ட பக்தி காரணமாக வேல் வைத்து வழிபட்ட பல ஆலயங்களும் உள்ளன. கதிர்காமம் மற்றும் மிகப்பிரபல்யமான முருகன் ஆலயங்களுக்கு யாத்திரை செல்லும் அடியார்கள் அங்கு அவர்கள் பெறும் இறை சக்தியின் மூலம் வேல் அல்லது திருவருளைப் பெற்று தத்தம் ஊர்களில் அவற்றை பிரதிஸ்டை செய்தும் வழிபட்டும் ஆலயத்தினை உருவாக்கியுள்ளனர்.

இதற்கு
உதாரணம்:- நீர்வேலி செல்வக் கதிர்காமம் முருகன் ஆலயம்
நவாலி அட்டகிரி கந்தசுவாமி கோவில்
துன்னாலை கலிகை கந்தசுவாமி கோவில் ஆகியவை.

இந்தியாவின் காசி, சிதம்பரம், தேவாரணியம், ஆறுபடை வீடுகள் போன்ற புனிதத் தலங்களுக்கு யாத்திரை சென்ற இறை அடியார்கள் அங்கிருந்து முருகப் பெருமானின் விக்கிரகம் அல்லது வேலைக் கொண்டு வந்து தமது ஊர்களில் வைத்து ஆலயம் அமைத்து வணங்கியிருக்கிறார்கள். இவ்வாறாக உருவாக்கப்பட்ட ஆலயங்களையும் யாழ்ப்பாணத்தில் காணலாம். உதாரணம் சங்கரநாதர் முருகமூர்த்தி ஆலயம் அனலை தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. குலதெய்வமாக வணங்குவதற்காக அடியார்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள்**

சில அடியார்கள் தம் குடும்ப குலதெய்வமாக வணங்குவதற்காக தமது வீட்டுவளவில் அல்லது அயல்பிரதேசத்தில் வேல் அல்லது சூலத்தினை நட்டு சிறிய ஆலயத்தினை அமைத்தனர். அச்சிறிய ஆலயங்கள் காலப்போக்கில் எல்லா அடியவர்களினாலும் வணங்கப்பெற்று பொதுக்கோயிலாக மாற்றம் அடைந்து வளர்ச்சி பெற்றுள்ளன.

**04. வணிகர்கள் செல்வந்தர்களால் உருவாக்கப்பட்ட ஆலயங்கள்**

வணிகர்களாக விளங்கிய நாட்டுக் கோட்டை நாகரத்தார் எனப்பட்ட செட்டியார்கள் தாம் வழிபடுவதற்கென உருவாக்கிய முருகனாலயங்கள் சில உள்ளன. இவை பெரும்பாலும் யாழ் நகரப்பகுதியில் அல்லது நகரை அண்டிய பகுதியிலேயே அமைந்துள்ளன. இவ்வாலயங்கள் கருங்கல் வேலைப்பாடுகளுடன் ஆரம்பத்திலேயே பெரிய ஆலயங்களாக அமைக்கப்பட்டவையாகும்.

உதாரணம்: ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி கோயில் (கதிரேசன் கோயில் யாழ் நகர்)

**5. சமூக முரண்பாடுகளால் உருவாகிய ஆலயங்கள்**

யாழ்ப்பாண சமூகத்தில் அடிக்கடி ஏற்படும் சமூக முரண்பாடுகள் பல ஆலயங்களை உருவாக்கியுள்ளன. பொதுவாக இரு சமூகங்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகளால் ஏற்படும் முரண்பாட்டினால் ஒரு பிரிவினருக்கு வழிபடும் உரிமை மறுக்கப்பட அப்பிரிவினர் தாம் வழிபடுவதற்கென பிரத்தியேகமாக ஆலயத்தை அமைத்தனர். அதேபோன்று ஆலய நிர்வாகத்தில் இரு பிரிவினருக்கிடையில் ஏற் படும் குழப்பம் நிர்வாகச்சிக்கல் காரணமாக ஒரு பிரிவினர் தாம் நிர்வகிப்பதற்கென தனியான ஆலயங்களை அமைத்தனர். அப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலுமுள்ளன. இதற்கு உதாரணமாக கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வேலணை துறையூர் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆகியவற்றைக் கொள்ளலாம்.

**6. வேறு தெய்வவழிபாட்டுத்தலங்கள் முருகவழிபாட்டுத்தலங்களாக மாறியமை**

வேறு தெய்வவழிபாட்டுத்தலங்கள் முருக வழிபாட்டுத்தலங்களாக மாறியுள்ளன. பொதுவாக வைரவர், அண்ணமார், பேய்ச்சி அம்மன் போன்ற தெய்வவழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட ஆலயங்களில் சித்தர்கள் அருளாளர்களின் கூற்றுப்படி வேல் அல்லது முருகப்பெருமானின் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு வழிபடப்பட்டன. அவ்வாலயங்கள் தற்போது ஆகமசிற்பசாஸ்திர விதிகளின்படி கட்டப்பட்டு பெரிய முருகத்தலங்களாக திகழ்கின்றன.

உதாரணம்:- பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்திகோயில், மண்டைதீவு முகப்பு வயல் சிவசுப்பிரமணியசுவாமி கோயில்

**07. புராணபடனமடங்கள் ஆலயங்களாக மாற்றம் பெற்றமை**

ஆரம்பகாலத்தில் கந்தபுராணம், பிள்ளையார்கதை, திருவிளையாடற் புராணம் போன்ற புராணபடனம் மேற்கொள்வதற்காக கட்டப்பட்ட மடங்கள் கல்விபோதிக்கும் மடங்கள், அன்னதானம் வழங்குவதற்கு கட்டப்பட்ட மடங்கள் போன்றவற்றின் ஒரு பகுதியில் வேல் அல்லது விக்கிரகம் ஸ்தாபிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பெற்று முருக வழிபாடுகள் நடைபெற்றுள் ளன. மடாலயங்களாக இருந்த இவ்வால யங்கள் சில காலத்தின் பின்னர் பெரிய ஆல யங்களாக உருவாகியுள்ளன.

உதாரணம்:- கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயில், கைதடி.
சிற்பனை முருகன் ஆலயம், வேலணை

**8. சமாதிக்கோவில்கள் முருகன் கோவில்களாக உருவாகியமை**

சில அருளாளர்கள், சித்தர்கள், தவயோகி கள் சமாதி வைக்கப்பட்ட ஆலயங்கள் அவற் றின் மேல் விக்கிரகப்பிரதிஸ்டை செய்யப் பட்டு வழிபாடுகள் நடைபெற்றுள்ளன. பின் னர் இச்சமாதிக்கோயில்கள் சிற்ப சாஸ்திர விதிகளுக்கமைய கட்டப்பட்டு பெரிய ஸ்தலங் களாக மாறியுள்ளன. இதற்கு உதாரணம் வல்லன் ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயில் புங்குடுதீவு.

**9. நிறுவனங்களில் வழிபாடுகள் மேற் கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஆலயங்கள்**

பாடசாலை, வைத்தியசாலை போன்ற சேவையை மேற்கொள்ளும் நிறுவனங் களில் வழிபாடுகள் மேற்கொள்வதற்காக வேல் அல்லது முருக விக்கிரகம் பிரதிஸ்டை செய்து ஆலயம் அமைத்துள்ளனர். குறிப்பாக வைத்தியசாலைகளில் உள்ள ஆலயங்கள் அங்கு தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் அவர்களது உறவினர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் வழிபடுவதற்கென உருவாக்கப் பட்டவையாகும். அதேபோன்று பாடசாலை களில் உள்ள ஆலயங்கள் அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வழிபடுவதற்கென அமைக்கப்பட்டவை யாகும். உதாரணம் தெல்லிப்பழை வைத் தியசாலையில் உள்ள முருகன் ஆலயம்.

**சமூகப் பின்னணி மற்றும் வளர்ச்சி**

யாழ்ப்பாணத்தில் இவ் ஆலய உருவாக் கத்தின் ஆரம்ப கர்த்தாக்களான இறையடி யார்கள் அவர்கள் அரசவம்சத்தைச் சேர்ந்த வர்களாகட்டும், பெரும் செல்வந்தர்களா கட்டும், சாதாரணபக்த அடியார்களாகட்டும் இவர்கள் யாவரும் இறைசிந்தனை உடைய வர்களாகவும், சித்தத்தை இறைவன் பால் வைத்தவர்களாகவும் மனத்தால் இறைவனு டன் ஒன்றியவர்களாகவும் இருந்திருக்கின் றனர். இதனாலேயே இவர்களால் இப்படி யான ஆலயங்களை அமைக்க முடிந்திருக் கின்றது.

இங்கு அரசர்களால் தொடக்க காலத்தில் உருவாக்கப்பட்ட முருகனாலயங்கள் ஆரம் பத்திலேயே கட்டடக்கலை அம்சங்கள், பூசை முறைகள், திருவிழாக்களில் சிறப்புற்ற ஆலயங்களாக இருந்தன. ஏனெனில் இங்கு அரசின் சகலவளங்களும் ஆலய உருவாக் கத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. எனினும் துரதிர்ஷ்டவசமாக பின்வந்த போர்த்துக்கேயர்களின் படையெடுப்பாலும் அவர்கள் ஏற்படுத்திய அழிவாலும் கட்டடக் கலை அம்சங்களில் உயர்ந்து நின்ற இவ் வாலயங்கள் இருந்த இடம் தெரியாது தரை மட்டமாக்கப்பட்டு விட்டன. இவை பின்னர் 18ம் நூற்றாண்டின் பின் கூறில் உயர்பதவி வகித்தவர்களாலும், செல்வந்தர்களாலும் மீள்புனரமைக்கப்பட்டவையாகும். அதே போன்று இதேகாலப்பகுதியில் செல்வந்தர்க ளாலும் வணிகர்களாலும் பல புதிய ஆலயங் களும் கட்டுவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தற்போது காணப்படும் நூற்றுக்கு எழுபது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமாக முருகனாலயங்கள் மிகச்சாதாரண எளிமையான இறையடியார்களால் ஸ்தாபிக் கப்பட்டவையாகும். இறைபற்று மிக்க இவர் கள் ஈழத்தின் பிரதான யாத்திரைத்தலங்க ளான கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்ட புரம், நல்லூர் போன்ற முருகத்தலங்களுக்கு யாத்திரை செல்பவர்களாவர். இவர்கள் அப் பிரதேசங்களிலிருந்து வேல், சூலம் ஆகிய வற்றைக் கொண்டு வந்து தமது ஊர்களில் ஸ்தாபித்தனர். 19ம், 20ம் நூற்றாண்டுகளி லேயே கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்ட புரம், நல்லூர் போன்ற முருகனாலயங்கள் மிகப்பிரபலமான ஆலயங்களாகும். இவ்வா லயங்களின் திருவிழாக் காலங்களில் இலங் கையின் பல பாகங்களிலிருந்தும் அடியார் கள் வந்து கூடுவர். திருவிழாக்காலங்களில் மட்டுமல்லாது மிகச்சாதாரண நாட்களிலி லும் வழிபடும் அடியார்களினால் இவ்வால யங்கள் நிரம்பியிருக்கும். முன்னைய காலங்களில் இவ்வாலயங்களுக்கு செல்வ தற்கு போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்ததாலும் செல்வதற்கு அதிக நேரம் எடுப்பதாலும் அடிக்கடி அங்கு செல்ல முடியாத பக்தர்கள் தாம் தமது பிரதேசத்தில் வழிபடுவதற்கு வேல், முருகவிக்கிரகம் போன்றவற்றை ஸ்தாபித்து ஆலயம் அமைத்து வழிபட்டனர். எனவே மேற் குறிப்பிட்ட ஈழத்தின் பிரபலமான முருகன் ஆலயங்களும் யாழ்ப்பாணத் தின் பல்வேறு பிரதேசங்களிலும் ஆலயங்கள் உருவாவ தற்கு வழிசமைத்திருக்கின் றன.

அதேபோன்று 18ஆம், 19ம் நூற்றாண்டு கள் இந்தியாவின் தமிழகத்திற்கும் ஈழத்தின் வடகிழக்குப்பிரதேசத்திற்குமிடையில் கலா சாரம், பண்பாடு, வணிகம் போன்ற துறை களில் மிகவலுவான தொடர்புகள் நிலவிய காலமாகும். இக்காலத்தில் தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் போக்குவர த்து மிகச்சாதாரணமாக நடைபெற்றது. இத னால் இங்கிருந்து சிதம்பரம், வேதாரணி யம், இராமேஸ்வரம் முருகத்தலங்களான ஆறுபடை வீடுகள் ஆகியவற்றுக்கு யாத் திரை செல்பவர்களும் அங்கிருந்து கதிர் காமம், கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற தலங்களுக்கு யாத்திரை வருபவர் களும் இருந்தனர். இத்தொடர்பின் மிகச் சிறந்த உதாரணமாக ஆறுமுகநாவலர் அவர்கள் சிதம்பரம் சென்று அச்சுயந்திர சாலைகளை நிறுவி நூல்களை எழுதிப் பதிப்பித்து வெளியிட்டமையையும் பாடசா லைகளை நிறுவி சைவக்கல்வியை வளர்த் தமையையும் கொள்ளலாம். அவ்வாறு இங்கிருந்து தமிழக யாத்திரை சென்றவர் கள் அங்கிருந்து முருகவிக்கிரகங்களைக் கொண்டு வந்து தமது சொந்த ஊர்களில் தாபித்து ஆலயம் அமைத்து வழிபட்டனர்.

இவ்வாறு யாத்திரை சென்ற அடியார்க ளால் ஆரம்பத்தில் ஓலைக்கொட்டகைக ளாலும் குடிசைகளாலும் மிகச்சிறியதாக அமைக்கப்பட்ட ஆலயங்கள் மிக நீண்ட காலத்தில் படிப்படியான மாற்றம், வளர்ச்சி களினூடாக கட்டடக்கலை அம்சங்களிலும் விழாக்கள், பூசைமுறைகளிலும் மிகப் பெரிய ஆலயங்களாக உருவாகியுள்ளன. சில ஆலயங்களில் அவற்றிற்கு அருகாமையில் ஆலயத்தின் ஆரம்பஸ்தாபகர்களான சித்தர்கள், ஞானிகள் ஆகியோரின் சமாதிகள் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று சமூக முரண்பாடுகளால் உருவாகிய ஆலயங்களும் ஒரு வகையில் ஆலயங்களை உருவாக்கி சமூக, சமயப் பணி செல்வதன் மூலம் நன்மையை விளை வித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல் ஸ்தாபகத்துடனும் கிராமிய வழி பாட்டம்சங்களோடும் ஆரம்பிக்கப்பட்ட பல ஆலயங்கள் இன்று வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் விக்கிரகம் பிரதி ஸ்டை செய்யப்பட்டு பெருந்தெய்வ வழிபாட் டம்சம் பொருந்திய ஆலயங்களாக உள்ளன.

இவ்வாறு பல்வேறு காரணிகளாலும், முயற்சிகளாலும் உருவாகியுள்ள முருக னாலயங்களை யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலுள்ள ஊர்கள் தோறும் தரிசிக்க முடியும். இவ்வாலயங்கள் ஒவ்வொன்றும் ஏதாவதொரு தனித்துவமான அம்சங்களை தன்னுள்ளடக்கி அருள்சுரக்கும் ஆலயங்க ளாகத் திகழ்வதுடன் தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களின் உயிர் நாடியாகவும் அவற்றின் இருப்பு மற்றும் நீடித்த நிலை பெறுதலுக்கு அத்தியாவசிய மானவையாகவும் விளங்குகின்றன.

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

## விளம்பி வருஷம் ஆவணி மாதம் - 2018

## மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 16.08.2018 | வியாழன் | கொடியேற்றம் | பகல் 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 25.08.2018 | சனி | மஞ்சம் | மாலை 05.00 மணி | (10ம் திருவிழா) |
| 01.09.2018 | சனி | அருணகிரிநாதர் உற்சவம் | மாலை 06.00 மணி | (18ம் திருவிழா) |
| 02.09.2018 | ஞாயிறு | கார்த்திகை உற்சவம் | மாலை 05.00 மணி | (19ம் திருவிழா) |
| 03.09.2018 | திங்கள் | சூர்யோற்சவம் | காலை 07.00 மணி | (19ம் திருவிழா) |
| 04.09.2018 | செவ்வாய் | சந்தானகோபாலர் | காலை 07.00 மணி | (20ம் திருவிழா) |
| 04.09.2018 | செவ்வாய் | கைலாசவாகனம் | மாலை 05.00 மணி | (20ம் திருவிழா) |
| 05.09.2018 | புதன் | கஜவல்லி மஹாவல்லி | காலை 07.00 மணி | (21ம் திருவிழா) |
| 05.09.2018 | புதன் | வேல்விமானம் | மாலை 05.00 மணி | (21ம் திருவிழா) |
| 06.09.2018 | வியாழன் | தெண்டாயுதபாணி | காலை 07.00 மணி | (22ம் திருவிழா) |
| 06.09.2018 | வியாழன் | ஒருமுகத் திருவிழா | மாலை 05.00 மணி | (22ம் திருவிழா) |
| 07.09.2018 | வெள்ளி | சப்பறம் | மாலை 05.00 மணி | (23ம் திருவிழா) |
| 08.09.2018 | சனி | தேர் | காலை 07.00 மணி | (24ம் திருவிழா) |
| 09.09.2018 | ஞாயிறு | தீர்த்தம் | காலை 07.00 மணி | (25ம் திருவிழா) |
| 10.09.2018 | திங்கள் | பூங்காவனம் | மாலை 05.00 மணி | (26ம் திருவிழா) |
| 11.09.2018 | செவ்வாய் | வைரவர் உற்சவம் | மாலை 05.00 மணி | (27ம் திருவிழா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகமஞ்சாராத வழிபாட்டு மரபில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வகிபங்கு

**ஆ. சசிநாத்**
மூன்றாம் வருடம் (சிறப்புக்கலை)
இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

"ஒரு முகம்,
குறவர் மடமகள் கொடிபோனு சுப்பின்
மடவரல் வள்ளியோடு நகையமர்ந்தன்றே"
(திருமுருகாற்றுப்படை)

என்று திருமுருகாற்றுப்படை முருகனை சிறப்பித்துக் கூறுகின்றது. கோயில்கள் தமிழர் வாழ்வுடனும் சைவசமயத்தோனது வாழ்வுடனும் நெருங்கிய தொடர்புடையன வாகக் காணப்படுகின்றன. ஆலயங்கள் சிறு தெய்வங்களுக்காகவும் பெரும் தெய்வங் களுக்காகவும் அமைக்கப்பட்டன. அவை ஆகமஞ்சார்ந்த முறையாலும், ஆகமஞ் சாராத முறையிலும் அமைக்கப்பெற்று கிரியைகள் இடம்பெற்றன. சில ஆலயங்கள் ஆகமஞ்சார்ந்த முறையில் அமைக்கப்பட்டு ஆகமஞ்சாராத முறையில் கிரியை மரபுகள் இடம்பெற்றன.

இவ்வகையில் பெருந்தெய்வங்களுள் ஒன்றாகத் திகழும் முருக வழிபாட்டினை ஈழத்திலே எவ்வாறு ஆகமஞ்சாராத முறை யில் கிரியைகள் ஆற்றப்படுகின்றன என்ப தனை ஆராயும் முகமாக இங்கு தொண்டை மானாறு செல்வச்சந்நிதி ஆலயம் எடுத்து நோக்கப்படுகின்றது. அதாவது ஆலய அமைப்புமுறை, கிரியைமுறைகள், மகோற் சவக்கிரியைகள், சடங்குகள் என்பன எவ் வாறு இங்கு ஆகமமரபு சாராது இடம்பெறு கின்றது என்று ஆராய்வதே இதன் நோக்க மாகும்.

## வழிபாடு என்னும் சொல் குறிக்கும் பொருள்

வழிபாடு என்னுஞ் சொல்லுக்கு அப்பி யாசம், ஆராதனை, தாழ்மை. வணக்கம், வழிபடல், பின்பற்றல், வழக்கம், பூசனை என்னும் பொருள்கள் உண்டு என்பதனை மதுரைத் தமிழ் பேரகராதி விளக்கி நிற்கின் றது. அத்தோடு வழிபாடு என்னும் சொல் லானது வழிப்படுத்தல் என்னும் பொருளை யும் தருகின்றது. அதாவது ஆன்மாக்களை இறையருளைப் பெற்றுக்கொள்ளுமாறு இறைவனை நோக்கி வழிபடுதலே ஆகும். இவ்வழிபாட்டு முறையானது இரண்டு வகையாகக் கொள்ளப்படும்.

1. ஆகமஞ்சார்ந்த வழிபாடு.
2. ஆகமஞ்சாராத வழிபாடு.

ஆலயங்கள் அமைக்கப்படும்போது ஆகமஞ் சார் முறையிலேயே அமைக்கப்பட வேண்டும். சில ஆலயங்கள் ஆரம்பம் முதலே ஆக மஞ்சார்முறையில் அமைக்கப்பட்ட ஆலயங் களாகவும், சில ஆலயங்கள் ஆரம்பத்தில் ஆகமஞ்சாராத முறையில் அமைக்கப்பட்டு பின் காலநீரோட்டத்தினால் ஆகமஞ்சார்ந்த முறையில் அமைக்கப்பட்ட ஆலயங்களாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றன. ஆனாலும் சில ஆலயங்கள் ஆகமஞ்சார்ந்த முறையில் அமைக்கப்பட்டு ஆமஞ்சாராத முறையில் வழிபாடுகள், சடங்குகள் இயற்றப்படுகின்றன. கிராமியச் சிறுதெய்வ ஆலயங்களில் வழிபாடுகள் யாவும் ஆகமஞ்சாராத முறையிலேயே மேற்கொள்ளப்படுவதனைக் காணமுடிகின்றது. இவ்வகையான வழிபாடுகளை யார் வேண்டுமானாலும், எந்நேரத்திலும் மேற்கொள்ளலாம். இதற்கு இப்படித்தான் வழிபாடு செய்யவேண்டும் என்ற தன்மையில்லை. ஆயினும் ஆகமஞ்சார்ந்த முறையில் வழிபாடுகள் இயற்றப்படும் ஆலயங்களில் ஆகமப்பிரமாணங்கள், எவ்வாறு ஒரு பூஜை செய்யும் சிவாச்சாரியார் இருக்கவேண்டும் என்பது தொடக்கம் மந்திரங்கள், படையல் செய்ய உகந்த பொருட்கள், கிரியை முறைகள் என்பன யாவும் ஆகமம்கூறுகின்ற மரபுகளுக்கேற்பவே மேற்கொள்ளுதலே ஆகமஞ்சார்ந்த வழிபாட்டு முறைகள்.

இவ்வாறு வழிபாட்டுமுறைகளை இருவகைப்படுத்தி உள்ளவேளையில் பக்தர்கள் தமக்கு எவ்வழிபாட்டுமுறைமை இலகுவாக அமைகின்றதோ அவ்வழிபாட்டினை மேற்கொள்ளமுடியும். ஆகம, சிற்ப, சாஸ்திர விதிகளுக்கு அமைந்து சிவன், பிள்ளையார், முருகன், அம்பாள் முதலான தெய்வங்கள் வழிபாடு இயற்றப்படும். ஆகம சிற்பசாஸ்திரங்களின் விதிகளுக்கு அமையாது வழிபடப்படுபவை நாட்டார் தெய்வங்கள். இங்கு பொங்கலும், படையலும் ஏனைய கிராமியஞ்சார் வழிபாடுகளும் இடம்பெறும் நாட்டார் தெய்வங்கள் குலதெய்வம், சிறுதெய்வம், ஊர்த் தெய்வம், காவல்தெய்வம், கிராமியத் தெய்வம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.

**ஆகமஞ்சாராத வழிபாட்டு மரபில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி**

சங்கரர் வகுத்த சன்மதங்களுள் ஒன்றாக விளங்குவது கௌமார நெறியாகும். இந் நெறியானது முருகனை பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் நெறியாகும். இந் நெறியினைக் கைக்கொள்பவர்கள் கௌமாரர்கள் எனப்படுவர். ஆரம்பத்தில் மக்கள் முருகனை தனியொரு தெய்வமாகக் கருதி வழிபட்டு வந்த வேளையில் காலப்போக்கில் கௌமாரம் என்று ஒரு தனி மதப் பிரிவு அற்றுப் போய் இன்று சைவத்தோடு இணைந்தே வழிபடப்பட்டு வருகின்றது. முருகன் என்னுஞ் சொல்லுக்கு அழகு என்று பொருள் கொள்ளப்படும். இவனுக்கு என்று தனியான நூல்கள் வடமொழியிலும், தமிழ் மொழியிலும், அமைந்துள்ளது. முருகனது பிறப்புப் பற்றியும், தோற்றம் பற்றியும் பல்வேறு கருத்தாளங்கள் கூறப்படுகின்றன. மற்றும் இவனது அழகுச்சிறப்பு, வீரத்தன்மை, படைக்கலன்களின் சிறப்பு போன்றன தொடர்பான கருத்துக்களும் இலக்கியங்களிலே விரவிக் காணப்படுகின்றன.

அவ்வகையிலே ஈழத்திலுஞ் சரி, தென்னாட்டிலுஞ் சரி, முருகனுக்கு என்று தனியே அமைந்த ஆலயங்கள் காணப்படுகின்றன. தென்னாட்டிலே முருகனுக்கென சிறப்பாக அமைந்த ஆறுபடை வீடுகள் காணப்படுகின்றன. அவற்றை விடவும் பல புகழ் வாய்ந்த திருக்கோவில்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் ஆற்றப்படுவதனை அறிந்துகொள்ள முடிகின்றது. ஈழத்தினை எடுத்து நோக்கின், ஆரம்ப காலந்தொட்டு இங்கு முருக வழிபாடு நிலவி வருகின்றது. இவற்றுக்குச் சான்றாக பாளி நூல்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், மற்றும் சிலைகள் போன்ற தொல்லியல் சான்றுகள் சான்றாதாரமாகின்றன. அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர ஈழத்திலே முருகனுக்கு என்று தனியே அமைக்கப்பட்ட ஆலயங்கள் உள்ளன. அவையாவன: நல்லூர் கந்தசுவாமி கோவில், தொண்டமானாறு செல்வச் சந்நிதி, மண்டூர் முருகன் ஆலயம், கதிர்காமம், வெருகல் சித்திர வேலாயுதர் கோயில், உகந்தமலை முருகன்கோயில், சித்தாண்டி கந்தசுவாமி கோயில் போன்றன அவற்றுட் சிலவாகும். இவற்றிலே ஆகமஞ்சாராத முறையில் வழிபாடுகள் மேற்கொள்ளப்படு கின்ற முருகன் ஆலயங்களாக, கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர் முருகன் ஆலயம், என்பன விளங்குகின்றன.

அவ்வகையிலே இக் கட்டுரையானது செல்வச்சந்நிதி ஆலயத்தை முன்னிறுத்தி ஆகமஞ்சாரா வழிபாட்டு மரபுகள் எங்ஙனம் இடம்பெறுகின்றது என்பதனை தெளிவு படுத்துவதாய் அமைகின்றது. யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த வடமராட்சிப் பகுதியின் மேற் கெல்லையாக அமைந்துள்ளது தொண்டை மானாறு என்னும் அழகிய சின்னஞ்சிறு கிராமம். அங்கு அடியவர்களது தீராதநோய் தீர்க்கும் அருமருந்தான முருகன் அமைந் துள்ள இடமே செல்வச்சந்நிதி. இது சின்னக் கதிர்காமம், செல்லக்கதிர்காமம், கல்லோடை என்னும் மறுபெயர்களாலும் அழைக்கப் படும்.

பிரதான ஆலயத்தின் வலப்புறமாக தென் மேற்கு மூலையில் விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. பிரதான கோவிலுக்கு தென்கிழக்குத் திசையில் தெற்கு நோக்கிய வாறு எழுந்தருளி மூர்த்தியாகிய ஆறுமுக சுவாமி காணப்படுகிறார். இங்கு பலிபீடம், கொடித்தம்பம் இல்லை. மூலஸ்தானத்திற்கு இடப்புறமாக தீர்த்தக்கிணறும், அதற்கு அரு கில் மேற்கு நோக்கியவாறு வள்ளியம்மை கோயிலும் உண்டு. இவ்வாலய தல விருட்சம் பூவரசுமரமாகும். இவ்வாலய அமைப்பு முறையை நாம் நோக்கும்போதே பலிபீடம், கொடித்தம்பம் இங்கு இல்லாததன் காரணமாக இவ்வாலயம் ஆகமஞ் சாராதது என்னுந் தன்மையைக் காட்டி நிற்கின்றது.

இவ்வாலயத்தில் கிரியை மரபுகளினை மேற்கொள்பவர் பிராமணர் அல்லாத பூசாரி களே ஆவர். இவர்கள் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் மந்திர உச்சாடனங்களைக் கூறி பூஜைகள் மேற்கொள்ளப்படுவது இல்லை. இவ்வாலயத்தில் பூசாரி பூஜை மேற்கொள் ளும் போது வெள்ளைத் துணியினால் வாயி னைக் கட்டியே பூஜை மேற்கொள்ளப்படும். இவர்களை கப்புறாளைமார் என்னும் பெயர் கொண்டு அழைப்பர். இத்தகைய தன்மை யினை நாம் கதிர்காமத்திலும் கண்டு கொள்ள முடியும். இவ்வாறு செய்யப்படும் பூஜையினை மௌனபூஜை என்றும் கூறுவர். இங்கு கப்புறாளைமார் பூஜை செய் கின்ற வேளையில் கர்ப்பக்கிரக திரைச்சீலை எந்நேரமும் மூடிய வண்ணமே காணப் படும். அத் திரைச்சீலையை விலக்கி ஒரு போதும் பூஜை வழிபாடுகள் இடம் பெறுவ தில்லை.

மேலும் இவ்வாலயத்தின் மகோற்சவம் தொடர்பாக நோக்குகின்ற போது ஆண்டு தோறும் ஆவணி மாத பூர்வ பட்ச பிரதமை திதியில் ஆரம்பமாகி பௌர்ணமி திதியில் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். ஆனால் இங்கு ஆகமஞ் சார்ந்த கோவில் களில் இடம்பெறுவது போன்று இங்கு கொடித்தம்பம் நாட்டப்படுவதில்லை. கொடித் தம்பம் இருக்கவேண்டிய இடத்திலே வள்ளிக் கொடி முளைக்கும். அதனையே முதலாகக் கொண்டு கொடியேற்றத்துக்கு முன்னர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலிலே (கழுத்தளவு நீரில் இறங்கி) தீர்த்த மெடுத்து வந்து, கொடியேற்றம் முடியும் வரை விளக்கேற்றும் வழிபாட்டு வழக்கம் காணப்படுகின்றது. இதனைப் போலவே கதிர்காம கோவில் உற்சவத்திற்கு செல்வச் சந்நிதியில் இருந்து வேல் அனுப்பி வைக்கப் படும். அது மட்டுமன்றி அங்கே ஒரு யானை மீது ஒரு பெட்டி எடுத்துவரப்பட்ட பின்னரே வழிபாடாற்றப்படும். இன்றுவரை அந்தப் பெட்டியில் என்ன உள்ளது என்பது பற்றி யாருக்கும் எதுவும் தெரிவதில்லை.

மேலும் ஆகமஞ்சாரா வழிபாட்டு மரபில் ஒன்றாகத் திகழ்வது மாவிளக்குப் போடுத லெனும் வழிபாடு. இவ் வழிபாட்டின் நிலைப் பின் தன்மையை இன்றும் செல்வச்சந்நிதி ஆலயத்திலே கண்டுகொள்ள முடிகின்றது. தினைமாவிலே தேனைக் கலந்து பிசைந்து களியாக்கி பின்னர் அதிலே சிறு சிறு சுட்டி விளக்குகளையும், பெரிய பரந்த தாம்பாளம் போன்ற அமைப்பான விளக்குகளையும் செய்வர். சிறிய விளக்குகளிலே ஒற்றைத் திரியும், பெரிய விளக்கிலே பன்னிரண்டு திரியும் இட்டு நெய்யூற்றி எரிப்பர். அவ் விளக்குகளுக்கு சிவந்த பொட்டிடுவர். வெண் மலர்களினையும், நெற்பொரியினையும் மேலே தூவி விடுவர். திரிகள் எரிந்து முடிந்ததும் அவ் விளக்குகளை பிரசாதமாகக் கருதி எல்லோரும் பகிர்ந்து உண்பார்கள். மாவிளக்கினருகிலே இளநீர் இரண்டு கொத்தி வைக்கப்படும். கொத்திய இளநீரின் மீது கற்பூரம் எரிவதுண்டு. இவ் வழிபாடு சிறப்பாக கந்தசஷ்டி விரதநாட்களில் மாலை நேரத்தில் இடம்பெறும். முருகன் வள்ளியிடம் தேனும், தினைமாவும் பெற்று உண்பதாக வரலாறுகள் கூறுகின்றன. இவ் வழக்கம் இன்றும் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம் பெறுவதனைக் காணலாம்.

பெரும்பாலான ஆகமஞ்சார்ந்த முறை யில் கிரியைகள் ஆற்றப்படும் கோயில்களில் இறைவனுக்கான நைவேத்தியம் மங்கள கரமான வாழையிலையிலேதான் படையல் செய்யப்படும். ஆனால் சந்நிதியிலே ஆலம் இலையில் படைக்கும் வழக்கம் காணப்படு கின்றது. அறுபத்தி ஐந்து ஆலம் இலைக ளிலே தான் இங்கு படையல் செய்யப்படும். இது தீராத நோய் தீர்க்கும் அருமருந்தாகக் கருதப்பட்டு, கருவுற விரும்பும் மகளிருக்கும், கருவுற்ற மகளிருக்கும் இதனை வாங்கி வந்து கொடுத்தால் நலமடைவர் என்றும் நம்பப்பட்டு இன்றும் மேற்கொள்ளப்படுகின் றது. இச்சடங்குமுறை பழைமையான சடங்கு முறையுடன் தொடர்புபட்டுள்ளது. இதனை சங்க நூலாகிய பெரும்பாணாற்றுப் படையிலே, "தெய்வமடையில் தேக்கிலைக்கு வைகி" என்றவாறான பாடலிலே காண முடிகின்றது.

சந்நிதி ஆலயத்திலே அதிகளவிலான அடியவர்கள் நேர்த்திக்கடன் கழிப்பதனை யும் காணலாம். அவற்றுள் ஒன்றாக காவடி யெடுத்தல் என்பதையும் கூறலாம். இக் காவடியெடுத்தல் என்பது பலவகையின தாகக் காணப்படுகின்றது. சந்தனக் காவடி, சர்ப்பக்காவடி, பாற்காவடி, தூக்குக்காவடி, துலாக்காவடி, செடிற்காவடி, வேற்காவடி என்று பல்வேறு வகைப்பட்ட காவடிகளை எடுத்துவருவர். தமது உடலை வருத்தி 02, 04, 08 என்றவாறு முற்களைக்குற்றி காவடி யெடுத்து ஆடுவர். பெரும்பாலும் ஆண்களே காவடியெடுத்து நேர்த்திக்கடன் புரிவர். அத்துடன் அலகு குத்தியும் காவடியெடுப்பர். இவையாவும் பல வேண்டுதல்களுக்காகவே மக்கள் எடுத்து நிறைவேற்றுவர். அது மட்டு மின்றி முருகனது வேலினை நாவிலே குற்றி யும் தமது வீர நேர்த்திக்கடனை நிறை வேற்றுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும் தமது நேர்த்தியினைப் பூர்த்தி செய்வர். ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் இவ்வழிபாட்டு முறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாய் உள்ளனர். அதாவது தூரப்பிரதேசங்களில் இருந்து தமது குல தெய்வ பீடங்களில் இருந்து தமது நேர்த்தியைக் கழிக்க நடையில் வருவதனையும் காணலாம். பாற் செம்பு எடுத்தல், ஆணி குற்றிய பாதுகையில் ஏறி நடத்தல், தீச்சட்டி எடுத்தல், அடியடித்தல். போன்ற வழிபாட்டு முறைகளை மேற்கொள்வர். பெண்களும் தமது உடலில் முள்குத்தியும், அலகு குத்தியும் நேர்த்திக்கடன்களைச் செய்வர். ஒவ்வொருவரது வேண்டுதலின் தன்மையிலும் அவர்களது நேர்த்திக்கடன் கடினத்தன்மையும் நெகிழ்வுத் தன்மையும் உடையதாக விளங்கும்.

மேலும் உற்சவகாலங்களில் ஆலயங்களில் கரகம் எடுத்து ஆடுதல், வேல்ஆட்டம், உருவேறிய ஆட்டம், வேடுவர் ஆட்டம் என்பனவும் இடம்பெறும். கரகம் எடுத்து ஆடுதல் என்பது கரகத்தை எடுத்து தலையில் வைத்துக்கொண்டு வேப்பிலையால் ஆடை அணிந்து அல்லது கையில் வேப்பிலை கொண்டு ஆடுதல் ஆகும். வேலாட்டம் என்பது தடியின் நுனியில் வேலைச் செருகி முருகன் கோயிலில் ஆட்டப்படுவது. இவ்வழிபாட்டுச் சடங்கினை நாம் கதிர்காமத்திலும், மண்டூரிலும், சந்நிதியிலும் சிறப்பாகக் காணலாம். அத்துடன் பறை முழங்கவும், சங்கு ஒலிக்கவும் இங்கு ஆராதனைகள் இடம்பெறும்.

சந்நிதியில் பறையின் ஒலி கேட்டு அடியார்களுக்குள் தெய்வமேறி ஆடும் வழக்கமும் காணப்படுகின்றது. அன்பர்களினுடைய வாய் முருகா! முருகா! என்று அழைக்க கண்களில் நீர் ஆறாகப் பெருக கைகளை தலைமேல் குவித்து நின்று கும்பிடு கோலத்திலேயே ஆடுவர். பூசை முடிய பூசகர் வந்து விபூதியை அவர்கள் தலையிலே, வாயிலே போடும் வரை அவர்கள் ஆட்டம் நிற்பதில்லை. வேலோடு ஒன்றிய மனத்தினராகி அவர்கள் மெய்மறந்து ஆடும் காட்சி வேறு எந்த ஆகமஞ்சார் கோயில்களில் காணமுடியாத ஒன்று. இக் காட்சியினை நாம் சந்நிதி ஆலயத்தில் கண்டுகளிக்கலாம். இங்கு சதுர்க்கச்சேரி இடம் பெறுவதில்லை. கதாகாலஷேபங்கள், பாட்டுக் கச்சேரிகள், பஜனைகள் நடைபெறு வது வழக்கம்.

சந்நிதியில் நடைபெறும் வேட்டைத்திருவிழா ஊர்வலத்திலும், சூரன்போர் ஊர்வலத்திலும் வேடுவர் ஆட்டம் இடம்பெறும். இலைகள், குழைகளினாலும், கரியினாலும், தம்மை ஒப்பனை செய்து கொண்டு வேடுவரின் ஆயுதங்களைக் கையில் தரித்து வேடுவரைப் போற்றி ஒலி எழுப்பி ஆட்டப்படும் ஆட்டமாகும். இது நேர்த்திக் கடனுக்காகவும் செய்யப்படும்.

மேலும் சந்நிதியில் இடம்பெறும் சடங்கு முறைகளாக மொட்டையடித்தல், பிள்ளையை விற்று வாங்குதல், காது குத்துதல், சோறு ஊட்டுதல், பால்பருக்கல் போன்றனவும் பிள்ளைத் தொட்டில் கட்டுதல், போன்ற வழக்கங்களும் காணப்படுகின்றன. அத்துடன் உற்சவ காலங்களில் முருகன் வீதி உலாவருகின்ற வேளையில் ஆடல், பாடல்களுடன் சிறுமிகள் ஆராத்தி தட்டுடன் அழைத்து வந்து வழிபடுவதனையும் நாம் காணலாம்.இதனை கதிர்காமத்திலும் நாம் கண்டுகொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் செல்வச்சந்நிதியான் அடியவர்கள் யாவரும் தம்முடைய விருப்பப் படி வழிபாடாற்ற வழிசமைத்துள்ளான். சாதி, மத, மொழி பேதமின்றி அனைவரும் வழிபட வும், உயர்வு, தாழ்வு எனும் நிலை நீங்கி அனைவரும் முருகனருள் பெறத் தகுதியு டையவர் என்பதனை சந்நிதி ஆலயம் எடுத்துக் காட்டுகின்றது. இங்கு பூசைகள் பன்னிரண்டு வேளைகள் இடம்பெறுவ தில்லை. மூன்று நேரப் பூசைகளே இடம் பெறுகின்றன. மூல மூர்த்தியாய் விளங்கும் எம்பெருமான் திருவேல் என்றும் தன் அடியார்க்கு சுகத்தையே வழங்கும். இவ்வா றான வகையில் ஆகமஞ்சாராத வழிபாட்டின் தனித் தன்மையினை எந்நேரமும் பறை சாற்றிக் கொண்டிருப்பதில் சந்நிதியும் பெரும் பங்கு வகிக்கின்றது என்றால் அதுமிகை யல்ல என்பதுடன் முருகன் ஆலயங்களில் இடம்பெறும் ஆகமஞ் சாராத வழிபாட்டு முறைமையானது மக்களுக்கு எளிமை யான வழிபாட்டு முறைமையாக விளங்குவ தோடு மட்டுமல்லாமல் ஈழத்திலே மறைந்து போன மறைந்துகொண்டிருக்கின்ற கலை யம்சங்களை மீண்டும் உயிர்ப்பிக்கின்றது. இங்ஙனமே தொன்றுதொட்டு ஆகமஞ் சாராத வழிபாடுடைய ஆலயங்களும், இந்து பண்பாட்டினுடைய ஆலயங்களும் இந்து பண்பாட்டினுடைய கருவூலங்களே!

"வேண்டுவார் வேண்டியதை வேண்டியவாறே
கொடுக்கும்
ஆண்டி நீ ஐயா அருள்வாய் வேலாயுதனே"

# தமிழ்த் தெய்வம்!

**பல்லவி**

அழகொழுகும் நல்லையிலே ஆலயம் கொண்டவா!
அண்டி வந்து தொழுவோர்க்கு அருளும் திருமுருகா! (அழ)

**அநுபல்லவி**

நிழலாக நினைத் தொடர நின்மதி தருபவா!
நெஞ்சாரப் பாடுகின்றோம்! நீ இரங்கி வாருமையா! (அழ)

**சரணம்**

ஆலயத்து வீதிகளில் அடியார் திருக்கூட்டம்!
அற்புதமாய்த் திகழும் பொற்பதியின் எழிற்கோலம்!
நீல மயில்மீது வந்து நீ தருவாய் காட்சி!
நிதமெங்கள் 'நல்லை' யிலே நினதரும் அருளாட்சி! (அழ)

பாவலரும் நாவலரும் பக்தி கொண்டு பாடிடுவார்!
பைந்தமிழில் நினது திருப் புகழ்பாடி ஆடிடுவார்!
தேவர்கள் குறை தீர்த்த தெய்வமே திருக்குமரா!
தீந்தமிழ்த் தெய்வமெனத் திகழும் சிவ பாலா! (அழ)

**கலாபூஷணம் கீழ்கரவை.கி.குலசேகரன்**
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர்,
இலங்கை வங்கி, அப்புத்தளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படையும் ஆறுபடை வீடும்

சைவப்புலவர் செ.பரமநாதன்
தாவடி

ஆறுபடை வீடு கொண்ட திருமுருகா!
திருமுருகாற்றுப் படையில் வரும் முருகா!

என்ற பாடலின் அடிகளைக் கேட்ட அந்த நாளிலேயே இந்த ஆறுபடை வீடுகளைப் பார்த்து அதன் விபரங்களைக் கட்டுரையாகத் தொகுத்து எழுத வேண்டும்; என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது! இந்தியாவில் வாழ்ந்த ஐந்து ஆண்டுகளில் ஆறுபடை வீடுகளின் பெருமைகளை அறியக் கூடியதாய் இருந்தது. அங்குள்ள ஆறுபடை வீடுகளின் விபரங்களை அங்கு வாழ்ந்த பெரியோர்கள் பொதுமக்கள் என்போரிடம் கேட்டறிந்த விபரங்களின் அடிப்படையில் தான் இக்கட்டுரை உருவானது.

ஆற்றுப்படையென்ற இலக்கிய வடிவம் தமிழுக்குரிய தனிச்சிறப்பானதொன்றாகும். பாணர்பொருநர், விறலியர், கூத்தர், வைரியர் ஆகியோரை ஆற்றுப்படுத்தும் நெறியினின்றும் வித்தியாசமாக அமைவது திருமுருகாற்றுப்படை. ஏனைய ஆற்றுப் படைகள் பொருள் வேண்டி மன்னர்களிடத்தே ஆற்றுப்படுத்தும் மரபிலமைந்து காணப்பட்டது. திருமுருகாற்றுப்படை மட்டும் முருகக்கடவுள் வீற்றிருக்கும் இடங்களில் சென்று அவனருளைப் பெற்று மீள்கின்ற முருகனடியான் ஒருவன் முருகன் அருளைப் பெறுவதற்கு பக்குவம் வாய்ந்த ஒருவனை வழியில் கண்டு தான் பெற்ற அருளின் வரலாற்றை அவனுக்கு எடுத்துக் கூறி, அவனையும் முருகன் பாற் சென்று அருள் பெறுமாறு அவனுக்கும் எடுத்துக் கூறி அவனருளைப் பெறுமாறு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது திருமுருகாற்றுப்படை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவின்குடி, சுவாமிமலை, குன்றுதோறாடல், பழனி என்பன ஆறுபடை வீடுகளாகும். திருமுருகாற்றுப்படையை இயற்றியவர் நக்கீரராவார். முருகக் கடவுள் குற்றமில்லாத கற்பினை உடைய தெய்வானையாரின் கணவர் முருகக் கடவுள், இடைவிடாது ஒளி செய்கின்ற திருமேனியை உடையவர். தம்மை அடைந்தாரது தீவினையைப் போக்கவல்லவர். இடியை ஒத்த வலியினை கொடுத்து பகைவரை அழித்து அவர்களைக் கலங்க வைத்த ஆற்றலையுடையவர்.

இவ்வளவு ஆற்றல் மிக்க முருகக் கடவுளை வணங்கி திருவருளைப் பெற விரும்புவராயின், அவன் எங்கு உறைவான் என்பதைக் கேட்கும் போது கூறுவேன் அதைக்கேள், மதுரைக்கு தென்மேற்கில் திருப்பெருங்குன்றம் என்னும் கோவிலில் முருகப் பெருமான் எழுந்தருளி இருப்பான் எனக் கூறலாம். முருகனால் விரும்பி வீற்றிருக்கும் ஆறுபடை வீடுகளில் முதன்மை பெற்றது திருப்பரங்குன்றமாகும். இக் கோவில் சங்க காலத்திலே சீரும் சிறப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று விளங்கிய இத்தலம் பாண்டிய நாட்டில் பாடல் பெற்ற பதின்னான்கு தலங் களில் முதன்மை பெற்று விளங்குகின்றது. திருப்பரங்குன்றம் என்ற சொல் அழகிய பரம் பொருளாம் இறைவன் அமர்ந்துள்ள மலை என்பதாகும். முருகவேளுக்கு சிறப்பாக வுள்ள மற்றத் தலங்களிலும் திருப்பெருங் குன்றம் முருகனுக்கும், சிவனுக்கும் பொது வாகவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குன்றின் அடிவாரத்தில் முருகனது கோவில் உள்ளது. தெய்வானையைத் திரு மணம் செய்து கொண்டதும் இத்திருப்பெருங் குன்றத்தில் தான். எனவே முருகன் மண வாள கோலத்திலே காட்சி தருகின்றார். பங்குனி உத்தர நன்நாளிலே தெய்வானை திருமணம் நிகழ்ந்ததாகக் கருதி இவ் விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

முருகப் பெருமான் ஆறுபடை வீடுகளில் எழுந்தருளியிருக்கிறார் என்ற வழக்கு அடிப்படையே திருமுருகாற்றுப்படை தான். அருணகிரிநாதருடைய பாடல்களிலும் முருகனைப் பற்றிய துதிநூல்களிலும் ஆறுபடை வீடுகளைப் பற்றிய செய்திகள் நிரம்பி வருகின்றன. நக்கீரர் ஆறுபடை வீடுகள் என்று குறிப்பிட்டுச் சொல்லா விட்டா லும், ஆறு இடங்களைத் தனியே வைத்து சுட்டிக் காட்டுவதால் ஆறுபடை வீடுகள் என்ற அமைப்பு உண்டாயிற்று. வேறு பல இடங் களிலும் முருகன் இருந்தாலும் ஆறு என்ற எண்ணிக்கைக்கும் அவனுக்கும் தொடர்பு மிகுதி, ஆகையால் ஆறுபடை வீடு என்ற வழக்கு நிலையாக நின்று விட்டது.

திருப்பெருங்குன்றத்திற்குத் தேவாரம் உண்டு. சிவனும் முருகனும் வேறல்ல என்று பேசுகின்றது கந்தபுராணம். எனவே ஐந்து முகக் கடவுளாலேயே ஆறுமுகக் கடவுள் தோற்றுவிக்கப்பட்ட தத்துவத்தையும் திருப்பரங்குன்றத்துடன் பொருத்திப் பார்த் தால் மிகுந்த சுவையும் நயமும் பயப்பதாகும்.

இலக்கிய வகையில் நோக்கினாலும் வரலாற்று முறைப்படி பார்த்தாலும் முருகனு க்கு உரிய ஆறுபடை வீடுகளும் தமிழகத்தி லேயே அமைந்திருக்கின்றன. முருகன் வள்ளியை மணந்த இடம் திருத்தணிகை, தேவயானையை மணந்த இடம் திருப் பெருங்குன்றம், சூரனை வென்ற இடம் திருச்செந்தூர், விரும்பிய மாங்கனி கிடைக் காததினால் மலை மீது நின்ற இடம் பழனி. அதன் அடிவாரத்தில் அமைந்திருப்பது ஆவினன்குடி, அப்பனுக்கு பிரவணத்தை ஞானஉபதேசம் செய்த சுப்பனாக அமர்ந்த விடம் சுவாமிமலை.

முருகு இது தூயதமிழ் சொல். இது மணம், அழகு, தெய்வத்தன்மை என்னும் பொருளை உணர்த்தும் பண்டைத்தமிழர் தமது கடவுளுக்கு இட்ட பெயர் முருகு என்பது அது தொல்காப்பிய காலத்தில் அன் விகுதி பெற்று முருகன் என வழங்கியது.

வடமொழி வேதங்களிலும் பிராமணங் களிலும் முருகனைப் பற்றிய குறிப்பு இல்லை. வேத காலத்து ரிஷிகள் முருகனை அறியார். வேதம் தோன்றிய அதே காலத்தில் தென்னகத்தில் முருக வழிபாடு சிறப்புப் பெற் றிருந்தது. பிற்காலத்தில் எழுந்த வடமொழி ஆகமங்களிலும் புராணங்களில் மட்டுமே தொழிற்பாட்டைக் காண்கின்றோம்.

திருமுருகாற்றுப்படையில் இரண்டாவ தாக வருவது திருச்செந்தூராகும். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பெரிய தலமாகும். அத்தோடு பழமையும் கொண்டதாகும். அலைவாய், செந்தில் என்ற நாமங்களும் சங்க காலத்து நூல்களில் வருகின்றன. எப்போதும் அலை மோதுமிடம் அலைவாய், முருகப் பெருமான் சூரபன்மனோடு போராடி வெற்றி பெற்ற இடம் திருச்செந்தூர் வெற்றிமலைக் கவிராயர் என்னும் புலவர் புராணம் பாடியுள்ளார்.

திருச்செந்தூர் பற்றிய குறிப்பு அகநாநூற்றில் "திருமணி விளக்கின் அலைவாய் செருமிகு சேவாய்" என்றும்; புறநானூற்றில் வெண்டாள் புணரி தலைக்கும் செந்தில் நெடுவேல் நிலைகிய காமர்வியன் துறை என்றும் சிலப்பதிகாரத்தில் "சீர் கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றமும் ஏரகமும் நீங்கா இறைவன்" எனவும், அப்பர் சுவாமிகள் "நன் செந்தில் மேயவள்ளி மணாளனுக்கு தாதை கண்டாய் என்று வருமிடங்கள் நோக்கப்பாலன. இப்படியாக திருச்செந்தூர் சிறந்து விளங்குகின்றது.

ஒரு காலத்தில் செருக்குற்றிருந்த பிரமனை முருகக் கடவுள் சிறையிலிட்டார். இக்கதையினை எடுத்துக் கூறிப் படைவீடுகளில் மூன்றாவதாகத் திகழும் திருவாவினன் குடியைப் பற்றி குறிப்பிட்டுப் பேசுகின்றது திருமுருகாற்றுப்படை. ஆவியர்குடி என்பது குறுநில மன்னர்களின் குடிகளில் ஒன்று. அவர்கள் அரசாண்டு வந்த இடம் இது. இத்தலத்திற்கு பல திருப்புகழ் பாட்டுகள் உண்டு. பழனிமலை அடிவாரத்தில் திருவாவினன்குடி ஆலயம் அமைந்துள்ளது. இந்தத் திருத்தலத்தில் வடகிழக்குப் பகுதியில் சரவணப்பொய்கை இருக்கிறது. இது ஒரு புண்ணிய தீர்த்தமாகும். திருவாவினன் குடியில் முருகன் மயில் மீது அமர்ந்த வண்ணம் குழந்தை வேலாயுதசாமி என்ற நாமத்துடன் அடியார்களுக்கு காட்சி தருகிறார்.

பழனி மலையான் எழுந்தருளி இருக்கும் திருமலை 450 அடி உயரமுடையது; மலை உச்சியில் ஞானதண்டாயுதபாணி ஆலயம் மிகவும் அழகாக அமைந்துள்ளது. மலையில் உள்ள ஆலயத்திற்கு ஏறிச் செல்வதற்கு 697 படிகள் உள்ளன. கடம்பு முதலிய பல வகை மரங்கள் செழித்து ஓங்கி வளர்ந்துள்ளன.

நான்காவது படைவீடு திருவேரகம் எனப் படும் சுவாமிமலை. இதிலே அந்தணழியல்பு சிறப்பித்துக் கூறப்படுகின்றது. ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களும் உடையர், பூவைக் கையிலேந்தி நமோகுமாராய என்னும் மந்திரத்தை நாப்புடை பெயர உச்சரித்து முருகக் கடவுளை வழிபடுவர். அதற்கு மகிழ்ந்து திருவேரகத்தில் முருகன் எழுந்தருளுகிறான் என்று பாடுகின்றது திருமுருகாற்றுப்படை.

குமரப் பெருமான் குருநாதராகவிருந்து சிவபெருமானுக்கு உபதேசித்த இடந்தான் சுவாமிமலை என அழைக்கப்படுகிறது. இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து மேற்குப் பக்கமாக ஐந்து மைல் தூரத்தில் உள்ளது.

சிவன் ஞானோதயம் பெற்ற தலமாக திருவேரம் திகழ்வதாய் இங்கு பூநூல் அணியும் சடங்கு செய்தல் மிகவும் விசேடமாகக் கருதப்படுகிறது. திருவேரகத்திற்குச் செல்லும் வழியில் பாடல் பெற்ற தலமான திருவலஞ்சுழி அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுருகாற்றுப்படையில் ஐந்தாவதாகப் பாடப்படும் திருத்தலம் குன்றுதோறாடல். குன்றக் குறவை இங்கு சிறப்பிடம் பெறுகின் றது. முருகக் கடவுள் குறமாதரோடு ஆடு கின்ற காட்சியைக் கூறுகின்றார். குன்று தோறாடல் தொகைத் தலமாகும். இப்படை வீடு இறைவனுடைய சர்வவியாபகத்தன் மையை மக்களுக்கு எடுத்துரைக்கின்றது அருணகிரிநாதர் குன்றுதோறும் குடியிருக் கும் முருகனை அழகாகப் பாடியிருக்கிறார். திருத்தணிகை, திருச்செங்கோடு, கதிர் காமம், குற்றாலம், விராலிமலை, குன்றக் குடி முதலியவையாகும்.

ஆறாவது படை வீடென கருதப்படுவது பழமுதிர்ச்சோலை எனச் சிலரும் பழனி என்று இன்னும் சிலரும் கூறுவர். பழமுதிர் சோலையின் இயற்கை வளம் திருமுரு காற்றுப்படையில் பேசப்படுகிறது. பழமுதிர்ச் சோலை என்னும் தலம் மதுரைக்கு அருகில் உள்ளது பழமுதிர்சோலை என்பதற்கு பழம் முற்றிய சோலை என்று நச்சினார்க்கினியர் விளக்கம் கூறுகின்றார். முதிர்ந்த பழங் களையுடைய சோலைகள் சூழ்ந்த மலை என்ற பெயரும் பொருந்தும்.

பண்டைக்காலத்தில் இங்கே முருகன் கோவிலும் திருமால் கோவிலும் ஒருங்கே அமைந்து சைவ, வைணவ சமய ஒற்றுமை யைப் பேணி இருக்கலாம் எனக் கருது வோருமுளர். ஔவைக்குப் பழம் கொடுத்த பழமுதிர்ச்சோலை என அன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. எனவே திருமுரு காற்றுப் படையிலே கூறப்பட்டுள்ள திருத் தலங்களை நினைத்து முருகன் திருவரு ளைப் பெற்றுய்வோமாக!

## என் கண் நிறைவாய்

**பல்லவி**

நீயென்றும் நினைவாகி முன்னிருப்பாய் - எனக்கு
நாளென்றும் துணையாகி வழிவருவாய்
சேயெந்தன் மீதுனது விழிபடர்வாய் - சக்தி
புத்திரனே சண்முக சுந்தரனே நீயென்றும்....

**சரணம்**

நலம்மேவும் இகமுறும் வாழ்வருள்வாய் - மனம்
கலந்திடும் மாயைப் பிணியறுப்பாய்
பலம் மேவி பயமூட்டும் பகையழிப்பாய் - உந்தன்
நிழலாறும் ஆனந்தப் பேறளிப்பாய் நீயென்றும்....

பூவினுள் பூவாகி பூத்தஎழிலாய் - என்
பாவினுள் பூத்திரு பைந்தமிழாய்
கோவிலெழில் நல்லூரில் உற்சவனாய் - அழகு
மேவிவரும் வேளையிலென் கண்நிறைவாய் நீ யென்றும்...

கலாபூஷணம் சிவ.சிவநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தப் பெருமானின் எழிற்கோலம் காண நாம் என்ன புண்ணியம் செய்தோமோ!

ஸ்ரீராம்குமார் நதிபரன்
நல்லூர்

யாழ்ப்பாணத்தின் சைவத்தின் தொன்மையை உலகிற்கு உரக்கச்சொல்லி நிற்பதில் காத்திரமான பங்கினை வகிப்பதில் ஆலயங்கள் முதன்மைவாய்ந்தவையாக விளங்குகின்றன. ஈழத்தில் சைவம் வாழ்கின்றது என்பதற்கு சாட்சியாக ஆலயங்களுடன் மக்களின் வாழ்வியல்முறை பிணைக்கப்பட்டிருப்பதனைக் குறிப்பிட முடியும். தாய்த் தமிழகத்தைப் பொறுத்தவரை ஆலயங்களின் எழுச்சி மட்டுமன்றி பக்தியிலக்கியங்களின் தோற்றமும் சைவத்தின் மேன்மையை அடையாளப்படுத்துவனவாக அமைகின்றன. ஆனால் ஈழத்தில், பக்தியிலக்கியங்கள் அல்லது இந்துசமயம் சார்ந்த நூல்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவிற்கு தோற்றம் பெறவில்லையென்றே கூறவேண்டும். இருந்தபோதிலும், ஆலயங்களின் எண்ணிக்கைக்கு பஞ்சமேயில்லை எனுமளவிற்கு திரும்பிய பக்கமெல்லாம் மூலை முடக்கெங்கும் ஆலயங்களின் இருப்பை தரிசிக்கலாம். இதனால்தான் கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம் என்ற முதுமொழியும் வழக்கத்திற்கு வந்திருக்கிறது போலும். இதிலிருந்து ஆலயங்கள் மக்களின் வழிபாட்டுடன்- வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றமைபற்றி அறியமுடியும். அன்றைய காலத்தில் "யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம்" என்ற கருத்தியல் வலுப்பெறுவதற்கு ஆலயங்களை மையப்படுத்தியதான புராண படனம் ஓதும் மரபானது தோற்றுவிக்கப்பட்டிருந்தது. சைவத்தின் காவலராக - மீட்பராக விளங்கிய ஆறுமுக நாவலரின் காலத்திலேயே புராணபடனம் ஓதும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டது. குறிப்பாக நல்லூரிலேயே இவ்வழக்கம் மேலுயர்ந்து காணப்பட்டது. நல்லைநகர் நாவலருக்கும் நல்லைக் கந்தனுக்குமிடையேயான உறவு மிகவும் இறுக்கமாக இருந்தது. அவரது ஆன்மிக அறப்பணிகள் பெரும்பாலும் நல்லூரை மையப்படுத்தியதாகவே காணப்பட்டன எனில் மிகையாகாது. நாவலரின் சமய மறுமலர்ச்சிக்கான விதை இங்கேதான் ஊன்றப்பட்டது என்பதனையும் மறுதலிக்க முடியாதளவிற்கு இவர் பணிகள் இவ்வாலயத்தைச் சுற்றியேயமைந்திருந்தன எனலாம்.

தற்காலத்தில் ஈழத்தமிழர்களின் புனித அடையாளச்சின்னமாக மிளிர்வது நல்லூர் கந்தசாமி கோயிலாகும். அந்தளவிற்கு ஈழத்தமிழரின் வாழ்வியலுடன் இவ்வாலயம் நீக்கமற நிறைந்துவிட்டது. ஈழத்துச் சித்தர் பரம்பரையின் மூலகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா சுவாமிகள் மற்றும் யோகர் சுவாமிகள் போன்ற அருளாளர்களின் காலடிபட்ட புனிதமண்ணில் அமையப்பெற்ற இவ்வாலயத்தின் சிறப்பை உணராதவர்கள் உலகில் இருக்க முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனுமளவிற்கு வான்புகழ் கொண்டு விளங்குகிறது. நல்லூர்த் திருவிழா ஆரம்பித்து விட்டதென்றாலே போதும் யாழ்.குடாநாடே விழாக்கோலம் பூண்டு விடும். நிலத்திலுள் ளவர்கள் முதற்கொண்டு புலத்தில் வசிப்பவர் கள் வரை அனைவரது பார்வைகளும் பிரார்த்தனைகளும் நல்லூரை நோக்கியே திரும்பிவிடும். கொடியேற்றம் முதல் தொடர்ந்து வருகின்ற 25 தினங்களும் நடைபெறுகின்ற மகோற்சவ பெருவிழாக்கள் அத்தனையும் அடியவர்கள் உள்ளங்களில் பக்திப் பிரவா கத்தை ஊற்றெடுக்க வைக்குமளவிற்கு அவற்றின் மகத்துவத்தை வெறும் வார்த்தை களுக்குள் வரையறுத்துவிட முடியாது. கந்தனுக்கு அரோகரா... கடம்பனுக்கு அரோகரா... முதலான முருக நாமங்களை, நாம சங்கீர்த்தனங்களாக சொல்லியவாறு அங்கப்பிரதட்சணம் செய்கின்ற ஆண் அடிய வர்கள் ஒருபால், அடியழிக்கின்ற பெண் அடியவர்கள் மறுபால், பஜனைகள் செய்யும் அடியவர்கள் இன்னொருபால், குங்கிலிய மிட்டு வழிபடுவோர் ஒருபால், காவடிகள் ஆடி ஆர்ப்பரிக்கும் பக்தர்கள் ஒருபால் என ஆலயச் சூழலே பக்திமணம் கமழும் வகை யில் மாறிவிடும். வெறுமனே இந்துக்கள் மட்டுமன்றி பிற இனத்தவர்களும் பிற சமயத் தவர்களும் இன, மத பேதங்களைக் கடந்து ஒன்று கூடுவர். அதுமாத்திரமல்லாமல் உள்ளூர், வெளியூர் ஊடகங்களின் கவனங் களும் கூடுதலாகக் காணப்படுவது இங்கு தான். குறிப்பாக முக்கியமான திருவிழாக் களில் இவற்றின் பங்களிப்பென்பது அதிகம். இலத்திரனியல் மற்றும் இணையவழி ஊடகங்கள் மேற்கொள்ளும் நேரடி அஞ்சல் மூலம் தூரதேசங்களிலுள்ளவர்கள், உல கெங்கும் பரந்து வாழுகின்ற தமிழ் உறவு கள், இத்தலத்திற்கு வந்துவழிபட முடியாத வர்கள் தத்தமது இல்லங்களிலிருந்தே மான சீகமாக வழிபட்டு ஆறுதல்கொள்கின்றனர். ஆக, உலகெங்கும் பரந்து வாழுகின்ற பக்தர் களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திரு ந்து அருள்சொரிகின்ற தமிழ்க்கடவுளாகிய முருகப்பெருமான் தன்னிரு சக்திகளுடன் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற நல்லை யம்பதியின் மகிமை பற்றி இவ்வூரின்கண் வசித்துவரும் இத்தலத்துடன் அதிகம் உற வாடி வருகின்ற சில வயோதிப அன்பர்களைச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிட்டியது. அவர்கள் தமது வாழ்க்கையில் ஏற்பட்ட சொந்த அனுபவங்களை,ஆலய வரலாற்றுச் சிறப்புக் களை, நல்லைக்கந்தனின் மகிமைகளை சம்பவங்களினூடாக பகிர்ந்து கொண்ட விட யங்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.

சிதம்பரநாதன் (வயது-75)- நான் சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக இங்க வந்து கும்பிடுறது வழக்கம். எனக்கு என்ன துன்பம் வந்தாலும் உடனே ஆறுமுக சுவாமி வாசலிலிருந்து அவனை நினைந்துருகி வழி படுவேன். இதனால் வந்த துயரனைத்தும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகி ஓடி விடும். அந்தளவிற்கு நல்லூரான் மிகவும் சக்தி வாய்ந்த கடவுளாக இருக்கிறான். ஏன்? யாழ்ப்பாணத்தில எவ்வளவு கோயில்கள் இருக்கு? ஆனால் இப்ப அங்க நடக்கின்ற கோயில் திருவிழாக்களுக்கு சனங்கள் போறது ரொம்ப குறைஞ்சு வருகுது தம்பி! சுவாமிகா வுறத்திற்கே ஆட்களைப் பிடிக்கிறதெண்டால் பெரும்பாடாகத்தான் இருக்கு. காலப்போக் கில், சாமி காவ சம்பளத்திற்கு கூட ஆக்க ளைப்பிடிச்சாலும் ஆச்சரியப்பட ஒண்டு மில்லை. அந்தளவிற்கு இப்பவெல்லாம் கோயில்களுக்கு மக்கள் போறதே வலு குறைவெண்டதால கட்டாயப்படுத்தி ஆக்களை கூப்பிட்டெல்லோ இப்ப சாமி காவுறாங்கள். ஆனால், இஞ்ச எத்தனை சனக் கூட்டங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவியுதெண்டு பார்! சாமிகாவவே எவ்வளவு போட்டியாக் கிடக்கு? இதுக்கெல்லாம் இக் கோயிலில் எவ்வளவு சக்தியிருக் கெண்டு தெரியுது தானே! இந்த மண், செல்லப்பர், யோகர் முதலிய சித்த புருசர்கள் நடமாடிய புனிதமான மண்ணல்லவா? தேரடியருகில் நிற்கின்ற வில்வமரத்தின் கீழிருந்துதான் யோகர் சுவாமிகள் தவம் செய்தவர். செல்லப் பரும் கூட இதன் அருகில் தான் இருந்து தியானம் செய்தவராம்.பல நூறு வருடங்கள் கழிந்தபோதும் எத்தனை புயல்கள், கடும் மழைகள், வெள்ளங்கள் என இயற்கை யழிவுகள் வந்தன. இருந்தும் எந்த இயற்கை இடருக்கும் அசராமல் மிடுக்குடன் நிற்கின் றது பார். இப்பவும் கூட, இந்த வில்வமரத் தின் கீழ் இருக்கும் போது ஒருவித இனம் புரியாத அமைதி, உள்ளுணர்வு ஏற்படும். இதனால்தான் பலர் இம் மரத்தடியிலிருந்து சிவயோக சுவாமிகளது நற்சிந்தனைகள், கந்தபுராணம் படித்தல், திருமுறை ஓதுதல் என்பவற்றை மேற் கொண்டு வருகின்றனர். இதனால் அவர்களைச் சுறியுள்ள கஸ்ரங் கள், துன்பங்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் காணாமல் போய்விடும். இவையெல்லாம் நான் கண்டுணர்ந்த உண்மைகள்தாம் என்றார்.

சகாதேவன் (வயது 72) -எனக்கும் இந்த நல்லூரானுக்கும் இடையே என்னவாலா யமோ தெரியாது. பொழுது விடிஞ்சா நல் லூர்க் கந்தனை நோக்கி என்னை இழுத்துப் போடும். அந்தளவிற்கு எனக்கும் அவனுக்கு மிடையே இனம்புரியாத உறவு ஆழமா இருக்கு. எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஏராள மான கோயில்கள் இருக்கு. காலப்போக்கில ஆலய நடைமுறைகளை பக்தர்களின் வசதி களுக்கேற்ப ஆலய நிர்வாகங்கள் தளர்த்து கினம். ஆனால் இக் கோயிலில் ஆரம்ப காலம் முதலே, நான் சிறுவனாக இருந்த போதிருந்த பல நடைமுறைகள் மாறாமல் அப்படியே இருக்கு. உதாரணங்களுக்கு சில வற்றை சொல்லுறன். அதாவது ஆண்கள் மேலங்கியணிந்து ஆலய உட்பிரகாரத்தி னுள் செல்லமுடியது என்ற நடைமுறை இறுக்கமாக பேணப்பட்டு வருகிறது. எந்த நாட்டுத் தலைவர்கள் வந்தாலும் மேலங் கியை கழற்றியே செல்ல வேண்டும். ஏன் இலங்கை வரலாற்றில் ஜனாதிபதிகள் பிரதமர்கள் கூட மேலங்கியை கழற்றி விட்டே உள்ளே சென்ற, செல்கின்ற வரலாறு களை நாம் பார்க்கிறோமல்லவா? இதில பல விமர்சனங்கள், எதிர்ப்புகள் வந்தாலும் ஆலய நிர்வாகம் இந்த நடைமுறையை ஒரு போதும் தளர்த்தவில்லை. இதில விஞ்ஞான பூர்வமான அறிவியலும் ஒளிஞ்சிருக்கு கண்டியளே! ஏனென்றால் கர்ப்பக்கிரகத்தி லிருந்து அதிகளவு சக்தி ஓட்டங்கள், அதிர்வு கள் வெளிவருகின்றனவாம். மணியோசை களிலிருந்து கிளம்பும் அதிர்வுகள் வேற. இப்படியான அதிர்வுகள் நமது உடலுள் கடத் தப்படுவதால் எமக்கு பலவித நன்மைகள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. அடுத்தவிடயம், அர்ச்சனைக்கு ஒரு ரூபா அறவிடப்படுவ தைக் குறிப்பிடலாம். இதனால் ஏழைஎளிய மக்கள் கூட அர்ச்சனை செய்யக்கூடிய வாய்ப்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டு மன்றி ஏனைய அபிசேகங்களுக்கும் அதாவது உருத்திர அபிசேகம், சண்முக அபிசேகம் மற்றும் திருவிழாக்கள் முதலியவற்றிற்கும் கட்டணங்கள் ஆரம்ப காலத்திலுள்ள கட்டண அளவாகவே காணப்படுகிறன. அதைவிட முக்கியமான விசயம் என்ன வெண்டால் பூசை நேரகால ஒழுங்குகள் இறுக்கமாக பேணப்படுகின்றமையாகும். இது ஏனைய கோயில்களிலில்லாத விசேட நடைமுறையாகும். நாளாந்தம் நடைபெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பூசைகள், அபிசேகங்கள் முதல் திரு விழாக்காலங்களில் நடைபெறும் நைமித் திய பூசைகள், கிரியைகள் மற்றும் சாமி வெளிவீதிவலம் வரும் நிகழ்வுகளில் கூட ஒழுங்கமைக்கப்பட்ட நேர முகாமையின் படிதான் நடைபெற்றுவருவது அன்று தொட்டு இன்றுவரை இருக்கும் வழமையாகும். இவ் வாறாக பலவிதமான பாரம்பரிய நடைமுறை கள் தற்போதும் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதானால் தான் இக்கோயிலின் தனித்து வம் பன்மடங்கு உயர்வதற்கு காரணங்க ளாக அமைகின்றன என்பதே எனது தாழ் மையான கருத்து என்று நல்லூரின்கண் பின்பற்றப்பட்டு வருகின்ற பழையகால நடை முறைகள் பலவற்றினை அவர் அடுக்கிக் கூறினார். இருப்பினும் இவர் கூறிய அனை த்து விடயங்களும் இடத்தின் அளவுகருதி வெட்டியும் சுருக்கியும் தரப்பட்டிருக்கின்றன.

கருணாகரன் (வயது 70) - இவர் தொன்றுதொட்டு பஜனை மூலம் பண்ணொடு இசைப்பாக்களை ஓதிவருபவர். இவரது பண்ணிசைக்கலைமூலமான ஆன்மிகப் பணியை இங்கு நடைபெறுகின்ற விசேட உற்சவங்களில்காணமுடியும். இவரது கருத்து கள் அனைத்தும் கலைகளைத் தழுவியதா கவே அமைந்துள்ளன. அவர் கூறிய கருத் துக்கள் சுருக்கித் தரப்பட்டுள்ளன. கலை களின் ஒட்டுமொத்த வடிவமாக ஆலயங்கள் விளங்குகின்றன. இந்துசமய வழக்கில் கலைகள் 64 ஆக உள்ளன என குறிப்பிடப் படுகின்றது. இக்கலைகள், ஆலயங்களை மையமாகக் கொண்டே எழுச்சி பெற்றன. நல்லூரைப் பொறுத்தவரை இசை, நடனம், கட்டடம், சிற்பம் ஓவியம் முதலிய பல்வேறு கலைப்படிமங்களை தரிசிக்க கூடியதாகவி ருக்கிறது. திருமுறை, பஜனைகள் பாடுதல், மங்கள வாத்தியங்களின் இசைகள், மற்றும் திருக்கார்த்திகை உற்சவத்தின் போது மாலைவேளையில் ஆலய உட்பிரகாரத்தில் பல்வேறு வாத்தியக் கலைஞர்கள் ஒருமித்து இசைக்கிற பல்லிய இசை என்பவை இசை க்கு முக்கியத்துவமளிக்கப்படுவதனைக் காட்டுகிறது. நடனக் கலைக்கு, அந்தக் காலத் தில் சாமி வெளி வீதிவருகையில் கரகாட்டம், கும்மி போன்றவை தனியிடம்பெற்றன. அத்துடன் நடராஜரின் 108 தாண்டவங் களும் புராண, இதிகாசக் கதைகளும் உட் சுவரில் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன. கட்டடக்கலைக்கு ஆலய முகவாயில் கோபுரம், சண்முகவாசல் நவதள கோபுரம், குபேரவாசல் கோபுரம் முதலிய மூன்று கோபுரங்களும், சிற்பக்கலைக்கு அக் கோபுரங்களில்செதுக்கப்பட்ட சிற்ப வேலைப் பாடுகள் மற்றும் சாமி சிலைகள், வாகனங் களிலுள்ள சிற்பங்கள் போன்றவை முக்கிய மானவையாகும். ஆலய உட்சுவர்களில் தீட் டப்பட்டுள்ள ஓவியங்கள் மற்றும் கோபுரங் களிலுள்ள சிற்பங்கள் என்பவை ஆழ்ந்த பொருட்தத்துவத்தை எமக்கு வெளிப்படுத்தி நிற்பவையாகும். அவற்றை இன்றைய இளஞ் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேலும், இரவு வேளைகளில் ஆலய வெளிவீதியைச் சுற்றியுள்ள மண்டபங்களில் நடைபெறும் கர்நாடக இசைக்கச்சேரிகள், வாத்தியக் கச்சேரிகள், வில்லிசை, பரதநாட்டிய நிகழ்வுகள், ஆன்மிகச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள் என்பவையும் கலைக ளின் உறைவிடமாக ஆலயங்கள் திகழ்கின் றன என்பதற்கு நல்லூரே சாட்சியாகின்றது. தற்காலத்தில் மக்களின் ஆன்மிக நாட்டங் கள் வெகுவாக குறைவடைந்து வருகின் றன. எனவே கலைகளின் மூலம் ஆன்மிக உணர்வை, இறை சிந்தனையை, ஒழுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களை இன்றைய இளையோர் மனங்களில விதைக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இன்று ஏனைய கிராமங் களிலுள்ள ஆலயங்களில் நடைபெறும் திரு விழாக்களில இளையோர்களின்ர தொகை வீழ்ச்சியடைந்து வருவதனைப் பார்க்கி றோம். ஆனால் நல்லூர் கந்தசாமி ஆலயம் மட்டும் இதற்கு விதிவிலக்கு என்றுதான் கூற வேண்டும். அதிகமான இளைஞர், யுவதி கள் இவ்வாலயத்திற்கு வந்து வழிபடுகிறார் கள். பிரதட்டை செய்தல், அடியழித்தல், காவடியெடுத்தல் போன்ற செயற்பாடுகளில இளையோர்கள் தான் அதிகம் ஈடுபட்டு வரு வதனைக் காணமுடிகின்றது. அறநெறிப்பாட சாலைகளில் கல்விபயிலும் இளம் பிள்ளை களும் ஆலய வெளிப்பிரகாரங்களில் நடை பெறுகின்ற கலைநிகழ்வுகளிலும் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் பங்குகொள்கின்றனர். ஆகமொத்தத்தில், கலைகளுக்கும் கலைஞர் களுக்கும் சிறப்பான இடத்தினை இக்கோயில் வழங்கி வருகிறதுடன் ஆன்மிக நாட்டத்தை யும் கூட்டுணர்வையும் ஆளுமைப் பண்பு களையும் இளையோரிடத்தில் வளர்க்கின் றன. என்று அவரது கருத்துக்கள் அமைந்தி ருக்கின்றன.

இவர்களைப்போல எத்தனையோ கோடி பக்தர்களின் மனங்களிலே நல்லைக் கந்தன் நீக்கமற நிறைந்து அருளாட்சி செய்து கொண்டிருக்கிறான். அவர்களது மனப்பதிவு களையெல்லாம் இங்கே குறிப்பிடுவதென் பது இயலாத காரியம். இருந்தும் மேலே விவரித்திருக்கின்ற ஓரிருவரின் கருத்துக் களும் அத்தனை கோடி பக்தர்களின் மன உணர்வுகளை ஓரளவுக்கேனும் பிரதிபலித் திருக்கும் என நம்பலாம். நமது ஈழமணித் திருநாட்டைப்பொறுத்தவரை அழியாச்சிறப்பு டைய நல்லூர் கந்தன் ஆலயத்தின் தொன்று தொட்டு வருகின்ற வழக்காறுகள் பல தசாப் தங்கள் கடந்தாலும் வழமை மாறாது இறுக்க மாக கடைப்பபடிக்கப்பட்டு வருவதானது ஏனைய ஆலயங்களிலிருந்து இவ்வாலயம் வேறுபட்டு தனித்துவமாக நிற்பதற்குரிய முகாந்திரமாக அமைகின்றது. அதுமாத்திர மன்றி, இலங்கையின் மூவின மக்கள் மட்டு மல்லாமல் தேசங்கடந்தும் வேற்றின மக்க ளும் இன, மத பேதமின்றி வழிபாடாற்றும் பாங்கும் மெச்சத்தக்கது. இத்துணை சிறப்புக் களையெல்லாம் ஒருங்கே கொண்டிலங்கும் யாழ்நகரத்தின் நடுநாயகமாக பொலிந்து விளங்கும் நல்லைக்கந்தனின் திருவருட் கோலம் காண்பதற்கு நாம் என்ன புண்ணி யம் செய்தோமோ?என எண்ணத் தோன்று கின்றது.

## நல்லூர் குபேர வாசல்
## இராஜகோபுர கலசாபிஷேகம்

நல்லூர்க் கந்தன் ஆலய குபேர வாசல் நவதள இராஜ
கோபுரத்திற்கான கலசாபிஷேகம்
04.09.2015 வெள்ளிக்கிழமை அன்று (கார்த்திகைத் திருவிழா)
காலை 06.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரடியில் இருந்து பாரடா தேகமெலாம் புல்லரிக்கும்

கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தேவர்களும் வானிலிருந்து பூமிக்கு இறங்கிவந்து அடியார்களோடு அடியார்களாகக் கரங்கூப்பும் அற்புதமான இடந்தான் நல்லூராகும். அதனாலேயே நல்லூரை நோக்கி பல்லின மக்களும் ஈர்க்கப்படுகிறார்கள். முருகப் பெருமானின் திருவிளையாடல்களையும், அற்புதங்களையும், அதிசயங்களையும் கண்டு களித்து இன்புறுவதற்கு ஏற்ற இடமாக விளங்குவது நல்லூர்க் கந்தசாமி கோவிலின் முன்பாக விளங்கும் தேரடியாகும். அதனருகே ஒரு வில்வமரம் முருகப் பெருமானின் சகல வரலாறுகளையும் எடுத்தியம்புவதாக நிமிர்ந்து நீண்டு வளர்கிறது. அந்தமரத்தடியிலே தான் செல்லப்பா சுவாமிகளும், யோகர் சுவாமிகளும் முருகனோடு பேசியும், உண்டும், களித்தும், விளையாடியும், ஒன்றாக உறங்கியும் பேறுகொண்ட இடமாய் அதிர்கிற பாக்கியம் கிடைக்கிறது. இத்தகு உண்மையினை எவரும் உணரலாம்.

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன்
– சந்நிதியில்
தேரடியிற் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து

வண்டு பண்செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக்
– கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்றென்றான் சிரித்து

ஈழத்துச் சித்தர்கள் வரிசையில், தேரடியை முழுமையாக அனுபவித்தார்கள்.

கடையிற் சுவாமிகள்
செல்லப்பா சுவாமிகள்
யோகர் சுவாமிகள்
குடைச் சுவாமிகள்
நயினைச் சுவாமிகள்
வடிவேல் சுவாமிகள்
சிவசத்த சுவாமிகள்
சபாரத்தினம் சுவாமிகள்
கனகரத்தினம் சுவாமிகள்

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். காலை மாலை நேரங்களில் மிக மிக எளிமையாகவும், தூய்மையாகவும், புலனொடுக்கமாகவும் நல்லூரானை எண்ணி இருக்கும் போது செல்லப்பரும் யோகரும் உங்களோடு சுகித்திருக்க தேரடியில் வந்திடுவர். அப்போது உங்கள் தேகம் புல்லரிப்பதைப் பார்த்து வியந்திடுவீர். உணர்ந்திடுவீர்.

"ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறி வாளன் பேர் செல்லப்பன்
பாரறியாத பயித்தியக் காரன்
தேரடிப் படியில் தினமுமிருப்பான்"

**நற்சிந்தனை**

செல்லப்பர் தேரடியிலிருந்து உத்தம சீட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரான யோகருக்கு உபதேசித்த உபநிடதங்களே தற்போது நாம் பாடி நல்லூரானை அனுபவிக்கின்ற நற்சிந்தனைப் பாடல்களாகும். அந்த உபநிடதச் சாரமே செல்லப்பரின் மந்திரங்களாகும். அவையாவன :-

ஒரு பொல்லாப்பும் இல்லை;

முழுதும் உண்மை;

நாமறியோம்;

எப்பவோ முடிந்த காரியம் ஆகிய நான்குமாம்.

சிந்தனையில் வெந்துயர் தீரவெனக்கொரு
மந்திரந் தந்தான் என்று உந்தீபற
மாயையறுந்த தென்று உந்தீபற!

சென்ற நூற்றாண்டின் ஆன்மீக வளர்ச்சிக்கும், ஆன்மீக ஈடேற்றத்திற்கும் வழிகாட்டியாய் விளங்கிய தவமுனிவர் யோகசுவாமிகள் தெட்டெனத் தொட்டு நிற்க அருளிய பாடல் உலகமதைக் கூவியழைக்கிறது.

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்

**அனுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய்
செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழங்கள் நீ
கொண்டு நீ செல்லு

**சரணம்**

"வாடியுன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி
கோடியாகக் கூடினாலும் குறைகள் வந்து
தேடியுன்னை மூடினாலும் செல்லப்பன்
பாதம்
சிந்தித்தால் ஓடியோடிப் போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை
கொண்டு நீ
கண்ட கண்ட இடங்கலங்கி நீ திரியாதே"

**சுருதி**

இன்று யாழ்ப்பாணத்தின் சுருதியாக நீண்டொலிப்பவை யோகர்சுவாமிகள் தேரடியில் இருந்து பாடிய நற்சிந்தனைப் பாடல்களே என்பதில் நல்லூரின் மாட்சி மகத்துவம் பெறுகிறது. ஒவ்வொரு பாடல்களும் உச்சி முதல் உள்ளங் கால்வரை இனிக்கக் கூடியது. தேரடியிலிருந்து எதைப்பாடினாலும் அது தேவாரமோ கந்தபுராணமோ பெரிய புராணமோ திருப்புகழோ எதுவாகினாலும் அவையொவ்வொன்றும் உயிர் பெற்று எல்லோரையும் வாழவைக்கும். அரசியல் குழப்பமோ ஆன்மீகக் குழப்பமோ குடும்பத்தில் குழப்பமோ அது எதுவாயினும் அவை சிக்கலின்றி இனிதே தீர்வுபெற தேரடியில் எல்லாவற்றையும் ஒப்படையுங்கள். வாழ்வு இனிக்கும்.

**பாக்கியம்**

முயற்சியும் பயிற்சியும் ஒவ்வொருவரும் சிரமமின்றிக் கிரமமாகச் செய்யும் போது, ஒருவேளை நல்லூர்த் தேரடியில் இருந்து மௌனமாகக் கண்களை மூடித் தியானஞ் செய்து பாருங்கள். பரீட்சைகள் எதுவாயினும் அவை இலகுவாக அமையும். வெற்றி நிச்சயம்.

மேலும் கன்னிப்பெண்களுக்குத் திருமணம் கண்டிப்பாக ஈடேறும். பிரிந்தவர்கள் கூடுவார்கள். இழப்புகளுக்குப் பரிகாரங் கிடைக்கும். திருடர் பயம் நீங்குவதோடு, திருடர்களும் திருந்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட பில்லி, சூனியம் பெரும் பகை யாவும் தேரடியில் அறவே நீங்கும். கண்ணூறு கலையிழந்து சாந்தியடையும். விபத்துக்கள் நீங்கும். விதி புதிதாக எழுதப்படும். சதிகாரர் தலைதெறிக்க ஓடுவர். வறுமை நீங்கி வாழ்வு பெருமை பெறும். வேறு என்னதான் வேண்டும். சந்தானம், சகோதரத்துவம், சகவாழ்வு, சரிநிகர் சமானப்பேறு யாவும் வீடு தேடி வந்தே தீரும். ஆம்.

அந்த வாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியிலருளிய
இந்த ஆன்மா நித்தியமென்ற
அந்த வாக்கும் பொய்த்துப் போமோ?

தேரடியில் இருந்துதான் திருவிழாக் காலங்களில் கலை கலாசாரப் பண்பாடுகள் புனர்நிர்மாணம் பெறுகின்றன. அறுபத்து மூன்று நாயன்மார்கள் மடம், செல்லப்பா சுவாமிகள் மடம், மனோன்மணியம்பாள் தேவஸ்தானம், ஆதீனம், சிவன் தேவஸ்தானம், பிள்ளையார் பீடம், துர்க்காமணி மண்டபம், ராகவேந்திர பீடம், மகேஸ்வரன் மண்டபம், அன்னதான மண்டபம் யாவற்றிலும் பங்குபற்றும் கலைஞர்கள் தேரடியின் சுகம் பற்றி நேரடியாக அனுபவித்துப் பாடி வருவது கண்டும், கேட்டும் அடியவர்கள் பேரானந்தம் அடைகிறார்கள். தேரடி மண்ணும் பண்ணும் தேவருலகினை எமக்கருளும். அதைவிட ஆனந்தம் வேறு என்ன தான் வேண்டும்? இந்த வாழ்வின் பெரும் பேறு நல்லூர்த் தேரடியிலே நிரம்ப நிரம்ப உண்டு அனுபவியுங்கள்.

## நல்லைக் குமரா சரணம்! சரணம்!!

நல்லைக் குமரா சரணம் சரணம்
நடராஜ குமாரா சரணம் சரணம்
வல்ல வேலா சரணம் சரணம்
வள்ளி மணாளா சரணம் சரணம்
பார்வதி பாலா சரணம் சரணம்
பழனி ஆண்டவா சரணம் சரணம்
சூரசங் காரா சரணம் சரணம்
சண்முக நாதா சரணம் சரணம்
மஞ்ஞை வாகனா சரணம் சரணம்
சேவற் கொடியோய் சரணம் சரணம்
குஞ்சரி நாயகா சரணம் சரணம்
குன்றுதோ றாடியே சரணம் சரணம்
வேலது கொண்டாய் சரணம் சரணம்
வெற்றிச் செல்வா சரணம் சரணம்
மாலவன் மருகா சரணம் சரணம்
முத்துக் குமரா சரணம் சரணம்
தமிழின் தலைவா சரணம் சரணம்
தங்க வேலா சரணம் சரணம்
எமதிடர் தீர்ப்பாய் சரணம் சரணம்
எங்கள் இறைவா சரணம் சரணம்

**நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகரின் வாசகமும் பயனும்

வ.கோவிந்தபிள்ளை

**கட்டுரைச் சுருக்கம்**

மனிதன் களிம்பு தோய்ந்த செம்பென மலங்களினால் பந்திக்கப்பட்டும், கண்டன வற்றைக் கலக்கும் இயல்புடைய பளிங்கு போலவும் வாழ்கின்றான். இந்நிலையில் ஒரு நாளைக்கு மட்டும் திருவாசகம், திருக் கோவையார் என்பவற்றை முற்ற ஓதுவத னாலோ, சிவராத்திரி புராணத்தை படிப்பத னாலோ அன்றிக் கேட்பதனாலோ சாத்வீக குணத்தினை அடைந்துவிட முடியாது. எனவே சாத்வீக குணத்தினை வளர்ப்பதற்காக வெனினும் புராண நூல்களைத் தவறாது தினமும் படிக்க அல்லது கேட்க வேண்டும் என்பதற்குரிய காரணத்தினை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மனித வர்க்கத்தினருக்கு இரு வகைப் பிணிகளுண்டு. ஒன்று உடல் சார்ந்து வருவது; மற்றையது பிறவி சார்ந்து வருவது. உடல் சார்ந்த பிணியை நீக்குவதற்கு உடற் கூற்று வல்லுநர் பலருளர். பிறவிசார்ந்த பிணியான பிறவிப் பிணியை நீக்க இறை வன் ஒருவனாலேயே முடியும். இதனை,

"களிம்பு தோய்ந்தசெம் பெனவுனை மருவுங்
கருமை கூர்மலம்; கண்டது கலக்கும்
பளிங்கு போன்றதுன் தன்மை; அம்மலத்தின்
பற்றினால் உடல்பல வெடுத் துழன்றாய்
வளங்கு லாம்புவ னந்தொறும் செய்யுமுன்
வல்வினைப் பயன் வருமுறை நெறியே
அளந்து நாந்தர நுகர்ந்து மேல்நுகர்வு
மாக்கியே திரிந்தனை; மனவழுக்கால்."

இவ்வாறு தோத்திர நூலெனப்படும் திருவாதவூரர் புராணம் கூறும்.

மேலும் மக்களுக்கு ஏற்படும் பிறவிப் பிணியை நீக்கும்பொருட்டு அவதரித்தவரே திருவாதவூரடிகள் எனப்படும் மாணிக்க வாசகர் எனக் கடவுள் மாமுனிவர் தமது நூலான திருவாதவூரர் புராணத்தில் கூறுவர்.

"பரம்பரப் பொருளா மிந்தப்பைந்தமிழ்
ஓதி வையம்
பெரும் பிறப் பகல வந்துபிறந்தவர்"

அதாவது பாரம்பரிய பொருளாகக் கருதப் படும் வேதம், ஆகமம் என்பனவற்றிற் சொல் லப்பட்டவற்றையே பைந்தமிழில் திருவாச கம், திருக்கோவையார் எனப்பாடி உலகினர் உய்தியடையும் பொருட்டு வழங்கியவர் மணிவாசகர் என்பார். இவ்வாறு வழங்குவ தற்கு,

"அதட்கலைஞர் நல்லருளால்
ஒக்கலையும் பிறர்கலையும் ஒழித்திடும் ஆகம
கலையும்
எக்கலையும் கற்றுணர்ந்தார்
ஈரெட்டாண்டெல்லையினில்"

என கடவுள்மா முனிவர் கூறுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்,

"பொங்கிய அருளின் ஆரும்
புகன்றிட ரகலத் தையர்
பங்கினர் தம்மைக் கோவை
பாடுதல் வேண்டு மென்றார்"
-

என்னலும், அவரின் வேண்டு கோளுக்க மைய முத்திப்பேற்றுக்குகந்த கோவைப் பிரபந்தத்தையும், பாடுவாராயினர்.

மேலும் திருவாசகம் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"மன்னிய நிலத்தி லுள்ளார்
வல்வினைப் பிறவி மாள
இன்னருட் சதக மெய்தா
னரும்பியென் றெடுத்துச் சொன்னார்"

என்று திருவாசகப் பாக்களைப் பாடு வாராயினர்.

இவ்வாறு பாடப்பட்ட திருக்கோவையார், திருவாசகம் என்னும் இரு நூல்களுக்கும் பொருள் ஒன்றேயாம். இதனாலேயே வடலூர் வள்ளலார் எனப்படும் இராமலிங்க அடிகள்,

"சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை" என்றும்,
"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை"

என்றும் ஒன்றுசேர்த்து வாசகம் என்று கூறி யுள்ளமை மனங்கொள்ளற்பாலதேயாகும்.

"வாசகம்" என்பது ஒருவரின் வாக்கிலிரு ந்து வெளிவரும் வார்த்தையைக் குறிக்கும். இது திருக்கோவையார், திருவாசகம் எனப் படும் இரண்டினையும் பொருள் ஒருங்கே யாதலால் வாசகம் என ஒருமையில் பாட லாயினார். இதேபோன்று

"போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம்
பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை – ஓதின்
பிறவிப் பிணிநீங்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவிற்குள் செல்வர் சிறந்து"

என வாசகம் என்ற சொல்மூலம் இருநூல்க ளையும் குறிப்பிடுகின்றார்.

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை
பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்க
நிதிவிதிசோர்
ஊரு(ர)ணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும்
ஊதியமே.

என்பது திருக்கோவையாரின் இறுதிப்பாட்டு. இதன் பொருள்.

ஊரன் வேண்டாமைக் கொடுத்தலில் முகிலையும் வேண்டுவன வற்றைக் கொடுத் தலில் அழகிய கற்பகவிருட்சத்தையும் நுண்ணிய கல்வியறிவுடைவனாகையால் கற்றவர்க்கு நல்ல உசாத்துணையாகவும் இசையுணர்வாலும் செழுதகைமையாலும் பாணர்களுக்கு அவர்களது சுற்றத்தினரை யும் நினைத்தனவற்றைக் கொடுத்தலிற் சிந்தாமணியையும் அழகிய தில்லைச் சிற்றம்பலவரது திருவடிகளுக்கு மாலையாகி அவனால் அணியப்படும் கொன்றைப்பூவின் தன்மையையும், சான்றோர் தமக்குத் தொலையாத நிதியாயிருத்தலிற் சங்கநிதி யாகியும், நண்பர்களுக்கும் பகைவர்களுக்கும் தவறாது பயன் கொடுத்தலின் விதியையும், சுற்றத்தார்க்கு அவர்கள் வேண்டியதை செய்யவிருத்தலால் ஊருணிமையும் நிகர்த்து விளங்குவதனால் இவன் வரைவின்றி அனைவர்க்கும் ஊதியமுடையயனாவான் என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நூல் பற்றி,

"ஆரணங் காணென்பர் அந்தணர் போகியர்
ஆகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன்
னூலிதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர்
இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச்
செப்பிடினே"

என பலபடப் பாராட்டியுள்ளனர். அதாவது வேதியர்கள் வேதமெனவும், யோகியர்கள் ஆகமமூலநூலெனவும், காமுகர்கள் காம நூலெனவும், தர்க்கவாதிகள் தருக்கநூலெனவும், புலவர்கள் இலக்கண நூலெனவும் இந்நூலைத் தத்தம் நூலெனக் கொண்டு மகிழ்வது உண்மையேயன்றிப் புகழுரையாக மாட்டாது.

இவ்விரு நூல்களையும் மணிவாசகரே பாடியிருப்பினும் தில்லைச்சிற்றம்பலவரே அவருள் நின்று ஆன்மாக்கள் மீது கொண்ட பேரருட் திறத்தினால் பாடச் செய்துள்ளார் என்பது தெளிவு. இதனாலேயே "திரு" என்ற சொல்லைச் சேர்த்து இறைவனுடைய வாசகம் என்ற பொருளில் திருவாசகம், திருக்கோவையார் என வழங்கி வரலாயிற்று. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்று கூறப்படும் மூவரின் காலத்திற்கு முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்பது ஆய்வாளர்களின் ஒப்பமுடிந்த முடிபாகும். மணிவாசகப் பெருமான் தாம் பாடிய இரு நூல்களையும்,"மாலை" என்றும் அதன் பொருள் சிற்றம்பலவரே என்று கையினாற் சுட்டிக்காட்டியதோடமையாது, எல்லோரும் காணும் வண்ணமாகக் கனகசபையின் கண்சென்று மறைந்தன ரென்றும் இதனை,

"கைகாட்டித் தம்முருவங்
காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப்
பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே
மேவிய நீ ராக்கினார்"

என்று விளக்குகின்றார்.

மேலும் குமரகுருபரசுவாமிகள் தமது சிதம்பர மும்மணிக்கோவையில்,

"பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பில் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருளெனக் காட்டிய ஒரு பெருஞ் செல்வ"

என்று கூறுவதும் மனங்கொள்ளற்பாலதே.

மேலும் இரு நூல்களும் ஒன்றேயென்பதை

"முன்னைப் பழம் பொருட்கும்
முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே"

என்ற பாடற் பொருளையே,

"முன்னு மொருவ ரிரும் பொழில்
மூன்றற்கு முற்றுமிற்றாற்
பின்னு மொருவர்சிற் றம்பலத்
தார்தரும் பேரருள்போல்"

என்று திருக்கோவையாரிலும்,

"கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறினிறைவா"

என்ற திருவாசகப் பாடலை,

"அழுந்தேன் நரகத்தி யானென்
றிருப்பவந் தாண்டுகொண்ட செழுந்தேன்"

என்று திருக்கோவையாரிலும், பாடியிருப்பது ஒப்புநோக்கத்தக்கதே. இவை போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல எடுத்துக்காட்டாக உள்ளன. மேலும் திருக்கோவையார் ஏனைய சிற்றின்ப இலக்கியங்களைப் போன்று இருப்பினும் இதனைப் பாடுவதற்கு என மணிவாசகர் அவதரித்திருக்க வேண்டியதில்லை; அதனை ஏடுதாங்கி எழுதுவதற்குத் திருச்சிற்றம்பலவர் அவரை நாடிச் சென்றிருக்க வேண்டியதுமில்லை. இவ்விரு விடயங்களிலிருந்தும் திருக்கோவையார் என்றும், திருச்சிற்றம்பலக்கோவையார் என்றும் பாடியவரையும், எழுதியவரையும் குறித்துச் சொல்லப்படுவதனால் இந்நூல்களின் சிறப்பும் பயனும் நன்கு விளங்கும்.

எனவே இந்நிலையில் ஒரு நாளைக்கு மட்டும் திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றை முற்ற ஓதுவதனாலோ அல்லது சிவராத்திரி புராணத்தினை அன்று மட்டும் படிப்பதனாலோ அல்லது இவற்றைக் கேட்பதனாலோ உரிய பயனை அடைந்து விடலாம் என்பது ஐயப்பாடேயாகும்.

ஏனெனில், சாத்வீகம், ராஜதம், தாமதம் என்னும் முக்குணங்களும் மனிதனைக் கட்டுப்படுத்த இயக்குகின்றன என்பர். இவற்றினுள் சாத்வீககுணம் மிகுந்திருக்கும் பொழுது பிரகாசமும், ஞானமும் தென்படும். ராஜதகுணம் மிகுந்திருக்கும்பொழுது காம, குரோத, லோப எண்ணங்கள் முன்னிற்கும். தாமதகுணம் ஆட்கொண்டிருக்கும்பொழுது மோகமும், அறியாமையும் ஓங்கி நிற்கும் என்பர். சாத்வீககுணம் விருத்தியாக இருக்கும்பொழுது ஒருவன் இறக்க நேரின் அவன் நற்கதி அடைவான். ஆதலால் சாத்வீககுணத்தை வளர்த்துவர ஒவ்வொருவரும் முயல வேண்டும். காம, குரோத, லோப, ஆணவம் என்பன நரகத்தின் வாயிற் பாடிகளாகும் என விநாயகப்பெருமான் விஷ்ணுமூர்த்திக்கு உபதேசம் செய்ததாக விநாயகபுராணங்கூறும்.

இதனாலேயே மரணம் சம்பவிக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு அருகிலிருந்து அவர் கடைசி நேரத்திலாவது சாத்வீக குணத்தை அடைய வேண்டும் என்ற நன்நோக்கிலும், அவர்கள் இறைசிந்தனையோடு இறக்க வேண்டும் என்பதற்காகவும் புராண நூல்களை படிக்கும் மரபு தொன்றுதொட்டு இருந்து வரலாயிற்று. எனவே புராணங்கள் அறிவை வளர்ப்பதால், தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவேனும் அவற்றை படிக்கவும், அவை பற்றிக் கேட்கவும், அவற்றிற் கூறப்பட்டவற்றை நம்பவும் வேண்டும். மேலும் தத்தம் மனதைப் பரிசுத்தமாக வைத்திருப்பதற்காக தினந்தோறும் புராண படனங்களில் ஈடுபட்டுப் பயிற்சி செய்தல் இன்றியமையாததாகும்.

"களிம்பு தோய்ந்த செம்பென உனைமருவும்
கருமை கூர்மலம்; கண்டது கலக்கும்
பளிங்கு போன்றது உன் தன்மை"

அதாவது ஆத்மா ஆணவத்தோடு இணைந்தால் ஆணவத்தில் அழுந்துகின்ற குணமும்; பதியோடு இணைந்தால் பதியில் அழுந்துகின்ற குணமும் உண்டு. இந்நிலையில் மூவகை ஆன்மாக்களுக்கும் அவ்வவற்றுக்கேற்றவகையில், விஞ்ஞானகலருக்கு ஒளி வடிவமாகவும், பிரளயாகலருக்குத் தெய்வ வடிவமாகவும், சகலரெனும் மூவகைப் பாசங்களாலும் பிணைப்புண்டிருப்பவருக்கு மனிதவடிவிலும் காட்சியளித்து இறைவன் ஆட்கொள்வான்.

ஆதலால் மேற்கூறியவாறு செயற்படின் ஒருவருக்குப் புராணநூல்கள் வழிகாட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிவிளக்குகளாகும். அவரைப் பாதுகாக்க உகந்த உணவாக அமைவது மட்டுமன்றி, மனதுக்கு நிறைந்த ஆறுதலையும், மகிழ்ச்சி யையும் ஊட்டும் அருமருந்தாகவும் அமையும் என்பது ஒருதலை.

"கற்றில ராயினும் கேட்க அஃதொருவர்க்கு
ஒற்கத்தில் ஊற்றாம் துணை"

என்ற வள்ளுவரின் குறள் ஒரு சிறந்த வழி காட்டியாக அமைகின்றது எனின் மிகையா காது.

**துணைநூல்கள்**

திருவாதவூரர் புராணம்
திருவாசகம்
திருக்கோவையார்
திருக்குறள்
இராமலிங்க சுவாமிகள் அருளிய ஆளுடை அடிகள் அருட்பாமாலை
விநாயக புராணம்
சிதம்பர மும்மணிக்கோவை.

## நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்தோர்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் | **1993** | திரு.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் | **1994** | பேராசிரியர் ப.கோபாகிருஷ்ணஐயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் | **1995** | பேராசிரியர் இ. குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் | **1996** | சிவஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் | **1997** | கலாநிதி எஸ்.சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் | **1998** | திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் | **1999** | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் | **2000** | கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் | **2001** | திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் | **2002** | கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் | **2003** | கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் | **2004** | திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் | **2005** | பேராசிரியர் அ.சண்முகதாஸ்<br>திரு.ஈ.குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் | **2006** | ஆய்வு செய்யப்படவில்லை |
| 15. | நல்லைக்குமரன் மலர் | **2007** | பேராசிரியர் எஸ்.இரகுநாதன் |
| 16. | நல்லைக்குமரன் மலர் | **2008** | திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) |
| 17. | நல்லைக்குமரன் மலர் | **2009** | பேராசிரியர் என்.ஞானக்குமரன் |
| 18. | நல்லைக்குமரன் மலர் | **2010** | பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் |
| 19. | நல்லைக்குமரன் மலர் | **2011** | கலாநிதி த.கலாமணி |
| 20. | நல்லைக்குமரன் மலர் | **2012** | பேராசிரியர் கி.விசாகரூபன் |
| 21. | நல்லைக்குமரன் மலர் | **2013** | கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் |
| 22. | நல்லைக்குமரன் மலர் | **2014** | பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை |
| 23. | நல்லைக்குமரன் மலர் | **2015** | பேராசிரியர் தி.வேல்நம்பி |
| 24. | நல்லைக்குமரன் மலர் | **2016** | கலாநிதி செ.சேதுராஜா |
| 25. | நல்லைக்குமரன் மலர் | **2017** | பேராசிரியர் கு.மிகுந்தன் |
| 26. | நல்லைக்குமரன் மலர் | **2018** | கவிஞர் சோ.பத்மநாதன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமய வரலாற்றில் சிவபுராணம் பெறும் முக்கியத்துவம்

க.கணேசதேவா
B.A, M.A, MEd.
ஆசிரியர்
யா/வயாவிளான் மத்திய கல்லூரி

மகா புராணங்கள், உப புராணங்கள் எனப் புராணங்களை இரு பிரிவாகப் பிரிப்பர். ஒவ்வொரு பிரிவும் 16 புராணங்களைக் கொண்டிருப்பதால் மொத்தமாக 32 புராணங்கள் உளதெனக் கூறப்படுகின்றது. பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலான கடவுளர்களில் எவரை முதன்மைப்படுத்துவதாக ஒரு புராணம் அமைகிறதோ அதனடிப்படையில் வைஷ்ணவ புராணங்கள், சைவ புராணங்கள் என மகா புராணங்களை வகைப்படுத்துவர். சிவபுராணம் அதன் பெயருக்கேற்ப ஒரு சைவ புராணமாகும். சிவனது ஐதீகங்கள், கிரியைகள் அனைத்துமடங்கிய புனித நூலாகச் சிவபுராணம் விளங்குகிறது. சிவ புராணம் மகா புராணமா அல்லவா என்பது விவாதத்திற்குரியதாயினும், சைவசமயம் பற்றியும், சைவ சம்பிரதாயங்கள் பற்றியும் பல செய்திகள் அதிற் காணப்படுகின்றன. சிவபுராணம் பற்றி வரலாற்றறிஞரான அல் பெரூனி தனது நூலில் குறிப்பிட்டுள்ளதால் அந் நூலின் காலம் எவ்வாறாயினும் கி.பி 10ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாயிருக்க வேண்டுமென்பதில் எதுவித ஐயமில்லை.

சிவபுராணம் ஒரு மகா புராணம் என்ற வகையில் பிரபஞ்சத்தின் தோற்றம், படைப்பு, மனுவந்தரங்கள், புகழ் பெற்ற அரசர்களான மனு சத்தியவரதன், இஷ் வாகு ஆகியவர்களது பரம்பரை, அவர்கள் காலத்துச் சம்பவங்கள், சிவதத்துவமும் சிவ வழிபாடும், அதன் சிறப்பு என்பன பற்றிய விவரமான குறிப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

சிவபுராணம் நூல் வித்தியேஸ்வரம், ருத்திரம், சதருத்திரம், கோடிருத்திரம், உமா, கைலாசம், வாயவ்வியம் என ஏழு சம்ஹிதைகளை உள்ளடக்கியது. இரண்டாவதான ருத்திர சம்ஹிதை 5 உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வாயவ்விய சம்ஹிதை பூர்வபாகம், உத்தரபாகம் என இரு பிரிவுகளைக் கொண்டது.

வித்தியேஸ்வர சம்ஹிதையிற் சிவனது மகிமை, சிவ வழிபாட்டிற்குரிய கிரியைகள், மெய்யியலடிப்படைகள், அவதாரங்கள், சிவலிங்கத்தின் தோற்றம், அதன் முக்கியத்துவம், அதனை ஸ்தாபிக்கும் முறை, அதற்குரிய வழிபாட்டு முறை, அதனை வழிபடுவோருக்குக் கிடைக்கும் பலாபலன்கள் என்பனவற்றுடன், ஓங்கார மந்திரம், வில்வம், ருத்திராட்சம், விபூதி என்பனவற்றின் முக்கியத்துவமும் பயன்பாடும் பற்றிய விபரிப்புகள் உள. ருத்திர சம்ஹிதையின் முதலாம் இரண்டாம் பகுதிகளிற் சிவனை வழிபடும் முறைகள் பற்றிய விளக்கமும், பக்திக்கும் ஞானத்திற்கும் வேறுபாடு இல்லையெனக் கூறிப் பக்தி பற்றிய ஒன்பது வகையான விளக்கமும் தரப்படுகின்றது. உலக இன்பங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் மோட்சத்தையும் தரவல்லது பக்தியே என்றும், கலியுகத்தில் ஞானத்தி லும் வைராக்கியத்திலும் பார்க்க பக்தியே கூடிய பயனுடையதென்றும். அதனால் உட னடியான பலாபலன்கள் கிட்டுகிறதென்றும் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவதான பார்வதி காண்டத்திற் பார்வதியின் பிறப்பு, சிவ-பார்வதி திரு மணம், தாரகன் தவம், சிவனால் மன்மதன் எரியுண்டமை ஆகியன பற்றிய ஐதீகங்கள் இடம்பெற்றுள்ளன. நான்காவது பகுதி குமார காண்டமாகும். இப்பகுதியில் ஸ்கந்தனின் / கார்த்திகேயனின் பிறப்பு, ஸ்கந்தன்-தாரகன் யுத்தம், கணேஷரின் (கணபதி) பிறப்பு, சிவகணங்களுடனான யுத்தம், சிவ னாலே தலை கொய்யப்படுதலும், யானைத் தலையைப் பெறுதலும், கணங்களின் தலை வனாகுதலும் கணபதியின் திருமணமு மென சிவ- பார்வதி மைந்தர்களின் வரலாறு பேசப்படுகின்றது. ஸ்கந்தன் தந்தை வழி உரிமை கொண்டவராயும், கணபதி தாய் வழி உரிமை கொண்டவராயும் காணப்படு வது இவ்விருவரதும் வரலாற்றில் குறிப்பிடத் தக்க அம்சம். ருத்திர சம்ஹிதையின் இறுதிப் பகுதியிலே திரிபுரமெரித்தல், இரணியன் அந்தகன் ஆகியோர் சிவனாற் சம்ஹாரம் செய்யப்படுதல் பற்றிய செய்திகள் கூறப்படு கின்றன.

சதருத்திர சம்ஹிதையில் அர்த்த நாரீஸ் வரர், வைரவர் மற்றும் சிவனது பிற அவ தாரங்கள் பற்றிய ஐதீகங்கள் விவரிக்கப்படு கின்றன. பாதி ஆணும், மறுபாதி பெண்ணு மான சிவனது அர்த்த நாரீஸ்வர அவதாரம் ஒரு புறம் படைப்பின் குறியீட்டு வெளிப்பாடா கவும், மறுபுறம் பிரபஞ்சத்தின் பல்வகைப் பரிணாமம், புருஷன், பிரகிருதி என்பனவற் றின் இணைவின் மூலமாகப் பெறப்படுகின்ற சாங்கியக் கோட்பாட்டுடன் ஒப்பிடக் கூடியதாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

சிவபுராணத்தின் ஐந்தாவது காண்ட மான கோடிருத்திர சம்ஹிதையின் போத னைப் பொருள் குறிப்பாக முத்தி மார்க்கம் பற்றிய செய்திகள், அத்வைதச் சிந்தனையு டன் ஒன்றியதாகக் காணப்படுகின்றன. சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நால்வகை முத்தி மார்க்கம் பற்றியும், அவற்றைக் கொடுப்பவன் சிவனே என்றும் குறிப்பிடுவதுடன், கைவல்யம் என்ற ஐந்தா வது வகை முத்தி பற்றிய குறிப்பும் இங்கு காணப்படுகிறது. சச்சிதானந்த சொரூபனான சிவனுடைய தன்மையை அறிவதாலும், அவனிடம் பத்தி செலுத்துவதாலும் கைவல்யம் கிட்டுகிறது. பத்தியும் ஞானமும் வெவ்வேறா னவை அல்ல என்றும், சிவனிடம் பக்தி செலுத்துபவர்களிற்கு ஞானம் உடனே கிடைக்கிறதென்றும் எடுத்துக் காட்டப்படுகிறது.

சிவன் தன் இச்சை மாத்திரத்தால் உல கைப் படைத்துள்ளானெனினும், உலகிலி ருந்து ஒட்டாமல் விளங்குகிறான். மண் ணும், பொன்னும் பலவகை ரூபங்களைப் பெறினும் அவை அடிப்படையில் மண்ணும் பொன்னுமாக இருப்பது போல, சிவன் ஒரு வனேயாயினும் அவன் பிரமையினாற் பல வடிவமுள்ளவனாகத் தோன்றுகிறான். காரி யத்திற்கும் காரணத்திற்குமிடையில் அடிப் படையில் வேற்றுமை கிடையாது. பிரமையி னாலேயே வேற்றுமையிருப்பதாகத் தென் படுகின்றது. பிரமை நீங்க வேற்றுமை அழிகிறது. மனிதனும் சிவனும் ஒருவரே யெனினும் மனிதன் அகங்காரத்துடன் கூடி யவன். அகங்காரத்திலிருந்து விடுபட்டவன் சிவன். பொன்னிலிருந்து களிம்பு நீங்குவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஜீவனும் ஸம்ஸ்காரம் பெறுவதன் மூலம் சிவனாகிறான். இதற்கு முதலில் அவன் சற்குருவையடைந்து அவரைச் சிவ சொரூபமாக எண்ணி வழிபடல் வேண்டும். இதனால் அவன் மலநீக்கம் பெற்று, அகங் காரத்திலிருந்து விடுபடுவதுடன், சிவனது அருளினாற் சிவத் தன்மையைப் பெறுகிறான்.

உமா சம்ஹிதையில் நரகம் பற்றிய விபரிப்புகள், நரகத்திலிருந்து மீளல், நோன் பின் பெருமை, ஜம்பு தீபம் மற்றும் புவியியல் வருணனைகள், சரீரத்தின் தோற்றமும் வளர்ச்சியும், பெண்ணின் இயல்பு, படைப்பு பற்றிய வர்ணனை, மன்வந்தரங்கள், சூரியகுல அரசர்கள், பிதிர்களின் சக்தி, மகா லட்சுமி, சரஸ்வதி, உமாதேவி ஆகியோர் களின் அவதாரங்கள் முதலான விடயங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆண்க ளிற்கு முதன்மை ஸ்தானத்தைக் கொடுக் கும் சிவபுராணம், பெண்களின் மனம் மென் மையானதென்றும் அதுவே எல்லா வகை யான பிரச்சினைகளிற்கும் காலாயிருக்கின்ற தென்றும் குறிப்பிடுகின்றது.

சிவபுராணத்தில் ஆறாவதான கைலாச சம்ஹிதையிலே சிவதத்துவமும், சிவாத் வைத ஞானமும் விவரிக்கப்பட்டுள்ளது. சிவ தத்துவம் பற்றிய காஷ்மீரசைவத்தின் செல் வாக்கு இருப்பதை அவதானிக்க முடிகின்றது. வசுகுப்தரின் சிவசூத்திரம் பற்றிய குறிப்பு களும் காணப்படுகின்றன. அதேவேளை சிவாத்விதஞானம் பற்றிய குறிப்புகளைப் பொறுத்தவரையில் ஸ்ரீகண்டரின் செல்வாக் கிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

சிவபுராணத்தின் இறுதிக்காண்டம் வாயவ்விய சம்ஹிதையாகும். இது வாயு புராணத்திலிருந்து வேறுபட்டது. வாயவ் விய சம்ஹிதையிற் பாசுபத தரிசனம் பற்றி யும், பாசுபத யோகம் பற்றியும் விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. இது லகுலீச பாசுபத தரிசனத்திலிருந்து வேறுபட்டது. லகுலீச பாசுபதம் வேதங்களை ஆதார மாகக் கொண்டது. ஆனால் சிவபுராணத் தில் விவரிக்கப்படும் பாசுபத தரிசனம் ஆக மங்களை அடிப்படையாகக் கொண்டது. அது போல இங்கு குறிப்பிடப்படும் பாசுபத யோக மும் பதஞ்சலி யோகத்திலிருந்து வேறுபட்ட தென்பதைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வாயவ்விய சம்ஹிதையின் முதல் ஐந்து அத்தியாயங்களிலும் சிவதத்துவ ஞானம் பற்றிப் பேசப்படுகிறது. பதி, பசு, பாசம் பற்றிய ஞானத்தைப் பெற்று அதில் ஈடுபாடு கொள் ளும் பொழுது அஞ்ஞானத்தால் விளையும் துன்பம் நீங்குகின்றது. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களும் அழிவுள்ளது. அழிவற் றது என்பனவற்றிற்கு அப்பாற்பட்டது. பிர கிருதி என்பது மாயை. அது புருஷனைச் சூழ்ந்துள்ளது. அதாவது புருஷன் மலத்தி னாற் சூழப்பெற்றிருக்கிறான்.

வாயவ்விய சம்ஹிதையின் பிற்பகுதியில் பேசப்படும் சைவ மெய்யியல் அதன் முற் பகுதியிலிருந்து சிறிது வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. சிவன் தானே பசுக் களை மலம், மாயை முதலிய பாசங்களாற் கட்டுகிறான். அவனை வழிபடுவதால் இவை நீங்குகின்றன. இவ்வுலகம் சிவனது சக்தியி லிருந்தே தோன்றியுள்ளது. சிவன் இல்லாது சக்தியும், சக்தியில்லாது சிவனும் இருக்க முடியாது.

பிரகிருதியிலுள்ள முக்கணங்களின் சமத்தவம் மாறுகிற பொழுது நாதம் பிறக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. நாதத்திலிருந்து பிந்து தோன்றுகிறது. பிந்துவிலிருந்து சதாசிவன் தோன்றகிறான். சதாசிவனிலிருந்து மகேஸ்வரனும், மகேஸ் வரனிலிருந்து சுத்த வித்தையும் விளைகின் றன. சக்தியுடன் சிவன் கூடுவதால் அவன் சக்தியாய் ஆகிறான். சக்தியிலிருந்தும் சக்தி மானிலிருந்தும் தோன்றிய இவ்வுலகம் சாக்தமும் சைவமுமானது. தாய் தந்தை யின்றி மகப்பேறு இல்லாதது போலச் சிவனும் சக்தியுமில்லாது உலகு உருவாக முடியாது. ஆண்-பெண் வாயிலாக உண் டான உலகம் ஆண்-பெண் நிறைந்ததா கவே இருக்கும்.

சைவசித்தாந்த மரபிலே சிறப்புப் பெறும் இலக்கியங்களின் வரிசையில் வேத சிவாக மங்கள் முதல் நூலாகப் போற்றப்பட்ட மரபு காலந்தோறும் உணரப்பட்டு வந்தது போல அச்சித்தாந்த மரபிலே சிறப்புப் பெறும் பல்வேறு கோட்பாடுகளைத் தெளிவுற விளக்க புராணங்களின் அறிவு மிகவும் இன்றியமையாததாக அமைகின்றது. பொதுவாகப் புராணம் பற்றி பேசுபவர்கள் அவை வெறுமனே சமயத்தை மட்டும் வளப் படுத்தியதாகக் கூறுவர். ஆனால் உண்மை யில் புராணம் சைவப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகிய சமயம், கலை ஆகியவற்றோடு தத்துவத்தையும் போற்றும். இத்தகைய புராண சிந்தனைகள் சிவாகமங்கள் வகுத் துக் கூறும் ஆலய வழிபாட்டிற்கும் தேவை யானவை.

புராண அறிவு இல்லையாயின் எமது சமய அறிவு பற்றிப் பெற வாய்ப்பு இல்லாது போகும் என்று கூறக்கூடிய அளவுக்கு அவை சைவ சமய மரபிலே முக்கியம் பெறுகின்றது. எனவே சைவ சமய வரலாற்றிலே முக்கியம் பெறுகின்ற சைவசித்தாந்த மரபிலே பதி பற்றிய இலக்கணங்களை சமய தத்து வார்த்த விதியிலே தெளிவு பெறச் செய்வதிலே புராணச் சிந்தனைகள் பெரிதும் வேண்டற் பாலது. சைவ சமய மரபிலே மிக உன்னத மாகப் பேணப்பட்டுவந்த பக்தி நெறியை வளப்படுத்துவதிலும் சைவசமயம் சார்ந்த விழுமியங்களை விளக்கிக் கூறுவதிலும் இவை பெரும் பங்கு வகிக்கின்றன. எனவே சைவ சமய மரபு, வழிபாட்டு மரபு, தத்துவ மரபு, தெய்வ இயல், தலம், தீர்த்த மகிமை, தல மகிமை, தீர்த்த யாத்திரை போன்ற இன் னோரன்ன அம்சம் பற்றியனவும் இவற்றின் ஊடாக சைவசித்தாந்த மேன்மையை அறிய வும் புராணம் பற்றிய அறிவு இன்றியமை யாதது.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு சித்தாந்த சமயம் சார்ந்த கோட்பாடு பற்றியும், நெறி முறை பற்றியும் அறிந்து கொள்வதற்கு 18 புராணங்கள் பற்றிய ஆராய்வு முக்கிய மானது. ஏனெனில் சிறப்பாக சிவாகமங்கள் போற்றும் சிவவழிபாடு பற்றிய ஆராய்வு முக்கியமானது. "தென்னாடுடைய சிவனே போற்றி" என மணிவாசகர் போற்ற தென் னாட்டில் எழுச்சி பெற்ற சமயம் சார்ந்த சிவா லயங்கள், சிவாலயங்கள் மையமாகக் கொண்ட தலங்கள், பக்தி நெறி, தோத்திர மரபு, வழிபாட்டு மரபு, சித்தாந்த விழுமியங் கள் ஆகியவை பொலிவு பெற மகாபுராணங் களின் பங்களிப்பு பெரிதும் உதவியது. எனவே புராணம் பற்றி காலம் காலமாக பல அறிஞர்கள் சமய தத்துவத்துறை மட்டிலே அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி னர்.

புராணங்கள் தொடர்பான பகுப்பு முறை யிலே அவ்வத் தெய்வத்துக்குரிய புராணங் கள் முக்கியம் பெறும். அவ்வகையில் சிவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியும், சைவசமயம் பற்றியும் எடுத்துக் கூறுவதிலே சிவனுக்குரிய புராணம் முக்கியம் பெறும். இவ் வகையில் சிவபுராணத்தை மகா புராண வரிசையில் கொள்ளத்தக்கது என அறிஞர் கூறுவர். அவ் வகையில் சைவ சித்தாந்த சிந்தனை வளர்ச்சியில் புராணங்களின் பங்களிப்பு எத்தகையது என்பது பற்றிய ஏற்ற பல கோப்புக்களை சிவ புராணத்திலே காணுவதால் சைவ சித்தாந்த சிந்தனை மரபில் சிவபுராணம் முக்கியம் பெறும் புராணம் ஆகும். தொன்மையான சமயம், வரலாறு, அரசியல், சமூகவியல் மற்றும் ஏனைய அறிவியல் சார்ந்த விடயம் கூறுவதால் ஒரு சமயக் களஞ்சியமாக விளங்குவது புராணங்கள் ஆகும். சைவ சமயம் பற்றியும் சிறப்பாக சைவம் பற்றியும் நாம் அறிவதற்குரிய தொன்மை வாய்ந்த அறிவியல் சிந்தனையைக் கொண்டுள்ளது சிவபுராணம் ஆகும்.

புராணங்களின் முக்கிய நோக்கம் சைவ சமயத்தின் மேன்மையையும், கிரியைகளின் விளக்கத்தையும், சிவனின் பரத்துவத்தையும் எடுத்துக் கூறுவதாகும் என்ற கருத்தடிப்படையில் சிவபுராணம் முக்கியம் பெறுகிறது. சிவபுராணம் என்ற தலைப்பே அது சைவம் சார்ந்தது என்பதை தெளிவு படுத்தும். அந்த புராணத்தின் தலைப்பில் இருந்து சிவனின் பெருமை, மகத்துவம், சிவனோடு தொடர்பான கிரியைகள், சைவத்தின் தத்துவார்த்த சிறப்பு ஆகியவற்றை எடுத்துக் கூறுவதிலே முக்கியம் பெறுகிறது. மேலும் சிவனுக்கே உரிய சிவலிங்கத்தின் பெருமை பற்றி புராணம் விதந்தோம்புகிறது. சிவலிங்கத்தின் தோற்றம், அதன் முக்கியத்துவம், அதை பிரதிஷ்டை செய்து வழிபடுவதால் ஏற்படும் பேறு ஆகியவற்றைக் கூறுகிறது. சுருங்கக் கூறின் சிவனின் மரபு பற்றியும், கிரியை மரபு பற்றியும், தத்துவார்த்தம் பற்றியும் அறியக் கூடிய புனிதமான கருவூலம் ஆகும்.

ஒரு மகாபுராணம் எனும் வகையில் சிவபுராணம் சிவனின் வழிபாட்டு நெறி பற்றிப் பேசும் புனித நூலாகும். இச்சிறப்பான அம்சம் பற்றி பேசுவதால் சிவபுராணம் சைவ சித்தாந்தத்தில் முக்கியம் பெறுகிறது. சிவனின் தொடர்பு வகையில் இப்பிரபஞ்சத்தின் விடயம் பற்றி இப்புராணம் கூறுகிறது.

சிவன் ஆதியும் அந்தமும் இல்லா பரம் பொருள் என்றும், எத்தகைய குணம் குறி இல்லாதவர் என்றும் விளக்கப்படுவதால் பிரபஞ்சப் படைப்பு பற்றி சில நெருங்கிய தொடர்பு கொண்டவர் ஆகிறார். இவ்வாறு இப்புராணம் படைப்புக்கு முக்கியம் கொடுக்கிறது. படைப்பின் ஒடுக்கம் பற்றியும் சிவ புராணம் கூறுகிறது. இவ் உலகம் ஒடுங்குவதற்கு முன் பல்வேறு படிநிலைகளில் வந்து இறுதி நிலைக்கு முன் பல்வேறு நிகழ்வு நிகழ்கிறது. மற்றும் உலகம் மீள்படைப்புச் செய்யும் காலத்திலும் படிமுறை ஒழுங்கு காணப்படுகிறது.

இத்தகைய விடய அடிப்படையில் சிவ புராணம் மகா புராணமாகக் கொள்ளத்தக்க வகையில் சிறப்புப் பெறுகிறது. அத்துடன் ஏனைய மகா புராணத்தோடும் பொதுவான தொடர்பு கொண்டது. எனவே இதை மகா புராணம் என்ற அந்தஸ்திலே வைத்துப் பார்ப்பது தவறில்லை என்பதை அறிஞர்கள் கூறுவர். ஆனால் அதன் முக்கிய பெருமை, சிறப்பு யாதெனில் சிவனின் வழிபாடு தொடர்பான தத்துவார்த்த மகிமை கொண்டது. இப் புராணம் சிவனை உயர் பரம்பொருளாக ஏற்றுள்ளது. அவரே பிரபஞ்சத்தின் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் பரம் பொருள் என்ற கருத்து எல்லா விதமான படைப்புக்கும் மூலகருத்தாகவும் குறிப்பதாக உள்ளது. ஆனால் அறியாமை யில் மூழ்கி உள்ள ஆன்மாக்கள் சிவன் பற்றிய தேடலில் சிவன் சாதாரண மனித தோற்றம் கொண்டுள்ளான் என்பதை ஏற்கின்றனர். ஆனால் எத்தகைய பண்புக் கும், வரைவிலக்கணத்திற்கும் அப்பாற்பட்ட யாவும் கடந்த பரம் பொருளாக விளங்கும் சிவன், ஆன்மாக்கள் இன்னலுறும் போது அவற்றின் வேண்டுதல், வழிபாடு முக்கியம் கொடுத்து கருணை மேலீட்டால் அருள் புரிகிறார் எனும் கருத்து சைவசித்தாந்தத்தில் முக்கியம் பெறுகிறது.

பக்தன் ஆனவன் ஆத்மீக விழிப்புணர்வு பெற தன்னளவிலே ஏற்ற பல விடயங்கள் இப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. சிவபுரா ணம் பல்வேறு வழிபாட்டு முறை பற்றியும், உபசாரம் பற்றியும், உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியான சாதனை பற்றியும் முடிவாக கூறுகிறது. அவன் தனது சமய வாழ்க்கையை மூன்று வகையான பக்தி மார்க்கத்தில் ஆரம்பிக்கிறார். இதன் மூலம் கடவுளின் தோற்றப்பொலிவுகள், பெருமைக ளைக் கேட்டு, போற்றியும் வருவதால் அவன் உயர்ந்த பக்தனாக வரமுடியும் என்பதை சிவபுராணம் எடுத்துக் காட்டும். இது தொடர்பாக ருத்திர சங்கிதையில் ஒருவன் உள ரீதியாக பக்குவம் அடைய எட்டு வகையான தன்மை சொல்லப்படுகிறது. அதன் வழியாக ஆன்மீகம் கிட்டும். தன் உடலில் உள்ள ஆறு சக்கரங்களை எவ்வாறு படிமுறையாக ஒடுக்கி ஆத்மீக தரிசனத்துக்கு உரிய முறை பற்றியும் இப் புராணம் கூறும். மரபு ரீதியான கிரியை பற்றியும், யோகத்தா லும், தியானத்தாலும் ஒருவன் ஆன்மாவை புனிதப்படுத்த முடியும். ஒரு குறிப்பிட்ட நிலை சார்ந்த விடயங்கள் தொடர்பாக பல்வேறு நிலை ஊடாக தன்னைப் பக்குவப்படுத்த முடியும். அதன் மூலம் தன்னளவிலும் வழி படும் தெய்வத்திலும் சிறந்த இணக்கப் பாட்டை ஏற்படுத்துகிறார். இதன் மூலம் தன் மனித இருப்பை ஏற்படுத்த அவனுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய நிலை ஏற்படுத்துவதில் சிவபுராணம் தனித்துவம் பெறுகிறது.

சைவசமயத்தைப் பொறுத்த மட்டில் சமயமும், தத்துவமும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த காரணத்தால் சைவ சமய சாதனைகளைப் பொறுத்த மட்டில் சைவசமயி ஒருவன் எவ்வெவ் வகையில் அவற்றை மேற்கொள்ள வேண்டுமென்ற வகையில் புராணங்களில் பல வழிமுறை கள் காணப்படுகின்றன. சுருக்கமாகக் கூறின் சைவசித்தாந்த சாஸ்திரங்கள் வகுத் துக் கூறும் சாத்திரங்களை எவ்வாறு பின் பற்ற வேண்டும் என்று விளைபவனுக்கு வழிகாட்டியாக அமைவது புராணம் தரும் விளக்கமாகும். இவ்வகையில் சைவசித் தாந்த மரபுகளுக்கும் புாரண சிந்தனைக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை காணப் படும்.

சைவசித்தாந்தம் சிறப்பாக போற்றும் சிவனின் பல்வேறு சிறப்பம்சங்கள் சிவ புராணத்தில் மேலும் சிறப்பாக விளங்கப்படு கிறது. மெய்கண்ட சாஸ்திரம் பேசுகின்ற குருலிங்க சங்கமம் பற்றிய விடயங்களை நாம் தனித்தனியாக விளங்க சிவபுராணம் தரும் விளக்கங்கள் இன்றியமையாது விளங்குகிறது. இக் காரணத்தால் தான் சிவபுராணம் புராண வரிசையில் புனிதமா கப் போற்றத்தக்கது. சிவனைப் பின்பற்றிக் கூற சிவனே அனைத்துக்கும் காரணன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமானவன், நுண்ணியவற்றிற்கு நுண்ணியமானவன், பெரியனவற்றிற்கு பெரியவனானவன், எளிதானவற்றிற்கு எளிதானவன். மக்கள் தமது உள்ளார்ந்த உயரிய அறிவால் சிவனை வழிபாடு செய்து மகிழ்வுறும் வகையில் பல சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளது. ஒரு சமயத்தை சார்ந்த தெய்வீக வழிபாட்டிற்கு இன்றியமையாத நம்பிக்கையின் உறைவிடம் சிவனாவான். ஒருமைக்கு இடமானவன் அவனே. வெற்றிக்கு ஆளானவன். பிரபஞ்சத்திற்கு மூலமானவன் என்ற வகையில் இவ் உலக ஒளியான சூரியனுக்கு ஒளியூட்டுபவன். ஒளியும் அவனே.

புராணங்களுக்கே உரிய சிவபுராணத்தில் இடம்பெறுவதால் சிவனின் பரத்துவம் சிறப்பிக்கப்படுகிறது. இவ்வாறு சிவனின் பரத்துவத்தைக் கூறும் வகையில் அவற்றைக் கேட்பதால், படிப்பதால் கிடைக்கும் பயன் வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறு படிப்பதால், கேட்பதால் வரும் பயன்கள் அனைவருக்கும் பயன் கிடைக்கும். நோயுற்றவர் நோய் நீக்குவர், பயன்பெறாதவர்கள் பயன் பெறுவர். சைவசித்தாந்தம் ஆன்மாவோடு தொடர்புபடுத்தும் தீவினை பற்றி தீவினையாளர் இத்தகைய பரத்தினால் இன்னல்களில் இருந்து விடுபட இதைக் கேட்கும் அனைவருக்கும் இறை இன்பம் கிட்டும். நீண்ட ஆயுள், முத்தி, சந்தான விருத்தி, உலக இன்ப விடுதலை, மோட்சத்திற்கு பக்தர்களை வழிகாட்டும் எனவும் மிக உயர்வாக சிவஞானத்தை நல்கும் எனவும் சிவபுராணம் கூறுகிறது.

இவ்வாறு எத்தகைய வரையறைக்கும் அப்பாற்பட்ட சிவனை பக்தியுடன் வழிபடுவோர் சிவனாந்தப் பேற்றிற்குச் செல்வர் என்பது இக் கோட்பாடாகும். இந்த உயர் சிவ ஞான பேற்றையும், முக்தியையும் அருளும் காரணத்தால் பெரும் எண்ணிக்கையான சித்தர்கள் அவ் உயர் முக்திப்பேற்றை போற்ற அருள் காரணம். பக்தி மார்க்கமே காரணம். எனவே தூய்மையான பக்தியில் இருந்து சிவ பக்தி தோன்றும். நிறைவான ஞானத்தின் தாயாக இந்த தூய்மையான பக்தி போற்றப்படும். தர்ம சிந்தனை மூலமாக எளிதில் அடையும் இப் பக்தி நல்கக் கூடிய உயர் இன்பம், உயர் சித்தி பற்றியும் இது விவரித்து கூறும்.

இவ்வுலகை அருளாகக் காப்பது சிவனின் சோமாஸ் கந்த வடிவம் விளங்கும். சைவ சித்தாந்தம் சிவனுக்கு கூறும் ஐந்தொழில் விளக்கம் சிவபுராணத்தில் நன்கு இடம் பெறும். படைப்புக்கு முன் சிவனே விளங்குவதாகவும் இடையில், இறுதியில் திகழ்பவனாக சிவபுராணம் போற்றும். எப்போதும் இப்பிரபஞ்சத்தில் சதாசிவன் தனியாக விளங்குவர் என புராணம் கூறும். ஆகவே படைப்பு, பாதுகாப்பு, அழிவு ஆகிய செயல்களுக்கு இப் பிரபஞ்ச சாட்சியாக சிவன் விளங்குகிறார்.

சிவபுராண உமா சங்கிதையில் சிவ மகிமை கூறப்படும். ஓம் நமசிவாய மந்திர மகத்துவம் அதை ஓதுவதால் கிட்டும் பயனும் இம்மந்திரம் யசுர் வேதம் சதருத்திர சம்கிதையில் மத்தியில் இடம் பெறும். இதை முறையாக ஓதுவதால் கிட்டும் பயன் பற்றிக் கூறும் சிவவழிபாட்டுச் சாதனை அருள் இறைவனை ஜபம் செய்வது முக்கியமாகும்.

புராணங்களின் பெருமையில் சிவ புராணத்தில் தவ பெருமை கூறப்படுகிறது. இவ்வாறு சிவபுராணம் சைவசித்தாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் கோட்பாடுகளை விவரித்துக் கூறும் போது அவை கூறும் வழிமுறையிலே மூன்று முக்கிய விடயம் பெறும் முத்திக்கு மனனம், சிரவணனம், நிருத்தி யாசனம் இடம்பெறும். சிவ அருள் பெற்று விடுதலை பெற பக்தியோடு இறை புகழ் பாடுதல், அவனுடைய புகழை சிந்திப்பதும், அவனின் திருநாமம் புகழ்வதுவும் வித்தியேஸ்வர சங்கிதையில் கூறப்படும். மேலும் ஆலய பெருமை பற்றியும் கூறும். அடுத்து ஒரு வனின் நற்செயல் பற்றி சிறப்பாகக் கூறப் படும். முக்கியமாக வித்தியேஸ்வர சங்கிதை யில் பதினோராம் அத்தியாயம் மிகச் சிறப்பாக பஞ்சாட்சர மந்திரம் கூறப்படும். பத்தாவது இயலில் ஓம்கார மந்திர சிறப்பு பேசப்படும். கடோப உபநிடதத்தில் ஓம்காரம் பற்றியும் அது அனைத்தையும் விட உயர்வான அச்சரம். அதுவே பிரம்மம். எவனொருவன் எதை தியானிக்கிறானோ அவனுக்கு சகல நலனும் கிட்டும் என மேலும் சிறப்பாக சிவபுராணத்தில் வித்தி யேஸ்வர சங்கிதை தரும் விளக்கம் ஆகும். இதனை எவ்வெவ் வகையில் எவ் ஆசாரத் தோடு எவன் அனுஷ்டிக்க வேண்டும் என்றும் தரப்படுகிறது. எக்காலத்தில் ஜபித் தால் எத்தகைய நன்மை கிடைக்கும் என்பது பற்றி சிவனின் சிவலிங்கப் பெருமை கூறப் படும்.

தொகுத்து நோக்கின் சிவபுராண பெருமையில் சைவசித்தாந்த கோட்பாடு கூறும் வகையில் சிவபுராணம் அமைவது சிறப்பு. இதன் சிறப்பு பேறு ஒன்று ஒவ்வொரு இயலிலும் பல்வேறு கோணங்களில் அவற் றின் சிறப்பைக் கூறுவது முக்கிய அம்சம். இவை யாவற்றிலும் மேலாக சிவலிங்க வழி பாட்டில் பதினாறு வழிபாடு பற்றியும் இதை பின்பற்றுவதால் படிப்படியாக சிவலோகத்தை யும் அடையும் வாய்ப்பு கிட்டும். ஆகவே சிவவழிபாட்டில் பல உபச்சாரம் கூறுவதால் சிவபக்தியின் மேன்மையை இப்புராணம் விதந்து போற்றுகிறது.

## உசாத்துணை நூல்கள்


1. இந்திய தத்துவ ஞானம் - லக்ஷ் மணன்.கி
2. இந்து சமய வரலாறு - கந்தையா பிள்ளை.ந.சி
3. இந்து மத வரலாறு - ராஜரீகம். தே
4. வேதம் விளக்கும் அறிவு - கமலக் கண்ணன்.பா
5. இந்து சமய வரலாறு - ந.சி.கந்தையா பிள்ளை
6. சிவ பூசை விளக்கம் - அச்சுவேலி சிவஸ்ரீ.ச.குமாரசுவாமிக்குருக்கள்
7. சைவ இலக்கிய வரலாறு - சித்தாந்த கலாநிதி, பேராசிரியர் ஔவை. சு.துரைசுவாமிப்பிள்ளை
8. சைவ சமய வளர்ச்சி - டாக்டர் மா.இராச மாணிக்கனார்
9. சைவசித்தாந்த தெளிவியல் - மகாவித்து வான் அருணவடிவேல் முதலியார்
10. தமிழர் மதம் - கா.சுப்பிரமணியபிள்ளை
11. தமிழ் இலக்கிய வரலாறு - பேராசிரியர் வி.செல்வநாயகம்
12. பாலுசாமி.நா. - வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி 1,2,3 தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
13. சிவமஞ்சரி.ஸ்ரீ வேத, ஆகம, புராணேசு வரர்
14. இந்துக் கலைக் களஞ்சியம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரத்தில் குரு சிஷ்யன்

அளவையூர் சைவப்புலவர் சித்தாந்தப் பண்டிதர்
**வைத்தியலிங்கம் பாலகிருஸ்ணன்**
B.A (Hons), (Cey) M.A (Cey)

**அறிமுகம்**

திருமந்திரமானது கி.பி 4ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 6ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே எழுந்ததாக கூறப்படுகின்றது. பன்னிரு திருமுறைகளிலே பத்தாவது திருமுறையாக விளங்கும் சிறப்புடைய நூல் திருமந்திரம் ஆகும். திருமந்திரம் திருமூலரால் அருளிச் செய்யப்பட்டது. அவர் திருவாவடுதுறைக் கோயிலில் உள்ள அரசமரத்தடியில் மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்திருந்தார் என்றும் ஆண்டுக்கு ஒருமுறை விழித்து ஒவ்வொரு மந்திரமாக மூவாயிரம் மந்திரங்கள் அருளினார் என்றும் கூறுவர். தோத்திரவியலாகவும், சாத்திரவியலாகவும் விளங்குகின்ற திருமந்திரம் "மூலன் உரைசெய் மூவாயிரம் தமிழ்" என வர்ணிக்கப்படுகின்றது. இந்நூல் "தமிழ் வேதாகமம்" என்ற சிறப்புப் பெயரினையும் பெறுகின்றது. திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. அது ஒன்பது தந்திரங்களாக உள்ளது. முதல் ஐந்து தந்திரங்களும் பொது எனும் அம்சமாகவும், பின்னைய நான்கு தந்திரங்களும் சிறப்பு எனும் அம்சமாகவும் காணப்படுகின்றது. இந்த பொது சிறப்பு தந்திரங்களைக் கொண்ட மூவாயிரம் பாடல்களைக் கொண்டமைந்ததே திருமந்திரம் ஆகும்.

சிவனிடம் உபதேசம் பெற்ற குருநாதர் எண்மவராவர். அவர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோகமுனி, பதஞ்சலி, வியாக்ரபாதர், திருமூலர் ஆகியோரே. இவ்வாறு சிவனிடம் உபதேசம் பெற்ற திருமூலரிடம் திருமந்திர உபதேசம் பெற்று மேன்மையடைந்தவர்கள் ஏழு மாணவர்கள் ஆவர். அவர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலையன் ஆகியோரே. அத்தகைய சிறப்பு வாய்ந்த குருவாகிய திருமூலர் அருளிய திருமந்திரம் குருவினுடைய சிறப்பினையும், ஒரு மனிதனுடைய ஆன்ம விடுதலையில் குருவினுடைய வகிபங்கினையும் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் ஆசிரியர் - மாணவர் உறவு தொழில் அடிப்படையிலேயே நோக்கப்படுகின்றது. எழுத்தறிவித்தவன் இறைவன் என்கிறது முப்பால். ஆனால் இந்த ஆன்ம ஈடுபாடு தற்போது ஆசிரியர் - மாணவர் உறவில் காணப்படுவதில்லை. உண்மையான ஆசிரியர்கள் மாணவர்களின் அறியாமையினைப் போக்கி அறிவொளியூட்டுகின்றனர். அவர்களை சரியான பாதையில் வழிநடத்தி வையத்துள் வாழ்வாங்கு வாழ உதவுகின்றனர். ஆன்மீக ரீதியில் குரு என்பவர் சீடனின் ஆன்ம ஈடேற்றத்தில் குருவின் வகிபங்கினையும் திருமந்திரம் சிறப்பாக எடுத்துரைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குரு பற்றிய வரைவிலக்கணம்**

குரு எனும் சமஸ்கிருதச் சொல் கு, ரு என்ற இரு எழுத்துக்களின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும். கு என்பது இருள் என்றும், ரு என்பது ஒளி என்றும் பொருள் படும். குரு என்னும் சொல்லில் உள்ள கு என்பது மலத்தையும், ரு என்பது நீக்குபவர் என்பதையும் உணர்த்தும். எனவே, குரு என்பவர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை நீக்குபவர் என்னும் பொருளுடைய ஒரு சொல்லாகவும் கருதப்படு கின்றது. கு - ர் உ என்று பிரித்து, கு என்பது சித்தியைக் கொடுப்பவர் என்றும், ர் என்பது பாவத்தைத் தகிக்கும் தீ என்றும், உ என்பது சிவன் என்றும் ஆகக் குரு என்பது இம் மூன்றும் நிறைந்தவர் எனப் பொருள்படும் என்பர் சிலர். குரு தன் சிஷ்யனின் அறி யாமை இருளை அகற்றி அறிவொளியினை உண்டாக்குபவர்; ஆன்மீக கண்களினை திறந்து வைப்பவர் எனக் கூறப்படுகின்றார்.

"குருவென் பவனே வேதாக மம்கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்து
ஒருசிந்தை யின்றி உயர்பாசம் நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலும் ஆமே"

என்றவாறாக குருவினைத் திருமந்திரம் விளக்குகின்றது. அதாவது சிவநெறியை உணர்த்தும் குருவானவன், மறை ஆகம நூல்களில் கூறுகின்ற மேலான இன்பத்தை நுகர்பவன்; அவனே சிவத்தவத்திலே ஆழ்ந்து ஆற்றல் பெற்றவன்; அத்தவத்தின் பயனை உயிர்களுக்கு ஊட்டுபவன்; உயிர் களை வேறொரு சிந்தனையின்றிச் சிவத் திடமே எண்ணங்கொள்ளச் செய்பவன்; மாணவரை பாசப்பற்றுக்களில் இருந்து விடுதலை பெற்று தூயவராய் ஆக்குபவன்; மேலும், அவரை இறைவனிடம் சேரும்படி வைப்பவன்; இத்தனையவனே சிறந்த குரு ஆவான் என்று விளக்குகின்றது.

தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு (2011). அதாவது இறைவனது திருவடியான சிவ உணர்வைச் சீடனுக்குத் தந்தருளும் தலைமைப் பேறுடையவனே குரு. தலை வன் என்னும் போது சீடனை விட அறி வாலும் ஆற்றலாலும் மேலோங்கி நிற்கும் இயல்பு தெரிகிறது. அளிக்கும் என்னும் போது குருவின் பெருங்கருணைத்திறன் விளங்கும். பிறவா நெறி தந்த பேரருளாளன் மறவா அருள் தந்த மாதவன் (1972) என்று பிறிதோரிடத்து இதனை மூலர் வலியுறுத்து கிறார். தாள் தருதல் என்பது சிவபெருமான் திருவடியைக் காட்டும் தன்மை என்றும், தன் தாள் காட்டி 'என்று திருவாசகம் பேசுவ தையும் இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

குரு என்பவர் உபதேசம் செய்கின்றவர். இதனை மந்திரம் ஒரெழுத்துரைத்த மாதவன் (516), ஒரெழுத்து ஒரு பொருள் உணரக்கூறிய சீரெழுத்தாளரை (514) என்று இதனைக் கூறுவார் திருமூலர். மந்திரம் என்பதை உணருமாறு கூறுபவரே குரு. அறிதல் மட்டும் போதாது. உணர வேண்டும். குரு அறநெறி தவறாத பெருங் குணத்தாராகச் செந்தண்மை பூண்டொழு கும் சிறப்புடையவராகக் திகழ்தல் வேண் டும். "குரு என்பவன் ஞானி". அதாவது அறி வோடு கூடிய அனுபவமிக்கவராக இருத்தல் வேண்டும். குரு என்பவர் ஒரு வழிகாட்டி.

"வரும்வழி போம்வழி, மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலும் ஆமே" (2018)

என்னும் திருமந்திரம் குரு நமக்குக் காட்டும் வழிகளைப் பட்டியலிடுகிறது. மேலும் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனை அடைய உதவும் வழிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவ சித்தாந்தம் உணர்த்தும் நெறிகளையும் காட்டுபவர் குரு. இதனை

"பத்தன் சரியை கிரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத் தால்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே"

என்னும் திருமந்திரம் உணர்த்தி நிற்கின்றது.

இறைவனைச் சென்றடைவதற்குரிய எளிய வழி குருவை வழிபடுவதனால் கிட்டும் என திருமூலர் குறிப்பிடுகின்றார். இந்து மதத்தினைப் பின்பற்றுபவர்கள் அனைவருக்கும் சிவனே முழுமுதல் கடவுள். அவரே குருவானவர். அவர் சிஷ்யனுக்கு உபதேசம் செய்வதற்காக மானுட ரூபத்தில் தென்படுகின்றார். மானுடரூபத்தில் இருந்தாலும் கூட குரு என்பவர் சிவரூபமே. சிவமாகிய குரு இலக்கண ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் தனிப்பொருளை சாராத ஒரு மெய்ப்பொருளைத்தான் உணர்த்துகின்றது. அந்த மெய்ப் பொருள்தான் குரு.

### சற்குருவும், அசற்குருவும்

குருவை இருவகைப்படுத்துகிறார் திருமூலர். அவை சற்குரு, அசற்குரு என்பனவாகும். உண்மையான நன்னெறியைக் காட்டும் குரு சற்குரு. அவ்வாறு காட்டாத போலிக்குரு அசற்குரு. முதலில் அசற்குரு என்போர் யார் எனத் திருமூலர் விளக்குகிறார். 'கு' ஆகிய இருளிலிருந்து 'ரு' ஆகிய வெளிச்சத்தைதக் காட்டக்கூடிய ஆற்றல் பெற்றவரே குரு என்பவர்.

"தாள் தந்து அளிக்கும் தலைவனே சற்குரு
தாள் தந்து தன்னை அறியத் தரவல்லோன்
தாள் தந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாள் தந்து பாசம் தணிக்கும் அவன் சத்தே"
(2011)

என்னும் பாடல் விளக்குகிறது. அதாவது

"பாசத்தை நீக்கிப் பரனோடு தன்னையும்
நேசத்து நாடி மலமற நீக்குவோர்
ஆசற்ற சற்குரு ஆவார்"

என்பதே சற்குருவின் அடையாளம். இத்தகைய சற்குருவின் காட்சியும் உபதேசமும் திருவடி தீட்சையும் மும்மலம் போக்கும் ஆற்றலும், வீடுபேறு தரும் சிறப்புக் கொண்டவை. சற்குரு சத்து, அசத்து, சதசத்து ஆகிய முப்பொருள்களின் தன்மையைக் காட்டி மாயை நீங்கிச் சிவத்தைச்சேர அருளுபதேசம் செய்கின்றார். இத்தகையோர்களையே நாம் வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும். அத்தகு குருவின் திருவடிப்பற்றி பூசித்து ஆசிமாறாமல் உடம்பைப்பற்றியும், உயிரைப்பற்றியும் அறிய முடியாது. சத்தைப் பற்றியும், அசத்தைப் பற்றியும் அறிய முடியாது. காலம் உள்ளபோதே அதாவது இளமை இருக்கும்போதே குருவை அறிந்து, அவரது உபதேசத்தைப் பெற்றுப் பிறவிப்பிணியை நீக்கிக் கொள்ளவேண்டும். மெய்ஞ்ஞான குரு இன்றி சிவத்தை அடைய முடியாது.

சிவ உணர்வு இல்லாதவர், உண்மைப் பொருளாராய்தல் இல்லாதவர், ஐயந்திரிபற வேதாகமநெறி கல்லாதவர், பணிவு இல்லாதவர், மற்றவரைப் பழிப்போர், ஆன்ம போதம் உடையவர், மந்திரம் தந்திரம் யோகம், ஞானம், பந்தம், வீடு அறிந்தாரைச் சிந்தித்து உண்மை ஞானம்பெற வழி காட்டாது, வயிற்றுப் பாட்டுக்காகக் குருவாக வாழ்வோர், அறிவில்லாத மூடர், காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய ஆறுவகைக் குற்றங்களுக்கு ஆட்பட்டவர்கள், பாவிகளுக்குப் பொய்யை உணர்த்துபவர் அசற்குரு ஆவார்கள். பக்குவம் அடைந்தவர்களே பக்குவன் என அழைக்கப்படுகின்றார்கள். பக்குவம் என்பது தகுதி, முதிர்ச்சி, ஆத்ம பரிபாகம், ஆத்மாவை அறிந்தவன் என்றவாறாக பொருள்படுகின்றது. எனவே பக்குவன் என்றால் ஆத்மாவை அறிந்தவன். ஆத்மாவை அறிந்து ஞானக் கண் திறந்தவன். ஆத்மாவை அறிந்து ஞானக்கண் திறந்தவன்தான் மற்றொருவனுக்கு ஞானக் கண்ணை திறக்கமுடியும் என திருமூலர் கூறுகின்றார். இத்தகையவர்களை நம்பிச் செல்வது குருடன் குருடனுக்கு வழி காட்டிய நிலையில் கொண்டு போய் வீழ்த்தும். இதனை பின்வரும் திருமந்திரப் பாடல் தெளிவாக உணர்த்துகின்றது.

"குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே".

மனிதராகப் பிறந்த அனைவருக்கும் குருவை அடையும் பாக்கியம் கிடைப்பதில்லை. அப்படியே குரு கிடைத்தாலும் திருமூலர் கூறும் அறியாமையினை அகற்றும் குரு கிடைக்க வேண்டும். அது அவரவர் முற்பிறப்பில் செய்த கன்ம வினைகளைப் பொறுத்தே அமைகின்றது எனக் கூறுகின்றார்.

இங்கே பகவான் ஸ்ரீகிருஸ்ணன் பகவத் கீதையில் "ஆயிரக்கணக்கான மனிதர்களுக்குள் யாரோ ஒருவன் உள்ளதை உள்ளபடி அறிகின்றான்" எனக் கூறுவது நோக்கத்தக்கது. அதாவது மரத்தினை உருவாக்கும் ஆயிரக்கணக்கான விதைகளில் பெரும் பகுதியை மனிதன் உட்பட பல்வேறு உயிரினங்கள் உண்ணுகின்றன. விதைக்கப்பட்டவை அத்தனையும் முளைப்பதில்லை. தரிசு நிலத்திலோ பாறையிலோ விழுந்தவைகள் சரியாக முளைப்பதில்லை. எனவே முளைப்பவற்றிலும் நல்ல விருட்சமாவது ஒன்றிரண்டுதான். ஒளவையார் இந்த மானுடப்பிறவி பற்றிக் குறிப்பிடும் பொழுது "அரிது அரிது மானுடராய் பிறத்தல் அரிது; அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்றார். வாழ்வின் நோக்கம் அறியாமை எனும் இருள் அகற்றி அறிவு எனும் ஒளி பெற்று இறை உணர்வு பெறவேண்டும்.

## தகுந்த குருவைத் தேர்ந்தெடுத்தல்

உள்ளம் பண்பட்ட தகுதியோடு, மெய்ப் பொருளை உணர்த்தும் ஆசானிடம் சென்று வணங்கி, நல்வழியைக் கேட்டறிந்து இறையருள் பெறுபவனே "பக்குவன்" ஆவான். அத்தகைய மாணவன் தேர்ந்தெடுக்க வேண்டிய குருவினுடைய அருள்நிலை பற்றியும் திருமூலர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். செந்தமிழ் மறைகளையும், ஆகமங்களையும் விழியாகக் கொண்டு அருளுரை வழங்கும், யாருக்கும் கேடு நினையாத அருட்குருவினை அடைந்து அவரது வழியினைக் கடைப்பிடிக்கும் மாணவரே இறையருள் பெறுவதற்குரிய செந்நெறியினைக் கற்றவராவார். இவரது வழியினை அறியாதவர் பிறந்தழியும் குறைவாழ்வினை உடையவராவர். அவர்களுக்கு வீடுபேறு கிட்டாது.

"தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்
பழுதறி யாத பரம குருவை
வழியறி வார்நல் வழியறி வாளர்
அறிவறி வார்மற்றை அல்லா தவரே".

இவ்வாறாக பக்குவப்பட்ட மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த அருட்குருவின் நெறியினைப் பின் பற்றுபவனாக இருக்க வேண்டும் என்பத னைத் தெளிவுபடுத்திய திருமூலர், சீடன் எத் தகைய குருவைத் தேர்ந்தெடுக்க வேண் டும் என்பதனை 1992, 1693ஆம் பாடல்களில் தெளிவுபடுத்துகின்றார். மெய்ப்பொருளைக் கற்பிக்கும் ஆசிரியர், மாணவன் ஆர்வத்து டன் இருக்கின்ற பொழுதே, மேலான மெய்ப் பொருள் என்னும் ஒளிவிதையை, தலை மலராம் ஆயிரம் இதழ் தாமரையிலிருக்கும் இறைவனை எண்ணிக்கொண்டு, சிதையும் சிந்தனைகளை ஒரு நிலைப்படுத்தி செம்மை யாக்கி, ஓதுகின்ற அன்புடைய மாணவனின் அறிவிலே விதைத்தருள வேண்டும். இத்த கைய புலனழுக்கற்ற மெய்ப்பொருள் அறிவு டைய அருள்நிறைந்தவரையே பண்பட்ட மாணவனாகிய ஒருவன் தன் குருவாக அமர்த்திக் கொள்ளுதல் வேண்டும். அவ ரையே வணங்கி ஏற்க வேண்டும். அவரு க்கு தன்னுடைய உடல், உயிர், செல்வம் யாவற்றையும் உரிமையாக்க வேண்டும். எள்ளளவு நேரம் கூட வீணாகாமல், இடை விடாமல் அவருடைய அருட்குறிப்பு வழியே கடைப்பிடித்து நின்று, மெய்ப்பொருள் அறி வைப் பெற்றுத் தெளிவதாலே சிவத்தின் திரு வடியான ஒலி ஒளியாம் அடிப்படையைப் பெறமுடியும்.

"பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை
விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்
சிதைக்கின்ற சிந்தையை செவ்வே நிறுத்தி
இசைக்கின்ற அன்பருக்கு ஈயலும் ஆமே" (1962)

"கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்க
உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக!
எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதம் தானே" (1693).

**மெய்ப்பொருள் கற்கும் மாணவனின் பண்புகள்**

உயரிய பண்பென்னும் சத்துவகுணம் வாய்ந்தவனாய், மேலான உண்மைப் பொருளென்னும் சிவச்செம்பொருளை மன திலே கணித்து உருச்செய்து, இறையன்பர்க ளால் போற்றப்பட்ட வேறுபாடுடைய நெறிக ளின் அடிப்படையான தோற்றத்தை வழிபடும் முறையில் மேற்கொண்டு, எல்லையின்றிப் பிணித்து வருகின்ற பிறவித் துயர்களுக்கு அஞ்சியவனாய், அறநெறியினை வாழ்வில் கொண்டொழுகி நடப்பவனே மெய்ப்பொருள் கற்கும் மாணவனாவான். மேலும் நிலைத் தன்மையும் அறிவும் உள்ளது கடவுள். நிலையாமையும் அறிவின்மையும் உள் ளவை மாயை முதலிய மாசுகள், இவை உயிரைப் பற்றுபவை எனினும் இவற்றைக் குருவருளால் போக்கிக் கொண்டு உயிர் தூய்மையடையும். இத்தகைய உயிரை மாசுக்களில் இருந்து விடுவித்து இறைவன் திருவருள் கைகாட்டுதலால் முதிர்ந்த அன்பு ஏற்பட்டு உயிர் மெய்யுணர்வு பெறும். அத னால் திருவடிகளைப் பணிந்து பேரின்பசக்தி யில் பதிவு செய்யும். இத்தகைய தகுதி பெறு பவனே மெய்ப்பொருள் மாணவனாவான். இக்கருத்துக்களை திருமந்திரத்தின் 1696, 1697ஆம் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

"சாத்திக னாய்ப்பர தத்துவம் தானுன்னி
ஆத்திக பேத நெறிதோற்றம் ஆகியே
ஆர்த்த பிறவியின் அஞ்சி அறநெறி
சாத்தவல் லானவன் சற்சீட னாமே" (1696)

"சத்தும் அசத்தும் எவ்வாறெனத் தானுன்னிச்
சித்தை உருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பக்தியின் ஞானம் பெறப்பணிந்து ஆனந்தச்
சக்தியில் இச்சைத் தகுவோன் சற்சீடனே" (1697).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறைக்குருவே! உன்திருவடியே இப் பொழுதே என் முடிமேல் வைத்தருள்வாய்" என்று உள்ளத்தில் நினைக்க, துன்பத்தில் ஆழ்கின்ற மாயப்பிறவியை, முதல்வியாய் நின்று தொடங்கி இயக்கியருளும் அருட் பெருவெளியில் உள்ள அருட்சக்தியாம் அம்மை ஒழித்தருள்வாள். அதனால் திருவடி மெய்யறிவாம் ஞானம் பெறுவான். மேலும் கடவுள் பற்றிய மெய்யறிவின் மேல் விழைவு மேலும், மேலும் ஏற்படக் குருபரன் திருவடி யில் பெருங்காதல் உண்டாகும். குருவருளா லன்றி அடையப்பெறாத திருவடிப் பேற்றுக் குத் துணைசெய்யும் அன்பொழுக்கம், தொண்டு, தவம், அறிவு ஆகிய நான்கு நெறி களும் கைகூடப் பெற்றவனே மாணவன். இவன் முடியில் சிவகுரு திருவடி வைத்தால் ஆராயத்தக்க பெரிய மெய்யறிவைப் பெற்றவ னாவான். இக்கருத்துக்களை திருமந்திரத் தின் 1698, 1699ஆம் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

"அடிவைத்து அருளிதி ஆசான்இன்று உன்னா
அடிவைத்த மாமுடி மாயப் பிறவி
அடிவைத்த காய அருட்சக்தி யாலே
அடிபெற்ற ஞானத்தன் ஆசற்றுளோனே" (1698)

"சீராரும் ஞானத்தின் இச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதகம் நான்கும்தன் பாலுற்றோன்
ஆராயும் ஞானத்த னாம்அடி வைக்கவே" (1699).

இந்திய தர்சனங்கள் அனைத்துமே குரு வின் சிறப்பினை உணர்த்துவனவாகவே காணப்படுகின்றன. குரு வழிபாட்டுக்குரிய வராகக் காணப்படுகின்றார். இந்த குருவான வன் வெறும் மானுடன் அல்லன். உண்மை யில் மெய்க்குருநாதன் புறக்கண்களுக்கு புலனாகமாட்டார்கள். அவர் சிவனாக வீற்று இருப்பவர். அவர் தானத்தை ஊட்டுபவர்; மோட்சத்தை வழங்குபவர். இதனாலே திரு மந்திரத்தின் 1581ஆம் பாடல் கடவுளே குருவாக வந்து அருள்வார் என்பதனை உணர்த்தி நிற்கின்றது.

திருமூலர் கடவுளை குருவாக உணர்ந்து வழிபடுவோர் கைலாயத்தை அடைவார்கள்; முத்தியின்பத்தைப் பெறுவார்கள் எனக் கூறுகின்றார். சிவனாகிய குரு சீடனுக்குத் தன்னை உணர்த்துகின்றார். அங்கிருந்து அந்த நிலை தொடர்கிறது. ஆக்ஞா சக்கரமே குருவின் பீடம். அதுவே இறைவனின் வாசல். குருவின் வாக்கு சித்த வாக்கு; தூய வாக்கு. குரு தனது மாணவர்களுக்கு மெய்ப் பொருளை நோக்கவும், சோதிக்கவும், சிந்திக்கவும், தியானிக்கவும், பயிலவும், அனுபவித்து உணரவும் உதவி செய்கின்றார்.

மேலும் குரு தீட்சை செய்யும் முறையையும் திருமூலர் விளக்குகிறார்.

"உடல் பொருள் ஆவி உலகத்தால் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக்கை வைத்து
நொடியின் அடிவைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடியப் பிறப்பறக் காட்டினன் நந்தியே. (1747)

குரு செய்யும் தீட்சைகள் ஸ்பரிச தீட்சை, நயன தீட்சை, மானத தீட்சை, வாசக தீட்சை, மந்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை என்ப் பலவகைப்படும். இப்பாடலில் இந்தத் தீட்சைகள் பல இடம் பெற்றுள்ளன. "உடல், பொருள், ஆவி உலகத்தால் கொள்ளுதல்" என்பது சீடன் ஞானம் பெறத் தடையாகவுள்ள பற்றுகளைத் தீட்சையின் போது குரு ஏற்றுக் கொள்ளுதலைக் குறிக் கும். "அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அணையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையோ" என்னும் திருவாசக வரிகளையும் இங்கு ஒப்பு நோக்கலாம். இந்தத் தீட்சையால் சீடன் பெறும் பயன் என்ன என்பதை,

"பொட்டடித்து எங்கும் பிதற்றித் திரிவேனைப்
பொட்டடித்து உள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்
தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே" (1750)

என்னும் திருமந்திரம் விளக்குகிறது. முத்திநெறி அறியாத மூர்க்கரோடு விரும்பித் திரிகின்ற சீடனின் குற்றங்களை நீக்கித் தன்னொக்கச் செய்த தண்கருணையாளரே குரு. இராமகிருஷ்ணர் தம் சீடராகிய விவேகானந்தரிடம் தன் அருளாற்றல் முழுவதையும் தந்த நிகழ்ச்சி இங்கு நினைக்கத்தக்கது.

"குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென்பது குறித்து ஓரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே உரைஉணர் வற்றதோர் கோவே" (1556)

என்னும் திருமந்திரப் பாடல் குருவே சிவம் எனும் கோட்பாட்டினை நன்கு நினைவூட்டுகிறது. காரணம் என்ன என்பதை,

"ஏறு நெறியே மலத்தை எரித்தலால்
ஈறில் உரையால் இருளை அறுத்தலால்
மாறில் பசுபாசம் வாட்டலால் வீடுக
கூறு பரனே குருவாம் இயம்பிலே" (2028)

என்னும் திருமந்திரப் பாடல் ஆணவம், கன்மம், மாயையாகிய மும்மலம் எரித்தல், முடிவற்ற மந்திர முழக்கம், அறியாமையாகிய இருள் போக்கல், பாச நீக்கம், வீடுபேறு ஆகியன தருதலால் சிவமே குரு என்பது இதன் கருத்து. "பத்திப் பணித்து" (1548) என்று தொடங்கும் திருமந்திரமும் இதனை வலியுறுத்தும். எனவே குருவே குறியாகவும் நெறியாகவும் விளங்குபவர் என உணர முடிகிறது. அவனருளாலே அவன்தாள் வணங்கும் இயல்பினை அறிய முடிகிறது. குருவே பிறவிக் கடலைக் கடக்க உதவும் பெருந்தோணி. நம்மை வீடுபேறு நிலைக்கு உயர்த்தும் ஒரு ஏணி என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.

"குருவின் அடிபணிந்து கூடுவது அல்லார்க்கு அருவமாய் நிற்கும் சிவம்" என்பது ஔவையார் வாக்கு. சிவத்தை அடைய மெஞ்ஞான குருவாகிய ஞானிகளை / சித்தர்களை வழிபடுதலே முறை என்கின்றது தமிழ் மறையான திருமந்திரம்.

சிவனை வழிபட்டார் எண்ணிலாத் தேவர்
அவனை வழிபட்டங்கு ஆமாறு ஒன்றில்லை
அவனை வழிபட்டங்கு ஆமாறு காட்டும்
குருவை வழிபடின் கூடலும் ஆமே.
– திருமந்திரம் 2119

குருபூசை என்பது குருவின் திருவடியைப் பற்றி நின்று ஆதாரமாகிய 36 தத்துவங்களையும் கடந்து ஆன்மா விளங்கும் அழகைப் போற்றி நிற்பதே ஆகும். (1813)

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின்திரு வார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே" (183)

என்னும் திருமந்திரப் பாடல் குருபூசையைத் தெளிவுபடுத்துகிறது. முதலில் குருவின் திருவுருவைக் கண்டு வழிபடுதல், பூசை செய்தல். இரண்டாவது குருவின் திருநாமம் செப்புதல். அப்பூதி அடிகளார், பெருமிழலைக் குறும்பர் வாழ்வியல் இதனை வலியுறுத்தும். குருவின் உபதேசத்தையும் அறிவுரைகளையும் கேட்பது அடுத்த நிலை. நான்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது குருவின் திருவுருவத்தைத் தியானம் செய்தல். இப்பாடல் மனம் மொழி மெய்க ளால் குருபூசை செய்யும் மாண்பை நன்கு விளக்குகிறது.

, குரு லிங்க சங்கமம் என்பன ஒரு முக் கோணம் போல அமைவன. இவை ஒன் றோடொன்று உறவு உடையவை. குருவே சிவமெனக் கூறினன் நந்தி என்பார் திரு மூலர். சிவத்தை தாங்கிய நிலையில் குருவே சங்கமம் ஆகிறார். குருவருளால் சிவனருளைப் பெறுகிறோம். சிவனருள் பெற்ற நிலையில் சங்கமம் ஆகும் நிலை நமக்குக் கிடைக்கிறது. குருவாய் வருவாய் அருள்வாய் குகனே என்பார் அருணகிரி நாதர். இறைவனே குருவாக வந்து பக்குவம டைந்த ஆன்மாக்களுக்கு ஞானத்தை வாரி வழங்குகிறான். வீட்டின்பத்தைத் தருகி றான். வீட்டின்பம் பெற்ற உயிர்கள் அரனடி யார்கள் தாமே. அவனருளாலே அவன்தாள் வணங்கும் அற்புதம் இது. இவ்வாறே திரு மந்திரமாகிய நூலும் குருலிங்க சங்கமமா கக் காட்சி அளிப்பதை ஒரு பாடல் காட்டுகிறது.

“திருமந்திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந்திரமே சிவமானம் – அருமந்த
புந்திக்குள்ளே நினைந்து
போற்றுமடியார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்”

என்னும் தனிப்பாடலைக் காண்க. சிவ கதிக்கு வித்து என்னும் பெயரும், தொடரும் மந்திரம் என்னும் பெயரும் திருமந்திரம் குருவாக விளங்கும் நிலையை உணர்த்து கின்றன. திருமூலரே நமக்குக் குரு, அவர் திருவார்த்தையே திருமந்திரம். திருமந்தி ரமே சிவமாம் என்பது லிங்கமாகிய இறைவ னைக் குறிக்கிறது. என்னை நன்றாக இறை வன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே, என்பதால் திருமந்திரம் என்பது சிவனை, சிவாகமத்தைத் தமிழ் வழி கண்ட வடிவம் தானே. அதுவே ஞானலிங் கம். திருமந்திரத்தை நெஞ்சினுள் நினைந்து போற்றும் அடியார் தமக்கு என்னும் தொடர் சங்கமம் ஆகும். திருமந்திரமே குருவாக வும் லிங்கமாகவும் சங்கமமாகவும் திகழ்ந்து நமக்கு நன்னெறி காட்டுகின்றது எனலாம்.

நல்லைக்குமரன் மலரின் ஆரம்பகால பதிப்பாசிரியராக இருந்து பணியாற்றியவர் தமிழ்மணி தெல்லியூர் S.நடராசா அவர்கள். 1993 தொடக்கம் 1996 வரை நல்லைக்குமரனின் பதிப்பாசிரியராக அவர் பணியாற்றியுள்ளார்.

– பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மெய்யியலில் அத்வைதம்

**வி.ஆரணி**
இரண்டாம் வருடம், கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்திய மெய்யியலில் சங்கரர் மிக முக்கியமானவராகக் காணப்படுகின்றார். சங்கராச்சாரியார் தோற்றுவித்த அத்வைத மானது வேதாந்தத்தில் தலைசிறந்ததாக நோக்கப்படுவதனை அவதானிக்க முடிகிறது. வேதத்தின் சாரம் அல்லது வேதத்தின் உட்பொருளே வேதாந்தம் என்று பொருள் படும். வேதம் என்ற சொல்லாலே வேதம், பிரமாணம், உபநிடதம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும் ஒரு மரபும் உண்டு. அங்ஙன மாயின, இவையனைத்தினது உட்பொருளையும் கூறுவதே வேதாந்தம் என்று அழைக்கப்படும். (லஷ்மணன் கி, 2013, ப.306)

"சங்கராச்சாரியாரது தத்துவம் முழுமையானது. அதன் தொடக்கத்திலோ முடிவிலோ ஓர் எழுத்தினைக் கூடச் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டாத அளவு முழுமையானது, நாம் இவரது தத்துவத்தினை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம். ஆனால் இவரது பேரறிவுச் சுடரின் வீச்சானது எம்மை விடாது எம்முள்ளே ஊடுருவிச் செல்வதை மட்டும் எம்மால் தடுத்தல் இயலாது" என்பது சங்கராச்சாரியார் பற்றிய பேரறிஞர் இராதா கிருஷ்ணனனது மதிப்பீடாகும். வாதராயணரது வேதாந்த சூத்திரம் சூத்திர வடிவில் மிகச் சுருக்கமாக இருந்ததனால் அவர் காலத்திற்கு பின் அடிப்படை உண்மைகளைக் கூட புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் தெளிவிற்கு மாறாக வேற்றுமைகளும், குழப்பங்களுமே ஏற்பட்டதென்றும், அதனால் அறிஞர்கள் தம் உணர்விற்கு ஏற்றாற் போல விளக்கங்களை முன்வைத்த அறிஞர்களில் தலைசிறந்தவர் சங்கரர் ஆவார் என்றும் அறிஞர்கள் கூறுவர். மேற்படி நோக்குமிடத்து வேத உபநிடதங்களில் உள்ள தெளிவின்மைகளையும் முரண்பாடுகளையும் தெளிவு படுத்துவதற்கே சங்கரர் தன் அத்வைத வேதாந்தத்தை உருவாக்கினார் எனலாம். (சொக்கலிங்கம் க, 2009, ப.217)

சங்கரரது அத்வைதமானது சிறப்பான கருத்தமைவைக் கொண்டதுடன் அளவையியல் சார் நுட்பத்தினையும் கொண்டமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்வைதம் என்றால் அது சங்கரருடைய தத்துவக் கொள்கையினையே சுட்டி நின்றது. வேதாந்தக் கோட்பாடுகளுள் முதன்மையான கோட்பாடு அத்வைதக் கோட்பாடு ஆகும். பிரஸ்தான திரயத்திற்கு சங்கரர் எழுதிய உரையில் அத்வைத சிந்தனையின் தோற்றத்தினைக் காணலாம். உபநிடத உரையாடல்களும், மகா வாக்கியங்களும் அத்வைத சிந்தனைகளைக் கொண்டுள்ளன. பிரம்ம சூத்திரம் ஒருமைவாதக் கருத்துக்களை மிகச் சுருக்கமாக விபரிக்கின்றது. மேலும் சங்கரரின் பரமகுருவாகிய கௌடபாதரின் மாண்டூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய காரியை அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாகக் காணப்படுகின்றது. மேலும் பகவத்கீதையிலும் அத்வைதக் கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ் "அத்வைத சிந்தனைகளை எல்லாம் முக்கிய பிரமாண மாகக் கொண்டு "அத்வைதக் கோட்பாட்டை நிறுவியவர்" சங்கரர் ஆவார். இதனால் இவர் அத்வைத ஸ்தாபகர் என அழைக்கப் படுகின்றனர். சாந்தோக்கிய உபநிடதம் "பிரமம்" எனும் பதமானது உண்மையான ஆன்மாவைச் சுட்டுவதாக விளங்குகின்றது. தைத்திரிய உபநிடதம் ஆன்மாவை விளக்க "ஆத்மன்" எனும் பதத்தையே பயன்படுத்தி யுள்ளமை காணலாம். பிருகதாரண்ய உப நிடதமானது "பன்மைத்துவத்திற்கு இட மில்லை ஆத்மன் ஒன்று மட்டுமே உண் மையானது" என எடுத்துரைக்கின்றது. மாண்டுக்கிய காரிகை இரண்டற்ற ஆத்ம னானது மாயையின் காரணமாக வேறுபடத் தோன்றுகின்றது. உண்மையில் அங்கு வேறுபாடுகள் இல்லை என்று குறிப்பிடு கிறது. இவ்வகையில் பல உபநிடதங்களின் ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரமமே உண்மையானது என சங்கரர் கொண்டார்.

அத்வைதம் என்பது அ + துவைதம் எனப் பிரித்து உள்பொருள் இரண்டு அல்ல ஒன்று எனப் பொருள் கொள்ளப்படுகிறது. சங்கரர் இக் கொள்கையை நிறுவுவதற்கு ஆறு வகைப் பிரமாணங்களை ஏற்றார். அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம், உபமானம், அனுலப்தி, அருத்தாபத்தி என் பவையாகும். இவ் அத்வைதக் கோட்பாடா னது பிரமம் ஆன்மா ஆகிய இருமைக் கொள்கையை மறுத்து ஒருமைக் கொள் கையை வலியுறுத்துகின்றார். இக் கொள் கையானது சங்கரரால் பிரஸ்தான திரயங் களை அடிப்படையாகக் கொண்டு நிறுவப் படுகிறது. பிரமம் ஆன்மா உலகம் என்பவற் றில் பிரமம் உண்மை. ஏனையவை இரண்டும் தோற்றப் பொருள்களே ஆகும். தத்துவ மரபில் அத்வைதத்திற்கு இன்மைப் பொருள் கொண்டு பிரமம் ஒன்றே உண் மைப் பொருள் என்று சங்கரர் நிறுவினார். அத்வைதமானது பிரமத்தில் இருந்து ஆன்மா வேறுபடாத நிலையையும் விளக்கி நிற்கிறது. ஆடிப்படையில் பிரமமும் ஜீவனும் ஒன்று என்கிறார் சங்கரர்.

ஹசங்கரர் ஏகம்ஸத் எனும் வேத தத்துவ உபநிடதத்தை அடிப்படையாகக் கொண்டு பிரமம் மட்டுமே உண்மைப் பொருள் என்றும் ஏனைய பொருட்களாகிய ஆன்மா உலகம் யாவும் அதன் தோற்றமே அதாவது கானல் நீரைப் போன்று வெறும் தோற்றமே என்கிறார். பிரமம் அநாதியானது, அந்த மற்றது, அழிவில்லாதது, எங்கும் நிறைந் திருப்பது என்கிறார். பிரமம் எதனைப் போன் றதாக இல்லை எனக் கூறலாமே ஒழிய, எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம். எனவே பிரமத்தை சொல்லால் விளக்க முடியாது. இவ்வாறான பிரமத்திற்கு இரண்டு நிலைகள் காணப்படுகின்றன என்றார். நிர்குண நிலை மாயையோடு சேராத குணமற்ற நிலை மாயையோடு சேர்ந்த நிலை சகுண நிலை. இது ஈஸ்வரன் என அழைக்கப்படுகின்றது. எனவே ஒரே ஒரு மூலப் பொருளாய் உள்ளது பிரமம் என்கிறார் சங்கரர். பிரமம் உலகமாகத் தோன்றுவதற்குக் காரணம் மாயை எனவும் பிரமம் ஜீவன்களாகத் தோன்றுவதற்குக் காரணம் அவித்தை எனவும் சங்கரர் குறிப் பிடுகின்றார். அடிப்படையில் பிரமமும் ஜீவன் களும் ஒன்று என்கின்றார். இதனையே அவர் உபநிடத மகாவாக்கியங்களான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவமஸி, அகம் பிரமோஸ்மி, சோகமஸி எனும் வாக்கியங்களினூடாக நிறுவுகின்ற பிரமமானது அஞ்ஞானத்தின் காரணமாக அது பல வகைப் பொருட்களாகக் காட்சியளிக் கிறது. ஆவ் அஞ்ஞானத்தில் இருந்து விடு படும் இடத்து பிரமமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரண பொருள் என்பது அறியவரும் என்கின்றார்.

சங்கரர் உலகினைப் போன்றே ஆன்மா வும் பொய்யான தோற்றம் என்கிறார். இவர் பரமாத்மா ஒன்றே ஆன்மா என்றதால் இவரது கொள்கை ஏகான்மாவாகக் கொள் ளப்படும். சங்கரர் பரமாத்மாவே அவித்தை யின் காரணமாக ஜீவத்துவம் பெற்று ஜீவாத்மாவாகத் தென்படுகிறது எனவும் அவித்தை நீங்க அது மீண்டும் பரமாத்மா வாகத் தென்படும் என்பதை பின்வரும் உதாரணம் மூலம் விளக்குகிறார். சங்கரர் பிரதிவிம்ப வாத தத்துவமஸி எனும் மகா வாக்கியத்தின் ஊடாக நிறுவுகிறார். இங்கு பிரதிவிம்ப வாதம் என்பதன் பொருள் பொய் யான தோற்றம் என்பதாகும். இதனைப் பின்வரும் உ+ம் எடுத்துக்காட்டுகின்றது. வானத்தில் ஒரு நிலவு தான் உள்ளது. ஆனால் நாம் ஆறு, கடல், குளம், குட்டை போன்ற நீர் நிலைகளில் நோக்கும் போது ஒவ்வொரு நீர் நிலைகளிலும் ஒவ்வொரு நிலவு விம்பங்களாகத் தெரிகின்றதை அவ தானிக்க முடிகிறது. நீர் நிலைகள் அழிக்கப் பட்டால் விம்பங்கள் அழிக்கப்படும். இவ்வாறே பரமாத்மாவும் அவித்தை காரணத்தால் பல ஜீவான்மாவாகத் தென்படுகிறது எனவும் அவித்தை நீங்க அவை மூன்றும் பரமாத்மா வாகத் காணப்படும் என்றார். சங்கரர் அவச் சேத வாதத்தை அகம்பிரமோ அஸ்மி எனும் மகாவாக்கியத்தினூடாக விளக்கியுள்ளார். அபஷேதம் என்பதன் பொருள் பிரித்தல் என்பதாகும். இதனை உ+ம் மூலம் சங்கரர் விளக்குகின்றார். உலகம் எங்கும் உருவ மற்று ஒரே வெளி உண்டு அதனை நாம் குடம் பெட்டி அறை போன்ற தடுப்புக்களால் தடுக்கப்படும் போது அவ்வப் பொருட்களுக்கு ஏற்ப வடிவங்களைப் பெறுகின்றது. அத் தற்காலத் தடுப்புக்கள் சேதப்படுத்தப்படு மாயின், மீண்டும் அவை உருவமற்ற ஒரே வெளியாகவே தென்படும் என்கிறார் சங்கரர். சங்கரர் பரமாத்மாவே அவித்தை காரணமாக ஜீவத்துவம் பெற்று ஜீவாத்மா வாகத் தென் படுகிறது. அவித்தை நீங்க அது மீண்டும் பரமாத்வாகத் தென்படும் என்பதை உம் மூலம் விளக்குகின்றார். வெண்ணிற மலரை செந்நிறக் கண்ணாடி ஊடாகப் பார்க்கும் போது வெண்ணிற மலர் செந்நிற மலராகத் தென்படும். அவித்தை என்பதன் பொருள் அறியாமை என்பதாகும். அவித்தை ஆகிய அஞ்ஞானத்தினாலேயே பிரமத்தில் இருந்து ஆன்மா வேறுபட்டதாகக் காணப்படு கிறது என்கிறார்.

சங்கரர் உலகினைப் பொய்த் தோற்றம் என்கின்றார். இவ்வாறு உலகம் பொய்யான காட்சியைப் பெறுவதற்கு மாயையே அடிப்ப டைக் காரணம் என்கிறார். பிரமமே மாயை யின் காரணமாக பிரபஞ்சமாக மாற்றமடை ந்து காணப்படுகின்றது என்பதை விவர்த்த வாதத்தின் ஊடாக விளக்குகின்றார். "ஒரு பொருள் மாறாது இருந்தபடியே மாறிவிட்ட தாகக் கருதுதல் விவர்த்தவாதம் எனப்படும். அதாவது காரணப் பொருள் உண்மை, காரியப் பொருள் பொய் என்பதே விவர்த்த வாதம் ஆகும்" என்பதை உதாரணம் மூலம் விளக்குகின்றார். சங்கரர் உலகம் சிருஷ்டிக் கப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்ள வில்லை. ஏனெனில், பிரமம் அழிவற்றது, அநாதியானது ஆனால் உலகமோ உலகிலுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களோ அழியக் கூடியவை. எனவே, அழிவற்ற பிரமம் அழியக் கூடிய உலகினை சிருஷ்டிக்கமாட்டாது. எனவே இதனை விளக்குகின்றார். நெருப்பில் இருந்து நெருப்பினைப் பெற்றுக் கொள்ளலாமே தவிர நீரினைப் பெற முடியாது. தாயானவள் தன்னைப் போன்று எலும்பு, உடல், ரத்தம் கொண்ட குழந்தையைப் பெற்றுக் கொள் ளாமே தவிர மரப் பொம்மையைப் பெற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறே பிரமமும் ஒரு பொருளைப் படைக்குமானால் அது அழியாத தாக இருக்குமே தவிர, அழியக் கூடிய பொருளாக இருக்காது. எனவே சங்கரரின் கருத்துப் படி சிருஷ்டி நிகழ்வது உண்மை யல்ல. சிருஸ்டிக்கப்படுவது போல தென்படுகி றது. இதற்கு காரணம் மாயையே என்கின் றார். சங்கரர் இருளிலே கயிறானது பாம் பாகத் தென்படுகிறது. ஒளி கிடைத்தவுடன் இருள் அகல பாம்பு அல்ல. கயிறு என்பதை உணர்கின்றோம். இவ்வாறே பிரமமும் மாயையின் காரணமாக உலகமாகத் தென் படுகிறது. ஞானம் கிடைத்தவுடன் உலகம் அல்ல பிரமம் என உணருவோம் என்கின் றார். உண்மைத்துவம் பற்றி விளக்கும் வகையில் அத்வைதிகள் மூன்று நிலை களினை எடுத்தாராய்ந்தனர். இவை பிரதி பாஷிக சத்து, வியவகாரிக சத்து, பார மார்த் திக சத்து என்பனவாகும். இம் மூன்று நிலை யினைக் கொண்டு சங்கரர் உண்மைத்து வத்தின் தன்மையினைத் தெளிவாக்க முனைவதைக் காணலாம். பிரதிபாஷிக சத்து கனவு நிலை அல்லது திரிபு நிலை யாகும், வியவகாரிக நிலையானது அனுபவ நிலை அல்லது நனவு நிலையாகும். பாரமார்த்திக நிலையையே உயர்வான சத்து எனச் சங்கரர் உரைத்தல் காணலாம். கனவுலகக் காட்சி கலையும் வரைக்கும் கனவுலகம் நிஜமான உலகமாகவே தென் படுகிறது. கனவு கலைந்து நனவுலகத்திற்கு வரும் போது கனவுலகம் பொய்யாகிறது. எனவே நனவுலகத்தில் கனவுலகம் பொய். கனவுலகத்தில் நனவுலகம் பொய் என்றால் நனவுலகம் மட்டும் எவ்வாறு நிஜமான உலகம் என்று ஏற்றுக் கொள்ள முடியும் எனக் கேட்கின்றார். இதனால் பரமார்த்திக உலகம் எனும் புதிய உலகத்தினை அறி முகப்படுத்தி பரமாத்மாவுடன் கூடிய இந் நிலைக்கு வரும் போது நனவுலகமும் பொய்யாகிறது என்கின்றார் சங்கரர்.

சங்கரர் மாயையை உலகத் தோற்றத்தி ற்கு காரணம் என்கிறார். மாயை என்பதை சொல்லால் விபரிக்க முடியாது. இதனால் அதனை அனிர்வஷ்னியம் என்பார். மாயை கோட்பாட்டின் மூலம் பிரமம் உலகினைத் தோற்றுவிக்கிறது. ஏன்கிறார். மாயைக்கு இரு இயல்புகள் இருப்பதாகக் கூறுகிறார். ஆபர ணம், விஷேபம் என்பனவாகும். ஆபர்ணம் உலகினை மறைக்கும் இயல்பு உடையது. விஷேபம் இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு என்பதாகும். சங்கரர் மாயை சுதந்திர மற்றது அது பிரமத்தின் சக்தியாய் அதனோடு பின்ன மற்று நிற்பது. பிரமத்தோடு அநய பாவமுடையது, தாதான்யமானது, மாயை அநாதியானது, பொய்யறிவையும் பிழை அறிவையும் தருவதும் மாயையின் தொழிற் பாடே. விவர்த்தவாத மாயை தோற்றப்பா டொன்றே மாயைக்கு உரியது. உண்மை ஞானம் ஒன்றே மாயையை அகற்ற வழி என்று குறிப்பிடுகின்றார். பிரமத்தை மாயை மறைப்பதாகத் தோன்றுவதே ஈஸ்வரத் தத்துவம் ஆகும். மாயை என்பது உள்ளதும் அல்ல இல்லாததும் அல்ல என்கிறார் சங் கரர். ஆபரண சக்தியால் பிரமம் மறைக்கப் பட்டு விஷேப சக்தியால் இல்லாத பொரு ளாகிய உலகம் தோற்றுவிக்கப்படுகிறது என்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார் சங்கரர் நிஷ்காமிய கன்மத்தால் மனம் தூய்மையடைந்து பிரமத்தை தூய்மை யடையச் செய்கிறார். இத் தன்மை பிரமத்தை உனரும் நிலை எனவும் அதுவே முக்தி என்கிறார். (சொக்கலிங்கம் .க, 1995, ப.70)

பிரம்ம ஞானத்தின் வழி உண்மைத்துவ மானது முழுமையாக உணரப்படும் போது மாயை மறைத்த உண்மைத் திரை விலகி பிரமத்தை அறிதலுக்கு இட்டுச் செல்கிறது. இப்பிரம ஞானமே வாழ்வில் அடைய வேண் டுவதான இறுதி இலக்கென வேதாந்தம் விளக்குகிறது. (ஞானகுமாரன் .நா., 2012, 151)

**உசாத்துணை நூல்கள்**

ஞானகுமாரன்.நா, 2012, வேதாந்த மெய்யியல், சேமமடு பதிப்பகம்.

கரியண்ணா. எம், 2013, இந்திய தத்துவ ஞானம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

லக்ஸ்மணன்.கி, 2013, இந்து நாகரிகம் பாகம்1, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

சொக்கலிங்கம்.க, 1995, இந்து நாகரிகம் பாகம்1, ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

சொக்கலிங்கம்.க, 2009, இந்து நாகரிகம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு சென்னை.

# நல்லைக்குமரன் மலர்

நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்களை அனுப்பி வைப்பவர்கள் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

1. நீங்கள் அனுப்பும் ஆக்கங்கள் இதற்கு முன் வெளிவந்த நல்லைக்குமரன் மலரில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே வெளிவந்த கட்டுரைகள், ஆக்கங்களிலிருந்து புதிதான ஆய்வுப் பார்வையில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
3. தயாரிக்கப்படும் ஆக்கங்களை கணனியில் தட்டச்சு செய்து அதனை ஒப்புநோக்கி இறுவட்டிலும், பிரதிகளாகவும் அனுப்பி வைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.
4. ஆக்கங்களைத் தயாரிக்கும் போது அதற்கு உதவிய ஏனைய கட்டுரைகள், நூல்களின் பெயர் விபரங்களை உங்கள் ஆக்கத்தின் கீழ் குறிப்பிடுவது பொருத்துடையது.
5. ஆக்கங்களை அனுப்புகின்றவர்கள் தங்களின் தபால் முகவரி, மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை தவறாது குறிப்பிடுவதன் மூலம் கட்டுரைகள் தொடர்பில் ஏற்படும் ஐயங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும்.

- பதிப்பாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி

**மாதவி உமாசுதசர்மா**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் கூட வழி காட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மையை காலந்தோறும் புதிய புதிய கருத்துக்களைத் தந்து இனம், மொழி, நாடு எனும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்வை வளப்படுத்துவதனாலேயே உலகம் உய்ய வழிகாட்டும் உலகப் பொதுமறை நூலாக அனைவராலும் கற்று அதன்படி ஒழுக வழிகாட்டுகின்றது.

சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான திருக்குறளில் உலகளாவிய சிந்தனைகளும், மனிதனை வாழ்வில் உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவன் நாயனார் அருளிய திருக்குறள் "தமிழ் மொழி பேசும் மக்களுக்கு மட்டுமே உரியது" என்ற நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவருக்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதியார் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பகழ் பாடினார். வள்ளுவப் பொருட் சிறப்பை உணர்ந்த மதுரைத் தமிழ் நாகனார்ப் பெரியார் "எல்லாப் பெரிய சிறிய பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்தார். இவை வள்ளுவன் நூலின் நுண் பொருட் சிறப்பை காலமும், எல்லையும் கடந்து உணர்த்துவன.

"திருக்குறள்" தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல், இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழ வழிகாட்டுகிறது. வாழ்க்கையைச் சொல்லிப் புரிய வைக்கிறது.

முப்பால் ஆசான் அருளிய வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளைக் காட்டும் பதிவுகளாக உள்ளது. இதனை

"அல்லவை தேய அறம் பெருகும்
நல்லவை நாடி இனிய சொல்லின்"

எனும் குறளில் கூறியுள்ளார். பிறர்க்கு நன்மை தரும் சொற்களில் இனியமையானவற்றைச் சொல்பவனுக்கு தீங்குகள் தேய்ந்து அறம் வளரும் எனும் கருத்துப்பட விளக்குகின்றார். சராசரி மனிதனின் அன்றாட வாழ்வில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாக உத்தரவேதம் படைக்கப்பட்டுள்ளது.

உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கின் "அறம், பொருள், இன்பம்" ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ தமிழ்மறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுகிறது. எதிலும், விரைவும், ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு, மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தும் இந்நூல், வாழ்வியல் பொருண்மைத் தெளிவு பெறவும் துணை புரிகிறது.

தனிமனித நிலை, குடும்ப நிலை, சமூக உறுப்பினர் நிலை, குடிமக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள் என பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்துக்களை "அறிவுடமை, அன்புடமை, இல்வாழ்க்கை, இனியவை கூறல், கள்ளுண்ணாமை, குடிமை, பண்புடமை, மானம், நல்குரவு, மக்கட்பேறு" ஆகிய அதிகாரங்கள் வழியாக விளக்கியுள்ளார்.

தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாக இருந்து வந்த மரபுத்தளையை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனி மனிதத் தூய்மையை உருவாக்க முதற் பாவலர் முனைந்துள்ளர்.

மது அருந்துதலும், புலால் உண்ணுதலும், பல மாதருடன் வாழ்தலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலைமையை மாற்றி மனித மனத்தினை வாழ்வின் பயனைத் தடம்மாற்றும் தவறுகள் என சுட்டிக்காட்டி உள்ளார்.

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்
எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்".

அதாவது துஞ்சினர் என்பவர் செத்தவரே, கள்ளுண்பவர் என்பவர் நஞ்சுண்பவரே என "கள்ளுண்ணாமை" பற்றிக் கூறியுள்ளார்.

"உண்ணாமை உள்ளது உயிர்நிலை
ஊனுண்ண
அண்ணாத்தல செய்யாது அளது".

அதாவது புலால் உண்ணாமையால் நீண்ட ஆயுள் உண்டு, புலால் உண்டவனை நரகமும் உண்ணாது என "புலால் மறுத்தல்" பற்றி கூறுகிறார்.

"இலங்கு இழை மகளிர் பொலங்கலத்து
ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும்"

என்ற குறள்களின் மூலமாகத் தனிமனித ஒழுக்கவியல் பற்றி கூறுகின்றார்.

"உண்ணற்க கள்ளை" என்றும், அது "ஈன்றாள் முகத்தேயும் இன்னாதது" எனவும், "நஞ்சுண்பார் கள் உண்பார்" என்று மது அருந்துதலின் தீமையை உணர்த்தி தனிமனித வாழ்வு சிறக்கும் நெறியைக் காட்டியுள்ளார் நான்முகனார். "புலால் உண்பது மனித நெறி அல்ல என்பது வள்ளுவரின் கருத்தாக உள்ளது. இன்றைய மனிதர்கள் உணவு முறையில் சைவ உணவே சிறந்தது என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலம் மேலைநாட்டு உணவியல் வல்லுனர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். தெய்வப்புலவர் "புலால் மறுத்தல்" எனும் அதிகாரத்துள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதனை விளக்கமுறச் செய்துள்ளார். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி" என இயம்பியுள்ளார்.

"எல்லா உயிரும் தொழும் ...." எனும் குறட்பா மனிதன் உயர்வதற்கான வழியைக் காட்டுகின்றது. இன்றைய உயிர்ப்பலி கூடாது, கருக்கலைப்புத் தடைச்சட்டம் உள்ள நிகழ்கால நிலையில் வள்ளுவர் வாழ்வியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறி வெற்றி பெற்றுள்ளதாகவே கருதலாம். அன்பு, பண்பு, நட்பு போன்ற வாழ்வியல் இலக்குகளை எளிய முறையில் மனம் ஏற்கும் வகையில் உரைத்துத் தனிமனித வாழ்க்கையை பண்படுத்தியுள்ளார் "மாதானு பங்கி".

மனித வாழ்க்கை ஒரு குறுகிய வட்டத்திற் குள் நின்று விடாமல் விரிந்து பரந்து முக்கியத்துவம் மிக்கதாக அமைய வேண் டும். மனித மனங்களை விரிவுபடுத்தி அற வழிப்பட்ட சமுதாயத்தை உருவாக்குவது திருக்குறளின் நோக்காகவும் உள்ளது. மனமாசின்றி வாழும் வாழ்க்கை சிறப்புடை யது. அதுவே அறங்களில் முழுமையான வாழ்க்கை நெறி என்கிறார்.

"மனதுக்கண் மாசிலன் ஆதல்
அனைத்தறன் ஆகுல நீரபிற"

எனும் குறட்பா இதனை விளக்குகிறது. அறம் என்பது பற்றிய இலக்கிய மரபுசார் கருத்தாக்கத்தை வள்ளுவர் மாற்றியமைக் கின்றார்.

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாத இதுகேள் மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டது இல் "........

என்னும் காப்பியக் கருத்தை மறு ஆய்வு செய்து அறத்திற்கு புதிய விளக்கங்களைத் தந்தவர் வள்ளுவர். மனத்தூய்மை, ஈகை, காதல் எனும் தூயநெறிகளை வாழ்வியல் அறமாகக் கொள்ள வேண்டியதன் தேவையை உணர்த்தியுள்ளார்.

திருக்குறள் அன்பு, பண்பு, இன்சொல், நன்றியறிதல் என மனிதப் பண்புகளையும் விளக்குகிறது. இவற்றைப் பின்பற்றுவோர் பேற்றினையும், ஒதுக்குவோர் அடையும் இழிவினையும் திறம்படக் காட்டுகிறது. "வாய்மை" என்பதே தலையாய அறம் என்கி றது. "தமிழ் மறை" பொய்மை கோலோச்சும் இக்கால மனித சமுதாயத்திற்கு "பொய்யா மொழிப்புலவரின் கருத்துக்கள்" மலர்ச்சியை உண்டாக்கும் மருந்தாகக் கொள்ளலாம். அறங்களில் எல்லாம் வாய்மையே சிறப்பு டையது என்பதை,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின்
அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று"

எனும் குறட்பாவின் வாயிலாக அறிய முடிகிறது.

மனிதர்களின் வாழ்க்கை நெறியை உயர்த்தும் கோட்பாடாக வள்ளுவனார் மூன்று அறங்களைப் பின்வருமாறு வலி யுறுத்தியுள்ளார்.

- ஆன்மீக அறம்
- ஈதல் அறம்
- காதல் அறம்

கடவுளை "அறிவு, ஆற்றல், அப்பாற்பட்ட நிலை" என்னும் கருதுகோள் நிலையில் வைத்து மனித ஒருமைக்கும், சமுதாய அமைதிக்கும் வள்ளுவர் குறள் வழி குரல் கொடுத்துள்ளார். முதற் குறட்பாவில் "உலகு" என நினைவூட்டி உலகளாவிய நேயத்தை மறைமுகமாக உணர்த்தியுள்ளார். கடவு ளின் பெயரால், மதத்தின் பெயரால் சண்டை யிட்டுக் கொள்ளும் மனிதனுக்கு அவனது மனமாற்றத்திற்கு வள்ளுவம் ஒரு புதிய ஆன்மீக அறத்தை வகுத்துள்ளது. இதனை,

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே உலகு"

என கடவுளை நம்புகின்றமை வாயிலாக எடுத்தியம்புகின்றார். ஆனால் அது ஆணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல, பெண்ணும் அல்ல. இங்கே பெரு நாயனார் காட்டும் கடவுளுக்கு கோபுரமும் இல்லை, கோட்டைகளும் இல்லை. அது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய பேரறிவு, தூய்மையான அறிவு, இன்பத்தின் திருவுரு, அன்பின் அறத்தின் அடையாளம் என பின்வரும் குறட்பாக்கள் மூலம் தெளிந்துரைக்கிறார்.

"கற்றதனாலாய பயன் என்...."
"இருள் சேர் இரு வினையும் ...."
"பிறவிப்பெருங்கடல் ...."
"கோளில் பொறியில் ...."
(கடவுள் வாழ்த்து).

மனிதப் பண்பினை உயர்த்தும் ஒரு நெறி ஈகை. பிறருக்குக் கொடுத்து மகிழும் மனம் பெற்றால் மனிதன் பக்குவம் அடைந்தவ னாகி விடுவான். போட்டியும், பொறாமையும், அடுத்தவர் பொருளைக் கவரும் எண்ண மும், மனிதனை மிருக நிலைக்கு தாழ்த்தக் கூடியவை, ஈகைக் குணம் ஒன்றே மனி தனை மாண்புள்ளவன் ஆக்கும் என்ற பொருள்பட வள்ளுவப் பெருந்தகை "ஈகைக் குணமே உயிரின் ஊதியம்" என்பார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு ..."

என, கொடுத்துப் புகழுடையும் வாழ்க் கையே பயனுடைய வாழ்க்கை என்பதை உணர்த்தியுள்ளார்.

காதல் அறத்தினூடாக காமத்துப்பால் அற வழிப்பட்ட காதல் உறவுகளையும், இல்வாழ் வின் தத்துவங்களையும் எடுத்துரைத்துள் ளார். இதனூடாக ஆண் - பெண் உறவு நிலை, சமுதாய உறவுநிலை போன்ற வற்றை நெறிப்படுத்தியுள்ளார். காமத்துப் பாலில் அன்பெனும் நெறிக்குள் மனங்களின் சங்கமத்திற்குள் மாசுபடாத வாழ்வியல் படி நிலையை வடித்துத் தந்துள்ளார். பிறர்மனை நயத்தலையும், பரத்தையர் உறவையும் பெருங்குற்றமாகச் சொல்லி அன்புடைய இல் வாழ்வை சமுதாய அறமாக எடுத்துரைக்கி றார்.

ஆண் - பெண் உறவுநிலை, திருமணத் திற்கு முன்னும், பின்னுமாகக் காதல்நிலை, ஆகிய செய்திகளை விரிவாகப் பேசுகிறது இவ் அறம். ஆண் - பெண் சமத்துவம் வள் ளுவரின் கொள்கையாக எடுத்துக் காட்டப் படுகிறது. ஆண் மேலாதிக்க காலத்தில் அதற் கெதிராகத் துணிவுடைய சிந்தனைகளைக் கூறியுள்ள வள்ளுவரின் அணுகுமுறை புரட்சிகரமானது. பெண்களின் உரிமைக் காகவும், உலகியல் மாற்றத்திற்காகவும் அவர் பாடுபட்டுள்ளார். பெண் ஆணுக்கு இணையானவள், ஆற்றல் மிக்கவள் என்பதை,

"சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை"

என்று ஆற்றலும் அறிவும் நிறை பெண் களை உலகுக்கு முதலில் தந்தவர் வள்ளு வர் எனலாம். இத்தகைய வள்ளுவர் வழி காட்டலால் தான் பிற்காலத்தில் பாவலன் பாரதியை,

"வீட்டுக்குள்ளே பெண்ணைபூட்டி
வைப்போமென்ற விந்தை மனிதர்
தலை கவிழ்ந்தார் .........."

எனப் பாடவைத்தது எனலாம்.

சாதி மதத்தின் பெயரால் நிலவும் ஏற்றத் தாழ்வுகள், சமுதாயத்தின் கொடுமை இதனை வள்ளுவரின் குறட்பாக்கள் சுட்ட முனைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளன. பிறப்பால் இனம் பிரிந்த "வருணா சிரம" முறைமையை வள்ளுவம் எதிர்க்கி றது. "பிறப்பால் அனைவரும் ஒன்றே" என ஓங்கி ஒலிக்கிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"

எனும் குறட்பா வள்ளுவரை ஒரு சமு தாயப் புரட்சியாளராக அடையாளம் காட்டுகி றது.

வள்ளுவரை, தமிழ் கூறும் நல்உலகின் முதல் "பகுத்தறிவாளராகக்" கருதலாம். எந்த வொரு கருத்தையும், சிந்தனையையும் உள்ளவாறு ஏற்காமல் பகுத்து நோக்கி உள்ளத் தெளிவு பெற்று ஏற்க வேண்டும் என்பதே இவரது கொள்கை.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"
எனும் குறட்பா இதற்கு சாட்சியாகும்.

"வள்ளுவரின் நெம்புகோல் மானுடத்தின் மறுமலர்ச்சி எனலாம். மரபுகளைத் தகர்த்து புதுமையை நிலைநிறுத்துவது வள்ளுவரின் சமுதாயப் பணியாக இருக்கிறது. "அந்தணர் என்போர்".... "அன்பின் வழி....." என்று எல்லாம் உயரிய சிந்தனைகளை வழங்கி மனித வாழ்வை மலர்ச்சி அடையச் செய்த வர் திருவள்ளுவர் எனலாம்.

## குபேர வாசல் இராஜகோபுரம்

- நல்லூர்க் கந்தப் பெருமானின் குபேரவாசல் இராஜகோபுர அமைப்பிற்காக நவதானியம் விதைப்பு 10.08.2012 வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா அன்று காலைப்பொழுதில்

- குபேர வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது 20.11.2012 செவ்வாய்க் கிழமை கந்தசஷ்டி உற்சவ திருக்கல்யாணத்தின் போது காலை 6.00 மணி

- குபேரவாசல் இராஜகோபுரம் முதலாவது தளத்திற்கான கொங்கிறீற் 29.04.2013 இரண்டாவது தளம் 01.07.2013 மூன்றாவது தளம் 04.08.2013

– பதிப்பாசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேழமுகத்து விநாயகன்

பொ.சிவப்பிரகாசம்
கொழும்புத்துறை

திருச்சிற்றம்பலம்

**எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளால்**
**நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்**
**தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்**
**கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்**

திருச்சிற்றம்பலம்

12ம் திருமுறை
– பெரியபுராணம்

## விநாயகர் திருஅவதாரம்

இமயமலை அரசன் புதல்வியான பார்வதியுடன் சிவபெருமான் கயிலையங் கிரியில் எழுந்தருளி இருந்தகாலம், இளவேனிற்காலம். இன்பமயமானகாலம் ஆகையால், சாம்பசிவமூர்த்தியானவர், குளிர்ச்சிவேண்டி தமது தேவியாருடன் முய்யானவனத்தை அடைகிறார். அந்த நந்தவனத்தில் கொன்றை, கூவிளம், கோங்கு, முல்லை, மல்லிகை, மந்தாரம், சண்பகம், வாழை முதலாயவிருட்சங்கள் மலர்ந்திருக்கின்ற அழகைப்பார்த்துக் கொண்டே ஆங்கே அமைந்திருந்த ஒரு சித்திரகூடத்துள் வேதப் பொருளான சிவபெருமான் எழுந்தருளினார்.

அந்த நிலையில் உமாதேவியார் அந்த ஓவியமண்டபச் சுவர்களில் வரைந்திருந்த சித்திரங்களை விருப்போடு பார்த்து வந்தார். அவைகளில் ஒருபால் சத்தகோடி மகா மந்திரசொரூபங்களும், அவைகட்கு எல்லாம் முதலில் பிரணவ மந்திரசொரூபமும், அதில் ஆண் யானையும் பெண் யானையும் கலந்த பாவனையில் வரைந்திருப்பதைக் கண்ட பார்வதியார், சுவாமி;! இதென்னவென்று உமாதேவியார் சிவபிரானைக் கேட்டார். அதற்கு அவர், தேவி! யாம் உன்னோடு சம்மந்தமாகி உலகங்கட்கு எல்லாம் உபகாரஞ் செய்யும் உலகம் இயங்கக் கூடிய கருணாரசமாகும் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இருவரும் அந்த ஆனைகளை அன்போடுபார்த்துக் கொண்டு இருத்தலும், அந்த ஆனைகளின் கலவியிறுதியில், வேதங்கட்கும் எட்டாத பிரணவ சொரூபியாக இருக்கின்ற விநாயகப் பெருமான், ஊழிக் காலத்தில் கோடி சூரியர்கள் ஒன்றாய் உதயஞ் செய்ததுபோல, ஐந்துகரங்களும் மூன்றுகண்களும், ஆனைவதனத்தையும் (ஆனைமுகத்தையும்) சந்திரனைத் தரித்த செவ்வானம் போல, அளவற்ற பிரகாசத்தோடும், ஒரு பாலகனாக உதித்தருளி, சிவபரம் பொருளையும் உலக மாதாவாகிய உமாதேவியார் இருவரதும் திருவடிகளை மெய் அன்போடு வீழ்ந்து வணங்கினார்.

உடனே அவ்விருவரும் ஆனந்தங் கொண்டு, தமக்குப் புத்திரனாக திருவவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரஞ் செய்தருளிய விநாயகப்பெருமானை பரிவோடு அணைத்து, உச்சி மோந்து உள்ளம் பூரித்து தங்கள் மடிமீது அமர்த்திக் கொண்டு, சிவபெருமான் இவ்வாறு கூறியருளினார்.

என்னில் வேறாகாமல் எனக்கு பிள்ளையாக இருக்கின்ற உன்னை யார் வணங்குகின்றார்களோ அவர்கட்கு, சகல இடையூறுகளையும் நீக்கி, அவர்கள் வேண்டுங் காரியங்கள் அனைத்தையும் விரைவிற் கைகூடும் படியாக அனுக்கிரகஞ் செய்திடுக! கணங்கட்கெல்லாம் தலைமை தாங்கிடுக! அதனால் உன்னைக் கணபதி என்று யாவரும் கைகூப்புவர். அனைவரும் எக்காரியம் செய்யமுன்னும் உன்னை வணங்குவர்!

மேலும் அசுரர்கட்கெல்லாம் அரசனாகி, யாவரும் அஞ்சத்தக்ககோரனாய், மிகமிக கொடியவனாகித் தேவர்கட்கெல்லாம் மிகவும் துன்பம் தருபவனாய், கஜமுகன் என்னும் பெயருடைய ஓர் அரசன் இருக்கின்றான். அவனை நீ விரைவில் சமர்க்களத்தில் சங்கரித்து, தேவர்களை காத்தருள்வாயாக! என்று அருளியபின் விநாயகப் பெருமானையும் அழைத்துக் கொண்டுசென்று தமதுகைலாயவாயிலின் முகப்பில் விநாயகப் பெருமானை கோயில் கொள்ள வைத்து உமாதேவியாருடன் அந்தப்புரம் சென்றருளினார் சிவபரம் பொருள்.

அப்போது நந்திதேவர், முதலிய கணங்களின் தலைவர்களும், தேவர்களும், கருணாநிதியாக எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானுக்கு, வேதாகம முறைப்படி, பூசைகள் அனைத்தும் ஆற்றி மகாகணபதியை பணிந்தெழுந்து விடை பெற்றுச் சென்றனர்.

**மகா கணபதி**

**பிடியதன் உருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்**
**கடிகணபதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே**

**–சம்பந்தர் தேவாரம்**

விநாயகப் பெருமான் சிவகணங் கட்கெல்லாம் முதல்வன் ஆகையால், மகா கணபதி எனப்பட்டார். விநாயகன் என்றால் தனக்கு மேலான தலைவன் இல்லாதவன் என்பது பொருள். விநாயகன் ஞானமே வடிவானவன். ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் திருவுருவமே விநாயகன். விநாயகன் தம்மை அன்போடு வழிபடும் அடியவர் கட்கு காட்சிதந்து திருவருள் செய்யக் கொண்ட மூர்த்தங்களுள் முக்கியமானவை முப்பத்திரண்டு தோற்றங்களாகும். விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானை நாம் கணபதி, கணநாதன், கணேசன், விக்கினேஸ்வரன், ஏகதந்தன், பிள்ளையார், ஓங்காரரூபன், லம்போதரன், ஆனைமுகன், ஏரம்பன் எனப் பல திருநாமங்களால் அன்போடு கைகூப்பித் தொழுகின்றோம். சிவபெருமான் கொண்ட அருள் வடிவங்களுள் விநாயக மூர்த்தமும் ஒன்றாகும். ஆகவே சிவபெருமானுக்கும் விநாயப் பெருமானுக்கும் பேதம் ஏதுமில்லை என்பது சைவ ஆகம நூற்றுணிபு. விநாயகரைக் குறித்துச் செய்யும் வழிபாடு சிவ பெருமானைக் குறிக்கும் வழிபாடாகும். கோயிலும் குளமும் மருதமரங்களும் ஒருங்கமைந்து நிழல் தர இருப்பவை விநாயகராலயங்கள். தமிழ் நாட்டில் திருச்சியில் உச்சிப் பிள்ளையார், மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் முக்குறுணிப் பிள்ளையாரும் புதுச் சேரியில் முக்குள விநாயகரும் பிள்ளை யார் பட்டியிலும் உள்ள விநாயகராலயங் கள் மிகவும் அருள் நிறைந்தவையாகும்.

**விநாயக சதுர்த்தி**

முன்னொரு காலத்தில் பிரம்மனின் மைந்தர்களில் ஒருவனாகிய தக்கன் என்பான் தனக்குமகப்பேறு இன்மையால், சிவபெருமானை நோக்கி அரும் பெரும் தவங்களைச் செய்து, சகல உலகங்கட்கும் தாயாகிய உமாதேவியார் தனக்கு புத்திரி யாகவும், தேவர்கள் முதலாயினோர் தனது ஆணையைக் கடவாமல் நடந்து கொள்ள வும் சிவபெருமானிடம் அளவற்ற பெருவரங் களைப் பெற்று வாழும் நாளில் தக்கனுக்கு புத்திரியாக தாட்சாயினி தோன்றினாள்.

தாட்சாயினி பருவம் எய்தியதும் தக்கன் தன் மகளை, சிவபெருமானுக்கு திருமணம் செய்து கொடுத்தான். பிறி தொருகால், கைலாயத்திற்கு தக்கன் சென்ற போது மருமகனாகிய சிவபெருமான் மாமனாகிய தக்கனை மதிக்கவில்லை. இதனால் சினங்கொண்ட தக்கன் பெரும் யாகம் ஒன்றைச் செய்தான். அந்த யாகத் திற்கு தேவர்கள் அனைவரையும் அழைத்த போதும் மருமகன் சிவபெருமானையும் மகள் தாட்சாயினியையும் தக்கன் அழைக்கவில்லை, இருந்தும் அந்த யாகத் திற்கு தாட்சாயினி போனபோது அவமதிக் கப்பட்டார். இதனால் தாட்சாயினி கவலை மிகவே யோகாக்கினியில் பாய்ந்தார். இதன் பின், பர்வதராஜனுக்கு மகளாக பார் வதியாக தோன்றினார். சிவபெருமானை அடைய ஆவணிமாதச் சதுர்த்தி விரதம் முறையாக அனுட்டித்து சிவபரம் பொருளை கணவனாக அடைந்தார்.

மாதாமாதம் சதுர்த்திவரும், விசேடமாக ஆவணிமாத சுக்கிலபட்ச நான்காவது நாளில் வரும் சதுர்த்தி ஆவணிச் சதுர்த்தி ஆகும். சதுர்த்தி விரத காலங்களில் வீட்டைமெழுகிக் கழுவி விநாயகப் பெருமானை சந்தனத்தில் பிடித்து, உபவாசம் இருந்து விநாயககவசம், விநாயகர்துதி, விநாயகர் கதைபடித்து விநாயகருக்குப் பிடித்தமான மோதகம், அப்பம், அவல், பொரி, பால், தயிர், தேன், தேங்காய், எள்ளுருண்டை, தேன்கதலி, மாம்பழம், பலாப்பழம், மாதுளம்பழம், விளாம்பழம், வள்ளிக்கிழங்கு, பாசிப் பயறு, பாயாசம், சர்க்கரைப்பொங்கல், பிட்டு, நாவற்பழம் முதலியவற்றை முறை யாக நிவேதித்து விரதத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.

சிவபெருமான் கங்கையாளைத் திருமணம் செய்யமுன், தம்மைத் திரு மணம் செய்ய வேண்டும் எனப் பார்வதி யார் விரும்பி, தந்தையாகிய பர்வதராஜ னிடம் தனது விருப்பத்தை நிறைவேற்றத் தக்க ஒரு விரதத்தை உணர்த்த வேண்டும் எனக் கேட்டலும், தந்தையார் தாயே! மிகச் சிறப்புடையதும், விரைவில் நற்பயனைத் தரவல்ல விரதம் ஒன்று உண்டு. அவ்விரதம் முத்தொழிற்கும் காரணமாக இருக்கும் ஆனைமுக கடவுளுடைய சதுர்த்தி விரத மாகும்.

ஆவணிமாதம் பூர்வபக்கத்தில் வருகின்ற சதுர்த்திதினத்தில் விரதத்தை ஆரம்பிக்கவேண்டும். அன்றையதினம் அதிகாலையில் எழுந்து சுத்தமான நீரில் தோய்ந்து, அன்றலர்ந்த மலர்களை கொய்து திருவெண்ணீறு துதைந்த மேனியராய் உருத்திராட்சம் அணிந்து (மான் தோலில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து பொற்கும்பம் அமைத்து அபிடேகத் திரவியங்கள் தூபதீபங்களை சேகரித்து பூசைசெய்யும் இடத்தை புனிதமாக்கி சிற்ப சாஸ்திர முறைப்படி விநாயக மூர்த்தியுடைய திருவுருவம் சமைத்து, மங்கல வாத்தியம் முழங்க பூசை செய்தல் வேண்டும். தொடர்ந்து விநாயகப் பெருமானை வீதி வலம் வரச் செய்யலாம்.

**கஜமுக சங்காரம்**

மாதகமுனிவருக்கும் விபுதைக்கும் மகனாக ஆனைமுகமும், அசுரஉடலுங் கொண்ட கஜமுகாசுரன் தோன்றினான். அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியாரின் ஆலோசனைக்கு அமைய சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் புரிந்தான் கஜமுகன். ஈற்றில் சிவபெருமான் தரிசனம் கொடுத்த போது கஜமுகன் பின்வரும் வரங்களை வேண்டிப் பெற்றான்

1. திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் சமரில் தன்னிடம் தோல்வி அடைய வேண்டும்.
2. மனிதர், அவுணர், விலங்குகள் எதனாலும் தனக்குமரணம் ஏற்படக்கூடாது.
3. எவரினதும் எந்த ஆயுதத்தாலும், தனக்கு மரணம் ஏற்படக்கூடாது.
4. சகலலோகங்கட்கும் தனது ஆணை செல்லுபடியாக வேண்டும்.
5. தனக்கு அழிவில்லாத, மீண்டும் பிறவாப் பெருநிலைவேண்டும் என்று திருக்கைலாசபதியின் திருவடிகளில் வீழ்ந்து வேண்டிய போது சிவபெருமான் மேற்கூறிய வரங்களைக்கொடுத்து அருளினார்.

பெருவரங்களைப் பெற்ற கஜமுகனுக்கு ஆணவம் மிகுந்தது. கொடுமைகள் செய்ய ஆரம்பித்தான். தேவர்களை தன் முன் நின்று காதுகள் இரண்டையும் இரு கரங்களாலும் பற்றி ஆயிரத்தெட்டுமுறை தோப்புக் கரணம் போடச் செய்தான். அத்தோடு தன் முன் நின்று தலையில் இரு கரங்களாலும் குட்டிக் கொள்ளச் செய்தான் கஜமுகன். தேவர்கள் துன்பம் துயரம் தாங்கமுடியாமல் போகவே கையிலை சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். தேவர்கள் முறையீட்டை கேட்ட சிவபெருமான் தனது மகன் விநாயகன் தங்கள் துன்ப துயர்களைத் தீர்த்து அருளுவான் என அபயமளித்தார்.

அபயமளித்ததன் பிரகாரம் சிவபெருமான் கஜமுகனை அழிக்கத் தன்மகன் விநாயகனை அனுப்பினார். பூதகணங்களின் தலைவனான கணநாதன் தேவர்கள் துயர் தீர்க்க, அசலன் என்ற பூதத்தில் எழுந்தருளி கஜமுகனுடன் போர் முகங்கொண்டார். போர் நிகழ்ந்தது. விநாயகப் பெருமான் தனது ஆயுதங்கள் எவற்றாலும் கஜமுகனை அழிக்கமுடியாது என்பதை திருவுள்ளத்தால் உணர்ந்தார். அதனால் தனது திருமுகத்தில் உள்ள ஒற்றைக் கொம்பை ஒடித்து, சிவமந்திரத்தை ஓதி ஏவினார். அக்கோடாயுதம் கஜமுகனைப் பிளந்து பின் நீரில் மூழ்கி புனிதமாக விநாயகப் பெருமானின் திருக்கரத்திற்கு திரும்ப வந்து சேர்ந்தது. கஜமுகனின் அசுர உருவம் அழிய சரணடைந்த கஜமுகன், விநாயகப் பெருமானின் அருட்பார்வையால் பெருச்சாளி உருவம் பெற, அந்தப் பெருச்சாளி விநாயகப் பெருமானின் வாகனமாகியது. அத்தோடு விநாயகப் பெருமான் கஜமுகனுக்கு மெஞ்ஞானத்தை உணர்த்தினார். எமது ஆலயங்களில் கஜமுகசங்காரம் வருடாந்தம் பெருவிழாவாக இடம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஜமுகன் அழிந்ததை தேவர்கள், முனிவர்கள், விநாயகப் பெருமானுக்கு நன்றி செலுத்தும் முகமாக அவர் முன் நின்று தலையில் குட்டி தோப்புக் கரணம் போட்டனர். இப்படிச் செய்வதால் நினைத்த காரியம் கைகூடும். விநாயகப்பெருமான் முன் குட்டிக்கொள்வதால் குண்டலினி சக்தி தட்டி எழுப்பப்பட்டு, உடல் சுறுசுறுப்பு அடைகிறது என ஆன்மீக வல்லார் கூறுவர் அத்தோடு எமது அகந்தையும் அழிகிறது.

கஜமுகனைச் சங்காரம் செய்த போது அவனது இரத்தம் சிந்தியதால் அந்தமண் சிவந்தது. எனவே அவ்விடத்தில் தான் விநாயகப் பெருமான் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். ஆகவே அவ்விடம் கணபதீச்சரம் என்னும் திருநாமம் பெற்றது. அந்த கணபதீச்சரத்தை சம்பந்தப்பெருமான் தொழுது பாடிய தேவாரம்:-

**பண் – நட்டபாடை தலம் – செங்காட்டங்குடி**

**திருச்சிற்றம்பலம்**

**அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர்**
**நாளு மடிபரவ**
**மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல்**
**நிலாவிய மைந்த சொல்லாய்**
**செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள் செங்**
**காட்டங் குடியதனுள்**
**கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி**
**யிச்சரங் காமுறவே**

**திருச்சிற்றம்பலம்**

**முதலாந்திருமுறை**
**–சம்பந்தர் தேவாரம்**

**விநாயகர் திருமணம்**

நாரத முனிவர் ஒருகால் கைலாய பர்வதத்தை நோக்கி, மிக்க ஆவலோடு விரைகிறார். ஆங்கே இரத்தினமயமான சிங்காசனத்தின் மீது, தேவ கணங்கள் புடைசூழ, சபாமண்டபத்தே வீற்றிருந்த விநாயகப் பெருமானின் திருவடிக்கமலங்களை பணிந்து ஒரு விண்ணப்பஞ் செய்கிறார் நாரதர். கருணா மூர்த்தியே தேவரிடத்து ஒரு விண்ணப்பஞ்செய்ய செவி சாய்த்து அருள வேண்டும் என்று வணங்கிக் கூறலானார். தேவரீரிற்குத் தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவர் முன்னர் தமது தியான சிந்தனையில் நின்றும் உதித்தவர்களாகிய இரு கன்னியரைத் தேவரீரிற்குத் திருமணஞ் செய்வதற்கான ஓர் எண்ணத்தை உடையார்

தேவரீரது வனப்பிற்கேற்ப அவர்களின் பேரழகினை எடுத்து இயம்ப முடியும். அவர்களின் உடம்பானது செந்தாமரை மலர்களை வென்றது. தோற்றமோ! வலம்புரிச்சங்கினைப் போன்றது. இவ்வாறு நாரதரின் வர்ணனையைச் செவியுற்ற கணேசமூர்த்தியானவர், அங்கீகாரஞ் செய்து, நாரத முனிவருக்கு அருள் வாக்கு வழங்கினார். இவ்வருள் வாக்கைப் பெற்ற நாரதமுனிவர், பிரமனின் புதல்வியரான சித்தி, புத்திகளிடம் நேரில் சென்று, விநாயகப் பெருமானின் சம்மதத்தை தெரிவித்தார் நாரதமுனிவர். அக் கன்னியரிருவரும் மனம் மிக மகிழ்ந்தனர் . அப்பால் நாரதர் பிரம தேவனிடஞ் சென்று நிகழ்ந்தவற்றைத் தெரிவித்தார். பிரமதேவனும் மனமிக மகிழ்ந்தார்.

பிரமதேவனும் தாமதியாமல் கைலாயவரை சென்று ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்கின்ற ஐந்து முகங்களை உடைய சிவபெருமானைப் பணிந்து, துதித்து நின்ற போது, சிவபெருமான் பிரமன் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தை வினவ, பிரமன் எந்தையே! கணேசமூர்த்திக்கு இலக்குமியும் கண்டு நாணத்தக்க வனப்பினை உடைய எனது புத்திரிகளை மணம் செய்ய ஆவலாய் உள்ளேன். இதற்கு தேவரீரது அனுமதி பெற வந்தேன் என்றலும் பார்வதி பரமேஸ்வரர் இருவரும் கிருபாநோக்கம் கொண்டு விரைவில் நிறைவேற்றக்கடவை என்றனர்.

இவ்வாறு பார்வதி பரமேஸ்வரரின் இசைவு பெற்ற பிரமன், விநாயகப் பெருமானை அணுகி எனது புத்திரிகளை திருமணஞ் செய்தருள வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்கு விநாயகப் பெருமான், பிரமனே! நீ உரைத்த திருமணத்திற்குரிய முயற்சிகளை செய்வாயாக! என்றார். நாம் அவ்விடத்திற்கு எமது சுற்றஞ்சூழ வருகை தருவோம் என விடை பகன்றார்.

ஆகவே பிரமன், தேவர்கள் அனைவருக்கும் திருமணப்பத்திரிகை வரைந்தனுப்பிய பின் விஸ்வகர்மாவை அழைத்து, சகலரும் அமரக் கூடிய திருமண மண்டபம் அமைக்கப் பணித்தார். தேவதச்சனால் அமைக்கப்பெற்ற நகரத்தின் அழகு, தேவலோகம் போன்று இருந்தது. சங்கநிதி, பதுமநிதி போன்ற அழகுடையதாய் அமைந்தது அந்த நகரம்.

சங்கநிதி – சங்குருவாய்க் கிடக்கும் குபேரசெல்வம், குபேரனது செல்வங்களில் ஒன்று

பதுமநிதி – தாமரையுருவாய்க் கிடக்கும் பொன், பெருநிதி தாமரை வடிவில் அமைந்த தேவ லோகக் கருவூலம்

**திருச்சிற்றம்பலம்**

**சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து**
**தரணியொடு வானாளத் தருவரேனும்**
**மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்**
**மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்**
**அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்**
**ஆவூரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே**

**திருச்சிற்றம்பலம்**

**ஆறாந் திருமுறை**
**–அப்பர் திருத்தாண்டகம்**

விநாயகமூர்த்தியானவர், தெய்வ கங்கையிலாடி பூதகணங்கள் புடை சூழ, தேவர்கள் புகழ்பாட, மாதவர் வேதமோத, சந்திரவட்டக் குடைகள், ஆலவட்டம், சாமரைவீச, பஞ்ச வாத்தியங்கள் ஒலிக்க பிரமன் முதலியோர் கற்பகமலர்தூவ, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் ஏழுவகைப் பருவங்கள் உடைய அரிவையர் தெரிவையர் குறிஞ்சி முதலிய பண்களைப் பாடி ஆடி வந்தனர்.

உடனே சரஸ்வதியானவள் கணேசமூர்த்தியின் பாத கமலங்களைக் கழுவ, பிரமன் வணங்கி, அந்தத் திருவடிகளை விளக்கி, மெல்லிய ஆடை கொண்டு ஒற்றி, பாத பூசை செய்த பின், அந்தப்புரத்தில் வீற்றிருந்த சித்தி, புத்தி என்னும் கன்னியர்களை சரஸ்வதி, இந்திராணி இலக்குமி, அருந்ததி ஆகியோர் இக் கன்னியர்களை திருமஞ்சன நீராட்டி, நறும்புகை காட்டி, முல்லைமலர் சூட்டி அழைத்து வந்து கணேசமூர்த்தியின் அருகில் அமரச் செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பிரமதேவனானவன் கணேச மூர்த்தியின் திருக்கரங்களில் தனது புத்திரி களாகிய சித்தி புத்திகளுடைய கரங்க ளைச் சேர்த்து சரஸ்வதி விட்ட தீர்த்தத்தால் தாரைதத்தஞ் செய்து, வணங்கிய பின், பால் பழம், தேன் கலந்த அமிர்தத்தை தரு வித்து அளித்து அன்போடு விநாயகப் பெரு மானை வணங்கி நின்றார்.

## திருமுறை தந்த விநாயகர்

திருநாரையூர், பொல்லாப் பிள் ளையார் கோவில் அர்ச்சகருடைய மகன் நம்பி ஆண்டார் நம்பி. நம்பி விநாயகரின் அருள் பெற்றவர். இந்த நம்பியாண்டார் நம்பியாலேதான் எமது தேவார திருவாச கத்திருமுறைகள் பன்னிரண்டாகத் தொகுக் கப் பெற்றன. மூவர் முதலிகள் தேவாரம் அனைத்தும் சிதம்பரத்திலே, பொன்னம் பலம் அருகே, மூவர் திருக்கரமுத்திரை யோடு இருப்பதை அறிந்த இராஜ இராஜ சோழன், தில்லைக்கு வருகை தந்து, நம்பி யாண்டார் நம்பியை வணங்கி, திருமுறை கள் இருக்கும் இடத்தை அடைந்ததும் கறை யான் புற்றெடுத்து மூடி இருப்பதைக் கண்டு, மனமிக வருந்திய சோழமன்னன், எஞ்சி இருந்தவற்றை அழிய விடாது கூப்பிய இரு கரங்களாலும் எடுத்து, அவற்றை நம்பியின் உதவியோடு விரைவாக திருமுறைகளைப் பன்னிரண்டாக வகுத்து, எமது கைகட்கு எட்டியது திருநாரையூர் பொல்லாப்பிள் ளையாரின் அருள்தான் என்று சொல்ல வேண்டும்.

## பன்னிரு திருமுறைகளாவன.

முதல் மூன்று திருமுறைகள்
– சம்பந்தர் தேவாரம் ஆகும்

நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகள்
– திருநாவுக்கரசர் தேவாரம் ஆகும்

ஏழாந்திருமுறை
– சுந்தரர் தேவாரமாகும்

எட்டாந்திருமுறை
– மாணிக்கவாசகருடையது. அவை
திருவாசகமும்,
திருக்கோவையாரும் ஆகும்.

ஒன்பதாந்திருமுறை
– திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
ஆகும்.

பத்தாந்திருமுறை
– திருமூலர் இயற்றிய
திருமந்திரமாகும்

பதினோராந்திருமுறை
– திருவாலவாயுடையார் } முதலிய
காரைக்காலம்மையார் } பல

பன்னிரண்டாந்திருமுறை
– சேக்கிழார் இயற்றிய
பெரிய புராணம் ஆகும்

## பாரதம் வரைந்த வாரணன்

மகாபாரதம் எமது இதிகாசங்களில் ஒன்று. வியாச முனிவர் மகாபாரதம் பாட விரும்பினார். மகாபாரதம் வரைய ஒருவர் தேவையே! ஆகையால் வியாசமுனிவர் தனது எண்ணத்தை நாரதருக்கு தெரிவித் தார். நாரதரும் விநாயகப் பெருமானை தியானித்தார். விநாயகரும் தோன்றினார், வியாசர் விநாயகரைத் தொழுது, உங்க ளின் அருளால் சொல்லுகிறேன். நான் சொல்லும் வேகத்தில் நீங்கள் எழுத வேண்டும் என்று கூறிய பின் வியாசரும் பாரதம் பாடத் தொடங்கினார். வியாசரும் பாட, எழுதும் வேகம் அதிகரிக்க, எழுது கோல் முறிந்தது. உடனே விநாயகரும் தனது தந்தங்களில் ஒன்றை முறித்து, தடை யில்லாமல் எழுத, மகாபாரதக் காவியம் இனிது முற்றுப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவிரி நதி தந்த விநாயகர்**

சிவபெருமான் பூமிபாரத்தை சமப் படுத்தும் நோக்குடன் அகத்தியரை இமய மலையில் இருந்து தென் திசைக்கு அனுப்பி வைத்தார். தென் திசை வந்த அகத்தியர், தியான பூசை செய்யும் நோக்குடன், நீர் நிறைந்த கமண்டலத்துடன் மான் தோல் மேல் அமர்ந்து, உயிர்கள் உய்ய தியானத் தில் இருந்தார். அதே நோக்குடன் விநாய கப் பெருமானும் காகவடிவெடுத்து கமண்ட லத்தைச் சரித்தார். சரிந்த நீர் ஆகாய நதி யாக காவிரியானவள் ஈசன் அருளால் பரவிப் பாய்ந்ததாக புராண வாயிலாக அறிய முடி கிறது. இதனால் தமிழ்நாடு செழித்தது. குறு முனியான அகத்தியரின் ஆச்சிரமம் பாண்டி நாட்டின் பொதிய மலையில் இருந்தது.

**அறுகம்புல்லின் மகிமை**

உலகில் முதன்முதல் முளைத்தது அறுகம்புல் என்பர். விநாயகப் பெருமானு க்கு மிகவும் விருப்பமான பொருள்கள் மோதகமும் அறுகம்புல்லும் ஆகும். சாணம் அல்லது மஞ்சள் மாவை உருண்டை ஆக்கி அறுகினை அதன் மேல் வைத்து விநாய கரின் திருவுருவமாக வணங்கலாம்.

இயமனின் மகன் அனலாசுரன், இவன் தேவர்கட்கும் முனிவர்கட்கும் பேரிடர் பல செய்து வந்தான். தாங்க முடியாத தேவர்கள் விநாயகப் பெருமானிடம் சென்று முறை யிட்டனர். விநாயகப்பெருமான் அவர்களைக் காக்கும் பொருட்டு அனலாசுரனை தும்பிக் கையால் பிடித்து வாயில் போட்டார். இத னால் விநாயகரின் தொந்தி (திரு வயிறு) அனலாகக் கொதித்தது. விநாயகரின் வயிறே உலகம் என்பதால், வெம்பம் தாங் காமல் உயிர்கள் தவித்தன. அந்த வெப் பத்தை தணிக்க முனிவர்கள் இருபத்தொரு அறுகம் புல்லைச் சேர்த்துக் கட்டி விநாயகப் பெருமானின் முடிமுதல் அடிவரை சொரிந் தனர். அதனால் வெப்பம் நீங்கியது. அன்று தொட்டு இன்றுவரை விநாயகருக்கு உரிய நிவேதனப் பொருளாகியது அறுகம் புல், அத்தோடு அறுகம்புல் சித்த வைத்திய பொருள்களுள் ஒன்றாகியது.

**காணபத்தியம்**

விநாயகப்பெருமானை முழுமுதற் பொருளாக கருதும் மதம் காணபத்தியம் ஆகும். காணபத்திய மதம் வடநாட்டில் பரவியகாலம் பத்தாம் நூற்றாண்டாகும். அகத்தியமாமுனிவர் இயற்றிய பிள்ளை யார் கதையே மூலக் கதை. அதுவே பார்க் கவ புராணம் என்னும் விநாயக புராணம் ஆகும். பிரணவ சொரூபியாகிய விநாயகக் கடவுளுடைய மான்மியத்தை, திராவிட மொழியில் (தமிழில்) பாடியவர் திருவா வடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த கச்சியப்ப சுவாமிகள் ஆவார். சுன்னாகம் வரத பண்டி தர் ஆக்கிய பிள்ளையார் கதையே யாழ்ப் பாண ஆலயங்கள் தோறும் கார்த்திகை மாத விநாயக விரதத்தின் போது (இருபத் தொருநாளும்) விரதம் இருந்து பக்தி சிரத்தையோடு படிப்பர். இந்து மதம் பரந்து விரிந்த வழிபாடுகளை உடையது.

1. சைவம் – சிவபெருமானை முதற்கடவுளாகக் கொண்ட சமயம்
2. காணபத்தியம் – விநாயக வழிபாடு
3. சக்தி வழிபாடு – சாக்தேயம்
4. முருக வழிபாடு – கௌமாரம்
5. விஷ்ணு வழிபாடு – வைஷ்ணவம்
6. சூரியவழிபாடு – சௌரம்

இது காறும் விநாயகர் திருவவதாரம், மகாகணபதி, விநாயக சதுர்த்தி, கஜமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம், விநாயகர் திருமணம், திருமுறை தந்த விநாயகர், பன்னிரு திருமுறைகள், பாரதம் வரைந்த வாரணன், காவிரி நதி தந்த விநாயகர், அறுகம் புல்லின் மகிமை, காணபத்தியம் பற்றி தொகுத்து விரித்துரைத்தோம்

**தொகுத்து எழுத உதவிய நூல்கள்**


1. விநாயக புராணம்
   – முத்துசாமி முதலியாரின் வசனரூபம்
2. விநாயகர் வழிபாடு
   – திரு.தி. நவரத்தினம் B.A
3. நல்லைக்குமரன் மலர்
4. கந்தப்புராண வசனம்
   – தவத்திரு நாவலர் அவர்கள்
5. பன்னிருதிருமுறை


## முத்தியில் நிறைத்திடு

நாம் செய்த நற்றவப் பயனோ?
நல்லையில் உதித்தாயே குமரா
கலியுகக் காரிருள் போக்கி
கலக்கங்கள் தீர்ப்பாயே குறத்தி மணாளா

பஞ்சம் பசி பட்டினி பாரினில் இல்லையென
பவ வினை நீக்கிவிடு பரம்பொருளே
வெற்றிவேலால் வெவ்வினைகளின் வேரறுத்துவிடு வேலவா
வேண்டா வேற்றுமைகளும் வேண்டாமே வேலவா

கணினியில் கலந்திட்டாலும்
கந்தா வென கசிந்துருகும் மனம் தாராய் மால்மருகா
கதியென்று நின்னடி பணிந்தோம்
கள்ளமில்லா எம் பிஞ்சுகளையும் காத்திடு கதிர்வேலா

தந்தைக்குபதேசம் செய்தவா
தர்மமும் தானமும் தயக்கமின்றி நாம் வழங்கிட
எம் உள்ளத்திலும் இல்லத்திலும் நிறைந்தே
வழிகாட்டிடு வடிவேலா

நல்லைக் கந்தா
நாளும் கோளும் நல்லடியார்க்கு நலமாகிட
முந்தையோர் வினைகளும் மும்மலங்களும் நீக்கி
முக்தியில் எம்மை நிறைத்திடு எம் மூலப்பொருளே

**செல்வி.தங்கராசா தமயந்தி**
யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் - சிறு குறிப்பு

**கந்தையா கனகசபை**
சண்டிலிப்பாய்

இலங்கையில் மிகவும் புகழ்பெற்ற இந்துக் கோயில்களுள் நல்லூர் கந்தசுவாமி கோவில் மிகவும் பிரசித்தி பெற்றதும், வரலாற்றுப் பெருமைகளை உடையதும், தனித்துவச் சிறப்புக்களை உடையதாகவும் காணப்படுகின்றது. இது இலங்கையின் வட பகுதியிலுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ் நகரத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவிலுள்ள நல்லூர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் வட பகுதியிலுள்ள தமிழர்களின் இராசதானியாகவும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தலை நகராகவும் விளங்கிய இடம் நல்லூர். 12ம் நூற்றாண்டு தொடக்கம் 17ம் நூற்றாண்டு முற்பகுதி வரை யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமாக நல்லூர் விளங்கியது. இக் கோயிலின் தோற்றம் பற்றிச் சரியான தெளிவு இல்லையெனினும், யாழ்ப்பாண அரசு காலத்தில் மிகவும் முக்கியமான கோயிலாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

ஈழத்தில் தலை சிறந்த சித்தர்களான செல் லப்பா சுவாமிகளும், அவரது சீடரான யோகர் சுவாமிகளும் தடம் பதித்த புண்ணிய திருக்கோயிலாக நல்லூர் கந்தன் ஆலயமும், திருவீதியும் திகழ்கிறது. இவ்ஆலயத்தின் மூலஸ்தானத்திலே முருகப்பெருமானின் திருவுருவச் சிலை வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக முருகப் பெருமானின் ஞானசக்தியாகிய வேல் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. இலங்கையிலே ஒரே ஒரு சைவ ஆதினமாக விளங்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் ஆலயத்தின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ளது. இங்கு நல்லூர் மகோற்சவ காலங்களில் மாலை வேளைகளில் தெய்வீக இசையரங்கு நிகழ்வுகளும், ஆன்மிக அருளுரைகளும் நடைபெறுகின்றன. ஆலயத்தின் நான்கு பக்கங்களிலும் மடாலயங்கள் அமைந்துள்ளன. நல்லூர் தேரடிக்கு அருகாமையில் அமைந்துள்ள அறுபத்தி மூன்று நாயனார் குருபூசை மடாலயம், நல்லூர் துர்க்கா மணி மண்டபம், நல்லூர் பின்வீதியில் உள்ள மூத்தம்பி மடாலயம், நல்லூர் திருஞான சம்பந்தர் மடாலயம் என்பவற்றில், ஆலய மகோற்சவ காலங்களில் தினமும் மதியம் அடியார்கட்கு அன்னதானம் வழங்கப்படுவது இவ் ஆலயத்தின் மிகச் சிறப்பம்சமாகும். ஆலயத்தின் கிழக்கிலும், தெற்கிலும் ஏற்கனவே வாசல்களும், அவற்றின் மேல் உயர்ந்த கோபுரங்களும் அமைந்து காணப் படுகின்றன. 2015ம் ஆண்டு ஆலயத்தின் வடக் குப்புறமாக இலங்கையிலே மிகவும் உயர மான குபேரவாசல் நவதள இராஜகோபுரம் புதிதாக அமைக்கப்பட்டு கம்பீரமாக காட்சி யளிக்கின்றது. இதற்கான கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா 2015ம் ஆண்டு ஆவணி மாத மகோற்சவ காலத்தின் 18ம் நாளாகிய கார்த்திகை திருவிழாவன்று இடம்பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்தோறும் இங்கு ஆறுகாலப் பூசைகள் இடம்பெறுகின்றன. கந்தனை தரிசிக்க இலங்கையின் பலபாகங்களிலிருந்தும் வரும் பல்லின மக்கள், அவனது அருளில் மயங்கி திளைக்கின்றார்கள். ஒரு ரூபாய்க்கு அர்ச்சனை செய்யும் ஆலயம் நல்லூர் கந்தன் ஆலயமாகும். இவ்வித நடைமுறையி னால் ஏழை, எளியவர்களும் முருகனை வணங்கி தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்த ஏதுவாக உள்ளது. இந்நடைமுறை ஈழத்துக் கோயில்களில் வேறெங்கும் காணமுடியாத தனிச் சிறப்பாகும். ஆண்கள் அனைவரும் தத்தமது மேலங்கிகளைக் கழற்றிவிட்டு ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டும் என்பது பொதுவிதி. இது ஆண்கள் எல்லோருக்கும் பொருந்தும். இலங்கையில் உள்ள அரசியல் வாதிகள், பிரபலம் பெற்றவர்கள் மாத்திர மன்றி எந்தவொரு நாட்டின் தலைவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தாலும் குறிக்கப்பட்ட நேரத்திற்கே ஆலயம் திறக்கப் படுவதுடன், பூஜை வழிபாடுகளும் வழமை யாக இடம்பெறும் நேரத்திற்கே ஆரம்பாகி நிறைவடைகின்றன. எவருக்கும் ஆலயத்தில் முன்னுரிமை இல்லை. நல்லூர் கந்தன் மஹோற்சவம் ஆவணி அமாவாசையை தீர்த்த உற்சவமாகக் கொண்டு ஆடி அமா வாசைக்கு ஆறாம் நாள் கொடியேற்றத் திரு விழா இடம்பெற்று தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா சிறப்பாக இடம்பெறுகின்றது. ஆலய மகோற்சவ திருவிழாக்களில் கொடி யேற்றம், திருமஞ்சத் திருவிழா, கார்த்தி கைத் திருவிழா, கைலாசவாகனம், சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம் என்பன மிக முக்கியமானதாகும்.

ஆலய தேர், தீர்த்த உற்சவ நாட்களில் அடியவர்கள் தங்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துவதற்காக ஆண்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், மாதர்கள் கற்பூரச் சட்டி எடுத்தும், அடியழித்தும் மற்றும் ஆண்கள் பறவைக் காவடிகள், தூக்குக் காவடிகள், காவடிகள் எடுக்கும் காட்சிகள் பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கின்றன. இங்கே இடம்பெறும். ஆலய புனரமைப்பிற்கு எவரிடமும் பணம் தந்துதவு மாறு ஆலய நிர்வாகம் கேட்டுக் கொண்ட தில்லை. ஆனால் முருகனுக்கு ஏராளமான பணம் குவிந்த வண்ணமே உள்ளது.

2018ம் ஆண்டிற்கான விளம்பி வருஷ ஆண்டு மஹோற்சவம் தமிழ் ஆடி 31ம் திகதி (16.08.2018) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடி ஏற்றத்துடன் ஆரம்ப மாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா இடம் பெற்றுக் கொண்டிருக்கும் இந்நாளில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், புலம் பெயர் நாடுகளிலிருந்தும் ஏராளமான அடியவர்கள் இங்கு குவிந்த வண்ணம் உள்ளதை காணுகையில், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆலயம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த ஆலயமாக காணப்படுகின்றது. மகோற்சவத் தின் சிகரம் என்று கூறப்படுகின்ற தேர் திருவிழா தமிழ் ஆவணி 23 சனிக்கிழமை (08.09.2018) இடம்பெறுகின்ற இந்நிலை யில் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. தேரேறி வரும் நல்லைக் கந்தன் நம்மை பற்றியுள்ள மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் அழித்து ஆன்ம ஈடேற்றம் பெற பவனி வருகின்றார். மறுநாள் தீர்த் தோற்சவம் இடம்பெற்று இறுதி நாளாகிய பூங்காவனத் திருவிழா அன்று முருகப் பெரு மானுக்கும், தெய்வானைக்கும், வள்ளியெம் பிராட்டிக்கும் திருக்கல்யாணம் இடம் பெற்று அழகிய பூந்தண்டிகையில் முருகன் தேவியர் கள் சகிதம் திருவீதி உலாவரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார்

**வை.இரகுநாதமுதலியார்**
செயலாளர்
யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை

"தாரமும் குருவும் தலை விதிப்படி" என்பர் "Destiny decides one's Spouse and Guru (Teacher). Those of us who sat at the feet of "சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்" "Sage and Savant, were really blessed with the merit of Karma, in our previous births. He installed in us the Saiva way of Life, which ultimately through after innumerable Births leads us to Moksha".

"ஒருத்தனே, உன்னை உலகெலாம் தேடி ஓலமிட்டலறியும் காணேன்" என்ற மணிவாசகரின் வேட்கையை தேவைப்படும் கால கட்டங்களில் சைவசித்தாந்திகள் தோன்றி உலகிற்கு உணர வைப்பார்கள். தரமான சைவசித்தாந்திகளைத் தயார் செய்ய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஐயா அவர்கட்குப் பின் இறைவன் திருவருளால் அனுப்பப்பட்ட ஒருவர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்கள்.

சைவப்பெரியார் புலோலி கிழக்கில் வாழ்ந்த பிரபலமான தமிழ் அறிஞரும், ஆசிரியருமான ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளைக்கு ஒரே மகனும், கடைசிக் குழந்தையுமாக 1878இல் அவதரித்தார். இவரது குடும்பமே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய ஓர் ஆசாரமான சைவப் பரம்பரை, தமிழில் சிறந்தும் பண்டிதர்களுமாக விளங்கிய உறவினர்களான பண்டிதர் திருஞானசம்பந்தர், பண்டிதர் மகாலிங்கசிவம் போன்ற பிரசித்தி பெற்ற சைவத்தமிழ் அறிஞர்களிடமும் மாமியார் பார்வதி அம்மையாரிடம் வீட்டிலேயும் கல்வி பயின்றார். திருவனந்தபுரம் மகாராஜக் கல்லூரியில் சமஸ்கிருத பேராசிரியராகப் பணிபுரிந்த இவரது உறவினர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களிடம் சமஸ்கிருதம் பயின்றார். ஆங்கிலம் படிக்க இந்தியா சென்ற இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் F.A பரீட்சையில் சித்தி அடைந்தார். அங்கிருந்து திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரி சென்று பட்டதாரியானார். (1904)

யாழ்ப்பாணம் திரும்பிய பின் தனது மாமாவின் பாடசாலையான பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரானார். விரைவிலேயே திருகோணமலையில் உள்ள அர்ச். சூசையப்பர் பாடசாலையின் தலைமை ஆசிரியரானார். இரு வருடங்கள் கழித்து சுழிபுரம் விக்டோரியாப் பாடசாலையின் ஸ்தாபகரும் மனேஜரும் ஆன C.M செல்லப்பா இவரைத் தனது பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியர் ஆக்கினார். 1924 முதல் 1933இல் ஓய்வு பெறும் வரை அப்பாடசாலையைத் தனது கொள்கைகள், குறிக்கோள்களுக்கு அமைய நடாத்தி எத்தனையோ புகழ்பெற்ற சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களை நாட்டிற்குக் கொடுத்துள்ளார்.

B.A மாஸ்டர் என அன்புடன் அழைக்கப் பட்டவர், பெற்றோருக்கு அடங்காத பல மாணவர்களையும் தனது கடினமான ஒழுங்கு முறையைக் கடைப்பிடித்து நல்லொ முக்கத்தை மாணவரிடையேயும் பெற்றோரி டையும் விதைத்தார்.

சில காலம் விக்டோரியா பாடசாலையை விட்டு விலகி மானிப்பாய் இந்துக் கல்லூரி யில் ஆசிரியரானார். குறுகிய காலத்தில் அவர் சேர் பொன்னம்பலம் இராமநாதனு டைய கொழும்பு கொச்சிக்கடையில் உள்ள பொன்னம்பலம் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியரானார். வெகுவிரைவிலேயே தனது மாமனாரது வேலாயுதும் பாடசாலைக்குத் திரும்பினார். சேர் பொன்.இராமநாதனு டைய நட்பு இவருக்குப் பெரிதும் உதவிற்று.

சேர் பொன்.இராமநாதன் பரமேஸ்வராக் கல்லூரியை ஆரம்பித்ததும் அவர் சிவபாத சுந்தரனார் அவர்களையே பரமேஸ்வராக் கல்லூரியின் முதல் தலைமை ஆசிரியர் ஆக்கினார். இவரே சேர் பொன்.இராமநாத னுக்கு யாழ் நகரிலே ஒரு முதல்தர இந்துக் கல்லூரிக்குரிய அவசியத்தை வற்புறுத்தி னார். (யாழ் நகரிலே ஏற்கெனவே மூன்று மிஷனரிப் பாடசாலைகள் அமைந்திருந்தன)

சிவபாதசுந்தரனாருடைய பெருவேட்கை சைவத்தமிழ் மாணவர்கள் கல்வி கற்க சைவத் தமிழ்ப் பாடசாலைகள் அவசியம் என்பதாகும். இவருடைய அவா மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பிக் கக் காரணமாக இருந்தது. மேலும் சேர். பொன்.இராமநாதன், ஸ்ரீமான் S.இராஜரத் தினம் ஆகியோருடன் இணைந்து Hindu Board of Education என்ற ஸ்தாபனம் ஆரம்ப மாக உழைத்தார். ஸ்ரீமான் சிவபாதசுந்தரம் அவர்களே Hindu Board of Education ஸ்தாபனத்தின் தலைவராகவும் கடமை ஆற்றினார்.

சிவபாதசுந்தரனாருடைய நேர்மை, திறமை என்பன அக்கால கல்வி இயக்குனர் H.S.Perera அவர்களால் பெரிதும் போற்றப் பட்டது. அவர் கல்வி சம்பந்தமானவற்றைக் கலந்துரையாட அடிக்கடி இவரிடம் வருவார். சிவபாதசுந்தரனார் அவர்கள் "Methods of Teaching" என்ற தமிழ் மொழியில் எழுதப் பட்ட நூலை 1919ஆல் ஆக்கினார். சென்னை காந்தி அச்சகத்தில் அச்சிடப்பட்ட இந்நூல் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பாடநூலாக இலங்கை கல்வித் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இவர் "Essentials of Logic" என்ற நூலை (சென்னை Rogaouse & Sons அச்சிட்டனர்) அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தாரும் சென்னைப் பல்கலைக் கழகமும் Intermediate வகுப்பிற்கு பாடமாகப் படிப்பிக்க விரும்பிக் கேட்டதற்கிணங்க மாண வர்கட்குப் பயன்படும் வகையில் 1952ஆம் ஆண்டு எழுதினார். "அகநூல்" என்னும் மனோதத்துவ சாஸ்திர நூலை எல்லோரும் விளங்கக் கூடிய வகையிலும், ஆசிரியப் பயிற்சி பெறுவோருக்கும் பயன்தரவும் எழுதினார். சென்னை Progressive அச்ச கத்தில் பதிப்புரிமை செய்யப்பட்டு 1935இல் வெளிவந்தது.

1939ஆம் ஆண்டில் இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கல்விக்கான விசேட ஆலோச னைச் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் கல்விச் சபையில் ஓர் உறுப்பினரா கவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபாதசுந்தரனார் இயற்றிய சைவசமய நூல்கள்

சைவ சமயிகள் பிற சமயத்தவர்களால் மத மாற்றம் செய்யப்படுதலைத் தவிர்க்கவே இவர் இந்நூல்களை எழுதினார் என்பர். பிற சமயத்தவர்களைக் கண்டிக்க முயல முன்னர் சைவ சமய உண்மைகளைச் சைவ சமயத் தவர்கள் தெரிந்து தெளிய வேண்டும் என்பதற்காக "சைவபோதம்" - பாகம் 1, பாகம் 2 நூல்களை எழுதினார். தொடர்ந்து தமிழில் சைவ மாணவர்களும், சைவ மக்களும் சைவசமயம் பற்றித் தெரிந்து கொள்ள உமாபதி சிவாச்சாரியார் எழுதிய திருவருட் பயன் நூலுக்கு எளிய நடையில் உரை எழுதினார். சைவமக்கள் மரணம் அடைந் தோருக்குக் கிரியைகளை முறையாகச் செய்ய "சைவக் கிரியை விளக்கம்" நூலை எழுதினார். இந்நூல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையாரால் தமது 18ஆவது பிரசுர மாக வெளியிடப்பட்டது. "கந்தபுராண விளக் கம்" நூலில் யாழ்ப்பாணக் கலாசாரமே "கந்த புராணம்" என்பதை ஆங்காங்கே தெளிவாக விளங்கிச் செல்கின்றார்.

**"திருப்பெரு வடிவம்"** என்னும் நூலை சென்னை மயிலாப்பூர் சைவ அறிஞர் சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க சைவப் பெரி யார் 1939ஆம் ஆண்டு எழுதிக் கொடுத்தார். கந்தபுராணம் யுத்த காண்டத்தில் சூரபத்மன் வதைப்படலத்தில் சூரவன் தரிசிக்க ஆயிரங் கோடி காமர் அழகெலாம் திரண்டொன்றாய் வடிவிலும் சிறந்த வடிவம் எடுத்து முருகன் சூரபன்மனின் அகந்தையைப் போக்கினார். இதன் 2ஆம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் அச்சிடப்பட்டது.

**"திருவாசக மணிகள்"** நூல் சிவபாத சுந்தரனார் திருவாசகத்தில் கொண்ட ஈடுபாட் டைப் புலப்படுத்துகின்றது. சில பாடல்களைத் தெரிவு செய்து விளக்கமும் கருத்தும் எழுதி னார். 1933ஆம் ஆண்டு சென்னைச் சைவபரி பாலனசபையார் வெளியிட்டார்கள். முதல் மூன்று பதிப்புகளும் அங்கேயே வெளியான பின் நான்காம் பதிப்பாகக் கொழும்பு விவேகானந்த சபையார் வெளி யிட்டார்கள். அவர்கட்கே நூல் உரிமையும் கிடைத்தது.

**சைவசமய சாரம்** - இந்நூலை திருச்சி பிக்ஷாண்டார் கோயில் பெருநிலக்கிழார் இராயபகதூர் கோ.இராசகோபாலபிள்ளை அவர்கள் விரும்பியபடி சிவபாதசுந்தரனார் எழுதினார்கள். சென்னையில் வெளியிடப் பெற்றது. 1947க்கும் 1957க்கும் இடையில் ஒன்பது பதிப்புகள் வெளிவந்து சுமார் 22 ஆயிரம் பிரதிகள் விற்பனையாயின. இந் நூலுக்கு மயிலாப்பூர் சைவப்பெரியார் சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அணிந்துரை எழுதியுள்ளார்.

**The Saiva School of Hinduism** : சைவப் பெரியார் தமிழில் மட்டும் அன்றி ஆங்கிலத்தி லும் பலபல நூல்கள் எழுதியுள்ளார். பேரா சிரியர் J.S.மாக்கன்ஜி அவர்கள் அணிந்துரை எழுதியுள்ளார். பேராசிரியர் J.S.மாக்கன்ஜி முன்னர் இராமநாதன் மகளிர் கல்லூரியில் தங்கி இருந்த காலத்தில் சைவப்பெரியாரு டன் அளவளாவி சைவசித்தாந்தத்தில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தவர். இந்நூலை லண்டன் மாநகரில் ஜோஜ் அலன் அன் அன்வின் 1934ஆம் ஆண்டில் அழகாக வெளியிட்டிருந்தனர். மிகவும் இலகுவான எளிய ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடஇந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் பெரிதும் படிக்கப்பட்டது. சில பல்கலைக்கழகங்கள் இந்நூலைப் பாடநூலாகவும் பயன்படுத்தின.

**An Outline of Sivagnana Botham with Rejoinder to a Christian Critic** : சைவசித்தாந்தம் என்னும் தலைப்பில் செல்வி வயலற் பரஞ்சோதி (கிறிஸ்தவ அம்மையார்) தனது பட்டப்படிப்பிற்கு ஒரு நூல் எழுதினார். அதில் உள்ள சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சிவஞான போதத்தில் கூறப்பட்டமைக்கு மாறாக இருந்தது. சைவ அறிஞர்கள் மனம் வருந்தினர். திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் அருள்மிகு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (பின்னர் மகா சந்நிதானம்) தமது நண்பரான சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரைக் கொண்டு மறுப்புரை எழுதுவித்தார். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளின் அணிந்துரையே ஆணித்தரமாக அமைந்து அலங்கரிக்கின்றது. இந்நூல் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் 1951ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

**அளவை நூல்** - 1953ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. இந்நூலுக்கு அப்பல்கலைக் கழகத்துத் தத்துவத் துறைத்தலைவர் திரு.ஆர்.இராமாச்சாரியார் முகவுரை எழுதியுள்ளார். மேனாட்டுத் தர்க்கநூல்களைத் தழுவிய தமிழ் நூல்கள் மிகச் சிலவே உள்ளன. ஆங்கிலத் தர்க்கச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் அமைத்து தெளிவான எளிய நடையில் திரு.சு.சிவபாதசுந்தரனார் இந்நூலை ஆக்கியுள்ளார்.

**ஆறுமுகநாவலர்** - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களது சரித்திரத்தைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் தமிழ் தெரியாதவர்களும் அறிந்து கொள்ள எழுதினார். சைவப் பெரியாரின் மருகர் பண்டிதர் ம.வே.திருஞான சம்பந்தபிள்ளை அவர்களால் வெளியிடப் பெற்றது. நாவலர் ஐயாவின் இளமைக் காலம், அவர்களது சைவப்பணி, தமிழ்ப் பணி, இந்தியாவில் ஆற்றிய பணிகள் அவரது இறுதிக்காலம், அவரின் புருடத்துவம் என்பனவற்றை அத்தியாயங்கள் தோறும் விளக்கியுள்ளார்.

**Glories of Saivaism** சைவத்தின் மகத்துவம் என்னும் ஆங்கில நூல் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் 1954 ஆம் ஆண்டு சைவப்பெரியாரின் ஒன்று விட்ட சகோதரன் கலாநிதி கு.சிவப்பிரகாசம் அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க எழுதப்பெற்று அச்சிடப்பட்டது. இந்நூல் சைவ சமய மகிமையை ஆங்கிலத்திலே கூறும். இதுவே சைவப்பெரியாரின் கடைசி நூலாகும். இதனை எழுதி முடித்த பின், அது அச்சாகி வெளிவர முன் சைவப்பெரியார் அமரராகி விட்டார். இந்நூல் அழகான ஆங்கிலத்தில் ஆங்கிலம் வல்லவர்கள் எளிதில் படித்து உணரும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

கிராமப் பள்ளிகள் : மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, சுழிபுரத்தில் ஐக்கிய சங்க வித்தியாசாலை, தொல்புரத்தில் விக்கினேஸ்வர வித்தியாசாலை, பண்ணாகத்தில் மெய்கண்டான் வித்தியாசாலையும் சைவப் பெரியாரின் அபிமானிகளால் ஆரம்பிக்கப் பட்டு அவை பின்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் சீர்திருத்தங்கள் : தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடை பெற்று வந்த பலியிடும் செய்கையை நிறுத்தி னார். கோயில்களில் எழுந்தருளி விக்கிரகங்க ளுக்குப் பொய்க்கால், கை வைத்துச் சாத்தும் வழக்கத்தையும் நிற்பாட்டினார். திருவிழாக் களில் சின்ன மேளம் நடப்பதைக் கண்டித்து நிறுத்தியுள்ளார். நவக்கிரகங்களை ஆல யங்களில் அமைப்பதை எதிர்த்தார். அவரு டைய கருத்தின் படி நவக்கிரகங்கள் சிவனது அருளுக்குப் பாத்திரமானவர்களே சிவன் அடியவர்களே அல்லர்.

இலங்கை கல்வித் திணைக்களத்தில் சைவப்பெரியாரின் பங்கு : முன்னைநாள் கல்வி மந்திரி கன்னங்கரா, கல்விப் பணிப் பாளர் H.S.Perera, கலாநிதி சு.நடேசபிள்ளை திரு.எல்.மக்றே போன்ற பலர் இவரிடம் ஆலோசனைகள் பெற்றதால், சமயக் கல்வி யைக் கட்டாய பாடம் ஆக்குவதற்கும் அக் காலக் கல்விப் பாடவிதானம் அமைப்பதற் கும் இவரின் ஆலோசனைகள் பலவும் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நீதிமன்ற நடுவர் : உயர்நீதி மன்றங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் காலத்தில் Jury மார் சபையில் சைவப்பெரியார் இடம் பெறுவார். வழக்குகளை விசாரிக்கும் நீதி அரசருக்கு நீதி வழங்க உறுதுணையாய் இருந்தார்.

ஆசிரியப்பணி : நற்கல்வி ஊட்டுவதற் கேற்ப பிள்ளைகள் பாடசாலைகளிலும், வீட்டிலும், சமூகத்திலும், மாணவர்களின் வாழ்க்கை முறை சீரியதாக அமைகின்றதா என்பதை ஊக்கமுடன் கவனிப்பார். சைவ ஒழுக்கம், அடக்கம், பொறுமை, கடவுட்பக்தி, குருபக்தி என்பவற்றைக் கைக்கொண்டு வாழ்ந்த பெரியார் தன்னைப் போலவே தன் னிடம் கற்ற மாணவர்களும் அமைய வேண் டும் என்று எதிர்பார்த்து வாழ்ந்தார்.

விக்டோரியா கல்லூரி அதிபர் ஆனவுடன் தலைப்பாகையும் மூடும் நீண்ட அங்கியும் அணிந்து நின்றவர். பின்னர் இவைகளைப் புறக்கணித்து வேட்டி சால்வைகளோடு, திருநீறு சந்தனம் அணிந்து சைவ ஆசாரத் தோடு பிள்ளைகள் (மாணவர்கள்), ஆசிரியர் கள் சமூகத்தின் மத்தியில் உலாவத் தொடங் கினார்.

பெரியார் அவர்கள் தருக்கம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமை பெற்று இருந் தார். ஆயினும் எல்லாப் பாடங்களையும் இலகுவாகக் கற்பிக்கக் கூடியவராகத் திகழ்ந் தார். கற்பிக்கும் திறமையினால் மாணவர் கள், ஆசிரியர்கள் பயபக்தியோடு அடங்கி நடப்பார்கள். திறமையான மாணவர்கட்குப் பரிசில்கள் அளிப்பார்.

1930ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மாணவர் மகாநாட்டில் கலந்து தலைமை தாங்கினார். சாதி என்பது தொழிற் பிரிவி னையை ஆதாரமாகக் கொண்டது. வர்ணாச்சிரம தர்மத்தில் தீண்டாமை இருக்க வில்லை. தீண்டாமை அன்னிய படையெடுப்புடன் அடிமை வியாபார முறை யுடன் வந்திருக்க வேண்டும் என்று கூறி யுள்ளார்.

மேலைத்தேய விளையாட்டுக்களில் மாணவர்களை ஊக்கப்படுத்தமாட்டார். கல் லூரி வளவில் பயிர்ச் செய்கை செய்யவும், பயனுள்ள அறிவு நூல்களை வாசிக்கவும் கோயில் வழிபாட்டு முறைகளில் உடல் உழைப்பை புரியவும் ஏவி விடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மார் நால்வரின் குருபூசை, நவராத்திரி பூசையைக் கல்லூரியிலும் விடுதிச் சாலையிலும் விசேடமாக நடாத்துவார். மாணிக்கவாசகர் குருபூசையை பெரிதாக ஊர்வலத்துடன் நிகழ்த்துவார். நாயன் மார்களில் சுந்தரமூர்த்தி நாயனார் மிக்க அழகுடையவர் என்பார்.

1920 முதல் 1923ஆம் ஆண்டு வரை, சமயம், சைவசமயம், சிவபெருமான் விரதம், சமய குரவர் நால்வர், சந்தானா சாரியார் தலைப்புகளில் பல பல துண்டுப் பிரசுரங்களைத் தாமாகவும் மயிலை சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களைக் கொண்டும் எழுதுவித்து வெளியிட்டு இலவசமாக வழங்கினார்.

1944ஆம் ஆண்டில் மயிலை சே.வே.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்து அகில இலங்கைச் சைவ மகாநாட்டிற்குத் தலைமை தாங்க வைத்தார். 1948ஆம் ஆண்டு தருமபுர ஆதீனத்தால் அழைக்கப்பட்டு தருமபுரத்தில் சில நாட்களும், சிதம்பரத்தில் சில நாட்களும் தங்கி திரு.நல்லசாமிப் பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய (மொழி பெயர்த்த) சிவஞானசித்தியார் நூலைத் திருத்தியும் புதுப்பித்தும் அச்சிடுவித்தார்.

சைவசமயத்தின் உண்மைகளை ஆங்கிலத்தில் பரப்பிய மூன்று பேறறிஞர்களில் சிவபாதசுந்தரனாரும் ஒருவர். மற்றவர்கள் நல்லசாமிப்பிள்ளையும், சபாரத்தின முதலியாரும் ஆவர்.

புகழ்ச்சியையும் பொருளையும் விரும்பாதவர். தமது பொருளைக் கந்தவனக்கடவை கோயிலுக்கும், திருக்கேதீச்சரத்தில் திருஞானசம்பந்தர் மடத்தை அமைப்பதிலும் செலவிட்டார். திருக்கேதீச்சரத்தில் ஸ்ரீ நடராஜ மூர்த்தி சிவகாமி அம்மை விக்கிரகங்களை ஸ்தாபித்துள்ளார்.

14.08.1953ஆம் ஆண்டில் அவர் தன்னை மணந்து துறவுநிலையில் பிரமச் சரியப் பண்பைக் காத்த அவர் மனைவி திலகவதியார் பக்கத்தில் நிற்க மூச்சு அடங்கும் நேரத்தில் விபூதி அணியப்பெற்று காதில் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரம் ஓதப்பெற்று அமைதியாக சிவபெருமான் திருவடி நீழலைச் சென்றடைந்தார்.

"You (God) Know what I ought to Desire to have You (God) Give All that I Legitimately Desire to have" (I do not know what I Really Need).

**சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் எழுதிய நூல்கள் :**

1. சைவபோதம் (பகுதி 1, பகுதி 2)
   13ஆவது 14ஆவது சைவ பரிபாலன சபையாரது பிரசுரம்
2. திருவருட்பயன் உரை
   16ஆவது சைவ பரிபாலனசபை பிரசுரம்
3. சைவக்கிரியை விளக்கம்
   18ஆவது சைவபரிபாலனசபை பிரசுரம்
4. கந்தபுராண விளக்கம்
5. சுப்பிரமணியப் பெருமான் கொண்ட திருப்பெருவடிவம்
   43ஆவது சைவ பரிபாலனசபையாரது பிரசுரம்
6. திருவாசக மணிகள்
7. சைவசமயசாரம்
8. அளவை நூல்
9. அக நூல்
10. படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17ஆவது சைவபாரிபாலன சபையாரது பிரசுரம்
11. Essentials of Logic
12. Arumuga Navalar
13. Sivagnanabotham with a Rejoinder to a Christian Critic
14. The Saiva School of Hinduism
15. Glories of Saivaism

இவர் எழுதிய புத்தகங்களின் உரிமைகளை எல்லாம் யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபைக்கும், கொழும்பு விவேகானந்த சபைக்கும் அளித்துள்ளார்.



**2017ம் ஆண்டு யாழ் விருது செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கு வழங்கப்பட்ட போது ...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவைநூறில் தடம்பதித்த திருப்புகழ் திலகம் தியாகராஜ சுவாமிகளும் அவர்தம் ஆன்மீகவாழ்வும்

இன்பம் அருளையா
இணுவில் கிழக்கு,
இணுவில்

இலங்கைத்திருநாட்டின் வடபால் அமையப்பெற்ற யாழ்ப்பாண மாநகரின் வட திசையில் அமைந்துள்ள ஓர் ஊரே இணுவில் ஆகும். இவ் ஊர் இணையற்ற செல்வச் செழிப்பு மிக்கதாகக் காணப்பட்டமையினால் முற்காலத்தில் "இணையிலி" என அழைக் கப்பட்டு வந்துள்ளதாகவும் பிற்காலத்தில் இச் சொல் மருவி "இணுவில்" என அழைக்கப் பட்டு வருவதாகவும் வரலாறு கூறுகின்றது. இவ் இணுவில் பதி இன்றும் பிறமத தாக்கங் கள் அற்று தனக்கென தனியிடம் பெற்ற சிவ பூமியாக விளங்குகின்ற ஊர்களில் ஒன்றாக தலைநிமிர்ந்து நிற்கின்றது. இவ்வாறு சிறப் புற்று விளங்குவதற்கு காரணம் இக்கிராமத் தில் பேணப்பட்டு,போற்றப்பட்டு வரும் கலை, பண்பாடு, மொழிச்செழுமைமரபு மட்டுமன்றி காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்ற மகா ஞானிகள், சித்தர்கள், அருளாளர்கள் எனும் ஆன்மீகப்பற்றுள்ளவர்கள் வாழ்ந்து, வழி காட்டிவருகின்றமையே என்றால் மிகையா காது.

அந்தவகையிலே சித்தர்கள் என்றால் யார்? என்பதற்கு தேவாரங்கள் "இறைவனைக் காண முயல்பவர்கள் பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்றும் சித்தர்களை வேறுபடுத் திக் காட்டுகின்றன.

"மூச்சினை அடக்கி யோகா ஆற்றலினால் உடலில் உள்ள மூலாதாரத்தில் மனதை முறையாக நாட்டிக் குண்டலியினை எழுப்பி, பற்பல அனுபவமும் வெற்றியும் கண்டு அப்பாலுள்ள எல்லாம் என பொருளில் நினைத்துச் சித்திபெறுபவரே சித்தர் என்ற வழக்கம் பரவியுள்ளது" என அறிஞர் தே.பொ.மீனாட்சிசுந்தரனார் குறிப்பிடுகின் றார்.

இதேபோன்று, திருமூலநாயனார் அவர்கள் திருமந்திரத்தில் சமாதி நிலை பற்றிக் குறிப்பிடுகையில்,சமாதி என்பது ஆழ்நிலைத் தியானம் என்றும் அஸ்டாங்க யோகத்தின் இறுதிநிலை சமாதி என்றும் எவர் ஒருவருக்கு சமாதிநிலை கைகூடுமோ அவருக்கு அஸ்ட சித்தி கிடைக்கும் என்றும் சமாதி நிலை அடைந்தவர் சித்தராகிறார் என்றும் தனது1490வது திருமந்திரப் பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசக்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே".

இவை தவிர"சாதி, சமய சடங்குகளைக் கடந்து, சமூகத்தில் பயனுடையவை எவை என்பதைப் பிரித்தறிந்து அவற்றுள் புதுமைக ளைப் புகுத்துகின்ற அறிஞர்களாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் உள்ளஏற்றத்தாழ்வுகளை, சாதி சமய மனமாச்சரியங்களை மாற்றக் கருதிய சீர்திருத்த வாதிகளாகவும்"சித்தர்கள் வாழ்ந்துள்ளனர்.

இவற்றினை நோக்குகின்ற போது, இந்திய தேசத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் 108 சித்தர்கள் போன்று ஈழத்திருநாட்டிலும் பல சித்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். இவ்வாறு வாழ்ந்த பல சித்தர்களது வரலாறுகள் வெளிக் கொணரப்படாத நிலையில் கிடக் கின்றதென்றும் அவற்றினை வெளிக் கொணரவேண்டியது குறித்த சித்தர்களினது வழித்தோன்றல்கள் மற்றும் சீடர்களின் பொறுப்பாகும். சித்தர்கள் வாழுகின்றபோது தொண்டனாக, பக்தனாக மக்களோடு மக்க ளாக வாழ்ந்து இறுதிக்காலத்திலேயே தம்மை சித்தராக வெளிக்காட்டிச் சென்றுள் ளமைமையை அவர்களது வரலாறு எடுத்தி யம்புகின்றது.

இணுவில் பதியில் அன்னை சிவகாமி அம்பாள் ஆலயத்திற்கு அருகே, மாணிக்க வைரவர் கோயில் சூழலில் சைவநெறி முறையில்செல்வச் சீமானாக வாழ்ந்த மூத்த தம்பி வைத்திலிங்கம் அவர்களும் அவர்தம் துணைவியார் சின்னப்பிள்ளை அவர்களும் ஆற்றிய தவப்பயனால் அவர்களது தலை மகனாகக் கருவிலே திருவுற்று அவதரித்த வர் தில்லைநடராஜன் எனும் இயற்பெயரைக் கொண்டதியாகர் சுவாமிகள். இவர் 18.05.1918 அன்று வைகாசி விசாக நட்சத்தி ரத்தில் பிறந்தார். இறையருள் திருக்கொண்டு அவதரித்த தியாகர்சுவாமிகள் பிறக்கின்ற பொழுதே சுவாமிகளின் இறையருள் சிறப்பிற்கு அடையாளமாக, இவரது இடது பாதத்தின் மேற்புறமாக ஒரு அங்குல நீளமுடைய நீல நிறத்திலான வேலொன்று பிறவிச் சின்ன மாக அமையப் பெற்றிருந்தது. இதற்கேற் றாற் போல் தனது பதின்மூன்றாவது வயதி லேயே அன்னை சிவகாமி அம்பாள் கோயி லில் பஜனைபாடும் குழுவில் இணைந்து பஜனைபாட ஆரம்பித் தார். இது மட்டுமல்ல இவரது பெற்றோர்கள் இவரது ஆன்மீக நிலையினை ஏற்கனவே உணர்ந்தவர்க ளாய் தில்லை நடராஜன் பிறந்த தினத்தில் அன்றுதொட்டு இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை நிகழ்த்தி வந்தனர். அதன்பின் சுவாமிகளுடன் இணைந்து சுவாமிகளது உடன் பிறந்த சகோதரர்கள் நால்வரும் சேர்ந்து அன்றைய வழக்கின்படி மரக்காவடி எடுத்து அம்பாளு க்கு நன்றி செலுத்தும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் மதியவேளை யில் தில்லை நடராஜன் பிறந்த இல்லத்தில் அடியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடாத்தப்பட்டு வந்துள் ளது. இன்றும் இவ்வழிபாடு தொடர்ச்சியாக அவரது சகோதரனின் பிள்ளைகளால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றமை சிறப்பிற்குரிய தாகும்.

இது மட்டுமல்ல இணுவிலில் வாழ்ந்து சமாதி நிலையடைந்த பெரிய சந்நியாசி யாரின் பின், சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட காரைக்கால் சிவாலயத்தின் தனித்துவத்தை தமது ஞானக்கண்ணால் கண்ணுற்ற பல அருளாளர்கள், சித்தர்கள், ஆன்மீகப்பற்றுடையோர் இவ்வாலயத்திற்கு தரிசனம் செய்து மீண்டும் பூசை வழிபாடு களை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்த னர். அவ்வாறு வருகை தந்தவர்களுடன் அங்கு கூடிய நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள் (சித்தர்) தனது ஞானக்குறிப்பால் முக்காலத் தையும் உணர்ந்தவராய், எதிர்காலத்தில் காரைக்கால் சூழல் சிறப்புப் பெற்று மிளிரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் "பிற்காலத்தில் இச்சிவாலயத்தில் இருந்து வடக்கே செல்லும் பாதையருகே ஒரு ஞானியின் தவக்கூடம் அமையும். இதனை நாடிப் பல இடங்களில் இருந்தும் அன்பர்கள் வருவார்கள் இவ்விடம் பல அடியார்கள் வந்து பயன்பெறும் நற்காலம் உதயமாகும்" என்று அருள்வாக்குரைத்தார். அப்போது தில்லைநடராஜன் அவர்கள் அங்கு கூடிய சித்தர்கள் அருளாளர்களுடன் தானும் ஒரு தொண்டனாகப் பணியாற்றியுள்ளார். பிற் காலத்தில் சுவாமிகள் அவர்கள் தனது இல்லறவாழ்வில் தனது இல்லத்தரசியான கண்மணியம்மாளுடன் இணைந்து, நயினாதீவு முத்துக்குமார சுவாமிகள் குறிப்பிட்ட காரைக்கால் சிவன் கோவிலின் வடக்கே செல்லும் பாதையருகே தனக்கென ஒரு நிலத்தினை வாங்கி அதில் குடிசை அமைத்து பல்வேறு இடங்களில் இருந்தும் வரும் அன்பர்கள், அடியவர்களுக்கு ஆறுதல் அளித்து இன்னல்கள் போக்கி தன்னை நாடி வந்தோர் துயர்நீக்கி, தான் சமாதிநிலை அடையும் வரை அங்கு வாழ்ந்த வரலாறும் இவ்விடம் சிறப்புப்பெற்றமையும் நாம் அறிவோம்.

தில்லை நடராஜன் எனும் இயற் பெயரைக் கொண்ட தியாகராஜ சுவாமிகள் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள ஐயர் பள்ளிக்கூடம் என அழைக்கப்பெற்ற கோண்டாவில் சைவப்பாடசாலையில் கற்க ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து இறை பணி ஆற்றுவதனையும் இறைபுகழ் பாடுவ தனையும் வழக்கமாகக் கொண்ட இவர் தனது ஆன்மீகநெறியை வலுப்படுத்துவதன் நோக்கில் கொக்குவிலில் வாழ்ந்த சுதேச வைத்தியரான நடராசபிள்ளையிடம் சென்று வேதாந்த சித்தாந்தம், திருநீறிட்டு மக்களின் பிணி போக்குதல், மூலிகை வைத்தியம், பில்லி சூனியம் அகற்றுதல், சமாதிக் கிரியை களை மேற்கொள்ளுதல் போன்றவற்றைக் கற்றுத் தேர்ச்சியடைந்தார். அத்துடன் தியா னக்கலையினையும் கற்று தேர்ச்சியடைந்த இவர் பிற்காலத்தில் "திவ்விய ஜீவன சங்கம்" எனும் அமைப்பினை உருவாக்கி தியானக் கலையினை பயிற்றுவித்து வந்தார். இதன் சித்தியை உணர்ந்த பலர் இதில் கலந்து மனநிறைவடைந்துள்ளனர். அவர்களுள் நல்லூரைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி பாலசுப்பிரமணியம் என்பவரும் ஒருவர் ஆவார். சுவாமிகள் அவர்கள் ஆரம்ப காலத் தில் ஆலயங்களில் சமயப் பிரசங்கங்கள், சொற்பொழிவுகளை மேற்கொண்டு வந்த போதும் இறையருளால் தனக்கு கொடுக்கப் பட்ட இனிய குரல்வளத்தினை இறைபுகழ் பாடுவதனையே விருப்பாகக்கொண்டு பஜனைப் பாடல்களைப் பாடுவதில் ஈடுபடத் தொடங்கினார். சுவாமிகளின் ஆன்மீக அனுபவங்களை உணர்ந்து அவரை நாடிவந்து நல்லாசி பெற்றவர்கள் அவருடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டவர்களில் அநேகர் தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், காரைநகர் போன்ற பிரதேசங்களைச் சேர்ந் தவர்கள் என இன்றும் வாழ்ந்து கொண்டி ருக்கும் அவரது அன்பர்கள், அடியவர்களால் கூறப்படுகின்றது.

தியாகராஜ சுவாமிகள் அவர்கள் புங்குடு தீவு திருப்புகழ்ச் சுவாமி, கோண்டாவில் குடைச்சுவாமிகள், இணுவில் அம்பலவாண சுவாமிகள், கிளிநொச்சி வடிவேற்சுவாமிகள், இணுவில் சாத்திரம்மா, குப்பிளான் மாணிக் கம்மா முதலானோருடன் நெருக்கமான உறவினைக் கொண்டுள்ளார். அந்தவகை யில், 1975ஆம் ஆண்டில் காரைக்கால் அம்பலவாண சுவாமிகள் சமாதியடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது காரைக்கால் சிவாலய வளாகத்தின் கிழக்குப் பகுதியில் உரிய சமாதிக் கிரியை களை மேற்கொண்டு அவருக்குரிய சமாதியை அமைத்தார் என்றும் வடிவேற் சுவாமிகளின் அழைப்பை ஏற்று, நயினாதீவுச் சித்தரான நயினை முத்துக்குமார சுவாமிகள் அவர் களுக்கும் கோண்டாவில் குடைச்சுவாமிகள் அவர்களுக்கும் வடிவேற்சுவாமிகளுக்கு இணையாக நின்று சமாதிக்கிரியைகளை மேற்கொண்ட சிறப்பிற்குரியவர் என மூதறிஞர் மூ.சிவலிங்கம் ஐயா அவர்கள் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதே போன்று இம்மண்ணில் நடைபெறும் சைவாசாரக் கிரியைகள் மற்றும் பொது நிகழ்வுகளை நிறைந்த மனத்துடன் செயற் பட்டு நிறைவு செய்த பெருமைக்குரியவர் சுவாமிகள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிவந்தமேனியும் நெடிதுயர்ந்த தோற்ற மும் கொண்ட அழகிய உருவிற்கு மேலும் அழகு சேர்ப்பனவாக நமசிவாய உச்சரிப்பும், சிவசின்னம் தரித்தலும், கழுத்துநிறைந்த உருத்திராட்சமாலையும், நெற்றியில் விபூதிப் பூச்சும் அதன் நடுவே சந்தனம், அதற்குமேல் குங்குமம் என்பன அமையப்பெற இடையி டையே தலையில் தலைப்பாகை, காவியுடை யும் (வேட்டி) சுவாமிகள் எங்கு நின்றாலும் வேறுபடுத்தி காட்டக்கூடிய தோற்றமாகக் காணப்பட்டதுடன் அவரது இடுப்பில் சொரு கப்பட்ட விபூதிப்பையும் இவ்வழகிய தோற் றம் அவரைக்காணுகின்ற சிவனடியார்கள் அவரையே தெய்வமாகக் கரம்கூப்ப வைத்தது.

பிறப்பிலேயே வேலாயுதத்துடன் அவ தரித்த தில்லைநடராஜன் எனும் இயற்பெயர் கொண்ட தியாகராஜ சுவாமிகள் இணுவில் சிவகாமி அம்பாள் பக்தனாக இருந்தாலும் கூட, முருகப்பெருமான் மேல் தீராத பக்தி கொண்டவர். ஆதலால் திருப்புகழை மெய் யுருகப்பாடிப் பரவுவார். பாடுவது மட்டுமல்ல ஆடியும் மகிழுவார். ஏனைய தேவார திரு வாசகங்களைப் பாடி பரவினாலும் திருப்புகழ் பாடுவதில் அலாதி விருப்புக் கொண்டவராக பொருள் சந்தம் பிரளாது கேட்போரை மெய் சிலிர்க்க வைக்கும் அளவிற்கு பாடிமகிழு வார். தனது சகோதரர்களான பாட்டுக்கார அம்பலம் என சிறப்பாக அழைக்கப்பட்ட அம்பலம், மற்றும் மிருதங்க வித்துவான் என அழைக்கப்படும் அருளையா அவர்களு டன் தனது பஜனைக் குழுவில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளும் குழாத்தினையும் இணைத்து பக்கவாத்தியங்கள் சகிதம் தனது இல்லக்கிழத்தியான கண்மணியம்மாவுடன் கோயில் கோயிலாகச் சென்று பஜனைபாடி பக்தர்களை பக்திப் பரவசத்தில் ஆழ்த்துவார். அந்த வகையில் நயினையில் குடி கொண் டுள்ள நாகபூசணியம்பாள் ஆலயம், செல்வச் சந்நிதி, நல்லூர் முருகன் ஆலயம், கதிர் காமக் கந்தன் ஆலயம், திருக்கேதீச்சரம், மாவைக்கந்தன் ஆலயம், கீரிமலை நகு லேஸ்வரர் ஆலயம் என்பவற்றிற்கு அவ் வாலயங்களின் திருவிழாக்காலங்கள் மற்றும் விசேட உற்சவகாலங்களில் சென்று வருவது வழக்கமாயிற்று. அதுமட்டுமல்ல இறைவனை இசையால் மகிழ்வித்து அடியார்க்கு வேண்டும் வரம் அளிக்கும் வல் லமையை வரவழைப்பார். இயல்பாகவே உச்சஸ்தாயியில் அமைந்த இனிமையான குரல் வளம் கொண்ட சுவாமிகள் திருப்புக ழைப் பொருள் பிரித்துப்பாடக் கேட்டால் மெய்யுருகி அனைவரும் நிற்பர் எனவும் சுவாமிகளின் பஜனைப்பாடல்களைக் கேட்ப தற்கென்றே ஒரு பக்தர் கூட்டம் அலைமோதும் எனவும் அக்காலத்தில் சிறுவர்களாக இளை ஞர்களாக வாழ்ந்த கலாபூசணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை, கலாபூசணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகமணி கோபாலகிருஸ்ணன், சிவத்தமிழ் வித்தகர் கலாபூசணம் சிவமகாலிங்கம், பேராசிரியர் சபா ஜெயராஜா போன்றோர் கூறக்கேட்கும்போது மெய்சிலிர்க்கும்.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் தனது உரையொன்றில்-காரைக் கால் சிவன்கோவில் வளாகத்தில் அம்பல வாண சுவாமிகளிடம் தமது இன்னல்க ளைப் போக்க நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் பல்வேறு துன்ப துயரங்களின் மத்தி யில் தமது பிணிவினை போக்க வந்தவர்கள் அங்கு தங்கிநின்று தமது துயர் போக்கிச் செல்வது வழக்கம் என்றும், இவர்கள் தனியாகவோ அல்லது குடும்பம் குடும்பமா கவோ தமக்கென ஒதுக்கப்பட்ட குடிசைகளில் தங்கி நிற்பர்என்றும், அவ்வாறு அங்கு குடிசைகளில் தங்கி இருப்பவர்கள் காரைக் கால் தேர்த்திருவிழாவின் போது விஸ்வ நாதர் சமேத விசாலாட்சி அம்பாள் திருத் தேரில் வீதியுலா வருகின்றபோது தியாகராஜ சுவாமிகளும் அவரது உடன்பிறந்த சகோதர் களும் ஏனைய அவரது பஜனைக் குழுவின ரும் பக்கவாத்தியங்கள் சகிதம் திருத்தேரிற் குப் பின்னால் பஜனை பாடி வருகின்ற பொழுது ஒவ்வொருவராக சுவாமிகளின் பாடலுக்கு தம்மைமறந்து ஆட ஆரம்பிப்பார் கள். ஒருகட்டத்தில் அதிக எண்ணிக்கை யானோர் பாடலில் லயித்து உருக்கொண்ட வர்களாக ஆடிக்கொண்டு இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும் என்றும் அதனைக்கண்டு சிலர் பயப்படுவதாகவும் சிலர் ஆனந்தமடைவதாகவும் குறிப்பிட்டார். இதன்போது அம்பலவாண சுவாமிகள் வேப்பிலையுடன் வந்து அவர்களை விரட்டி அவர்களது பிணிபோக்குகின்ற நிகழ்வு தான் நேரடியாகக் கண்டு அனுபவித்த அக்கால சம்பவங்களில் ஒன்று என்றும் இனிவரும் காலங்களில் இவ் அற்புதக் காட்சியை யாரும் காணக்கிடைக்குமோ எனவும் தெரிவித்தார்.

இதேபோன்று பேராசிரியர் சபா ஜெய ராஜா அவர்கள் தனது சொந்த அனுபவ மாகத் குறிப்பிடுகையில் 1970களில் திரு வெம்பாவைக் காலங்களில் சுவாமிகளும் அவரது பஜனைக் குழாமும் அதிகாலை இரண்டு மணிக்கு எழுந்துநீராடி காரைக் கால் சிவன்கோவிலில் ஆரம்பித்து இணுவில் கிராமத்தின் மூலை முடுக்குகள் தோறும் சென்று திருவெம்பாவைப் பாடல் களைப் பாடி வருவது வழக்கமென்றும் அவ் வாறு செல்கின்றபோது இணுவில் மேற்கில் உள்ள "மன்னன் தோட்டம் ஒழுங்கை" என அன்று அழைக்கப்பட்ட (இணுவில் மத்திய கல்லூரியின்தெற்கில் இருந்து மேற்கே செல்லும் ஒழுங்கை) ஒழுங்கையுள் ஒழுங்கையின் ஓரமாக உள்ள பாம்புப் புற்று ஒன்றின் வாயிலில் நாகபாம்பு ஒன்று தலையை உயர்த்தியவாறு அமைதியாக இருந்து சுவாமிகளின் பாடலைக் கேட்டுக் கொண்டே இருக்கும் எனவும் அதனைப் பலர் கண்டு ஆச்சரியமடைந்துள்ளனர் என வும் தெரிவித்துள்ளார். இவ்வாறு சுவாமி களின் பஜனைப்பாடல்களை மனித குலம் மட்டுமல்ல ஏனைய ஜீவராசிகளும் கேட்டு இன்புற்றிருந்துள்ளன என்றால் மிகை யாகாது. அதுமட்டுமன்றி, தீராப்பிணியுடன் தன்னை நாடி வந்தவர்களிற்கு கைநாடி பார்த்து உடல் உளப்பிணியை அறிந்து தனது குருவிடம் கற்றுத்தேர்ந்த சித்த மருத் துவ முறைமையையும் சித்த நோக்கில் மூலிகை கொண்டு இறைவன் புகழ்பாடும் பண்பாடியும் நோய்களைப் போக்கியவர். அதேபோன்று உடல் உளப்பிணியன்றி கன்மவினையுடன் பில்லி சூனியப்பாதிப்பு என வாடியோரை தனது சித்து மகிமையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனைப்போற்றும் திருவாசகம், திருப்புகழ் இசையினால் துயர்நீக்கி இன்ப மடையச் செய்தார் என்றும் இதற்குத் தொடு பொருட்களாக சிவசின்னமாம் திருநீற்றை யும் இறைபக்தியையும் மூலிகைகளையும் கொண்டார் எனவும் சொல்லப்படுகிறது.

மேலும் இன்னிசையால் இறைவனை மகிழ்விக்கும் தியாகராஜ சுவாமிகள் நயினை நாகபூசணி அம்மாள் மீதும் தீராத பக்தி பூண்டவராய் அம்பாளின் மகோற்சவ காலம் ஆரம்பமாவதற்கு முதல் நாளன்றே அம்பாள் சந்நிதானத்திற்கு தனது பஜனைக் குழாத்து டன் சென்று, பஜனைப்பாடல்களைப் பாடி வந்ததாகவும் அவ்வாறு வருகின்ற பொழுது 1958ம் ஆண்டில் நயினை நாகபூசணி அம்பாள் தனது திருத்தேரில் உலாவந்து கொண்டிருக்கும் போது, தனது குலதெய்வ மான இணுவில் சிவகாமி அம்பாளையும் இவ்வாறானதோர் பெரிய சித்திரத்தேரில் ஏற்றி வீதியுலா வரவேண்டும் என சித்தங் கொண்டு நயினை நாகபூசணி அம்பாள் வலம் வந்து ஆலயவாயிலை அடைந்தவு டன் தனது சிந்தையில் தோன்றிய எண் ணத்தை அம்பாளிற்கு உரத்த தொனியில் தெரிவித்து அதனை நிறைவேற்றுவதற்குத் துணைநிற்குமாறு விண்ணப்பம் செய்துள் ளார். அதனை செவி மடுத்த அன்னை துணைநிற்க, தியாகராஜ சுவாமிகள் அவர் கள் தனது பஜனைத் திருக்கூட்டத்துடன் வீடு வீடாகவும், ஊர் ஊராகவும் சென்று பஜனை பாடி திருத்தேர் செய்வதற்குத் தேவையான பொருட்களையும் நிதியினையும் சேகரித்துக் கொடுக்க, பின்னாளில் 1977 ஆம் ஆண்டு ஆடிப்பெருவிழாவில் இணுவில் சிவகாமி அம்பாளிற்கும் சித்திரத் தேர் அமையப் பெற்று அதில் சிவகாமி அம்பாள் ஏறி வலம் வரும் காட்சி கண்டு களிப்புற்ற வரலாறு இவரது வாழ்வின் ஓர் முக்கிய மைல்கல் என்றே கூறலாம். இதனை மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.ந.வீரமணிஐயர் அவர்கள் தனது வித்தகக் கலைஞர் கூடி விளங்கும் இரதமும் செய்தார் எனும் பாடலின் பல்லவி யாக,

"பக்திப்பாடல் பாடும் பக்தன் தியாகராசா
சித்தம் குளிர்ந் தாரம்பித்தான் சித்திரத்தேருஞ்
செய்ய" எனப்பாடிச் சிறப்பித்துள்ளார்.

1964ம் ஆண்டில் நல்லூர் முருகப்பெரு மானின் இரண்டாவது புதிய அழகிய சித்திரத்தேர்ப் பெருவிழாவின்போது ஏழு தீவுக் கூட்டங்களிலிருந்தும் சங்கமிக்கும் பஜனை பாடுவோர் திருக்கூட்டம் ஒன்றி ணைந்து பாதயாத்திரையாக நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லூர் நல்லைக்குமரனிடம் செல்வதாகத் தீர்மானித்தனர். இணுவில் தியாகராஜ சுவாமிகளின் பக்திப்பாடல்களில் மயங்கிய ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பெருவிருப்பின் பேரிலும் "சப்த தீவக திவ்ய ஜீவன சமாசத்தின் "உறுப்பினர்கள் அனை வரினதும் ஏகோபித்த ஆமோதித்தலின் பிரகாரமும் இப்பாதயாத்திரைக்கு திருப்புகழ் திலகம் தியாகராஜ சுவாமிகளே தலைமை தாங்கி சிறப்பித்தது மட்டுமல்ல பலவருடங் களாக அவரது தலைமையிலேயே இப்பாத யாத்திரை வெகுசிறப்பாக நடைபெற்று வந்தமையும் சிறப்பிற்குரியது. இவ் சப்த தீவக திவ்ய ஜீவன சமாசத்தின் பாத யாத்திரை இற்றைவரை நூற்றுக்கு மேற்பட்ட அடியார் கூட்டத்துடன் தொடர்ந்து நடைபெறுகின்ற தென்றால் இது சிறப்பிற்குரியதே.

தன் இனிய குரல் வளத்தால் இறைவ னைப் பாடித்துதிக்கும் தியாகர் சுவாமிகள் அவர்களிற்கு இலங்கை வானொலி சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தினால் "திருப்புகழ் திலகம்" என்றும் இணுவில் வாழ் இசைப் பிரியர்க ளால் "திருப்புகழ்மணி" என்றும் "பஜனைப் பாவலர்" என்றும் கௌரவப்பட்டம் வளங்கப் பட்டுள்ளது. சுவாமிகள் அவர்கள் கதிர்காமக் கந்தனிடம் சென்று வந்து கதிர்காமக்கந்த னின் விபூதிப் பிரசாதத்தினை அனைவருக் கும் கொடுத்து கதிர்காமக் கந்தனின் அரு ளாசியினையும் அனேகருக்கு வழங்கிச் சென்றுள்ளார்.

கருவிலே திருக்கொண்டு அவதரித்த சுவாமிகள் அவர்கள் இறைதொண்டனாக, இறைபக்தனாக, நண்பனாக, வைத்திய னாக, யோக குருவாக, அருள்வாக்குரைக் கும் அருளாளனாக, மனையடி சாஸ்திரியாக, இறைபுகழ் பாடும் பாவலனாக வாழ்ந்து பிற் காலத்தில் சித்தம் சிவன்பால் கொண்டு பித்தனாக வாழ்ந்து, சித்தனாக முக்காலமும் உணர்ந்த முனிவராக தன் சமாதிக் காலத்தை முன்பே உணர்ந்தவராகி தன் உறவுகளிற்கும் சீடர்களிற்கும் அறிவித்து ஆயிரத்துத் தொழாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் தான் அவதரித்த அதே நட்சத்திர தினமான விசாக நட்சத்திர தினத்தில் நிஸ்டையில் அமர்ந்த வாறு சமாதியெய்தினார். இவர் தனது குடிலில் சமாதி அடைந்ததும் சமாதி நிலை கூடிய அவரது குடிலுக்குள் செல்கின்ற போது விபூதி மற்றும் சந்தன மணம் கமழ்ந்து அவரது தெய்வீக நிலையினை வெளிக் கொணர்ந்தது. சுவாமிகள் அவர்களின் ஆன்மீக நிலையை கண்டு உணர்ந்து தெளிந்து அனுபவித்தவர்களுக்கு சுவாமிகள் குருவாக, தெய்வமாகக் காட்சி கொடுத்துள் ளார். அந்தவகையில் இணுவில் காரைக் காலில் அமைந்துள்ள சுவாமிகளின் சமாதி க்கு அவரது மெய்யடியார்கள் வருகை தந்து வழிபாடு செய்து செல்லும் நிலையையும் தமது இல்லங்களில் சுவாமிகளின் திருவுரு வப் படத்தினை வைத்து வழிபாடு செய்யும் நிலையையும் இன்றும் நாம் காணமுடிகின் றது. சுவாமிகள் அவர்களை நம்பித் தொழு வோர்க்கு என்றென்றும் சுவாமிகளின் ஆசியும் அனுக்கிரகமும் கூடட்டும்.

"குருவே துணை"




யாழ் விருது வழங்கப்பட்ட பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக மகளிர் வரிசையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இணுவையூர் கலாபூஷணம்
மூ.சிவலிங்கம்

**பார்போற்றும் தங்கத்தமிழ்ச் செல்வியின் அவதாரம்**

ஏர் கொண்டு சீர் பெற்ற புண்ணிய பூமியாம் மாவிட்டபுரத்தில் அருள்பாலிக்கும் கந்தப் பெருமானின் ஆலய வாசலின் கிழக்கு வீதியில் வாழ்ந்த விவசாயக்குடும்பத்தில் தவ சீலியாக வாழ்ந்தவர் தையற்பிள்ளை. இவரின் தவவாழ்வை நாடி வந்து இல்லறத் தில் இணைந்து மகப்பேறு பெற்றவர், தாம் பெற்ற மகவினால் பிற்காலத்தை புகழ் தோய வைத்துத் தமது பிறந்தகமான மல்லாகத் தைச் சிறப்பித்தவர் வேளாண்குடியில் பிறந்த அப்பாக்குட்டியாவார்.

அப்பாக்குட்டி தையற்பிள்ளை செய்த முற்றவப்பயனின் கையிருப்பு நற்பலன் தர உதவியது. இத்தம்பதியினரின் இனிய வாழ்வின் பயனாக மார்கழி மாத திருவாதி ரைப் பெருநாளும் பூரணைத் திதியும் கூடிய சுபவேளை 7.1.1925 அன்று தங்கம் போல ஒளிரும் தங்க மகள் உதயமானாள். தங் கம்மாவின் தங்கநிறமும் மதுரை மீனாட்சி யின் கண்ணழகும் பொலிந்ததால் தந்தை தங்கம்மா என்றே பெயரிட்டார். பல சாதனை களைச் செய்ய இருந்த தங்கம்மா சிறப்புடன் வளர்ந்ததும் வீட்டில் தாயார் ஓதும் திருமுறை களைத் தாமும் பாடி மகிழ்பவர்.

**மாவைக்கந்தனிடம் காட்டிய மழலைப்பாடல்**

ஒருநாள் தாயார் வழமை போல மாவைக்கந்தனாலய தரிசனைக்காகப் பொன்மாலைப் பொழுதில் புறப்படுகிறார். மூன்று வயதுடைய தங்கம்மாவும் தாயுடன் செல்கிறார். தாயார் ஆலய தரிசனையின் பின் ஆலய வெளிமண்டபத்தில் அமர்ந்திருக் கச் சிறுமி தங்கம்மா தமது பிஞ்சு மொழியில் மழலைத்தமிழில் தேவாரங்களைச் சிறப் பாக ஓதுகிறார். யாவரும் வியந்து, வளரும் பயிரை முளையிற் தெரிகிறது என்றனர்.

**கல்விப்பருவம்**

தங்கம்மாவின் ஐந்து வயதில் தந்தை யின் இல்லத்தின் அண்மையான தெல்லிப் பழை துர்க்காதேவி ஆலயத்தில் பொன்னேடு தொடக்கப்பட்டது. தொடர்ந்து கல்வியை நாடிப்பாடசாலையை அடைந்த தங்கம்மா கல்விக் கடலில் பிரகாசிக்கிறார். தாம் கற்ற பாடசாலைகளான விசாலாட்சி வித்தியா சாலை மற்றும் அமெரிக்க மிசன் பாடசாலை யிலும் நடைபெற்ற பேச்சுப்போட்டி, பண்ணி சைப்போட்டி, நாடக நடிப்பில் துள்ளிக்குதித் துப் பெற்ற பரிசில்கள் யாவும் முதலிடமே.

இவ்வாறு சிறப்புடன் கற்ற தங்கம்மா இடைநிலைக்கல்வியில் சிரேஷ்ட பாடசா லைத் தராதரப்பத்திரப் பரீட்சை (S.S.C) யில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புச் சித்தியுடன் தேர்வானாள். அக் காலத்தில் யாழ் கிராமப்புறங்களில் உயர் கல்வி கற்கமுடியாது. அடுத்த தேர்வாக ஆசிரியர் பயிற்சியை நாடுவதே ஒரே வழியாக இருந்தது.

**சைவாசிரியர் பயிற்சி**

தங்கம்மா தமது 16வயது நிறைவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சிக்காகச் சேர்க்கப்பட்டார். சேர் பொன் இராமநாதன் மாணவர்களின் நலன் கருதி நன்கு கற்றுத் தேறி அனுபவம் வாய்ந்த தமிழ்ச் சான்றோர்களையே இந்தியாவிலிருந்து வரவழைத்து தமது கல்வி நிலையத்தில் நியமித்திருந்தார். இவர்கள் யாவரும் தம்மை நாடிய ஆசிரிய மாணவரைப் பூரண அறிவு வளர்ந்த ஆசியர்களாகவே வெளியனுப்பும் இயல்பினர். இதனால் தங்கம்மாவும் சிறந்த கல்வி மூலம் புடம் போட்ட தங்கமாக மாறவேண்டிய இறைவனின் நியதியை அணிசெய்வதாக அமைந்தது.

பயிற்சிக்காலத்தில் கல்லூரி ஆசிரியர்களின் நெறிப்படுத்தலினால் நற் பயன்தரக் கூடிய சிறந்த நூல்களையே தேடிக்கற்றுத் தமது கல்வியழகையும் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியர் பயிற்சியில் மேதாவிகளான ஆசிரியர்களின் உந்துதலால் இலக்கண இலக்கிய நயங்களையும் இதர பாடங்களின் சிறப்புக்களையும் இலகுவில் கற்றுக்கொண்டார். இதனால் இலக்கண இலக்கியம், பா ஓதுதல், யாவற்றையும் ஐயம் திரிபறக் கற்று முன்னிலையில் திகழ்ந்தார். இக்கல்லூரியில் கல்விநெறி மட்டுமன்றிச் சமயநெறியில் சைவத் தமிழ்பெண்களுக்கான சிவநெறி, பிரசங்கமரபு, நல்லொழுக்கம், பண்பு, தமிழ் மரபு பேணுதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், கீழ்ப்படிவு, இன்சொல் பேசி யாவரையும் அரவணைத்தல், சிறிதளவில் நன்றி செய்தாரையும் நன்றி மறவாது போற்றுதல் போன்ற அரியனவற்றையும் கற்றறிந்தார்.

ஒரு சைவத்தமிழ்ப்பெண் அதிகாலையில் துயிலெழுந்து நன்னீராடி தலைவாரிக் கூந்தலை பின்னலாகவோ கொண்டையாகவோ மடித்துக்கட்டி, தலையிற் பூச்சூடி நெற்றியில் திருநீறணிந்து நெற்றித் திலகமிட்டு வெளியே வரும்போது பிள்ளைகள் முழுப்பாவடைச் சட்டையையும் பெண்கள் கணுக்கால் மறையச் சேலையணிந்தும் காட்சி தந்தால் யாவரும் இப்பெண் மகாலட்சுமியாகவே இருக்கிறாள் எனப் போற்றுவர். இதனை அம்மையார் தமது பிற்காலப் பிரசங்கங்களின் போது குறிப்பிடத் தவறுவதில்லை.

இப்பயிற்சிக்காலத்தில் எமது சைவசமயப் பற்றுறுதி காரணமாக நற்கல்வியுடன், சைவாசாரசீலம் தமிழ் இலக்கியச் சொற்பொழிவாற்றல் பண்ணோடிசைபாடல், புராண படனம் ஆலயங்களில் அன்றாடம் செய்யக்கூடிய பணிகள் பற்றியும் தேடிக்கற்றதால் அம்மையாரின் கல்விப்புலத்தில் சைவப்பாரம்பரியம் குடிகொண்டது. இவரின் இளமையிற் கல்வி சிலையிலெழுத்து என்றாற் போல ஆசிரியர் பயிற்சிக்காலத்தே தாம் கற்ற பிரசங்க மரபை 1942இல் இணுவில் சிவகாமி அம்பாளின் ஆலயத்தில் பெருவிழாக்காலத்தின் போது ஒரு நாள் செயற்படுத்தினார். பதினேழு வயதுடைய கன்னிப்பெண் முழுப்பாவடை சட்டையணிந்து சக்தியின் ஆலயத்தில் முதன்முதல் நிகழ்த்தியதால் அவரின் பணியை எமது சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதில் அறிய முடிந்தது. அன்று தொடங்கிய அம்மையாரின் பிரசங்கம் ஐயாயிரத்துக்கும் மேலான ஆன்மீகமேடைகளில் தடம்பதித்து அலங்கரித்தமை மகாசக்தியின் பேரருளே யாகும். இவரின் பிரசங்க மரபைப் பின்னர் அறிவோம்.

**அரச பணி**

சைவாசிரியர் பயிற்சி பெற்ற தங்கம்மா சில காலம் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியர் பணி செய்த பின் 1946 இல் மட்டக்களப்பு சென். சிசிலியா ஆங்கிலப்பாடசாலையில் மூன்று வருடம் பணியாற்றினார். இவரின் இனமதபேதமற்ற பணியால் கவரப்பட்ட கொழும்பு பாத்திமா பெண்கள் கல்லூரி இவரை வரவேற்றது. சிறப்பான பணியால் அங்கு கற்ற மாணவி யர் சிலரை ஆசிரியர் பயிற்சி பெறச்செய்து, படித்த அதே பாடசாலையிற் கற்பிக்க வகை செய்தார். அம்மையாரின் சாதனையை உரிய பெண் ஆசிரியைகள் இறுதிக்காலம் வரை நினைவு கூர்ந்து தமது உறவின் சிறப்பை நிரூபித்தனர்.

கொழும்பில் கற்பித்த காலங்களில் ஓய்வு நேரங்களில் சைவ ஆலயங்களில் மாண வர்களுக்கான சமய வகுப்பு, சமயச் சொற் பொழிவுகள் நடாத்தியதால் அங்கு வாழ்ந்த தமிழ்க்கல்விமான்களின் நட்புறவையும் தேடிக்கொண்டார். இதன் பேறாக இவர் தமிழ் பாலபண்டிதர் (1953) பண்டிதர் (1954) தேர்விலும் சித்தி பெற்றார். கொழும் பில் இவர் நடாத்திய சைவப்பிரசங்கம் இலங்கை வானொலியையும் கவர்ந்தது. இதன் பேறாக இவர் 1957, 1958இல் இலங்கை வானொலியில் பெண்களுக்கான சைவப்பண்பாட்டு நெறியைத் தொடர்ந்து விளக்கி வந்தார். இதனால் இவரின் பிரசங்கம் உலகெங்கும் பலராலும் கேட்டு மகிழ முடிந்தது. 1958இல் நடைபெற்ற இனக்கலவரத்தால் தென்னிலங்கையில் வாழ்ந்த எம்மவரெல்லாம் நன்கு பாதிக்கப் பட்டு கடற்கப்பல் மூலம் வடபகுதியை நாடினர். 33வயதுடைய இளம் பருவத்தில் பல இன்னல்களுக்கும் மத்தியில் தாயகத்தை வந்தடைந்ததன் காரணமாகத் தமது சூழலி லமைந்த அளவெட்டி சதானந்த வித்தியா சாலைக்கு இடமாற்றம் கிடைத்தது.

**தங்கம்மாவின் தவவாழ்வும் தூயபணிகளும்**

தாயகம் வந்து கல்விப் பணியைத் தொடர்ந்தார். இக்குறுகிய காலத்தில் பெற் றோரும் மறுமையெய்தினர். அம்மையா ரின் எதிர்கால விடிவின் நுழைவாயிலாகப் பற்பல துன்பங்கள் சூழ்ந்தன. இதனால் தமது கல்விப்பணியை மட்டுமே தொடர்ந் தார். பொதுப்பணிகளை நாடாது தவ வாழ்வை மேற்கொண்டார். தவப்பொழுதை அவப் பொழுதாக்காது இறையருளை நாடிய தால் சிறந்த நூல்களை அரவணைத்தார். பெரியபுராணம், திருவாசகம், கந்தபுரா ணம், திருவிளையாடற்புராணம், சங்க நூல் கள், திருக்குறள், இராமாயணம், மகாபார தம் போன்ற அனைத்து நூல்களையும் ஒரு வருடகாலத்தில் பலமுறை படித்து வேண்டிய பலவற்றை மனனஞ் செய்து கொண்டார்.

**அம்மையாரின் பிற்காலச் சிறப்பின் நுழைவாயில்**

ஒரு வருடகாலத் தவக்கால எல்லைக்குள் நாவலர் பெருமானின் சகல பணிகளையும் நோக்கியதால் அவரின் பணியைப் பின்பற்ற இறையருள் உணர்த்தியது. தமது சூழலில் குடிகொண்ட துர்க்காதேவியை உள்ளன் போடு வழிபட்டார். ஆலயப் பணிகளையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார். இச்சமகாலத்தில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. இக்காலத்தில் துர்க்காதேவியின் ஆலயத்திருப்பணியிலும் சேர்க்கப்பட்டு பொருளாளர் பணியை ஏற்றார். இப்பணி களுடன் பிரசங்கப்பணியையும் ஏற்று பல ஆலயங்களிலும் தமது திறமையை வெளிப் படுத்தினார். அம்மையாரின் நாவன்மையும் சுறுசுறுப்பும் 1962-1966 வரை நடைபெற்ற ஆலயத்திருப்பணி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. 1966இல் கும்பாபிசேகம் சிறப்பாக நிறைவேறியது. இறையருட் சித்தப்படி இவ் வாலயத்தின் நிர்வாக சபையின் பொருளா ளர் பணியும் கிடைத்தது. இவ்வரிய சிறப்புக் காலத்தில் அன்னை தங்கம்மாவின் பிரசங் கப்பணி தாய்சேய் நாடுகளின் சமயத்தூதாக இந்தியாவில் அமைந்தது.

**கடல் கடந்த நாடுகளின் பிரசங்கப்பணி**

இந்திய நாட்டில் பிரசங்கம் செய்யும் பணி யேற்ற அம்மையார் 1965 முதல் 1982 வரை பலமுறை சென்று யாழ்ப்பாணத்தமிழின் பெருமையை நாவலர் பெருமானின் பின் நிலைநாட்டிய பெருமையும் கிடைக்கப் பெற்றார். சென்ற இடங்களிலெல்லாம் பெரு மதிப்பும், பட்டங்களும், விருதுகளும் பல பெரியார்களின் மத்தியில் தலைமை தாங்கும் பேறும் பெற்றார். இதே தொடரில் பல அதியுயர் சைவ மற்றும் கல்விப்பெரியார் களின் நட்பும் கிடைத்தது. இதனால் யாழ் மண்ணில் உலகச்சமய மகாநாடுகள் நடாத் தும் பெருமையும் கிடைத்தது. ஆலயத்தின் திருப்பணிக்கான நிதியும் வளமும் கிடைத் தது.

**சிவத்தமிழ் செல்வி தங்கம்மா**

அம்மையாரின் சமயப்பிரசங்க மரபால் கவரப்பெற்ற காரைநகர் சிவாலய மணி வாசகர் சபை இவருக்கு 1970இல் "சிவத் தமிழ்ச்செல்வி" என்னும் பட்டத்தை வழங் கித் தாமே பெருமையடைந்தனர். 1966 முதல் இறுதிக்காலம் வரை அன்னை பல் வேறிடங்களிலும் ஐயாயிரத்திற்கும் மேலான பிரசங்கங்கள் செய்தவர். ஐம்பதிற்கும் மேற் பட்டங்களைப் பெற்றவர். ஆனால் காரை நகரில் வழங்கப்பெற்ற "சிவத்தமிழ்ச்செல்வி" என்னும் பட்டம் அவரின் இயற்பெயரான தங்கம்மாவை இன்றுவரை தக்க வைத்தது அன்னை துர்க்கையின் ஆசீர்வாதமாகும்.

**மலேசியாவில்**

யாழ்மக்கள் கூடுதலாக வாழும் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் வாழ்வோர் அன்னை யின் பிரசங்கம் கேட்கும் ஆவலில் 1971, 1972, 1974 ஆண்டுகளில் பல தடவை அழைத்து சைவத்தமிழின்பத்தை அடைந்த னர். இதன் பேறாக அன்னைக்கு பெரு மதிப்புகளும், பட்டங்களும் விருதுகளும் வழங்கித் தமது நாட்டிற்குப் பெருமை சேர்த்த னர். இவ்வாறான இனமத உறவுப்பாலம் துர்க்காதேவி ஆலயம் மற்றும் மகளிர் இல் லப்பணிகளுக்காகவும் போதிய உதவிகளை அடைய வைத்தன.

**இலண்டன் சொற்பொழிவு**

யாழ்மண்ணின் மைந்தர்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் பிரசங்கத்தை இங்கு வரும் போது கேட்டும் வானொலி மற்றும் தொலைத் தொடர்பு மூலமும் பல தடவை கேட்டும் மகிழ்ந்த போதும் தமது இலண்டன் மண்ணிலும் அன்னையை அழைத்துத் தமக்குப் பெருமை தேட முன் வந்தனர். எமது தமிழ் உறவுகளின் வேண்டுதலின் பேரில் அன்னை 1987இல் இலண்டன் சென்று பலநாட்கள் தங்கி அனைவரதும் உள்ளங்களைக்கொள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இன்ப அன்பை நிலை நாட்டினார். தமது பிரசங்கத்திற்கென நிதியைக் கோராத பெருந்தன்மைக்காக யாவரும் ஒன்றிணைந்து அன்று முதல் இன்றுவரை யாவரும் வியக்கும் வண்ணம் ஆலயத் திருப்பணிக்கு மட்டுமன்றி மகளிர் இல்லம் மற்றும் பல்வேறு அறப்பணிகளுக்கும் உதவி வருகின்றனர்.

### சிவத்தமிழ்ச் செல்வியின் எழுத்தாக்கப்பணி

சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் தமது சிந்தனையில் குடிகொண்ட சக்தியான அன்னை துர்க்காதேவியின் பேரருளால் கடல் கடந்து செல்லும் நாடுகளில் அன்றாட நிகழ்வுகளை ஒலிப்பதிவு மூலமும் தினக்குறிப்பு மூலமும் குறித்துக் கொண்டார். அதன்பேறாகப் பல அருள்பொலியும் நூல்களை வெளியிட்டார். இவற்றுள் ஆன்மீக நூல்கள், பயணக் கட்டுரைகள், தாம் கற்ற செந்தமிழின் சிறப்பால் இதிகாசச் சிறப்பால் நளன் சரித்திரமான நளவெண்பா மற்றும் சைவப்பிள்ளைகள் பெண்களை சிந்தித்துக் கிரகிக்கும் நூல்களை இலகு தமிழில் விளங்கவைத்தார். இதனால் அன்னையின் பேச்சும் எழுத்தும் அதனோடிணைந்த வாழ்வும் பெற யாவரும் இவரை அணுகி நன்மையடைந்தனர். அன்னையின் "கந்தபுராண சொற்பொழிவுகள்" என்னும் நூல் 1977 இல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்று பெருமை பெற்றது. இந்த நூலும் வேறு சிலநூல்களும் மீள் பதிப்பு செய்யப்பட்டதால் இவரின் எழுத்துப் பணி நிலைநாட்டப் பெற்றதாகும்.

### சமயசமூக சேவைக்கேற்ற விருதுகள்

அன்னையின் சமய, சமூகப்பணிகளின் உயர்வால் 1982 இல் சமாதான நீதவான் பட்டம் கிடைத்தது. மேலும் இவரின் பணிச் சிறப்பால் யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கித்தாமே பெருமை சேர்த்தனர். இவரின் சேவையை நினைந்து யாழ் மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு அன்னையின் மறைவின் பின் (தேகாந்த நிலையில்) 2010 இல் யாழ் விருது வழங்கினர். இவரின் விருதை துர்க்காதேவி ஆலய அறங்காவலர்கள் பெற்றனர்.

### அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் ஆலயப்பணியில் பதவிகளின் சிறப்பு

தமது வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களை மாற்றுவதன் பேரில் 1961 இல் ஆதிபராசக்தி யாம் அன்னை துர்க்காதேவியைச் சரணடைந்தார். அன்பினால் என்புருகப் பாடினார். தமது உள்ளக் கமலத்தைத் தமது தாயாகிய சக்தியின் பாதக்கமலத்தில் சார்த்தினார். ஒரு பெண்ணின் கவலை பெண் தெய்வமான சக்திக்கே தெரியும். துர்க்காதேவியும் எதிர் காலத்தில் தமது ஆலயஞ் சிறக்க அறப்பணிகள் மலிய, சைவமும் தமிழும் மலர நாட்டில் யாவும் சிறப்புடன் துலங்க வேண்டுமென்ற நியதிக்கான உணர்வால் தங்கம்மாவைத் தமது (மீனாட்சியின்) நெடிய கண்ணின் ஓரத்தால் நோக்கினார். தங்கம்மா புத்துயிர் பெற்றார். தமது வாழ்வின் நேரிய சிந்தனையை அன்னை துர்க்கா தேவிக்கே அர்ப் பணித்தார்.

முற்தொடர்பாகவே சிவத்தமிழ்ச்செல்வியிடம் இனிய குரல்வளமும் சமயஅறிவும் கற்றகல்வியின் நுண்ணறிவும் குடிகொண்டிருந்தன. இதனால் பிரசங்கமழை பொழிந்து இம்மண்ணிலும் கடல் கடந்தும் சென்று ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பிரசங்கம் மூலம் செய்த பணியாம் நல்வித்து அன்பென்னும் உறவில் அறமென்னும் பணிக்கு இணைக் கரம் நீட்டியது. சிவத்தமிழ்ச்செல்வி அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கையின் சித்தப்படி அன்று முதல் ஆல யப்பணியின் பொருளாளராகி அருட் சேவை யாற்றினார். ஆலயப்பணி உயர்ந்தது. இக்காலத்தில் துர்க்காதேவியின் ஆலயத் திருப்பணி வளரும் பேறு பெற்றது. அன்னை தங்கம்மாவின் பணியை மெச்சிய அனை வரும் 1967இல் அறங்காவலர் சபையின் தலைவராக்கினர். துர்க்காதேவியின் பேரருள் சிவத்தமிழ்ச்செல்வி தமது சைவத் தமிழின் சிறப்பால் உயர்வாகப் பெருமதிப்பு களையும் தனதாக்கினார்.

ஆலயத்திருப்பணி வருடாவருடம் வளர்ந் தது. ஆலயத்தில் பாடும் பணிக்கு முன்னு ரிமை தந்து 1972 இல் திருமுறை மடம் அமைந்தது. 1977 ஆரம்பித்த தேர்த் திருப் பணி வளர்ந்து 1978இல் வெள்ளோட்டம் கண்டது. தேருக்கான அமைவிடம் நிறை வடைந்தது. 1979இல் இராசகோபுரம் அடிக் கல் நாட்டப்பட்டதுடன் வேதாகம விதிப்படி ஆலயத்திற்கமைவான பரிவார மூர்த்தி களுக்கான சந்நிதிகள் உருவானது. ஆலயத் திற்கான அசையாமணி மற்றும் எழுந்தருளி விக்கிரகங்கள் புதியதாக உருவாக்கி ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டன.

மூன்று வருடகாலம் இவ்வாலயத்தின் ஆகம விதிகளுக்கமைவான சகல திருப் பணிகளும் நிறைவடைந்தன. 1981இல் அடுத்த மகாகும்பாபிசேகம் நடைபெற்றது டன் ஆலயப்பொலிவும் அருட்சித்தியும் அன்னை சக்தியின் பேரருளால் நிறை வடைய பெண் என்னும் மாகசக்தியான சிவத்தமிழ்ச்செல்வி யாவற்றிற்கும் தூண்டு கருவியாக அமைந்தார்.

யாழ்மண்ணில் ஆலய வழிபாட்டில் ஊறிய எம்மினத்தவர் அற்புதங்கள் பொலிந்த ஆல யங்களில் ஆடவரின் வருகைக்கு மேலாக அரிவையர் கூட்டம் பல்கிப்பெருகியது. அன்னை துர்க்காவின் அருளாசியால் கவரப்பட்ட அடியார்கள் ஆலயத்தில் அர்ச்ச னையாகவும் நேர்த்தியாகவும், திருப்பணி நிதியாகவும் வாரி வழங்கினர். பக்திமய மான சமய விழாக்கள் சிறப்பித்தன. இதனால் ஆலய நிதிவளம் மிகுந்தது. துர்க்காதேவி யின் சித்தப்படி ஆலய வருமானத்தில் அறப் பணிகள் செய்ய முற்பட்ட தங்கம்மா யுத்த சூழலில் பெற்றறோரில்லாத அநாதைகளை நோக்கினார். இதன் பேறாக அறப்பணிக ளையும் நாடினார். யாழ் மண்ணில் ஆலய வருமானத்தில் முதன் முதல் அறப்பணிக்கு உதவி இன்றுவரை உயர்வான அறப் பணியை வளர்த்தவர் சிவத்தமிழ்ச்செல்வியே.

**அறப்பணியாக மகளிர் இல்லம் அமைந்தது**

துர்க்காதேவியின் திருப்பெரும் ஆலயத் தில் திக்கற்ற மகளிர் தங்கவென 1982 இல் இல்லமொன்றை நிறவி விழாவெடுத்த அன்றே ஒன்பது சிறுமிகள் அனுமதி பெற்ற னர். அன்னை தங்கம்மா இல்லறம் நாடாத பெண் ஆனாலும் தாயுள்ளம் படைத்த பெண் ணல்லவா. அன்று ஐந்து வயதான அநா தைச் சிறுமியை மடியில் வைத்து அரவ ணைத்தவர். சீராட்டிப் பாராட்டி வேண்டியன யாவையும் தந்தவர். சக்தியின் சிறுமிக ளைத் தூய சிந்தனையுடன் சைவப்பண் பையும் தமிழ் மரபையும் புகட்டினார். ஊண், உடை, உறையுள், நற்கல்வி யாவும் வழங் கினார்.

காலங்கள் செல்லவும் அனாதரவான சைவச்சிறுமிகளின் பெருக்கமும் நூற்றைத் தாண்டியது. மேலதிகமாக எம்மண்ணில் ஆதரிக்க எவருமின்றி வாழும் வயோதிபப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களையும் அரவணைத்தார். தேவைக்கேற்ற நவீன வசதிகள் கொண்ட பல கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. சக்தியின் வழிகாட்டலில் வெளிநாட்டு மக்கள், பொது நிறுவனங்களின் போதிய உதவி கிடைத்தன. குறையேதுமின்றி இப்பணிகள் யாவும் சிறப்புடன் இயங்கத் தொடங்கின. யாழ் மண்ணில் உயர்வடைந்த சைவத் தமிழ் மகளிரில்லப் பணி மையமாக அமைந்ததை யாவரும் உறுதிப்படுத்தினார்.

### துர்க்கை அம்மன் ஆலய ஆதரவற்ற சிறுமிகளின் சிறப்பு

1982இல் ஆரம்பித்த ஆதரவற்ற சைவத் தமிழ் சிறுமிகளுக்கான புனித இல்லம் நன்கு வளர்ந்தது. ஆதரவற்ற நிலையிலும் ஆழ்ந்த சமயப்பற்றும் நுண்ணறிவும் மிக்க சிறுமிகள் அன்னை துர்க்காதேவியைச் சரணடைந்ததும் அன்னை துர்க்காவின் அருள் சிவத்தமிழ்ச்செல்வி மூலம் சித்தி பெற்றது. சிறுமிகளுக்கான ஊண், உடை, இல்லிடம், சமயவழிபாடு, நற்கல்வி யாவும் கிடைத்தன. யாவரும் நற்சிந்தனையுடன் சைவ சமயாசாரத்துடன் தமிழ்மரபு பேணித் தமது கல்வியிலும் மேம்பட்டனர். மேலும் இல்லறப் பெண்களுக்கான இல்லக்கடமைகள் இதற்கமைவான தொழிற்பயிற்சிகள் யாவும் ஊட்டப்பட்டன.

இவர்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வியில் மேம்பாட்டுடன் பலர் உயர் கல்விக்கும் தேர்வாகினர். இதுவரை காலமும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிள்ளைகள் பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரியிற் கற்றுத் தேறிய வாய்ப்பையும் பெற்றனர். இவ்வாறு தேறியவர்களுள் பலர் பட்டச் சிறப்புடன் வேலை வாய்ப்பையும் பெற்றனர். இதுவரை இந்த மகளிர் இல்லத்திற் சேர்ந்த எண்பதிற்கும் மேலான பெண்கள் திருமணமாகி வெளியேறிச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அன்னை சிவத் தமிழ்ச் செல்வி ஊட்டி வளர்த்த தாய்சேய் உறவில் அப்பிள்ளைகள் தொடர்ந்தும் உறவை நினைவுகூருகின்றனர்.

இப்பிள்ளைகள் சைவப்பாரம்பரிய உடை நடை பாவனையில் ஆலய விழாக் காலங்களில் பண்ணிசை பாடியும் ஆலயப் பணிகள், மேலும் ஆலயக்காரியாலயப் பணி எனப் பற்பல பணிகளையும் செய்து மகிழ்வடைகின்றனர். இவ்வில்லத்தில் ஆரம்ப வயதுடைய (5 வயதிற்கு மேல்) பிள்ளைகள் தொடக்கம் உயர்கல்வி பயிலும் பெண்கள் உட்பட இன்று நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் தங்கி வாழ்கின்றனர். அனுசரிப்பாரின்றி அவதியுற்ற முதிய பெண்கள் பலரை அன்று முதல் அரவணைத்து வேண்டியன தந்து மனநிறைவுடன் வாழ வகை செய்யபட்டுள்ளது. இன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் அன்னை துர்க்கா தேவியை இடையறாது வழிபடுவதுடன் தம்மாலான ஆலயப்பணி சிறுமிகளுக்கான ஆதரவுப் பணியில் இயங்கி வருவது அன்னை சக்தியின் பேரருளே யாகும்.

### அறப்பணிக்கான சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்ததின அறக்கட்டளை

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தமது சமயப்பணிக்கான பிரசங்கம், கடல்கடந்த சமயத்தூது போன்ற காலங்களில் தமக்கென ஏதும் கோராத பண்புடையவர். இதனால் இவரின் போக்கை அறப்பணி மூலம் துலக்கவெனத் தனி மனிதர்கள் மட்டுமன்றி உள்ளூர் வெளிநாட்டு நிறுவனங்கள் வாரி வழங்கிய நிதியாவும் ஆலயப்பணி, சமயசமூகப்பணி, மற்றும் இல்லச் சிறுமிகளின் பராமரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றிற்கும் மேலான நிதியை நிலை யான வைப்புநிதியில் இணைத்தனர். இவ் வாலயத்தில் அறங்காவலர்களின் தீர்மானப் படி இதற்கென ஒரு சபை நிறுவப்பட்டு அன்னை தங்கம்மாவின் பிறந்ததின (பிரதி வருடமும் தை ஏழாந்திகதி) விழாவன்று வட்டியை எடுக்கக்கூடியதாக அறக்கட்டளை ஆரம்பித்தனர். இச்சபையின் பெருமுயற்சி யால் கிடைத்த பல இலட்ச ரூபாவும் அறக்கட் டளையிற் சேர்க்கப்பட்டது.

மேலும் எழுத்தாற்றல் மிக்க அன்னை தமது பிறந்ததின வெளியீடாக ஒவ்வொரு நூலை வெளியிட்டு இந்த நிதிக்கு அணி செய் தார். வருடாவருடம் யாழ் மருத்துவமனை, கல்வி வசதி குறைந்த மாணவர் மற்றும் பொதுப்பணிகள் போன்ற பலவற்றிற்கும் 1990 முதல் இவ்வறக் கட்டளை மூலம் நிதி உதவி வழங்கப்படுவது சிறப்பாகும். பல பெரி யார்கள் முற்காலத்தில் சாதனை படைத்த வர்கள் பிற்கால ஓய்வு வேளையில் பெரு மதிப்புடன் வாழ்வதை உறுதிப்படுத்தி வருடாவருடம் சிவத்தமிழ் விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்படுகின்றனர். இவர்களுள் எழுத்தாளர், கலைஞர்கள், மருத்துவர், நல்லாசிரியர்கள், சைவப்பொதுப்பணியாளர் கள் உட்பட ஐந்துபேர் வருடாவருடம் பெரு மதிப்பளிக்கப்படுகின்றனர்.

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி ஆரம்ப காலத்தில் தமது பிரியமான பன்னிரு திரு முறைகளை வெளியிடும் சிந்தனையில் ஆரம்பித்து மூன்று வருடம் தொடர்ந்து வெளி யிட்டு வைத்தார். அன்னை சிவப்பேறு பெற்றதால் அப்பணியை அவரின் பெரு நம்பிக்கைக்குரிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் தொடர்கிறார்.

**அன்னையின் இறுதிக்காலம்**

இப்புவியில் சைவமும் தமிழும் அறப் பணியும் மலர வைக்கவென்றே அவதரித்த அன்னை சிவத்தமிழ்ச்செல்வி 83 வருடங் கள் தமது சகல பணிகளையும் சிறப்பித்தார். ஏற்கெனவே இறையருட் சித்தப்படி தமது பணிகளைத் தொடரவென்றே திருமுரு கனை அரவணைத்தார். பெற்ற பிள்ளை யாக, குருவாக அமைந்து வேண்டியதெல் லாம் போதித்து மேலோங்கச் செய்தார். அன் னையின் எண்ணக்கருவைத் திருமுருகன் நன்கு உணர்ந்தவர்.

15.06.2008 அன்று அன்னை அமரரா னார். திருமுருகன் அன்னைக்குச் செய்ய வேண்டியன யாவற்றையுஞ் செய்து ஆலய வளாகத்தில் திருவுருவச் சிலை நாட்டியது டன் நினைவு மண்டபத்தையும் நிறுவினார். ஆலயத்தின் அறங்காவலர் பணியேற்று பல அபிவிருத்திகளை மேற்கொண்டார். அன் னையின் பிறந்தநாள் அறநிதிய மூலம் ஏற் கெனவே அன்னையின் பணிகளைச் சிறப் பிக்கிறார்.

இன்று தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் சிறக்கவும் சகல சமய, சமூக, கல்வி அறப்பணிகள் யாவும் பிரகாசிக்கவும் அன்னை துர்க்காதேவி அருள் பாலிக்கிறார். இச்சகல சிறப்புகளுக்கும் சிவத்தமிழ்ச் செல்வியின் இதயசுத்தியுடன் கூடிய ஆசீர் வாதமும் இறையருட் சக்தியின் திருவிளை யாடலுமே என நாமும் போற்றிப் பணி வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக விரதமும் அனுட்டான நியமங்களும்

க.ஜெயானந்தன்
யாழ்ப்பாண மாநகர சபை

எமக்கு எல்லா நலன்களையும் எப் பொழுதும் வழங்கிக் கொண்டிருக்கும் இறைவனை மறவாது நினைத்து வாழ்த்தி வணங்கி இருத்தலே பகுத்தறிவு படைத்த மனித இனத்திற்கு இன்றியமையாதது. எனினும் உலகியல் சூழல்களினால் இறை வனை நினைத்து வழிபட முடியாத நிலை யில் குறிப்பிடப்பட்ட சில நாட்களில் அக் கடப்பாட்டில் நிற்கும் நாட்களே விரதநாட்க ளாகும். விரதம் – தவம் – நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும்.

சைவம் வளர்த்த நாவலர் பெருமான் மனம் பொறி வழிபோகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கி யேனும் மனம் வாக்குகாயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய் யன்போடு வழிபடுதலே விரதமாகுமென குறிப்பிட்டுள்ளார். இதுவே ஆன்ம ஈடேற்றத்திற்கான வழியாகும். விரதம் அனுட்டிப்பதனால் மனம், புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடைந்து ஞானம் – நல்லறிவு ஏற்படும்.

விரதங்கள் அனுட்டிப்பதனால் மனிதனு டைய வாழ்வை மேன்மையுறச் செய்து நல் வழியில் இட்டுச் செல்கின்றது. விரதகாலங் களில் தாம்பூலம் தரித்தல், புகைப்பிடித்தல், பகலில் நித்திரைசெய்தல், சிற்றின்பம் அனுபவித்தல் முதலியன செய்தால் பிரா யச்சித்தமற்ற பாவத்திற்கு உள்ளாக்கப்படு வார்கள்.

**தைபூசம்**

தைமாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத் தினத்தில் பலர் பாற் குடம், காவடி முதலியன எடுத்து முருகப் பெருமானை வழிபாடு செய்வார்கள்.

**கார்த்திகை விரதம்**

கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கி மாதந் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுட் டிக்கும் விரதம் கார்த்திகை விரதமாகும். கிருத்திகை எனவும் இது அழைக்கப்படும்.

இடையேழு வள்ளல்களாகிய அந்தி மான் சந்திமான் ஆகியோர் கார்த்திகை விரதம் அனுட்டித்து சித்தி அடைந்தாக வர லாறுகள் கூறுகின்றன. கார்த்திகை நட்சத்தி ரத்திற்கு முதல் நாளாகிய பரணி நட்சத்தி ரத்தில் ஆசாரமாக இருந்து ஒரு பொழுது உணவருந்தி மறுநாள் கார்த்திகை விரத நாளில் முருகனை முறைப்படி பூசை செய்து வழிபாடு செய்து உபவாசமிருந்து அடுத்த நாள் காலையில் உணவருந்துதல் உத்தம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். கார்த்திகை விரதநாள் இரவு பழம், பால் உட்கொள்ளலாம். கார்த்திகை விரதம் பன்னிரெண்டு வருடங்கள் அனுட்டித்தல் சிறப்பானதாக அமையும்.

### திருக்கார்த்திகை

கார்த்திகை மாதத்தில் வரும் கார்த் திகை நட்சத்திரத்தில் கூடிய பௌர்ணமி முருகப் பெருமானுக்கு விளக்கீடு செய்து வழிபடுவார்கள்.

### கந்தசட்டி விரதம்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல், சட்டி ஈறாகிய ஆறு நாட்க ளும் அனுட்டிக்கும் விரதமாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப் பெரு மானை வழிபட்டு சிறிதளவு நீர் மட்டும் அருந்தி ஆறு நாட்களும் உபவாசம் இருந்து ஏழாம் நாள் காலையில் அடியார் களுடன் உணவருந்துதல் இவ்விரத நியமமாகும். இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்கள் ஒரு பொழுது உண்டு கந்தசட்டி தினத்தன்று உப வாசஞ் செய்து விரதமனுட்டிக்கலாம். இவ் விரதம் தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் அனுட்டித்தல் வேண்டும்.

பிரதமையில் சிவபெருமானது நெற்றிக் கண்ணில் இருந்து தெறித்த தீப்பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக உமாதேவியார் அதனை எடுத்து அணைக்க ஆறுதிருமுகமும் பன்னிரு திருகையையு முடைய உருவாய் எழுந்தருளியநாள் கந்த சட்டி நாளாகும். சூரபத்மனை முருகப்பெரு மான் சங்காரம் செய்தநாளும் இதுவென கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளது. தேவர் கள் கந்தசட்டி விரதத்தினை அனுட்டித்து பயன்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

### வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக் கிழமை என்பது பொருள். வெள்ளிக் கிழமை விரதமாவது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தொடங்கி வெள்ளிக் கிழமைதோறும் சுப்பிரமணியக் கடவுளை வேண்டி அனுட்டிக்கும் விரத மாகும். இவ்விரதநாளில் உபவாசம் இருத் தல் உத்தமமாகும். இயலாதவர்கள் விரத நாள் இரவில் பால், பழம் உட்கொள்ளலாம். அல்லது ஒரு பொழுது உணவுண்டு விரதம் அனுட்டிக்கலாம். இவ்விரதம் மூன்றாண்டு அனுட்டித்தல் வேண்டும்.

### வைகாசி விசாகம்

அசுரர்களை அழித்து ஒழித்து தேவர்க ளைக் காப்பாற்றி அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைநாட்டியது மட்டுமன்றி முழு உலகமும் உயர்வடையச் செய்யும் பொருட்டு சரவணப்பொய்கையில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்ததின மாகையால் இத்தினம் முருக வழிபாட்டு தினமாக அனுட்டிக்கப்படுகின்றது.

(நன்றி : இந்துமக்களின் கையேடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள்

ந.சண்முகராசா
மார்க்கண்டு சுவாமிகள் சபை,
பிரான்பற்று, பண்டத்தரிப்பு

ஈழநாடு செய்த தவப்பயனாக அவதரித்த சித்தர் பரம்பரையில் கடையிற் சுவாமிகளுக்கு அடுத்தபடியாக கருதப்படுபவர் செல்லப்பா சுவாமிகள். இவரைத் தேரடிச் சுவாமிகள் என்றும் அழைப்பர். செல்லப்பா சுவாமிகளின் சீடராக யோகர் சுவாமிகள் விளங்கினார். இவரது முதன்மைச் சீடராக மார்க்கண்டு சுவாமிகள் இருந்தார்.

மார்க்கண்டு சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் பிரான்பற்று எனும் ஊரில் விளம்பி வருடம் தைத் திங்கள் 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29.01.1899) பூர நட்சத்திரத்தில் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் சரவணமுத்து. தாயார் பெயர் சின்னக்குட்டி அம்மையார். மார்க்கண்டு சுவாமிகளுக்கு மூன்று பெண் சகோதரிகள் இருந்தனர். சுவாமிகள் ஆரம்பக் கல்வியைப் பிரான்பற்று சிறுவர் பாடசாலையிலும் வடலியடைப்பு சைவ வித்தியாலயத்திலும் கற்றுப் பின்னர் சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக் கல்லூரியில் கற்று கேம்பிறிட்ஜ் சீனியர் தேர்வில் சித்தியடைந்ததுடன் அவரது பாடசாலைப் படிப்பு முற்றுப் பெற்றது.

மார்க்கண்டு சுவாமிகள் தனது ஊரில் அமைந்துள்ள முருகமூர்த்தி ஆலயத்தில் சிவத்தொண்டுகள் செய்து, திருமுறைப் பாடல்களைப் பாடி பிரார்த்தனைகளில் ஈடுபட்டார். இக் காலப் பகுதியில் சுவாமிகளுக்கு தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞர் தொழில் கிடைத்தது. சுவாமிகள் நேரத்திற்கு அலுவலகத்திற்குச் செல்லுதல், அன்றாட வேலைகளை அன்றன்றே செய்தல், செவ்வனே செய்தல் ஆகிய தொழில் சீர்த்துவத்தைப் பின்பற்றலானார். சத்தியம், சாந்தம், இன்முகம், பரோபகாரம் எனும் பண்புகளால் ஒரு நல்லவராக மற்றையோரால் மதிக்கப்பட்டார். சுவாமி பணத்தைப் பெரிதாக மதிக்கமாட்டார். உத்தியோக உயர்வுகளையும் பெரிதாக மதியாது பிரமச்சாரிய விரதத்தின் பெருமை பெரிது எனும் திடசித்தம் கொண்டவர். விடுமுறை நாட்களில் தனது சொந்த ஊரான பிரான்பற்றுக்கு வருகை தந்து பெற்றோரைப் பேணினார். சகோதரிகளின் திருமணச் சடங்கினை நிறைவேற்றினார். கோயில் திருப்பணி, மற்றும் பாடசாலை, வாசிகசாலை ஆகியவற்றின் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார். மறுபக்கத்தில் உத்தியோகம் உட்பட சகலவற்றையும் இறைவனை அடைவதற்காக உபயோகிக்கும் உறுதியையும் உடையவரானார். காலையிலும் மாலையிலும் தியானம் செய்தல் வேண்டும் என்ற ஒழுங்கினைத் தவறாது மேற்கொண்டார். இக் காலப்பகுதியில்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர் சுவாமிகளின் தொடர்பு மார்க் கண்டு சுவாமிகளுக்குக் கிடைத்தது. தெய்வ சித்தம் எவ்வித சிவத்தொண்டுக்காக அவரை தோற்றுவித்ததோ அத்தொண் டினை நிறைவு செய்வதற்குரிய பயிற்சிகள் அவருக்குக் கிடைத்தன. குருநாதரான யோகர் சுவாமிகள் தனது சீடரான மார்க் கண்டு சுவாமிகளுக்கு ஆன்மீகப் பயணம் தொடர்பானவற்றை தாயினும் இனிய பரிவுடன் சொல்லாலும் செயலாலும் இடை இடையே திருமுகங்கள் மூலமாகவும் உணர்த்திய பின்னர் அவரை சுயமாக இயங்க விட்டார்.

மார்க்கண்டு சுவாமிகள் தியத்தலாவை யில் இருந்து இடமாற்றம் பெற்று கொழும்பு மாநகரில் சிறிது காலம் தொழில் புரிந்தார். இக்காலப் பகுதியில் கல்விமான்கள் நடத்திய சைவ சித்தாந்த வகுப்புக்களுக்கும் சென்று வந்தார். சுவாமிகள் 50ஆவது வயதில் தனது உத்தியோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கொழும்பில் இருந்து நேரே கொழும்புத் துறையில் யோகர் சுவாமிகள் குடி கொண்டிருந்த குடிசையை வந்தடைந் தார். குருநாதரான யோகர் சுவாமிகள் அவரை ஏற்று வண்ணார்பண்ணையில் ஒரு வீட்டில் தங்க வைத்தார். பின்னர் கைதடி ஊரில் ஆசிரியர் விசுவலிங்கம் வீட்டில் அமைந்திருந்த குடிசையில் 29.12.1950 ஆம் ஆண்டு மார்க்கண்டு சுவாமிகளைத் தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் அவ் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து உயர் ஞான சாதனையில் ஈடுபட்டார். சில வேளைகளில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவத்தொண்டன் நிலையத்திற்கும் சென்று வருவார்.

யோகர் சுவாமிகள் சோல்பரிப் பிரபு வின் மகன் இராம்ஸ போதத்தை (சாந்த சுவாமிகள்) சிலகாலம் மார்க்கண்டு சுவாமி களுடன் தங்க வைத்து இராம்ஸ போதத்தி ற்கு அருளுரை வழங்குமாறு கூறினார். சோல்பரி பிரபுவின் மகனும் மார்க்கண்டு சுவாமிகளிடம் ஒரு மகனைப் போல அன்பு செலுத்தி எதுவித வசதிகளையும் எதிர் பாராது ஒரு தொண்ட னாகவும் தோழனா கவும் இருந்து சாதனையில் ஈடுபட்டார். அமெரிக்கத் துறவி சுப்பிரமுனிய சுவாமி, ஜேர்மன் சுவாமி, அவுஸ்திரேலிய பன்றிக் குட்டிச் சுவாமிகள் உட்பட பல சமயத்தைச் சேர்ந்தவர்கள் மார்க்கண்டு சுவாமிகளிடம் அருளாசி பெற்று வந்தார்கள். சில பௌத்த துறவிகள் கூட மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க அடிக்கடி வருவார்கள்.

மார்க்கண்டு சுவாமிகள் தமது அந்திம காலத்தை உணர்ந்து தம்முடன் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் இராம்ஸ போதத்திடம் உமது உறவினரைப் பார்க்க இங்கிலாந்து செல்லுமாறு கூறினார். அதன்படி அவரும் இங்கிலாந்து சென்றார். மார்க்கண்டு சுவாமிகள் தனது இறுதி நாட்களில் குளிப்பு, முழுக்கு முதலியவற் றைக் கைவிட்டதோடு உணவையும் சுருக் கிக் கொண்டார். சுவாமிகள் தளர்ச்சி அடைந்து இருந்த போது வைத்திய கலாநிதி யோகு பசுபதி பார்வையிட வந்த போது, தமக்கு எவ்வித வருத்தமும் இல்லை எனக் கூறி பார்வையிட அனு மதிக்கவில்லை. மார்க்கண்டு சுவாமிகள் இரத்தாசி வருடம் வைகாசி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (29.05.1984) நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் சிவன் திருவடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கண்டு சுவாமிகள் பிறந்த ஊரான பிரான்பற்றில் அவரது உடன்பிறந்த சகோதரியின் பேரனால் மார்க்கண்டு சுவாமிகள் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. சபையால் மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதுடன் மார்க்கண்டு சுவாமிகள் பாலர் பாடசாலையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இலவசமாக மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலையும் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

# யாழ் விருது பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் (சைவசமய விவகாரக்குழுவின் ஆரம்பகர்த்தா) | 2006 |
| 2. | உயர்திரு வே.பொ.பாலசிங்கம் (முன்னாள் ஆணையாளர், யா.மா.ச) | 2007 |
| 3. | வைத்தியநிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி (யாழ் போதனா வைத்தியசாலை) | 2008 |
| 4. | உயர்திரு க.கணேஸ் (முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்) | 2009 |
| 5. | சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தேகாந்தநிலை) | 2010 |
| 6. | வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமார் (புற்றுநோயியல் வைத்தியநிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) | 2011 |
| 7. | நயினாதீவு நாகபூஷணி அம்மன் அமுதசுரபி அன்னதானசபை | 2012 |
| 8. | அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் (அமைப்பாளர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்) | 2013 |
| 9. | வித்யாசாகரம் சிவஸ்ரீ. சபா வாசுதேவக்குருக்கள் (தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்) | 2014 |
| 10. | பேராசிரியர் க.தேவராஜா | 2015 |
| 11. | உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் (ஓய்வுநிலை அரச அதிபர்) | 2016 |
| 12. | கலாநிதி. ஆறுதிருமுருகன் (தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) | 2017 |
| 13. | சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகள் (சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு) | 2018 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்

**ந.சதாசிவஐயர்**
ஓய்வுபெற்ற மேலதிய பதிவாளர் நாயகம்

எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் ஆவணப்படுத்தல் என்பது அது பற்றி எப்போதும் எக்காலத்திலும் சரியாக அறிந்து கொள்ளக் கூடியதாக அமையும் பதிவாகும். அவை அவ்வப்போது இற்றைப்படுத்தல் மேலும் சிறப்பானதாக அமையும். தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் வாழ்விடங்கள் பாரம்பரிய கட்டிடங்கள் ஆலயங்கள் எல்லாமே அழிவையும் ஆவண இழப்பையும் சந்தித்துள்ளன. இந்த இழப்பின் இடைவெளியை ஓரளவுக்காகவாவது இல்லாமற் செய்யவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

சைவசமயிகளாகிய எமது கலை கலாசாரம் வரலாறு ஊர்வழக்கம் என்பன பெரிதும் பின்னிப் பிணைந்திருப்பது அங்கு அமைந்த ஆலயத்தினை ஒட்டியதாகவே அமைகிறது. ஆலயத்தின் தோற்றம் வரலாறு வழிபாட்டுமுறைக்கமையவே வாழ்க்கைமுறையும் அமைந்தது. காலத்தால் அழியாது வழிவழியாக பாதுகாக்கப்பட்ட வழமைகள் யாவும் ஆவணங்கள் அழிந்தமையால் கேள்விக்குரியதாகவும் யார்சொல்வது சரி என்ற மயக்கநிலையை ஏற்படுத்தவனவாகவும் அமைந்தது நமது துரதிர்ஷ்டமே.

இந்த மயக்க நிலையில் இருந்து நாம் விடுபடவேண்டுமானால் மீண்டும் ஆவணப்படுத்தல் அவசியமாகிறது. அதனை நாம் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கும் முதியோர்களின் அறிவு ஆற்றல் அனுபவ உதவி பெற்று பதிவு செய்யாமல் விடுவோமானால். எம்மண்ணிற்கான ஆவணப் பதிவுகள் மீட்கமுடியாதவையாகிவிடும்.

ஆலயங்களை மையமாகக் கொண்டு அவற்றின் வரலாறு, அமைவிடம், ஆராதனை, வழிபாட்டு மரபு, கலாசார மரபு என்பன முடிந்த அளவு ஆதாரங்களுடன் பதிவு செய்யப்படல் வேண்டும். அவற்றுடன் தொடர்புபட்டு ஆலயச்சூழல், கிராமம் என பதிவு விரிவடையும்போது ஒரு பூரணத்துவமான வரலாற்றுப்பதிவை உருவாக்க முடியும்.

இது சுலபமானதல்ல. எனினும் படிப்படியான முயற்சிகள் நல்ல பதிவுகளுக்கு வழி வகுக்கும். ஆலய கும்பாபிஷேக மலர்களில் ஆலயம் தொடர்பான வரலாற்று விடயங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். கிடைக்கக்கூடிய ஆவணங்கள் அப்படியே பிரதிமை செய்து பதிவு செய்வது பெறுமதி மிக்கதாகும். ஆலய காணிகளின் உறுதிகள் படங்கள் என்பனவும் உள்ளடக்கப்படல் எதிர்கால ஆவணத்தேவைக்கும் மற்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துமீறாதிருக்கவும் உதவும். ஆலய வழிபடுனரில் வயதானவர்களின் வாய் மொழித் தகவல்கள் பதிவு செய்து வைத்த லும் ஆய்வுகளுக்கு உதவும் பதிவுகளாகும்.

தற்போது கிராமந்தோறும் பல்கலை மாணவர் தமது இறுதியாண்டு சமர்ப் பணத்துக்காக தமது கிராம ஆலயங்கள் அதைசூழ உள்ள புராதன சின்னங்களை ஆராய்ந்து கட்டுரை சமர்ப்பிப்பதோடு நின்றுவிடாது. சம்பந்தப்பட்ட ஆலயத்துடன் தொடர்புகொண்டு அதனை புத்தகமாக வெளியிடலும் வேண்டுமானதாகும். ஆர்வ முள்ள ஓவ்வொருவரும் முடிந்த அளவு தமது பேரனார் பெற்றார் வயதான அயல வர் உறவினரிடம் அவர்களின் அனுபவங் களை, அவ்வூர் ஆலயங்கள் பற்றிய விபரங் களைக் கேட்டு எழுதிவைத்து அவ்வூரில் வெளியிடப்படுகின்ற விழா மலர்களில் பதிவு செய்யலாம். முக்கியமாக கல் வெட்டுக்களில் (நினைவு மலர்) வெறுமனே வாழ்க்கை வரலாற்றுடன் நின்றுவிடாது அவர் சம்பந்தப்பட்டது மன்றி அவர் தெரி வித்த சமய சமூக விடயங்களை விரிவாக எழுதிப் பதிவு செய்தல் வழிவழியாக வரும் சில விடயங்களை ஆய்வுசெய்வோருக்கு உதவும்.

ஆலயங்கள் தொடர்பில் ஆலய அமை விடம் காணி உறுதி வரலாறு விழாக்கள் வரலாற்றுச்சான்றாக இருக்கும் சிற்பம் கட்டிடப்பகுதி விக்கிரகம் வாகனங்கள் பொருட்கள் என்பன படத்துடன் குறிப்புக்க ளாக கும்பாபிஷேக மலர்களில் பதிவிடப் படவேண்டும். தற்போதய மலர்களில் பொதுவாக கட்டுரைகளும் வாழ்த்துக்களும் நிகழ்காலப் பதிவுகளுமே பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. கும்பாபிஷேக மலர்களில் கட்டுரைகள் தவிர்க்கப்படலாம் என்பது எனது அபிப்பிராயம். அந்தப் பக்கங்களில் ஆலயம் அமைந்த கிராமம், அயற் கிராமம், அருகில் சுற்றியிருக்கும் காவற் தெய்வங்களின் படங்கள் விபரங் கள் வரலாற்றுச் சின்னங்கள் அவைபற்றிய தகவல்களில் இருந்து மறைந்துபோன விட யங்கள் அவற்றின் கிடைக்கக்கூடிய பழைய படங்கள் என பல விடயங்கள் பதிவிடப் படல் மிகப் பொருத்தமாக அமையும். தமது அனுபவம் பற்றி கட்டுரை எழுத வல்லமை யில்லாத வயதானவர்களின்பேட்டி மிகப் பிரயோசனமானது. அவ்வூரில் வாழ்ந்த புரோகிதம் செய்த ஆலயத்தில் கடமை யாற்றிய சிவாச்சார்யார்கள் பற்றிய கட்டுரை ஆலயத்துடன் தொடர்புடைய சிவாசார் யார்கள் பற்றிய விபரங்கள் சாதகாச்சார் யார், உதவி அர்ச் சகராக மற்றும் தொண்டர் களாக அவ்வாலயத்தில் பலகாலம் பணி யாற்றியவர்களின் பண்பு சாத்துப்படி மேள வாத்தியம் போன்றவற்றில் குறிப்பிடத் தக்கவர்கள் பற்றி பதிவு செய்வதற்கு வசதி யானவை கும்பாபிஷேக மலர்களேயாகும். இதனால் கலை கலாசார தொடர்பை அறியக்கூடியதாக இருக்கும்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு வருடத் துக்கொருமுறை நடைபெறுவதால் தகவல் களை இற்றைப்படுத்துவதற்கு அது நல்ல வாய்ப்பாக அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018இல் யாழ் விருது பெறும் சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகள்

**பு.ஆறுமுகதாசன்**
செயலாளர், சைவ சமய விவகாரக் குழு.

சமய, சமூக, மருத்துவப் பணிகள் மற்றும் அறப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மக்களுக்குத் தொண்டாற்றி வருபவர்களில் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது யாழ். விருதை வழங்கிக் கௌரவிப்பதென்ற சைவசமய விவகாரக் குழுவினது உயரிய தீர்மானத்தின் அடிப்படையில்; அன்னதானக் கந்தனின் அடியவராகிய சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகளுக்கு 2018ஆம் ஆண்டிற்கான யாழ் விருதினை வழங்கு வது என சைவசமய விவகாரக் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

இஃது சாலவும் பொருத்தமானதாகவும், இலை மறை காயாக பல்வேறு சமூகப் பணிகளை எவ்வித பிரதிபலனையும் எதிர் பாராமல் மிக எளிமையாகவும், அமைதியாகவும் முன்னெடுத்துச் செல்லும் ஒப்பற்ற பணிக்கு ஏற்றதொரு தெரிவாக அமைந்து இருப்பதையும் எண்ணி சைவ சமய விவகாரக்குழு அகமிக மகிழ்கின்றது.

சந்நிதியானை தரிசிப்பதற்கு வருகை தருவோருக்கு அன்னதானம் வழங்கும் நோக்குடன் 1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் 30 ஆண்டு காலத்திற்குள் குறித்த நோக்கத்திற்கு அப்பால் சென்று மக்கள் நலன்சார்ந்த பல்வேறுபட்ட அறப்பணிகளை தளர்வின்றி முன்னெடுத்து வருவது அதனை தற்போது நிர்வகிக்கும் மோகனதாஸ் சுவாமிகளின் பக்திக்கும் ஆளுமைக்கும் சந்நிதியானின் திருவருள் துணைநிற்பது துலாம்பரமாகத் தெரிகின்றது.

பசித்து வந்தவர்க்கு புசிப்பதற்கு உணவு வழங்குவதையே பிரதான நோக்காகக் கொண்டு இயங்கிய ஆச்சிரமத்தில் காலத் தின் தேவையறிந்து ஆன்மீகப் பணிக்காக "சந்நிதியான் சைவ கலை பண்பாட்டுப் பேரவை" என்னும் பெயரிலான அமை ப்பை உருவாக்கி "ஞானச்சுடர்" என்னும் மாதாந்த சஞ்சிகை வெளிவரலாயிற்று.

ஆச்சிரமத்தில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் சமயம் சார்ந்த பல நிகழ்ச்சி கள் நடாத்தப்பெற்று வருகின்றது. சொற் பொழிவு, கூட்டுப்பிரார்த்தனை, வில்லுப் பாட்டு, பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், அறிஞர்களின் சொற்பொழிவு கள், அருளுரைகள், ஆன்மீகக் கருத்துரை கள் போன்றன இளைய தலைமுறையினரி டையே ஆன்மீக சிந்தனையை மேலோங் கச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

கல்விச் சேவையைப் பொறுத்தவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் முன்பள்ளிகள், அறநெறிப் பாடசாலைகள் போன்றன சிறப்பாக இயங்குவதற்குத் தேவையான நிதி வசதிகளையும், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கல்விசார் உபகரணங்களும் வழங்கப்படுவதோடு, தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படுவது சுவாமிகளின் பெருங் கருணையினாலாகும்.

ஆலயச் சூழலில் வதியும் நோயுற்ற அடியார்களுக்கு தேவையான பரிசோதனைகளை செய்வித்தல், தேவையான மருந்துப் பொருட்களை இலவசமாக வழங்கி வருவதுடன் கண்பார்வை அற்றவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்கி உயிர்காக்கும் பணியினை சந்நிதியானின் ஆசியுடன் சுவாமிகள் மேற்கொண்டு வருவது விதந்து போற்றுவதற்குரியது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இயற்கை அனர்த்தத்தினால் மீரியப் பெத்தையில் இடம்பெற்ற மண்சரிவினால் பலர் உயிரிழக்கவும், வீடு வாசல்கள் அழிவடையவும் நேரிட்டமை துரதிஷ்டமானதாகும். யாழ்.குடாநாடு, வடமாகாணம் என்ற நிலையைக் கடந்து மலைநாட்டில் ஏற்பட்ட மேற்படி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி அவர்களது மனங்களை பிரார்த்தனை மூலமாக சாந்தப்படுத்தி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியதோடு மலைநாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று ஆன்மீகப் பணிகளை முன்னெடுத்து வருவது சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிப் பாதையில் ஓர் மைல்கல்லாகும்.

பன்முக சமூகசேவைகளையும், அறப் பணிகளையும் முன்னெடுத்து ஆன்மீக விழுமியங்களைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினர் ஒழுக்க சீலராக வளர்ந்து கந்தபுராண கலாசாரம் இம்மண்ணில் மீளவும் உருவாகுவதற்கு சந்நிதியான் ஆச்சிரமமும் மோகன் சுவாமிகளும் ஆற்றி வரும் பணிகள் சிறந்தோங்க வேண்டுமென நல்லைக் கந்தனின் தாள் பணிந்து இறைஞ்சுகின்றேன்.



**நல்லைக்குமரன் வெள்ளிவிழா மலர் (2017) வெளியீட்டிற்கு முன்பாக நல்லூர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக மலர் எடுத்து வரப்படும் காட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் மலர் - 2018

## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங்கனிந்த நன்றிகள்

2018ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" இருபத்தி ஆறாவது மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய சமயத் தலைவர்களுக்கும் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும்

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் இறைஞ்சுகின்றோம்.

21.08.2018

சைவசமய விவகாரக்குழு
யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக்குழு உறுப்பினர்கள் - 2018



நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்) – திரு.க.கேதீஸ்வரன், திரு.க.சிறிகாந்தன், திரு.சோ.கிணைசநாதன், செல்வி.பொ.புஸ்பலதா, திருமதி.திலக்சி,
திரு.செ.பன்னீர்ச்செல்வன், திரு.கு.விஜயகுமார்

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) – திரு.க.ஜெயானந்தன், திரு.பு.ஆறுமுகதாசன் (செயலாளர்), திரு.இ.தஜெயசீலன் (தலைவர்)
கௌரவ திரு.இம்மானுவல் ஆனல்ட் (மேயர்), திரு.அ.சீராளன், திரு.க.சற்குணமூர்த்தி, திரு.த.விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்), திருமதி.க.சதாசிவமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்



## விளம்பரங்கள் 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்ததி பார்த்து அம்மி மிதித்து நடைபெறுவது
இந்துத் திருமணங்கள்

கர்த்தர் ஆசியுடன் கரம் பிடிப்பது
கத்தோலிக்க திருமணங்கள்

அனைத்தையும் அரவணைத்து இணைத்து வைப்பது

# லக்ஸ் கார்டன் *Lux Garden*

யாழ் மண்ணின்
நவீன யுகம்

மண்டபங்களின்
பிரமாண்டம்

பல்சுவைகளின்
பரவசம்

**திருமணங்கள் பூப்புனித நீராட்டு விழாக்கள்
பிறந்தநாள் கொண்டட்டாங்கள்
அனைத்தும் அட்டகாசமான
ஒரே மண்டபம்**

மண்டபத்துடன்
கூடிய அனைத்துவகை
அறுசுவை உணவுகளுக்கும்
யாழ்ப்பாணத்தின்
புதிய வரவு
லக்ஸ் கார்டன் Lux Garden

ஐரோப்பிய தொழில்நுட்பத்தில் அமைந்து இலங்கைப் பிரமுகர்களின்
பாராட்டை பெற்ற **Hotel L ux E toiles**

நிறுவனத்தின்
மற்றொரு பிரமாண்டம் இது
அனைத்து விபரங்களுக்கும்
மண்டப முன் பதிவுகளுக்கும்

32 chetty St-lane/
Nallur Jaffna
0231 222 3966
luxgarden32@gmail.com





முருகா முருகா என்று முருகன் திருத்தலம் வந்து
நாம் செய் கருமமெல்லாம் நலம் பெற வேண்டுகின்றேன்

பெயருக்கேற்ற ஸ்தாபனம் ! யாழ்.நகரில் தேடித்தேடி நாடுவது

# சீமாட்டி
## புடவையகம்





Wholesale & Retail
Dealers
in Textiles
Specialist in
Wedding Sarees

மங்கையர் நாடி ஓடிவரும்
பெருமை மிக்க புடவை ஸ்தாபனம்

தரமான சுபமுகூர்த்தப் பட்டு புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்

**122. மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் 0212228564**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A World of Icy Delights

Rio®
Ice Cream

RIO ICE CREAM(PVT) LTD.
#53/1. Station Avenue, Wellawatte, Colombo - 06 | 0112058051
#448A, Point Pedro Road, Nallur, Jaffna. | 0212227224
#120, Sea Street, Negombo. | 0312225100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளைமணல் பரப்பினிலே நடனமாடும் அடியார்கள் மத்தியிலே
அலங்கார முருகன் காட்சி தருகின்றான் முருகன்

* நியூஸ் பிறின்ட்
* பாங் பேப்பர்
* பரிசுப் பேப்பர்
* பொக்ஸ் போட்
* றோணியோ பேப்பர்
* போஸ்டர் பேப்பர்
* ரைப்பிங் சீற்
* பிறிஸ்டல் போட்

ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான
மை வகைகளையும் வேண்டிய அளவிலும்

நாங்கள் "மலிபன் பிஸ்கட்"
ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

இல.152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0215670922

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு,
பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப் பொருட்களையும்

ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத் திரவியங்கள்,
ஆயுள்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம்,
குங்குமப்பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப் பொருட்கள்,
பிஸ்கட், சொக்லேட், ரொபி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# பெற்றா

## எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, 152 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212222386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை குமரா! சேவற் கொடியோனே அரக்கர் தமை அழித்து
வெற்றிவேல் முருகா தமிழினத்தை காத்திடப்பா!!!

இதோ! புதிய உதயம் ராஜன் பான்சி நன்மதிப்பு பெற்ற புதிய

# சிறி ராஜன்



## பான்சி ஹவுஸ்

ஆஹா! என்ன அதிசயம்
அழகு சாதன அன்பளிப்பு பொருட்கள்
நிறைந்து இருப்பதோடு
மங்கையர் கூட்டமாக வந்து
அழகு சாதனங்களை பெற்று குதூகலித்து
செல்வதைப்பார்க்கலாம்
எல்லோரையும் கவர்ந்திழுக்கும்
புதிய ஸ்தாபனம்

## "ஹரிஸ் அன்பளிப்பு அகம்"

வாருங்கள் பாருங்கள்

இல,65, 66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4327

இல,18A மின்சார நிலை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776003205


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக் குமரனை நோக்கி அலை அலையாக வரும்
மக்கள் முருகனின் அருட் கிருபை பெற்றிட வன்றோ!

# சிறி சிவராம்
## ரேடர்ஸ்

என்றும் மங்காத புகழுடன்
யாழப்பாணத்தில் புதுமை பொலிவுடன் இயங்கும்
ஒரு மொத்த விற்பனை நிலையம் கொழும்பில்
இருந்து பல பொருட்களையும் வரவளைத்து
மலிவு விலையில் விற்பனை செய்கிறோம்.

# SRI SIVARAM TRADERS

இல.248, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8629, 0777560760
*No.189, Kathiresan Street, Colombo*
*T.P: 0777560760*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தெய்வீக அருட் கடாட்சம் எல்லா உயிர்களுக்கும் உண்டு.




பல்லாயிரம் வருடங்ளுக்கு முன் அவதரித்த கிருஸ்ண பகவான் மாடு மேய்கும் சிறுவனாக வாழ்ந்தவர். மனிதர்கள் மீது அன்பு செலுத்துவது பசுவின் இயல்வு. (ஏன் மனித உலகில் கூடிய அன்புசெத்துவது பெண்களின் இயல்பல்லவா!) பகவான் கிருஸ்ணாவும் பசுக்கள் மீது அன்பு காட்டி பாதுகாத்தார். உலகின் எல்லாப்பாகங்களிலும் கிருஸ்ண கழகம் பசுக்கள் காப்பகம் ஏற்படுத்தி பசுக்களை பாதுகாத்து வருகிறார்கள்.பசு ஒரு கண்கண்ட தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் வளர்ப்பவர்கள் காலையில் அதற்கு திருநீறு பூசி சந்தனம் இட்டு குங்குமப் பொட்டு வைத்து வந்தால் சகல சம்பத்தும் கிடைக்கும்.அத்துடன் அந்த வீட்டில் எந்நாளும் சந்தோஷமே திகழும் பசுவை வணங்குங்கள் பாதுகாருங்கள்.

குமாரசாமி வீதி
கந்தர்மடம்.

த.கனகசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜா பரமேஸ்வரி திருமண மண்டபம்



நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட மண்டப வசதி.

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, ஒன்றுகூடல்கள், ஏனைய பொது நிகழ்வுகள்.



465/26 பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(மனோன்மணி அம்மன் ஆலயம் அருகாமையில்)
தொ.பே. 021 222 1662, 021 222 2709



# எரிக்கனேஸ்

## கண்ணாடியகம்

நல்லூர் முருகனின் வீதிதனில் நடமாடி முருகன்
அருட்கடாட்சத்தால் முத்தி பெற்றார்கள்

கண் வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யும் கண்ணாடிகளை சரிவரப் பெற்றுக் கொள்ளவும், நவீன ரக frame களையும் தரமான lENCE களையும் பெற்றுக் கொள்ள அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளுக்குப் பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்







இல.564,566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்பாணம்.
தொ.பே: 021 222 2486

கிளை
இல.107, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாமிருக்க பயமேன்?

எல்லா மலிகைப்பபொருட்களையும் ஓரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்

# SV MURUGESHU

## பல்பொருள் வாணிபம்



**No. 154, Hospital Road,**
**Jaffna.**
**Tel. 021 222 8899**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலங்கார கந்தன் தங்கரத மேறி பக்தர்களுக்கு
காட்சி கொடுத்து அமைதி கொடுக்கின்றார்

# பூபாலசிங்கம்
## புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள்
ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்
நூல் வெளியீட்டாளர்கள்



## தலைமை

340, 202, செட்டியார் தெரு கொழும்பு – 11
தொ.பே: 2422321

## கிளைகள்

இல. 309 a, 2/3 காலி வீதி.
வெள்ளவத்தை கொழும்பு – 6
தொலைபேசி:4515775

இல. 04. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021 2226693

இல. 212. 1ம் குறுக்குத்தெரு.
ஆஸ்பத்திரிசந்தி யாழ்ப்பாணம்
தொலைபேசி:021 2221637

பருத்தித்துறை வீதி.
நல்லூர்.

## லண்டன் கிளை

இல.110.கொலண்ட் றோட்.ஈஸ்ட் ஹம்.லண்டன்
EB-EB2EPUIK
தொலைபேசி:02184704416

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகா முருகா என்று முருகன் திருத்தலம் வந்து
நாம் செய் கருமமெல்லாம் நலம் பெற வேண்டுகிறேன்



உங்கள் ஆசைக்கும் உங்கள் அழகுக்கும் ஏற்ற
உன்னத கலைநயம் மிக்க உன்னத விற்பன்னர்களால்
அதிநவீன மோஸ்தர்களில் படைத்திட்ட அதிநவீன ரகங்களில்
அசல் தங்கப் பவுணில்
மன நிறைவுடன் செய்து பெற்றிடலாம்.

# அசோகா
## நகைமாடம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன்
22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

இல.111.கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212226290



நல்லைகுமரா உன் அருள் வேண்டி
நாளும் பொழுதும் பிரர்த்திக்கின்றேன்.

அலுவலக மற்றும் பாடசாலை உபகரணங்கள்
சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள்
மொத்தமாவும் சில்லறையாகவும்

இன்னும் பற்பல பாடசாலை உபகரணங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று நன்மையடையவாம்



# லக்ஸ்மி
## காகிதாதிகள்

மங்கள நிகழ்வுகளுக்ளுக்குரிய அழைப்பிதழ்கள் றெஜிபோம் வர்ண எழுத்துக்கள்
அழகான காட்சி அறை மலிவான விற்பனை ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இல.2. நவீன சந்தை கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
தொ.பே. 021 2224375, 0776913066

இல111. ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.(பழைய சந்தை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவணி மாதமதில் நல்லூர் முருகனின் திருவிளையாடல் என்றால்
யாழ் நகர் பக்திமய விழா கோலதலமாக மிளரும்

மிக உயர்ந்த தரம்
ஆகக் குறைந்த விலை

வர்ண உலகில் புரட்சி

# கந்தவேலன்ரேடர்ஸ்

Dulux Weathershield Semi Gloss

Multilac Colour Bank

உயர்தரச் சான்றிதழ்களக்கு இப்போது அதிகம் செலவு செய்யாதீர்கள்.

இல. 110 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.
தொ. 021 2222822



நல்லூர் முருகனின் அருள் உலகமெல்லாம் பரவட்டும்

யாழ் மக்கள் பரவசமூட்டும் வகையில் நடைபெறும்
ஒரு ஹொட்டல் ஸ்தாபனம்

மக்கள் விரும்பி உணவு அருந்தும் இடம்

# பிறின்ஸ் ஹொட்டல்

யாழ் பஸ் நிலையத்திற்கு அருகில்
மக்கள் பரவசமாக கூடி
உண்டு களிக்கும் இடம்
சுகாதார முறைப்படி
விரும்பிய சாப்பாடு எந்த நேரமும்
தயார் நிலையில் உண்டு.

தொ.பே. 021 221 5414.
0777406300

169. மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cafe - J
Cargills Square,
Hospital Road, Jaffna.

| No. | Description | Amount(Rs.) |
|---|---|---|
| 1 | Chocolate Swiss Roll - 500g | 700.00 |
| 2 | Coffee Cake - 500g | 750.00 |
| 3 | Coffee Cake - 01Kg | 1,500.00 |
| 4 | Chocolate Cream Cake - 500g | 700.00 |
| 5 | Chocolate Cream Cake - 01Kg | 1,400.00 |
| 6 | Eggless Cake - 500g | 600.00 |
| 7 | Eggless Cake - 01 Kg | 1,200.00 |
| 8 | Chocolate Ganache Cake - 500g | 800.00 |
| 9 | Chocolate Ganache Cake - 01Kg | 1,600.00 |
| 10 | Ribbon Cake - 01 Kg | 1,100.00 |
| 11 | Black froest Cake | 2,320.00 |

**Note :** Special Cake orders could be made and there will be additional charges as per the requirements.

Please kind enough to make calls for pre Cake Reservations on 077 595 7696 or visit to our Café J outlet in Cargills Square during 08.00 hrs to 22.00 hrs.

077 595 7696
077 321 4915
076 716 3756









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகனின் அருட் கடாட்சம் பெற்றிட கோபுர வாசல் தன்னில்
வந்து வீழ்ந்து வணங்குகின்றேன்! முருகா !!



வாடிக்கையாளர்களே!

தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும்
ஒரே கூரையின்கீழ் தரமானதாவும் நியாயமான
விலையில் பெற்றுக்கொள்ளவும் மங்களகரமானநிகழ்வுகளை சிறப்பாக
நடாத்த சகல வசதிகளையும் உள்ளடாக்கிய மண்டப வசதியைப் பெற
நாடவேண்டிய ஒரே இடம்.

## TCT MULTI TRADE CENTRE
## ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்





## TCT SORNAMBIKAI HALL
## ரிசிரி சொர்ணாம்பிகை மண்டபம்

527. நாவலர் வீதி. நல்லூர்.
யாழ்ப்பாணம்.
தொ.பே:021 7451895
Email;.tctmc@dialognet.lk

எமது நிகழ்வுகளுக்கான பதிவுத்
திகதிகளைஇணையத்தளத்தில்
பார்வையிடலாம்.
தொ.பே:021 222-8025
WWW.tctchall

இங்கு பெறப்படும் வருமானம் அனைத்தும் நலிவுற்ற மக்களின்
மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடந்தோறும் ஆவணி மாதமதில் நல்லை குமரனின் அருள் எழச்சி கொண்டு
வள்ளி தெய்வானை சமேதரராய் தேரினில் காட்சி தரும் தெய்வீகம் தான் என்னே!

யாழ் நகரில் மூன்று சந்தியில் பிரகாசமாக அமைந்துள்ளது.

# ஸ்ரீ முத்துமாரி அம்மன்

## பல்பொருள் வாணிபம்



என்ன கவர்ச்சி
அற்புதமான
பல்பொருள் காட்சி
உள்ளே சென்றால்

ஆ ஹா!

## "சுப்பர் மார்க்கட" தான்

குடும்ப பெண்களின் விருப்பமான தெரிவுக்கு ஒரே இடத்தில் தேவையான அத்தனை பொருட்களையும் ஒரே இடத்தில் மலிவாக பெற்றக் கொள்ளலாம் விஜயம் செய்யுங்கள் மகிழ்வுடன் செல்வீர்கள்.

இல.342.344.346 ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2228666


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானம்

## அதிகளவு
## சீனிப் பண்டங்களை
## உட்கொள்வதால்
## நீரிழிவு நோய் ஏற்பட்டு
## விரைவாக
## மரணம் ஏற்படலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாமிருக்க பயமேன்...

நல்லைக்குமரன் அருட் கடாட்சம் உலகெலாம் பரவ"நல்லைக்குமரன்" மலர் பூக்கட்டும்

# ஸ்ரீ சாயி பவன்

## சைவ உணவகம்

சகல விதமான வைபவங்களுக்கும் தேவையான சைவ உணவு வகைகள்
ஓடருக்கு செய்து தரப்படும்

Vegetarian 100%



இல.195,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

தொ.பெ :021 221 7116

# சிவகாமி மஹால்

## கல்யாண மண்டபம்



வளர்ந்து வரும்
புதிய நகரத்தில்
அழகான மண்டபம்

ஆடியபாதம் வீதி, திருநல்வேலி.

Email: sivakaamymakal@gmail.com TP-0212052288, 0779326147


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 வது ஆண்டு நிறைவடைந்து வெற்றிப்பாதையில் பயணிக்கும்

1987-2018

No-01

# காவடி

நின்று நிலைக்கும் ஜோதிமயம்

SINCE 1967

50 வருடங்களாக
எங்களுக்கு ஆதரவும்,
ஊக்கமும் கொடுத்த
வாடிக்கையாளர்கள்,
விற்பனையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
எங்கள் நன்றியை உளமார
தெரிவித்துக் கொள்கிறோம்.



என்றும் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கும்







தயாரிப்பாளர்கள்
Ms Sons Group of Companies
672/3, Galle Road,
off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818, 2329426
e-mail: mcsons@sltnet.lk

Product of
M.Manikavasagam

ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா ரேடிங் கம்பனி
31, கபேஸ் லேன்,
கொழும்பு - 11
தொலைபேசி: 329426, 422750


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா லேணர்ஸ்
# KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ்

DS.589 அரச அங்கிகாரம் பெற்ற கனரக (A) தர சாரதிப் பயிற்சி பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353, 021 492 3200, 071 4546 960



கல்விச்சேவைக்காக
ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விருது.

## ★★★ கல்விச்சேவையுடன் ஒன்றிய நிறுவனம் ★★★

- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப்பயிற்சி.
- ★ எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப்பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

**யாழ்ப்பாணம்**

- சுன்னாகம். 021 224 2022.
- பருத்தித்துறை. 021 492 3201
- கச்சேரி. 021 222 6699
- ஆவரங்கால். 021 222 6688
- தெல்லிப்பளை. 021 224 3737
- சாவகச்சேரி. 021 227 0700
- நெல்லியடி. 021 300 6550

**கிளிநொச்சி**

- கிளிநொச்சி. 021 228 5505
- பூநகரி. 021 320 1818
- விசுவமடு. 021 320 1515
- முழங்காவில். 021 300 6544

**மன்னார்**

- மன்னார். 023 225 1656

**வவுனியா**

- வவுனியா. 024 222 7777.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி.

வடமாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2017ஆம் ஆண்டு சைவசமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில்
இடம்பெற்ற தலயாத்திரையின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர்
# 2018



தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள்

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org